# கல்கி



KALKI
1-7-1962
30 காசு


LIFEBUOY
SOAP
LIFEBUOY SOAP
புதுமலர்ச்சி, புதுமலர்ச்சி என்று 'ஆடுவோமே,
பள்ளுப் பாடுவோமே,' ஆனந்தமாய் லைப்பாய் தேய்த்து நீராடுவோமே!
அழுக்கிலுள்ள கிருமிகளைக் கழுவிக் களைவது லைப்பாய் சோப்!
நம் குடும்ப முழுமைக்கும் நல்வாழ்வு நல்குவது
லைப்பாய் நல்லுறவு ... 'எல்லாம் இன்பமயம்!'
லைப்பாய் இருக்குமிடம், அதுவே ஆரோக்கியம் இருக்குமிடம்!


கல்கி

சுபகிருது, ஆனி மீ 17௳ | ஜூலை, 1, 1962

# பொருளடக்கம்




"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.







Panama
20
CIGARETTES



மலர் 21 | தமிழ்த்திரு நாடு தன்னைப் – பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார் | இதழ் 50

# இரட்டைத் தாழ்ப்பாள்

'உணவு படைக்கும் விவசாயிக்கு வரி போடுவது அமுதூட்டும் அன்னைக்கு அபராதம் விதிப்பது போலாகும். மிகச் சிறிய நிலச் சொந்தக்காரர் உட்பட யாவரையும் பாதிக்கும் வரி இது. அதோடு நம் ஏழை மக்களின் செலவில் உணவுப் பண்டமே தவிர்க்க முடியாத பெரிய இனமானதால் அவர்களையும் இவ்வரி பாதிக்கும். எனவே நிலவரியை ரத்து செய்யவேண்டும்' என்று சுதந்திரக் கட்சி போராடி வருகிறது.

இது காரணமாகச் சுதந்திரக் கட்சிக்குப் பெருத்த ஆதரவு கிடைத்து விடக்கூடும் என்று பொதுத் தேர்தல்களின் போது காங்கிரஸுக்குக் குளிர் கண்டது. 'இந்த வரியை நீக்கினால் சர்க்காரின் வருமானம் ஒரேயடியாகத் தேய்ந்துவிடும்; அமுலுக்குக் கொண்டு வர முடியாத கற்பனைக் கொள்கை இது' என்று காங்கிரஸ்காரர்கள் கூறத் தொடங்கினர். 'மத்திய, ராஜ்ய அரசாங்கங்களின் மொத்த வருமானத்தில் இந்த வரி இனத்தால் கிடைப்பது நாலு சத விகிதமேயாகும். எனவே இந்த வரி நீக்கம் சாத்திய பூர்வமானதே' என்று அப்போது சுதந்திரக் கட்சியினர் புள்ளி விவரத்துடன் எடுத்துக் கூறினர். அவ்வளவுதான்! உடனே ஸ்ரீ டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் அவர்கள் ஒரு சாகஸம் புரிந்தார். "நிலவரி ரத்து, சாத்தியமான கோரிக்கைதான். ஏன், நான்கூடப் பல ஆண்டுகளுக்கு முன்பே நிலவரியை எடுத்து விடவேண்டும் என்று சொன்னதுண்டே" என்று கூறி இந்தக் கொள்கையின் 'சுவீகாரத் தந்தை' ஆனார். சுதந்திரக் கட்சியினரும் இதைக் கேட்டுப் பெரு மகிழ்ச்சியே அடைந்தனர். "நல்ல கொள்கைகள் நிறைவேற வேண்டியதுதானே முக்கியம்? அவை யார் அறிவில் உதயமாயிற்று என்பது முக்கியமல்லவே! நிலவரி ஒழிப்பை டி. டி. கே. ஆதரித்து விட்டார். எனவே காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தாலும் இந்த வரி எடுபட்டுவிடும்" என்று எண்ணினர்.

ஆனால் இன்று நாம் காண்பதென்ன? நிலவரி ரத்து விஷயம் காற்றோடு போய் விட்டது. விஷயம் அதோடு மட்டும் நிற்கவில்லை. 'ஒட்டக்கூத்தர் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள்' என்பார்களே அதுபோல நடந்து கொண்டிருக்கிறது ஆந்திர சர்க்கார். 'சுதந்திரக் கட்சி நிலவரி கூடாது என்கிறதா? சரிதான், முன்பு போட்டதைப் போல இரண்டு மடங்காக இப்போது நிலவரியை உயர்த்த வேண்டியதுதான்' என்று தீர்மானித்து வரி விகிதத்தை இரட்டிப்பாக்கி யிருக்கிறது! கருத்துக்களைவிட, அந்தக் கருத்துக்களைச் சொல்வது யார் என்பதற்கே முக்கியத்துவம் தரும் சிறுமைத்தனத்தின் காரணமாக விவசாயிகளின் ஒட்டிய வயிற்றில் மேலும் அடிக்க முற்பட்டுவிட்டது காங்கிரஸ்.

இந்த அபாயமான உதாரணத்தை ஏனைய ராஜ்யங்களும் பின்பற்றினாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை. ராஜ்ய வருமானத்தை ஏற்றிக் காட்டாவிட்டால் தில்லியிடம் குட்டுப்பட வேண்டியதுதான். எனவே 'வருவாயை உயர்த்த எல்லா வழிகளையும் கையாண்டு பார்த்து விடுவோம். ஐந்தாண்டுகளுக்குப் பிறகு தேர்தலின்போது வாக்காளர்களை மயக்க வேறு வசிய மருந்து கிடைக்காமல் போய்விடுமா என்ன?' என்ற ரீதியிலேயே அவை செயலாற்றக்கூடும்.

ஆனால் மக்கள் எவ்வளவு நாட்களுக்குத் தான் ஏமாறுவார்கள்? முக்கியமாக, உலகியல் அறிவும் ஆற்றலும் உள்ள நம் உழவர் பெருமக்கள் இனியும் ஏமாறுவார்களா? தங்கள் நல் வாழ்வுக்குக்கு உகந்த அரசியல் கட்சி எது என்பதை இப்போது கூட அவர்கள் உணராமல் போவார்களா என்ன?


# தணிக்கையாளருக்குத் தடையா?

இந்தியாவின் பிரதம கணக்குத் தணிக்கையாளருடைய அதிகார எல்லைகளை வரையறை செய்ய ஒரு மசோதா விரைவில் கொண்டு வரப்படும் என்று நிதி மந்திரி மொரார்ஜி தேசாய் சமீபத்தில் மக்கட் சபையில் தெரிவித்தார். இதைப் பொதுமக்கள் மிகுந்த எச்சரிக்கையுடன் கவனிக்க வேண்டும்.


கணக்குத் தணிக்கையாளர் பதவி உயர் நீதி மன்ற நீதிபதிகளின் பதவியைப் போல் கட்சிச் சார்புகளுக்கும் தற்போதைய ஆட்சியாளர்களின் செல்வாக்குகளுக்கும் அப்பாற்பட்டது. இப்பதவிக்கு நியமனம் செய்பவர் ஜனாதிபதி. இப்பதவியிலிருந்து ஒருவரை விலக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டால், அதையும் ஜனாதிபதிதான் செய்ய வேண்டும். இப் பதவி பற்றி ஒரு தனி ஷரத்தே அரசியல் சட்டத்தில் உள்ளது.

சர்க்கார் நிர்வாகத்திலுள்ள கணக்கு சம்பந்தமான தவறுதல்களையும் குறைபாடுகளையும் எடுத்துக்காட்ட வேண்டியது இந்த அதிகாரியின் முக்கியமான பொறுப்பு. இம்மாதிரி பாதுகாப்பு இலாகாவில் காணப்பட்ட நிர்வாக ஊழல்களையும், கணக்கு ஊழல்களையும், சமீபத்தில் பிரதம கணக்குத் தணிக்கையாளர் வெளியிட்டபோது, பாதுகாப்பு அமைச்சர் ஸ்ரீ கிருஷ்ணமேனன் அவர்களுக்குச் சற்று உடம்பு எரிந்தது. 'கணக்குத் தணிக்கையாளருடைய அதிகாரம் கணக்குத் தணிக்கையுடன் நிற்க வேண்டுமே தவிர, நிர்வாகத் துறையில் புகுந்து இப்படிச் செய்யலாம், இப்படிச் செய்யக் கூடாது என அவர் சொல்லலாகாது. அவர் தமது வரம்புக்கு மீறி, இலாகாக்களின் நடைமுறைகளைப் பற்றிக் கண்டிக்கிறார்' என்று ஆட்சேபம் தெரிவித்தார் ஸ்ரீ கிருஷ்ணமேனன். இப்போது இவ்வதிகாரியின் அதிகார வரம்பை நிர்ணயிக்க மசோதா உருவாகிக் கொண்டிருப்பது இதன் விளைவாகத்தான். எது நிர்வாக ஊழல், எது கணக்கு இனத்தை மட்டும் பொறுத்த விஷயம் என எப்படி நிர்ணயிப்பது?

ஓர் உதாரணம் பார்ப்போம். 1958-60 ஆண்டுகளில் இஷாப்பூரிலுள்ள துப்பாக்கி உற்பத்தி செய்யும் ராணுவத் தொழிற் சாலையில், அரசாங்கத்தின்



# முந்திரா தொல்லை இருவரையும் விடவில்லை?




அனுமதி பெறாமல், 15 எஸ்பிரஸ்ஸோ காப்பி தயாரிக்கும் யந்திரங்கள் செய்யப்பட்டனவாம். இதற்கு ரூ. 53,764 செலவாயிற்று. யந்திரங்களில் ஒன்று ராஜ்ய முதன் மந்திரி ஒருவருக்கு அன்பளிப்பாகக் கொடுக்கப்பட்டதாம். மற்றவைகளுக்கு மார்க்கெட்டில் கிராக்கி இல்லாது போகவே, அவற்றை விற்க முடியவில்லையாம். 14 காப்பி யந்திரங்களை என்ன செய்வது, என்ன விலை நிர்ணயித்து எப்படி விற்றுத் தொலைப்பது என்பதைப் பற்றி ஆலோசனைகள் நடந்து வருகின்றனவாம்.

இதை நிர்வாக ஊழல் என்று கூறுவதா, கணக்குக் குறை என்று கூறுவதா? துப்பாக்கிகள் செய்வதற்காக ஏற்பட்ட ராணுவத் தொழிற்சாலையில் காப்பி தயாரிக்கும் யந்திரம் எதற்காகத் தயாரிக்கப்பட்டது?

பொது மக்களின் வரிப் பணத்திலிருந்தும் கடன் எழுப்பியும் மேற்கொள்ளப்படும் தொழிற்சாலைகளிலாகட்டும், அவற்றை மேற்பார்வை செய்யும் இலாகாக்களிலாகட்டும் ஊழல்கள் காணப்பட்டால், அவற்றை எடுத்துக் காட்டிப் பணம் வீணாக்கப்படாமல் பார்த்துக் கொள்ளுவது கணக்குத் தணிக்கையாளரின் முதல் வேலை. அவருடைய பொறுப்புக்களையும் அதிகாரங்களையும் எவ்விதத்திலும் குறைக்க முற்படுவது நாட்டு நலனுக்கு உகந்ததல்ல. அவருடைய அறிக்கைகள் பல சந்தர்ப்பங்களில் இக்கட்டான நிலைமையை உண்டாக்கி விடுகின்றன என்பதற்காக அதிகாரத்தைக் குறைக்க முயலுவது, கம்யூனிஸ நாடுகளில் காணும் போக்கே ஆகும். நமது நாட்டில், சுயேச்சை மனப்பான்மையுடன் அதிகார அமுலுக்குப் பயப்படாமல் செயல் புரியும் அதிகாரிகளின் எண்ணிக்கை குறைந்து கொண்டே வருகிறது. இன்னமும் சிலர் இருக்கிறார்களே என்று சந்தோஷப்பட வேண்டும். அவர்களுக்கும் விலங்குபூட்ட யத்தனிப்பது விரும்பத் தக்கதல்ல.

# என்ன சேதி?

## ஜனதா மோட்டார்

மலிவு விலையில் மக்களுக்குக் கிடைக்கக் கூடிய ''ஜனதா மோட்டாரை''ச் சர்க்கார் தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்வதா, தனியார்களுக்கு விட்டுவிடுவதா என்பது பற்றிச் சீக்கிரமே முடிவு செய்யப்படும் என்று அமைச்சர் ஸ்ரீ சி. சுப்பிரமணியம் சொல்லுகிறார். வருஷக்கணக்கில் இந்த விஷயம் ஆராயப்பட்டு வந்திருக்கிறது. அரசாங்கக் கமிட்டியும் விரிவாக ஆராய்ச்சி நடத்தி 'நமக்கு ஏன் தொல்லை' என்று முடிவைச் சர்க்காருக்கே விட்டு விட்டது. சர்க்காருக்குத் தங்கள் மேற்பார்வையில் இதை வைத்துக் கொள்ள விருப்பம்தான்.

சர்க்கார் தொழில்கள் இப்போது நடைபெற்று வரும் அவல நிலையில், மேன்மேலும் புதுப் பொறுப்புக்களை ஏற்பது நாட்டுக்குத்தான் நஷ்டம். இன்றைய நிலைமையில் பெருமளவில் அந்நியச் செலாவணி தேவைப்படும் ஒரு தொழிலைத் தன்மீது அது இழுத்துப் போட்டுக் கொள்வது விரும்பத் தக்கதல்ல. மேலும் தனியார் திருப்திகரமாகவே செயலாற்றிக் கொண்டிருக்கும் ஒரு துறையில் அரசாங்கம் எதற்காகப் புக வேண்டும்?

## பூதான நிலங்கள்

ஆசாரிய விநோபாஜியின் பூதான இயக்கத்தில் கிடைத்த நிலங்களில் 21 லட்சம் ஏக்கர் இன்னமும் விநியோகிக்கப்படவில்லையாம். காரணங்கள் பல. உரிமைப் பத்திரங்கள் சரிவர இல்லையாம், நிலங்களைப் பயிர் செய்வதற்கு வேண்டிய மூலதனம் போன்ற வசதிகள் கிடைக்கவில்லையாம். மேற்பார்வைக்குத் திருப்திகரமான ஏற்பாடுகள் செய்ய முடியவில்லையாம். இதிலும் 11.9 லட்சம் ஏக்கர் நிலங்கள் சாகுபடிக்கு ஏற்றவை அல்ல என்றும் தெரிகிறது. இந்த விவரங்களை உணவு - விவசாய மந்திரி டாக்டர் ராம் சுபாக் சிங் மக்கட் சபையில் தெரிவித்தார்.

இவற்றிலிருந்து பல உண்மைகள் வெளியாகின்றன. விவசாயம் வெற்றிகரமாக நடைபெறுவதற்கு நிலம் மட்டும் இருந்தால் போதாது. திறமை வேண்டும்; நிர்வாக ஆற்றல் வேண்டும்; பணம் வேண்டும். இம் மூன்றையும் பல ஆண்டுகளாகத் தலைமுறை தலைமுறையாகக் குறையாது அளித்து வந்தவர்கள் நிலத்தின் சொந்தக்காரர்கள். விநோபாஜி அன்பு வழியில் செய்தது போலவே சர்க்கார் பலாத்காரச் சட்டங்கள் மூலம் நிலத்தைப் பெற்றுவிடலாம். ஆனால் பெற்ற நிலத்தைப் பயிர் செய்வதற்குக் கட்சி பலமும் வோட்டு பலமும் போதாதே! பூதான நிலச் சாகுபடிக்காக ஒரு கோடி ரூபாய் சமூக அபிவிருத்தி இலாகாவில் ஒதுக்கப்பட்டிருக்கிறதாம். இந்தக் கணக்கில் பார்த்தால் நில வரம்புச் சட்டங்களிலிருந்து கிடைக்கும் உபரி நிலங்களைப் பயிர் செய்ய எவ்வளவு கோடி ரூபாய்கள் தேவைப்படும்? இன்று தனியார் செய்து வரும் இந்தச் செலவை யெல்லாம் பொது மக்கள் தலையில் ஏற்றித் துன்புறுத்துவதுதான் சமதர்மமா?

## நேருஜியைக் கேட்கலாமோ?

நர்மதைப் பள்ளத்தாக்குத் திட்ட மன்றில் தலைமை அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ள ஸ்ரீ ஹெச். எம். படேல் அவர்கள் முந்திரா விவகாரத்தில் சம்பந்தப்பட்டு வேலையைத் துறந்தவராயிற்றே, அந்த நியமனம் நியாயமாகுமா என்று பிரதமரைக் கேட்டிருக்கிறார்கள், பாராளுமன்றத்தின் சில அங்கத்தினர்கள். இவ்விஷயத்தைத் தீர விசாரித்து படேல் அவர்கள்பேரில் ஒரு குற்றமும் சொல்லுவதற்கில்லை என்று இந்திய பப்ளிக் ஸர்விஸ் கமிஷன் தீர்ப்பளித்த பின்னும் அவர்மேல் அபவாதம் போட்டுத் தாக்குவது சரியல்ல. அதற்குப் பிரதமர் பதிலளித்த விதமும் சரியல்ல. இவ்விஷயம் ராஜஸ்தானம், மஹாராஷ்டிரம், குஜராத் முதலிய ராஜ்ய சர்க்கார்களைப் பொறுத்ததென்றும், மத்திய சர்க்காருக்கு இதில் பொறுப்பு இடையாது என்றும் கூறிவிட்டார் நேருஜி.

நாடு முழுதும் விசேஷ கவனம் செலுத்திய முந்திரா விவகாரம் மத்திய சர்க்காரின் நேரடி கவனத்துக்கு உட்பட்டிருந்த ஒரு விஷயமாகும். எனவே, இந்நாட்டிலுள்ள ராஜ்யங்கள் மேற்படி விவகாரத்தில் சிக்கிய ஒருவருக்குத் தாமாகவே மத்திய சர்க்காருடன் கலக்காமல் புதுப் பதவி அளிக்க முடியும் என்று கொள்வது விந்தையாகவே உள்ளது.

ஆனால் பிரதமரை இவ்விஷயமாகக் கேட்டுத் தொந்தரவு செய்வது கூட அவ்வளவு உசிதமான காரியம் அல்லதான். ஏனெனில் இதே முந்திரா விவகாரத்தில் ஈடுபட்டு வேலையை நீத்த வேறொருவரைப் பிரதமர் அவர்களே பதவியில் அமர்த்தியிருக்கிறாரே!

# கடவுள் காணத்தக்க காட்சி

புதுதில்லியில் ஜூன் 16, 17, 18 தேதிகளில் நடைபெற்ற அணு ஆயுத எதிர்ப்பு மகாநாட்டில் கலந்து கொண்டவர்கள் இந்த மகாநாட்டின் விசேஷ அம்சம் என்னவென்று யோசித்தபோது ஒரே ஒரு விஷயம்தான் எல்லாருடைய மனத்திலும் மேலோங்கி நின்றது. அதை மகாநாட்டுக்குத் தலைமை வகித்த திவாகர் அவர்கள் தமது முடிவுரையில் குறிப்பிட்டு விட்டார்.

''இந்த மகாநாடு ஒன்றும் சாதிக்கவில்லையென்றாலும், ஒரு மாஜி கவர்னர் ஜெனரல், ஒரு மாஜி ஜனாதிபதி, இன்றைய ஜனாதிபதி மூவரையும் தில்லி தெருவில் ஒரே காரில் ஒருமிக்கப் போவதைப் பார்க்கக் கொடுத்துவைத்தோமே, அதுவே மகத்தான பாக்கியம். அதைச் சாதிக்கமுடிந்ததே மகாநாட்டின் விசேஷ அம்சம் என்று பெருமைப்படுகிறோம்!'' என்று உள்ளம் நெகிழக் குறிப்பிட்டார்.

ராஜாஜி பதினைந்தாம் தேதி இரவு 10 மணிக்குத் தில்லி பாலம் விமான நிலயத்தில் வந்து இறங்கியபோது, அவரை வரவேற்கத் திவாகர், தேபர், ஜெயப்பிரகாஷ், ஆசார்ய கிருபளானி, ஜி. ராமச்சந்திரன், ஸ்ரீமதி சௌந்திரம் ராமச்சந்திரன், சுதந்திரக் கட்சி பார்லிமெண்ட் குழுவின் தலைவர் பி. கே. தேவ், ராஷ்டிரபதியின் ராணுவக் காரியதரிசி முதலியவர்கள் வந்திருந்து வரவேற்றனர்.

மறுநாள் தொடக்க விழாவில் டாக்டர் ராஜேந்திரப் பிரஸாத், திவாகர், ராஷ்டிரபதி ராதாகிருஷ்ணன் ஆகியோர் பேசிய பின் கடைசியாக ராஜாஜி பேசினார்.

இந்தியா தனது ராணுவத்தைப் பரிபூரணமாகக் கைவிட்டு உலகுக்கு வழி காட்ட வேண்டும் என்றார் டாக்டர் ராஜன்பாபு. பிறகு ஸ்ரீ திவாகர் மிக நீண்ட உரையாற்றினார்.


''மனிதன் நல்லவன்; மனித சமூகம் சில சமயம் மிருகப் பிராயமாக நடந்து கொள்ளும். இந்த மிருக உணர்ச்சியை வெற்றி கண்டு மனிதனின் உயர் பண்பு உலகில் வளர்ந்து வந்திருக்கிறது. மீண்டும் அந்தப் பண்புக்குச் சோதனைக் காலம் வந்துள்ளது. இறுதியில் உயர் பண்புதான் வெற்றி கொள்ளும் என்பதில் சந்தேகமில்லை'' என்று கூறினார் டாக்டர் ராதாகிருஷ்ணன்.

கடைசியில் பேசிய ராஜாஜிதான், உண்மையான நிலவரம் என்ன, அதற்குப் பரிகாரம் என்ன என்பதை எடுத்துக் காட்டினார்.

''யுத்தத்தை அடியோடு நிறுத்துவதற்கு வழி காண்பதல்ல இப்போதைய பிரச்னை. இப்பொழுது யுத்தம் என்பது இல்லாமலே இரண்டு பெரிய வல்லரசுகளும் தங்களது பலத்தைக் காண்பித்துக் கொள்வதற்காக அணுகுண்டு சோதனைகளை மாற்றி மாற்றி நடத்தி வருகின்றன. இதன் பயனாக வாயு மண்டலம் ஒரே விஷ மயமாகி, உண்ணும் நீரும், சுவாசிக்கும் காற்றும், புல் பூண்டு முதலிய தாவரங்களும், மிருகங்களும் நச்சு மயமாகி வருகின்றன. இதைத் தடுக்க, முதலில் இந்தச் சோதனைகளை வல்லரசுகள் நிறுத்தும்படி செய்ய வேண்டும்.


''நடுநிலைமை நாடுகளின் உதவியுடன் இந்தியா இவ்வல்லரசுகளைச் சோதனைகளை நிறுத்தும்படி வற்புறுத்தி ஐ. நா. வில் தீர்மானம் பிரேரிக்க வேண்டும். தீர்மானம் நிறைவேற்றிய பிறகும் வல்லரசுகள் அதனைப் பொருட்படுத்தாமல்

தில்லி ராஷ்டிரபதி பவனத்தில் ஜனாதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணன், ராஜன் பாபு, நேருஜி ஆகியோருடன் ராஜாஜி அளவளாவிக் கொண்டிருக்கிறார்.





புது தில்லியில் அணு ஆயுத எதிர்ப்பு மகா நாட்டுக்குத் தலைவர்கள் வருகிறார்கள். பிரார்த்தனையுடன் மகாநாடு ஆரம்பமாகிறது. மகாநாட்டில் ராஜாஜி உரையாற்றுவதையும் புது ஜனாதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் பேசுவதையும் அணு ஆயுத எதிர்ப்பு மகாநாட்டில் கலந்துகொண்டவர்களையும் காணலாம்.



சோதனைகளை நடத்தினால் அவற்றை ஐ. நா. சபையை விட்டே வெளியேற்ற வேண்டும். இந்த நாடுகளுடன் எவ்வித மான தொடர்பும் கொள்வதில்லை, உதவியும் பெறுவதில்லை என்று மற்ற நாடுகளுடன் சேர்ந்து பகிஷ்கரிக்க வேண்டும்'' என்றார்.

அமெரிக்கா, ருஷ்யா, பிலிப்பைன்ஸ், லெபனன், பிரான்ஸ், இத்தாலி, ஜெர்மனி, ஜப்பான் முதலிய நாடுகளிலிருந்து வந்திருந்த பிரதிநிதிகளும், இந்தியப் பிரதிநிதிகளும் இவ் விஷயம் பற்றி அடுத்த இரண்டு நாட்களும் விவாதம் நடத்தினார்கள்.

அமெரிக்கப் பிரதிநிதி ஒருவர் ''காந்தியடிகளின் சத்தியாக்கிரகப் போர்முறையைக் கைக்கொண்டு அமெரிக்காவில் நிறவெறியை எதிர்த்துப் போரிட்டு ஓரளவு வெற்றியும் அடைந்திருக்கிறோம். அதே முறையை அணு ஆயுதச் சோதனை விஷயத்திலும் கையாள முயன்று வருகிறோம். இதில் இந்தியாவின் ஒத்துழைப்புத் தேவை'' என்றார்.

பிரிட்டனின் பிரதிநிதியான மைக்கேல் கிரகாம் ஜோன்ஸ் என்பவர், பிரிட்டனில் அணுகுண்டுகளை எதிர்த்து, பாத யாத்திரைப் படை திரட்டி நடத்திய தலைவர்களில் ஒருவர். அவரும் இம் மகாநாட்டில் கலந்து கொண்டு பேசியது குறிப்பிடத் தக்கது.

ருஷ்யப் பெருவிஞ்ஞானியான தம்மம் என்பவர் ''ஒரு பென்சிலை மேஜைமீது நிறுத்தி வைக்கிறோம். ஒரு சிறு அசைவு ஏற்பட்டாலும் அது எப்படி விழுந்து விடுமோ அந்த நிலையில் இன்று உலகம் இருக்கிறது. அணுகுண்டுகளைக் கையாளும் நிபுணர்கள் ஒரு சிறு தவறு செய்தாலும் உலகம் அழிந்து விடக்கூடிய ஆபத்திலுள்ளது. அதனால் இந்த அணு ஆயுதங்களை ஒழித்தே தீர வேண்டும்'' என்றார்.

ஜப்பானிலிருந்து வந்த புத்த குரு, ''உலகம் காப்பாற்றப்பட வேண்டுமெனில், இந்தப் பீதியிலிருந்து தப்ப வேண்டுமெனில், கடவுளிடம் பிரார்த்தனை செய்வதன்றி வேறு வழியில்லை'' என்று குறிப்பிட்டார்.

ராஜாஜியை இந்தப் பேச்சு மிகவும் உருக்கி விட்டது. அவன் அருளின்றி உலகில் எதுதான் நடக்கும்?

கடைசி நாள் பிற்பகலில், மகாநாட்டில் உதவி ஜனாதிபதி ஜாகிர் ஹுசேனும் பிரதமர் நேருவும் பேசினார்கள்.

'இந்த மகாநாடு, பாரத நாட்டு மக்களுக்கு, அணு ஆயுத சோதனைகளைப் பற்றி முழு விழிப்பு ஏற்படுத்தி யிருந்தால் அதுவே மகாநாடு சாதித்த பெரிய சாதனை என்று மகிழலாம். மற்றவர்களை எதிர்பாராமல் ஏதேனும் ஒரு வல்லரசு தானாக முன் வந்து சோதனைகளைக் கைவிட வேண்டும்' என நேருஜி வற்புறுத்தினார்.

பிறகு ஸ்ரீ திவாகர், பிரதிநிதிகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை வாசித்தார்.

ஸ்ரீ ஜி. ராமச்சந்திரன் நன்றியுரை கூறினார். ''ராஜாஜியை இம் மகாநாட்டுக்கு வருமாறு பிரதமர் அழைக்கவில்லையெனில் அவர் வந்திருக்க மாட்டார். அதற்காகப் பிரதமருக்கு நன்றி செலுத்த வேண்டும்'' எனக் கூறினார்.

மூன்று நாள் மகாநாட்டில், பிரதமர் நேரு அரை மணி நேரம்தான் பேசினார். எனினும், ஆரம்பத்திலிருந்து கடைசி வரை ஒவ்வொருவர் பேச்சையும் கேட்டுக் கொண்டு, இடையில் குறுக்கிடாமல் பொறுமையே உருவாக அமர்ந்திருந்தது எல்லோருக்கும் வியப்பையூட்டியது.

மகாநாடு முடிந்து வெளியே வந்த போது, ஒரு வட இந்திய நண்பரிடம் மகாநாட்டைப் பற்றி விசாரித்தேன். ''மகாநாடு இருக்கட்டும் ஸார்! இம் மூன்று பெரியோர்களையும் — ராஜாஜி, ராஜன்பாபு, ராதாகிருஷ்ணன் — ஒரு சேரப் பார்க்கக் கொடுத்து வைத்ததே, அது கடவுளர் கண்டு மகிழத் தக்க காட்சியல்லவா!'' என்றார்.

## கல்கி மண்டபத் திறப்பு விழா

பழநி மலையில் கல்கி சதாசிவம் தம்பதியரின் உபயமாகக் கட்டப்பெற்றுள்ள கல்கி மண்டபத்தின் திறப்பு விழா 28-6-62 வியாழன் மாலை 6-30 மணிக்குச் சிறப்புற நிகழ இருக்கிறது.

மதுரை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள் தலைமையில்,

நிதி அமைச்சர் கனம் பக்தவத்சலம் அவர்கள் மண்டபத்தைத் திறந்து வைப்பார்கள்.

# ஜய ஜய சங்கர

ஞானமே உருவாக, வெளியைப் போல எங்கும் நிறைந்து, இயல்பாக ஒளிரும் பரம்பொருள் எதுவோ, பிறப்பும் இறப்பும் அற்ற மாசற்ற பொருள் எதுவோ, தன்னையன்றி இரண்டாவது வஸ்து இன்றி எங்கும் வியாபித்துள்ள அந்தப் பொருளான பிரணவமே நான்—எப்பொழுதும் முக்தி நிலையிலுள்ளவனே நான்.

— உபதேச ஸாஹஸ்ரீயில் ஸ்ரீ ஆதி சங்கரர்

## 8. சத்தியத் தத்துவம்

செல்வத்தைக் காத்து உரிமையாளரிடம் ஒப்புவிப்பது போல, ஞானச் செல்வத்தைக் காத்து ஞானாகரனிடம் அளிக்கவே காத்துக் கிடந்தார் கோவிந்த பகவத் பாதர். அந்த ஞானச் செல்வத்தைத்தான் அத்வைதம் என்கிறோம். ஆனால் ஒரு விந்தை! இச் செல்வத்தைச் சங்கரருக்கு அளித்த பின் கோவிந்தர் அதனை இழந்ததாகச் சொல்ல முடியுமோ? சங்கரரும் ஆசாரியராகி உலகுக்கெல்லாம் அதனை வழங்கியும், பெறுவோருக்கெல்லாம் குறைவற்ற பெருநிதியமாக அல்லவா திகழ்கிறது அது? அந்த அத்வைதம் என்ன என்பதை இங்கு ஓரளவுக்குப் பார்க்கலாம்.

அத்வைதம், வேதத்திலும் உபநிஷத்திலும் பிரம்ம சூத்திரத்திலும் கீதையிலும் சொல்லப்பட்டிருக்கும் தத்துவமேயாகும். புராண, இதிகாசங்களும் அத்வைதத்தைப் பற்றி நிறையச் சொல்லியிருக்கின்றன. பிராசீனமான பல அத்வைத நூல்களும் உண்டு. கௌட பாதாசாரியர் மாண்டூக்கிய உபநிஷத காரிகையொன்று முழு அத்வைத கிரந்தமாகச் செய்திருக்கிறார். என்றுமுள அத்வைத நிலையை ஆசாரியர் புதிதாகக் கூறியதாகச் சொல்லலாகாது.

ஆனால், அவர்தான் அதை அசைக்க முடியாத ஒரு மதமாக நிலைநாட்டிய மகான். பறவை பறப்பதுபோல் பிரம்ம சாட்சாத்கார நிலைக்குப் பறந்து சென்ற மகனீயர்கள் பலர். பறக்கும் திறனற்ற நமக்காகப் பல சாதனங்களைப் படிக்கட்டுகளாகப் பாங்குறச் சமைத்துத் தந்த அருளாளர் ஆசாரிய சங்கரரே. சங்கரருடைய அவதாரம் ஏற்பட்டதே அத்வைத ஸ்தாபனத்துக்காகத்தான். எனவே அதனை அறியாதவரை இந்த வரலாறு நிறைவு பெற்றதாகாதல்லவா?

சுருக்கமாகச் சொன்னால் அத்வைத தத்துவமே தத் — த்வம்: ''அது நீ'' என்பதுதான்.

'அது' என்பதுதான் இந்த உலகத்துக்கெல்லாம் ஆதாரமான மெய்ப்பொருள், மூல வஸ்து. 'நீ' என்பது ஜீவர்களான நாம். முதலில் 'அதை'ப் பார்க்கலாம். பரம்பொருளான அதனை அத்வைத சாஸ்திரம் பிரம்மம் என்றே குறிப்பிடும். பிரம்மம் என்றால் பெரியது என்று பொருள். எல்லாமான பொருளை விடப் பெரியது ஏதேனும் உண்டா என்ன?

நாம் காண்பனவெல்லாவற்றுக்கும் ஒரு காரணம் இருக்க வேண்டும். அதுவே பரம்பொருள் என்று கொள்கிறோம். அந்தப் பரம்பொருள் எங்கும் நிறைந்திருப்பது, எல்லாம் அறிந்தது, எப்போதும் இருப்பது என்கிறோம். இப்படி எங்குமாக, எல்லாமாக இருக்க வேண்டுமானால் அதற்கு உருவமோ, பெயரோ, அடையாளங்களோ இருக்க இயலாது அல்லவா? இதற்கேற்ப, பரம்பொருள் நிர்க்குணமானது என்கிறது அத்வைதம். அது இப்பேர்ப்பட்டது என்று வர்ணிக்க முடியாது. ஒரு பொருளை இன்னொரு பொருளோடு தொடர்புறுத்த முடிந்தால்தான் வர்ணிக்க முடியும். தன்னையின்றிப் பிறிதொரு பொருளற்று, பற்றுக்கோடில்லாமல் துலங்கும் 'கந்தழி'யை எப்படி, எதனால், யார் விளக்க முடியும்?

இதனால்தான் வேதங்கள் பரப்பிரம்மத்தை 'இவ்வாறு உள்ளது' என்று கூற இயலாமல் 'இவ்வாறு இல்லாதது' என்று விளக்குகின்றன. அது 'ஸ்தூலமல்ல, சூட்சுமமல்ல, குட்டையல்ல, நீண்டதல்ல' என்றெல்லாம் கூறுகின்றன. ஆம், சர்க்கரையைச் சுவைத்

தறியாதவனுக்கு அதனுடைய ருசியை எப்படி விளக்க முடியும்? அது கசப்பாகவோ, புளிப்பாகவோ, உவர்ப்பாகவோ இராது என்றெல்லாம் மட்டும் தானே கூற முடியும்? பரம்பொருளை ஒருவன் தானே அநுபவித்தால் அன்றி அதன் தன்மையை யாரும் அறிய இயலாது என்பது அத்வைதம்.

இப்போது பரம்பொருளை அநுபவிக்க வேண்டிய ஜீவன் யார் என்று பார்க்கலாம். எங்குமாக எல்லாமாக உள்ளது பிரம்மம் என்னும்போதே பிரம்மத்தைத் தவிர வேறாக ஜீவர்கள் இருக்க முடியாது என்றாகிற தல்லவா? 'ஜீவாத்மா, பரமாத்மா என்று பல ஆத்மாக்கள் கிடையாது. இரண்டும் ஒன்றேதான்; இரு வேறு பொருட்கள் அல்ல' என்பதே அ-த்வைதம். பிரம்மம் ஒன்றே மெய்ப் பொருள்; ஜீவனும் அதன்றி வேறல்ல என்கிறார் ஆசாரிய சங்கரர்.

ஜீவனைப் பற்றிய அத்வைத விளக்கம் அறிவுக்குப் பொருந்திய அற்புத விளக்கமாகும். புலன்களின் தொகுப்பாகிய அழியும் உடலை 'நான்' என்று எண்ணுவது தவறு என்கிறது அத்வைதம். நடைமுறையிலும் உடலால் நாம் ஒரு சூழலில் இருந்தாலும் அதை மறந்து மானசீகமாக வேறெங்கோ ஆழ்ந்து விடுவதில்லையா!

இதை எண்ணிப் பார்த்தால், 'உடல் என்பது நான் அல்ல; மனம்தான் நான்' என்று தோன்றும். அப்படியானால், ஆழ்ந்து உறங்கும் போது அந்த மனமும் வேலை செய்வதில்லையே. எனினும் விழித்தெழுந்தபின், 'அப்பாடா, சுகமாகத் தூங்கினேன்' என்று சுகாநுபவத்தை ஏதோ வொன்று சொல்ல வைக்கிறதே, அது என்ன? உடலும் மனமும் தூங்கிய போதும் சாட்சி மாத்திரமாக விழிப்புடன் உள்ள அது என்ன?

விழிப்பின்போது புலன்களும், சித்தம் மனம் புத்தி அகங்காரம் இவை அடங்கிய அந்தக்கரணமும் செயல்படும். கனவின் போது புலன்கள் வேலை செய்வதில்லை. உள் உறுப்பாகிய அந்தக்கரணம் மட்டுமே சொப்பன உலகைப் புனைகிறது. ஆழ்ந்த உறக்கத்தின்போது அதுவும் செயலற்று விடுகிறது.

அப்படியானால் இந்தப் புலன்களும், அந்தக்கரணமும் ஜீவர்களின் நிலையான உணர்வாகிய 'நான்' அல்ல என்றாகிற தல்லவா? அப்படியானால் எப்போதும் ஜீவர்களிடையே துலங்கும் அந்தத் 'நான்' எது?

அதுதான் ஆத்மா.

'அன்' என்றால் உயிரளிப்பது எனப் பொருள். அந்த வேர்ச் சொல்லிலிருந்து தோன்றிய பதமே ஆத்மா. புலன்களையும், அந்தக்கரணத்தையும் உயிர்ப்பித்து இயக்கும் ஆதாரத் தத்துவம் அந்த ஆத்மாவே. விழிப்பு, கனவு, தூக்கம் மூன்று நிலைகளிலும் விளங்குவது அதுவே. எப்படி மனம் செயல்படாத உறக்க நிலையில் காதுகள் திறந்திருந்தாலும் அவற்றில் ஒலி விழாதோ, அவ்வாறே ஆத்ம ஜோதி அந்தக்கரணத்தில் வீசினாலொழிய மனம், புத்தி, சித்தம் இவையும் தொழிற்படா. குழந்தையாக இருந்த போது நமக்கு இருந்த உடலும், மன நிலையும், அறிவுத் திறனும் இன்று முற்றிலும் மாறுபட்டிருக்கின்றன. எனினும் அன்று இருந்தவனே இன்றுஇருப்பவனும் என்ற 'நான்' உணர்ச்சி மட்டும் தங்கு தடையின்றி மாலையிடையே ஓடும் நார் போல அன்றையும் இன்றையும் தொடர்புறுத்துகிறது. மாறாத இந்தத் 'நான்' உணர்வு ஆத்மா அளிப்பதுதான். எப்படி அழியும் பருவங்களிலும் அழியாமல் துலங்குகிறதோ அதே போல உடல்கள்அழிந்து வேறு பிறப்புக்கள் சம்பவிக்கும்போதும் இந்த ஆத்மா அழியாமல் வெவ்வேறு உடலங்களை எடுத்துக் கொள்ளும் என்பது தர்க்கரீதியில்கூட ஒப்புக் கொள்ளக் கூடியதுதானே! எனவே பரம்பொருளைப் போல இதுவும் நிரந்தரமானது என்று ஏற்படுகிறது. பரம் பொருளைப் போலவே ஆத்மாவுக்கும் உருவம் அடையாளம் இவை இருக்க முடியாது என்பது வெளிப்படை. ஜீவனை எவ்விதமான அறிவையும் பெற வைப்பது ஆத்மாவே என்பதால் அது ஞான மயமானதாகத் தான் இருக்க வேண்டும் என்றும் ஏற்படுகிறது.

இவ்வாறு ஞானமூட்டுவதாகவும், உயிர் அளிப்பதாகவும் உள்ள ஜீவாதாரமான — ஜீவர்களுக்கு ஆதாரமான— ஆத்மா பிரம்மமேயாகும் என்பதே அத்வைதம். ஏனெனில் எல்லாவற்றுக்கும் ஆதார வஸ்து பிரம்மம் என்று கூறிய பின் ஜீவர்களுக்கு ஆதாரமாக வேறு ஒன்று எப்படி இருக்க முடியும்?

பல ஜீவாத்மாக்கள் கிடையாது. பானைகளையெல்லாம் உடைத்தால் அவற்றில் தனித் தனியாகக் கண்ட வெளிகள் யாவும் ஒன்றேயான அகண்ட வெளியுடன் ஒன்றி விடுவது போல, தனிப்பட்ட ஜீவர்களாக நம்மை நாமே எண்ணும் பேதத்தை உடைத்தால்

ரா,கணபதி

எல்லாரும் ஒன்றேயான ஆத்ம ஸ்வரூபமாகி விடலாம் என்கிறார் ஆசாரியர்.

'சரி, ஜீவனும் பிரம்மமும் ஒன்றேயெனில் அவற்றை வேறு வேறாக எண்ணும் பேத புத்தி ஏன் வந்தது? அது தான் போகட்டுமென்றால் ஜீவர்களெல்லாரும் வேறுபட்டு வாழும் இந்த உலகம் என்பதாக ஒன்று இருக்கிறதே. அது என்ன?' என்ற வினாக்கள் எழுகின்றன.

**ஜகத் மித்யா** : 'உலகம் பொய்' என்கிறார் ஆசாரியர். அப்படியானால் இதெல்லாம் 'அண்டப் புளுகா', உலகு என்பது வெறும் பாழா என்று கேட்கத் தோன்றுகிறது. தர்மமும், நெறியும் கொண்ட வாழ்வுக்கு நிலைக்களனாக நம் கண் முன் காணும் உலகத்தைப் பொய் என்றால் ஏற்கத் தயங்குகிறோம்.

உண்மையில் ஆசாரியர் உலகத்தை அசத்தியம் என்று கூறவில்லை. மித்யை என்று தான் கூறுகிறார். அதாவது உலகை நாம் எப்படிக் காண்கிறோமோ அந்தத் **தோற்றம்** பொய் என்று மட்டுமே கூறுகிறார். உண்மையில் இந்த உலகும் பிரம்மமே என்கிறார்.

மலடி மகன், முயல் கொம்பு முதலியன போல ஒருகாலும் எண்ணிப் பார்க்க முடியாத 'அத்தியந்த அசத்' அல்ல உலகம்.

பள பளக்கும் கிளிஞ்சலை வெள்ளியென்று எண்ணுகிறோம். இருளில் கயிற்றைக் கண்டு பாம்பென எண்ணுகிறோம். அருகில் சென்று அது வெள்ளியல்ல; கிளிஞ்சலே; பாம்பல்ல, கயிறே என்று அறியு மட்டும் நாம் கண்ட தோற்றம் உண்மைதானே? எனினும் அது இறுதி உண்மை அல்லவே! இதுவே மித்யை. இது போல இப்போது நாம் உலகு என எண்ணிக் காண்பது அவ்வாறு காணும் வரையில் உண்மையே. எனினும் அதனைப் பிரம்மமாகக் காணத் தொடங்கியபின் இப்போதைய ஞானம் தவறு என்பது புலனாகும் என்கிறார் ஆசாரியர். இது போல் ஒரு நிலையில் சத்தியமாகவும், வேறு நிலையில் பொய்யாகவும் ஆகும் தத்துவத்தை பிராதிபாசிகசத்தியம் என்கிறார் அவர். நடைமுறையில் உண்மையாகக் காணும் உலகை வியாவஹாரிக சத்தியம் என்று முதலில் கூறித் தர்க்க ரீதியில் ஆராய்ந்து, இறுதியில் உலகு பிராதிபாசிக சத்தியம்தான் என்று காணச் செய்கிறார். இவற்றுக்கு மேம்பட்ட உண்மை நிலையே—எல்லாம் பிரம்மமென உணர்வதே — பாரமார்த்திக சத்தியம் எனப்படும். சத் வஸ்து பிரம்மம் ஒன்றுதான்.

அப்படியானால் பிரம்மம் உலகமாகத் தோன்றுவதற்கும், ஜீவர்கள் தங்களை உடலுடன் சம்பந்தப்படுத்திப் பார்ப்பதற்கும் காரணம் என்ன? இதற்குக் காரணம் மாயையே என்கிறார் ஆசாரியர். ஒன்றேயான பிரம்மத்தைப் பலபடித்தான உலகமாகக் காட்டுவது மாயையே. அதுவே அவித்தை அல்லது அஞ்ஞானம் என்பதை ஏற்படுத்தி ஜீவர்களும் தங்களுடைய உண்மையான பிரம்ம நிலையை உணர முடியாமல் செய்கிறது.

மா-யா என்றால் 'எது இல்லையோ அது' என்று பொருள். மாயை பிரம்மத்தை மறைக்கிறது. அதனிடத்தில் பிறிதொன்றான உலகத்தை ஏற்றி வைத்துக் காட்டுகிறது. அதை எப்படி 'இல்லாதது' என்று கூற முடியும்? எனவே உலகம் மித்யை என்று சொன்னாற் போலவேதான் மாயையும் 'இறுதி நிலையில் இல்லாதது' என்று அர்த்தமே தவிர எப்போதுமே இல்லாதது என்று பொருள் அல்ல. ஞானத்தினால் அத்வைத பாவனை பெற்ற போது மாயை அழிந்து விடும். எனவே உலகைத் தோற்றுவித்தாலும் அது சத் வஸ்து அல்ல. அசத் என்று ஒரே வழியாகத் தள்ளவும் முடியாதது. அது விளக்க வொண்ணாதது — அநிர்வசனீயம் — என்பார் ஆசாரியர்.

பிரம்மத்தை உலகாகவும், ஜீவர்களைப் பிரம்மத்தினின்று வேறாகவும் மாயை எப்போதிலிருந்து காட்டத் தொடங்கியது என்ற கேள்வி எழலாம். இந்த வினாவுக்குப் பொருளே கிடையாது. ஏனெனில் தனித்திருக்கும் பிரம்மத்துக்குக் காலம், தேசம், வர்த்தமானம் எதுவுமே கிடையாது. காலம் என்பதே மாயையின் செயல் என்னும்போது எந்தக் காலத்தில் மாயை ஏற்பட்டது என்ற கேள்வி எப்படி எழ முடியும்? மாயை அநாதியானது என்கிறார் ஆசாரியர். மாயை அநாதியானாலும் பிரம்மத்தைப் போல நிரந்தரமானதல்ல. ஞானம் வந்தவுடன் அழிவதால் அது சாசுவதமான சத்தியமல்ல. எனவே பிரம்மம் ஒன்றே சத்தியம்.

தானாக ஒளிர்ந்த பிரம்மம் ஏன் மாயையால் உலகமாகத் தோன்ற வேண்டும் என்ற வினா எழும். இந்த வினாவுக்கு மட்டும் இது வரை யாரும் விடை பகர்ந்ததில்லை. பகரவும் முடியாதோ என்னவோ? நாம் உலகைப் பலவாறாக அறிவதற்குக் காரணம் மாயை. இந்த அறிவைக் கொண்டு அதனைப் படைத்த மாயையையே எப்படி ஆராய முடியும்?

பார்க்கப் போனால் மாயையின் தோற்றுவாயைப் பற்றி நாம் ஏன் கவலைப்பட வேண்டும்? ஒளி வந்தவுடன்

இருள் நசிப்பது போல் ஞானம் வந்த வுடன் தானே நசிப்பது மாயை. அந்த இருள் எப்படித் தோன்றிற்றென்ன? எப்போது தோன்றிற்றென்ன? மாயை யைக் கடந்து உலகையும், நம்மையும் பரம்பொருளாகக் காண்பதே அல்லவா நாம் செய்ய வேண்டியது? அதற்கான உபாயத்தை ஆசாரியர் அழகுபட வகுத் துத் தருகிறார்.

மாயையை எதற்காகக் கடக்க வேண்டும்? நம்முடைய உண்மையான நிலையை — நாம் பிரம்மமே என்பதை— எதற்காக அறிய வேண்டும்? வெறும் தத்துவ ஆராய்ச்சியின் முடிவுக்காக மட் டும் அல்ல. ஜீவன் இவ்வாறு ஆத்மா வில் உறைவதுதான் மோட்சமாகும் என்பதே அத்வைதத்தின் இலட்சியம். வெறும் வறட்டு வேதாந்தமாக இன்றி வாழ் முறையாகவும், வாழ்க்கையி லிருந்து விடுபடும் வழியாகவும் இருப் பதே அத்வைதத்தின் பெருமை.

மோட்சம் என்றால் விடுதலை என்று பொருள். எதிலிருந்து விடுதலை? சம் சாரத்திலிருந்து. நம்முடைய நிஜ ஸ்வரூபத்திலிருந்து நாம் விலகியிருப்ப தால்தான் ஆசையும், கோபமும் இதர குணங்களும் நம்மைப் பீடிக்கின்றன. சாசுவதமற்ற உலக சுகங்களாலும் துக்கங்களாலும் அலைப்புண்டு அவதி யுறுகிறோம். இந்தச் சலனங்கள் நீங்கி அமைதியும் ஆனந்தமும் காண்ப தெப்போது? அதுதான் விடுதலை அல் லது முக்தி நிலை. ''எல்லாமான பிரம் மமே நான்'' என்ற உணர்வு வரும் போதுதான் ''காண்பன யாவும் நான்'' என்ற அறிவும் ஏற்படும். அப்போது தான் எதனிடமும் கோபதாபம் உறாமல் அன்பு மயமாக, அறிவு மயமாக, ஆனந்தமயமாக ஆக முடியும். அவ்வி தத்தில்தான் கர்மத்தளையை உடைத்து, பிறப்பு இறப்பிலிருந்து மீண்டு அமர நிலையை அடைய முடியும் என்பதே அத்வைதம். இந்த நிலையை அடையும் மார்க்கத்தைச் செவ்வனே கூறுகிறார் கருணையங்கடலாகிய ஆசாரியர்.

பிறப்பை ஒழித்துப் பிரம்ம சாட் சாத்காரம் பெற ஞானமே வழி என் கிறார், ஆசாரியர். கர்மத்தால் விடுதலை இல்லை. ஏனெனில், கர்மத் தால் ஒரு பொருளைச் செய்யவும், வேறிடத்துக்கு மாற்றவும், வேறொன்றாக மாற்றவும், அதன் தரத்தை மாற்ற வும்தான் முடியும். எப்பொழுதும் உள்ள, எங்கும் உள்ள, நிர்விகாரமாக உள்ள, நித்திய சுத்தமாக உள்ள ஆத்மாவை உற்பத்தி செய்யவோ, வேறிடம் மாற் றவோ, பிறிதொன்றாக்கவோ, தரத்தை மாற்றவோ இயலாது அல்லவா? ஆகவே தான் ஆத்மா கர்மத்துக்கு விஷயமா காது என்கிறார், ஆசாரியர். நம்மிடமே உள்ள ஆத்மாவை அதாவது பிரம்மத்தை அடைய—அடைய என்று சொல்வதும் உபசாரத்துக்குத்தான்—வழி அதை அறி வதே; அதாவது ஞானமே என்கிறார். 'அறிவது' என்பது 'அநுபவிப்பதை'யே குறிக்கும். தன்னையன்றி வேறில்லை என்ற நிலையில் இந்தப் பதங்கள்கூட முற்றிலும் பொருந்தாதனவே. வார்த்தைகளால் ஆத்ம நிலையைச் சொல்லும்போது இந்த துவந்தங்களைத் தவிர்ப்பதற்கில்லைதான்.

ஞான மார்க்கத்தை அடைய முதல் படிகள் கர்மமும், பக்தியுமேயாகும். ஜீவன் என்ற நிலையில் உள்ளவன் செயல், உணர்ச்சி, அறிவு மூன்றிலும், மூன்று லும் இயங்கி வருகிறான். எனவே, முறையே இம் மூன்றின் சார்புள்ள கர்மம், பக்தி, ஞானம் இம்மார்க்கங் களை மோட்ச சாதனத்தின் படிகளாக வைத்திருக்கிறார் ஆசாரியர்.

பற்றில்லாத, அதாவது பயனை எதிர் பார்க்காத, கர்மம் செய்வதால் மனம் சுத்தமடைகிறது. நிஷ்காம்ய கர்மம் எனப்படுவது இதுவே. சங்கரர் கர்ம மார்க்கத்தை வற்புறுத்தி, வேதம் கூறும் அநுஷ்டானங்களை ஒருவன் செய்ய வேண்டும் என்கிறார். உலகம் ஒரு தோற்றம் என்பதால் இது எக்கேடும் கெட்டுப் போகட்டும் என்று அவர் சொல்லவில்லை. ஆத்மாவை எதுவும் தொட முடியாது என்பதால் ஆத் மார்த்தி மனம் போன வழியில் நடக்க வும் அவர் இடம் தரவில்லை. யாவரும் நெறி சார்ந்த வாழ்வே வாழ வேண் டும்; உலகம் தோற்றமாயினும், அந்தத் தோற்றத்தை உண்மையாகக் கொண்டு வாழுமளவும் நியதிக்கு உட்பட்டுத் தார்மீக வாழ்வு வாழ வேண்டும்; ஆத்மாவைப் பெறுவதோடு சமூகத்துக் குச் செய்ய வேண்டிய கடமைகளையும் ஒருவன் புறக்கணிப்பதற்கில்லை என்று வற்புறுத்துகிறார், உலகுக்கெல்லாம் உற் றவரான ஆசாரிய சங்கரர். பகவத் அர்ப்பணமாக விருப்பு வெறுப்பு இன்றி இவ்வாறு செய்யும் கர்மமே சித்த சுத்தியை அளித்து முடிவில் செயலற்ற நிலையைத் தேடித் தரும்.

கட்டில்லாத ஆத்மாவுக்கு ஏன் இந்தத் தரும சாஸ்திரக் கட்டு? விறகுக் கட்டு ஒன்றுக்கு மணி முடிச்சுடன் அழுத்தமாக ஒரு கட்டுப் போட்டிருக் கிறது. இந்த முடிச்சைத் தானாகஅவிழ்ப் பது முடியாத காரியமாக இருக்கிறது.

அப்போது என்ன செய்கிறோம்? வேறொரு கயிற்றைக் கொண்டு விறகுச் சுமையை இன்னும் அழுத்தமாகச் சுற்றுகிறோம். சுற்றினாலும் முடிச்சாகப் போடுவதில்லை. இந்த அழுத்தத்தினால் விறகுகள்மேலும் இறுக்கமாக ஒன்று சேர, பழைய மணி முடிச்சுக் கட்டுத் தளர்கிறது. அந்தக் கயிற்றை அப்படியே அலாக்காக வெளி யேற்றி விட்டு, முடிச்சுப் போடாமல் பிடித்திருக்கும் இந்தக் கயிற்றையும் தளர்த்தினால் விறகுக் கட்டு விடுதலை பெறுகிறது. இதே போல் இந்திரியம் முதலியவற்றால் ஜீவனுக்கு ஏற்பட்டுள்ள முதல் கட்டை, தர்ம ஆசாரம் என்ற புது இறுக்கத்தால் நிவர்த்தி செய்து கொள்கிறோம்; விடுதலையடைந்தபின் இரண்டு கட்டும் இல்லை.

கர்மத்தைப் போலவே உபாசனை அல்லது பக்தியையும் ஆசாரியர் வற் புறுத்துகிறார். கர்மத்தால் தூய்மை பெற்ற மனத்தை ஒருமுகப்படுத்த இதுவே வழி என்கிறார். உருவம் தாங்கி யுள்ள தெய்வங்களை ஆராதிப்பது அத் வைத பாவனைக்கு முரணல்ல என்கிறார்.

பிரம்மத்தைக் குணமற்றதாகத் தியா னிப்பது பாமரர்களுக்கு இயலாதது என்பதால் தான் அவர் சகுணப் பிரம் மம் என்ற உருவக வழிபாட்டுக்கு இட மளித்தார் என்று சிலர் கருதுகிறார்கள். இது மிகத் தவறான கருத்து. 'உருவகம்' என்றால் பிரம்மத்தைத் தவிர எல்லாமே, நாமும்கூட, உருவகம்தான். நாம் அஞ்ஞானத்தின் உருவகம். பிரம்மத்தின் அறிவு விளக்கத்துடனேயே கூடிய உருவு சகுணப் பிரம்மம் என்ற ஈசுவரன். இந்த நிலையில் மாயை என்பது ஈசுவர னின் சக்தி ஆகிறது. அதைக் கொண்டு ஈசன் உலகைப் படைத்து, காத்து, அழிப்பதாகவும் ஏற்படும். மக்களை ரட்சிப்பதற்காகவென்று பிரம்மம் தன் மாயா பலத்தால் தானாகவே எடுத்துக் கொண்ட வடிவங்களே நம் தெய்வங்கள். எனினும் பரம்பொருளை உருவமற்ற தாக நுகரும் நிலையில் சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரம் யாவும் மறைந்து போகும்.

தெய்வங்களையும், பக்தியையும் 'போனால் போகிறது' என்ற 'விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை'யுடன் ஒப் புக்கொண்டு உபாசனையைச் சொல்ல வில்லை ஆசாரியர். ஈசுவரானுக்கிரகத் தால் தான் அத்வைத ஞானமே வரும் என்பது அத்வைதிகள் நம்பிக்கை. அப்படி அநுக்கிரகத்தைப் பற்றிச் சொல் வதே, கடவுள் நீதிபதியாக மட்டும் இருந்து கர்மவினைக் கேற்பப் பலனளிக்கா மல் கருணையையும் கலந்தருளி இந்தத் தோற்ற உலகைக் கடைத்தேற்றுகிறான் என்பதற்கு ஆதாரம்.

ஆசாரியர் தமது மடங்களிலும் மூர்த்தி வழிபாட்டுக்கு முக்கியமான இடம் அளித்திருப்பது இன்றும் நாம் காணும் காட்சி. அத்வைத கிரந் தங்களைச் செய்த அதே ஆசாரியர்கள் பக்தி இலக்கியமும் கொஞ்சமாகச் செய்ய வில்லை. எல்லாத் தெய்வங்கள் மீதும் ஸ்துதிகள் செய்திருக்கிறார். காவிய நயம் கொழிக்கும் நெஞ்சுருக்கும் பலப்பல பாடல்களை அருளியிருக்கிறார்.

அத்வைத ப்ரதிஷ்டாபனாசாரியரா கிய அவரே தாம் ஈசுவரன், தேவி, திருமால், விநாயகர், முருகன், சூரியன் முதலிய தேவதைகளின் ஆராதனை முறைகளை வகுத்துத் தந்த ஷண்மத ஸ்தாபனாசாரியரும் ஆவார். பக்திக்கு அவர் அளித்துள்ள உயர்ந்த இடத்தைப் பற்றி இம்மியும் சந்தேகம் வேண்டாம்!

கர்மத்தால் ஒருவன் மனம் தூய்மை பெறுகிறது. உபாசனையால் அது ஒரு முகப்படுகிறது. ஞான மார்க்கத்துக்கு அவன் இப்போதுதான் அதிகாரியாகி றான். இப்போது அவன் நான்கு சாத னங்களைக் கடைப்பிடிக்க வேண்டுமென் கிறார் ஆசாரியர்.

அழியாதது ஆத்மா, அழியக்கூடியது மற்றப் பொருள்கள் என்ற விவேகத் தைச் சாதகன் முதலில் பெற வேண்டும். அடுத்தபடி இவ்வுலகிலும், மறு உலகி லும் அடையக்கூடிய சுகங்களை நாடா திருத்தல்; அதில் வைராக்கியம். மூன்றாவதாக அவன் ஆறு அருங்குண சம்பத்துக்களைக் கைக்கொள்ள வேண் டும். இந்த ஆறில் முதலாவது மனத்தை அடக்குதல். இரண்டாவது புலன்களைத் தத்தம் வழி போகாது விஷயங்களி லிருந்து திருப்புவது. மூன்றாவது, திருப் பிய இப்புலன்கள் மீண்டும் வெளிப் போகாமல் காப்பது. வந்த அநுபவங்க ளாகிய சுக—துக்கம் ஆகியவற்றை ஒன்றா கக் கருதிப் பொறுத்தல் நாலாவது முயற்சியாகும். மனத்தை ஒரு நிலைப் படுத்துவதே ஐந்தாவது சம்பத்து. ஆறா வது சம்பத்து வேதாந்த போதனையிலும், வேதத்திலும் ஆர்வமும் நம்பிக்கையும் கொள்வது. அறிவால் கிரகிக்கவொண் ணாத பிரம்மாநுபவத்தை நேரில் அநுப வித்த முனிவர்களின் வாக்கில் வைக்கும் நம்பிக்கையே இது.

நான்காவது சாதனமே முமுட்சுத் துவம். அதாவது மோட்சம் பெற்றே தீருவது என்ற நாட்டமும், அதன் மூலம் அதைப் பெறுவதும்.

இந்த நான்கு சாதனங்களையும் பயின்றபின் வேதாந்த விசாரம் செய்ய

வேண்டும். சிரவணம், மனனம், நிதித்தியாசனம் என்பவை இந்த மார்க்கத்தின் பகுதிகள்.

சிரவணம் என்பது வேதாந்த வாக்கிய அர்த்தத்தைக் குருவிடமிருந்து கேட்டுத் தெரிந்து கொள்வது. குருவுக்கு அதிமுக்கியமான இடமுண்டு. ஏனெனில் அவர்தான் அஞ்ஞான இருளைப் போக்கி ஞான ஒளியை நல்குபவர். (கு — இருள்; ரு — போக்குபவர்). அநுபவத்துக்கு இட்டுச் செல்லும் அத்வைத தத்துவத்துக்கு குரு என்ற அநுபூதிமானே அல்லவா சான்று?

குரு உபதேசிப்பதும் மித்யை உலகில்தான். அதனால் என்ன? நாம் காணும் கனவில் ஒரு சிங்கம் வருகிறது; கர்ஜிக்கிறது. நாம் விழித்துக் கொள்கிறோம். கனவில் வந்த சிங்கம் நிஜ விழிப்பைக் கொடுத்து விட்டது! இதே போல் மித்யா உலகில் வரும் குரு அமர நிலையில் ஜீவனை விழிப்புறச் செய்கிறார்.

குருவிடமிருந்து கேட்டல் சிரவணம். மனனம் என்பது கேட்டதை இடைவிடாது சிந்தித்து ஆராய்வது. அதனால், புத்தி பூர்வமாக சிரவணத்தை உறுதிப்படுத்துவது. பகுத்தறிவுக்கு அத்வைதத்திலுள்ள இடம் இதனால் விளங்குகிறது. நிதித்தியாசனம் என்பது சிந்தித்துத் தெளிந்ததை இடையறாமல் தியானிப்பது. இதனால் பகுத்தறிவு எதை ஒத்துக் கொண்டதோ அதை அநுபவிக்கலாம்.

இந்த நிலையில்தான் ஆத்மஞானம் ஏற்பட்டு மாயை ஒழிகிறது. தான் பிரம்மமே என்று அறியவும் முடியாதபடி பிரம்மத்துடனேயே ஒன்றி விடுகிறான் ஜீவன். இந்தப் பிரம்மாநுபவம் என்பது ஞான மார்க்கத்தின் எல்லா அங்கங்களையும் செம்மையாகப் பயின்றவனுக்கு இன்றே இங்கேயே கிடைக்கிறது என்கின்றன உபநிஷதமும், கீதையும், ஆசாரியர் நூல்களும். மோட்ச நிலை வேறெங்கோ, எக்காலத்திலோ, எதிலோ இல்லை; இங்கேயே, இப்போதே, நம்மிடத்தே இருக்கிறது என்பதுதான் அத்வைதத்தின் உண்மைக்கு அத்தாட்சி. ஜீவன் தனது அகப் பொருளாகிய ஆத்மாவில் நிலைபெறச் சாவு அவசியமில்லை; மோட்சம்தான் ஜீவனின் உண்மை நிலை. பிறப்புரிமை என்கிறது அத்வைதம்.

இந்தப் பிரம்ம சாட்சாத்காரத்தை இங்கேயே பெறலாம் என்பதோடு எவரும் பெறலாம் என்று கூறுவதால் தான் அத்வைதம் உலக மதமாகிப் பாரெங்குமுள்ள பேரறிஞர்களால் போற்றப்படுகிறது.

இங்கேயே விடுதலை பெற்றவன்தான் ஜீவன் முக்தன். அவனுக்கு ஆசையில்லை—ஏனெனில், இனி அவன் அடைய வேண்டியது எதுவுமே இல்லை. கோபமில்லை. ஏனெனில், நிறைவேறாத ஆசை தானே கோபமாகிறது? பயமுமில்லை. பிறிதொரு பொருள் இருந்தால்தானே பயம் ஏற்படும்? தான் எதற்கும் பயப்படாதிருத்தல், தன்னிடம் எதுவுமே பயம் கொள்ளாதிருத்தல் என்ற இரு வகையிலும் அபய நிலையாகிறான் அவன்; அபயமும், அத்வைதமும் ஒன்றே.

இதர மதத்தில் போல் நம் மதத்தில் அன்பைச் சொல்லவில்லை என்று சிலருக்கு ஓர் அபிப்பிராயம். அன்பை வெறுமனே சொல்வதால் ஒருவரும் அதைக் கடைப்பிடிக்க மாட்டார்கள். அமர நிலைக்கு உபாயங்களைச் சொல்லி, 'தான் எல்லாமாகிய பிரம்மமே; எனவே எல்லா உயிர்களும் தானே' என்பதை உணர்த்திச் சாதகனை அன்புருவமாகச் செய்து விடுகிறது அத்வைதம். ஜீவன் முக்தனை விட அன்பானவன் யாருண்டு? அவனுக்குக் காரியமுமில்லை, எண்ணமுமில்லை. உலக க்ஷேமத்துக்காகவும் உலகுக்கு வழி காட்ட வேண்டுமென்பதற்காகவுமே எதுவும் பற்றாத தன் மீது இவற்றை ஏற்றியது போல் காட்டிக் கொள்வான். ஆசாரத்துக்குக் கட்டுப்படுவான். பிரம்மமே ஆகிய பின்னரும் பக்தியும் பூஜையும் செய்வான். நற்காரியம் புரிவான். ஞான ரூபி ஞானோபதேசமும் அருளுவான். அப்படிப்பட்ட மகான்களே அத்வைதம் என்ற சத்தியத் தத்துவத்துக்குச் சின்னமாவர்.

எல்லாம் தழுவுவது அத்வைதம்.

இவ்வுலகை ஒரு நிலை வரையில் ஒத்துக் கொள்கிறது. விவகார உலகில் தொழில்படாமல் யாராலும் இருக்க முடியாது என்பதை அங்கீகரித்து, தனக்கும் உலகுக்கும் உபயோகமாகும் கர்மத்தை ஜீவன் செய்யவேண்டுமென்கிறது. உணர்ச்சியை ஒத்துக் கொள்கிறது. அதனை அடக்குவது முதலில் எளிதல்ல என்பதால் தூலக்க வைத்துப் பிறகு துறக்கச் செய்யவே பக்தியை முன் வைக்கிறது. எந்தத் தெய்வமும் அதற்கு ஒன்றே. எம்மதமும் சம்மதம். எல்லா மக்களும் சமமே. பரமாத்மா வேறு, ஜீவாத்மா வேறு என்று கருதி உபாசித்தாலும் சரி. இறுதியில் இந்த மார்க்கமும் அத்வைதத்துக்கு இட்டுச் செல்லும் என அது நம்புகிறது. எனினும், 'இறுதி உண்மை ஒன்றே; ஒன்று என்று சொன்னாலும் எதையோ சுட்டிக் காட்டுவதாகிறது. அதுவும் தப்பு. ஒன்றி இருக்க வேண்டுமே ஒழிய, பேசி முடியாது. எனவே, இப்போது பரமாத்மா வேறு ஜீவாத்மா வேறு என்று

எண்ணியிருப்பது போல் இரண்டு இல்லை (அ-த்வைதம்)' என்று அது கூறுகிறது.

**வி**ஞ்ஞானமும் அத்வைதத்துக்கு விரோதமல்ல. உலகம் ஒரு நிலையில் உண்மை; வேறொரு நிலையில் பொய் என்று கூறி மெய்யில் பல நிலையைக் கண்டாரல்லவா ஆசாரியர்? அதை விஞ்ஞானம் ஒத்துக் கொள்கிறது. சட்ட விதிகளுக்கு உட்படும் சில நடைமுறை உண்மைகளும் வேறு உயரிய கோட்பாடுகளின் நிரூபணத்தின் போது பொய்யாகின்றனஎன்கிறதுவிஞ்ஞானம்.

நியூடனின் கவர்ச்சி விசைக் கொள்கை நடைமுறையில் உண்மை யென்பதையே நாம் காண்கிறோம். எனினும், உயர்தர விஞ்ஞானப் பரிசோதனையில் இந்த 'உண்மை' தப்பாகி விடுகிறது. ''கவர்ச்சி விசையும், கவர்ச்சி விசை மண்டலமும் வெறும் தோற்றங்களே'' என்கிறார், கால — இடவெளித்தொடர் கொள்கையை (Space-time-continuum)க் கூறும் ஐன்ஸ்டைன்.

பொருள் என்பது துகள் (particle) வடிவமானது; ஒளி, வெப்பம் முதலிய சக்தி வகைகள் அலை (wave) வடிவமானவை என்பது தானே பழைய விஞ்ஞானமும், நடைமுறைக் காட்சியும்? ஐன்ஸ்டைனே ஒளி முதலியவை துகளாகவும் இயங்கும் என்று கண்டு பிடித்தார். ட பிராக்லி என்பவர் பொருளும் அலை வடிவில் இருக்க முடியும் என்று கண்டு பிடித்தார். டிராக் ஒரே போடாகப் போட்டு விட்டார்: ''துகள், அலை என்ற இரு கருத்துக்களும் மாறானவை அல்ல; அவை ஒரே உண்மையின் இரு தோற்றங்கள்'' என்று.

அதோடு இல்லை; பொருள், சக்தி என்ற இரண்டு இருப்பதாகப் பேசுவதே தப்பு என்று அத்வைதம் சொல்கிறது இன்றைய விஞ்ஞானம். பொருளும் சக்தியும் அடிப்படையான தொடர்புள்ளவை; ஒன்று மற்றொன்றாக மாறும் தன்மையது என்கிறது.

எல்லாம் பிரம்மம் என்கிறார், ஆசாரியர். எல்லாம் ஒன்றே என்பதை வேறு விதத்தில் விஞ்ஞானம் சொல்கிறது. மரம், மட்டை, மண், மலை முதல் மனிதன் வரையில் எல்லாம் மின் காந்த அலைகளே (electro-magnetic waves); நாம் காண்பவை அதன் நானாவிதத் தோற்றங்களேஎன்கிறது. அதற்கும்மேல் சென்று 'இவ்வுலகம் ஓர் எண்ணமாகத் (thought) தோன்றுகிறதே ஒழிய யந்திரமாக (machine) அல்ல' என்று கூறுகிறார்கள் மாபெரும் விஞ்ஞானிகள். இன்னமும் மேலே சென்றால் அத்வைதத்தையே சொல்லக்கூடும்!

**உ**லகத் தோற்றத்தைப் பற்றிய பல சங்கைகளுக்கும் அத்வைதமே அறிவுக்கு மிகவும் பொருந்திய விதத்தில் விடை பகர்கிறது. 'கடவுள் உலகைப் படைத்தார் என்றால் எதைக் கொண்டு படைத்தார்? தன்னைத் தவிர வேறு ஏதோ ஒன்றைக் கொண்டு தானே? அவ்வாறானால் கடவுள் தவிர வேறு எதுவும் கிடையாது என்பது எப்படிச் சரியாகும்? அல்லது பால் தயிராவது போல் கடவுளே உலகமாகப் பரிணமித்தாரா? அவ்வாறானால் தயிரானபின் பால் இல்லாமல் போவது போல் உலகம் தோன்றியவுடன் கடவுள் இல்லாமல் போய் விடுவாரா என்ன?' என்ற கேள்விகள் எல்லாம் மாயை பற்றிய அத்வைத சித்தாந்தத்தால் அடிபட்டுப் போகின்றன. கயிறு பாம்பாகத் தோன்றுவதற்குக் கயிற்றைத் தவிர வேறெதுவும் தேவை யில்லையே! கயிறு பாம்பாகத் தோன்றும் போது அது இல்லாமற் போவதுமில்லையே! இதே போலத்தான் பரம்பொருளும் உலகமாகத் தோன்றுகிறதே ஒழிய உண்மையில் படைப்பேது, பரிணமிப்பது ஏது?

கடவுள் என்ற ஒருவர் ஏன் தீமையைப் படைத்தார் என்பதும் இப்போது புல்லிய வினாவாகிறது. இறுதி நிலையில் படைப்பே இல்லை என்றபோது நன்மை ஏது, தீமைதான் ஏது? தோற்றத்தில் காண்பதுதானே தீமையும்? எனினும் தோற்றத்தில் காணும் தீமையையும் விலக்கப் பரம்பொருளே அவதாரங்கள் நிகழ்த்துகிறது. மகான்களை அனுப்பி வைக்கிறது. அதன் கருணையின் பெருமையே பெருமை!

**உ**பநிஷதங்கள், பிரம்ம சூத்திரம், கீதை முதலியவற்றுக்கு இயற்றியுள்ள உரைகளிலும், சொந்த நூல்களாகிய உபதேச ஸாஹஸ்ரீ, விவேக சூடாமணி, பிரபோத ஸுதாகரம், ஆத்ம போதம், சத சுலோகீ, அபரோக்ஷானுபூதி, மனீஷா பஞ்சகம், தக்ஷிணாமூர்த்தி ஸ்தோத்திரம் முதலியவற்றிலும் ஆசாரியர்கள் தமது வியக்கத் தக்க புத்தி தீட்சண்யத்தினால், வெகு பொருத்தமான வாதப் பிரதிவாதங்களுடன் அத்வைத உண்மையை வெண்ணெயாக எடுத்துக் கொடுத்திருக்கிறார். வெண்ணெய் ஜீரணமாகாதவர்களுக்குப் பாலாகவே தந்திருக்கிறார் பக்தி நூல்களை! பாலில்தான் சர்வ நிச்சயமாக வெண்ணெய் உண்டே! (தொடரும்)







# பாண்ட்ஸ்

## ட்ரீம்ப்ளவர் டால்கம் பவுடரை

**உபயோகித்து நாள் முழுவதும் குளுமையையும் நறுமணத்தையும் அனுபவியுங்கள்**

எந்தப் பருவகாலத்திலும் நீங்கள் நாள் முழுவதும்
இதமாக இருக்கலாம்—குளிர்ந்த நீரில் குளித்த
பிறகு பாண்ட்ஸ் ட்ரீம்ப்ளவர் டால்கம்
பவுடரை உடல் மீது தாராளமாகத் தூவினால்
நாள் முழுவதும் அயர்வில்லாமல்
புத்துணர்ச்சியுடன் இருக்கலாம்!
நவீனமான நறுமணமுடைய இப்
பவுடர் வியர்வையை உறிஞ்சுவதில்
இணையற்றது...நீராடிய புத்துணர்ச்சி
நாள் பூராவும் நீடித்து நிற்கச்
செய்யும் சிறந்த சுகந்த சாதனம்!




சீஸ்ப்ரோ-பாண்ட்ஸ் இன்கார்ப்பொரேடட்
(வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் யு.எஸ்.ஏ.வில் இணைக்கப்பட்டது)

JWT-P 3233

# சிந்தனை மேடை

## அரவிந்தன்

### நாகரிகச் சடங்குகள்

சமூகமும் பழக்க வழக்கங்களும் மாறிக் கொண்டு வருகிற வேகத்தில் சில பழைய சடங்குகள் அழிவதும் பல புதிய சடங்குகள் தோன்றுவதும் உண்டு. பழைய சடங்குகள் எப்படி நாட்பட நாட்பட நம்பிக்கை நலிந்து தேவையற்றவைகளாகப் போகின்றனவோ, அப்படிப் புதிய சடங்குகளும் நாளைக்கு வரப் போகிற சமூகத்தில் பழையனவாகப் போய் விடலாம். மனிதர்களுடைய ஆசையில் அதைப் பற்றிச் சலிப்புத் தட்டுகிற வரையில் ஒரு பழக்கத்துக்குப் புதுமை என்ற மதிப்பு இருக்கும்.

'தங்கள் சுற்றமும் உறவும் புடைசூழ வந்து மணமக்களை வாழ்த்துமாறு வேண்டுகிறோம்' என்று நூறு ஆண்டுகளுக்கு முன்னால் எப்படித் திருமண அழைப்பிதழ் விடுத்தார்களோ, அப்படித்தான் இன்றும் அழைக்கிறார்கள். அந்தக் காலத்தில் அப்படி அழைத்ததற்கு ஏற்பச் சுற்றமும், உறவும், புடைசூழவே நான்கு நாட்கள் முன்பாகவே வந்து தங்கி மணமக்களை வாழ்த்திக் கொண்டிருந்தார்கள். இப்போது அழைப்பிதழ்களில் இப்படிப்பட்ட தொடரைப் பார்க்கும் போது நமக்கே சிரிப்பு வருகிறது. திருமணமே சில மணி நேரத்துக்குள் நடந்து முடிந்து விடுகிற அவசரச் சடங்காகி மணமக்களே வேறு வேறு ஊர்களிலிருந்து திருமணத்துக்கு முதல் நாள்தான் ரயிலில் வந்து இறங்குகிறார்கள் என்று சொல்வதற்கு ஏற்ற சூழ்நிலையில் இப்படி அழைப்பதும் வெறும் சடங்காகிப் பொருளற்று நிற்கிறது. இதே சமயத்தில் புதிய சூழ்நிலைக்கு ஏற்ப நாம் உண்டாக்கிக் கொண்டிருக்கும் சில சடங்குகளைப் பற்றியும் சற்றே சிந்திக்கலாம்.

'ஒருவர் தலைமை வகித்துப் பொதுக் கூட்டம்போல் சிலர் மணமக்களை வாழ்த்தி 'மைக்'கில் பேசுகிற புதிய திருமண முறையில் சடங்குகளே இல்லை' என்று நீங்கள் கூறினால் அதை நான் ஒப்புக் கொள்ள மாட்டேன். இந்தப் புது முறையிலும் சடங்குகள் உண்டு. ஆனால் இவை நாகரிகமாக மாற்றப்பட்டிருக்கின்றன. மேசை, நாற்காலி, மைக், சொற்பொழிவாளர்கள், மாலை, எலுமிச்சம்பழம் என்று எவ்வளவோ பொருள்கள் இந்தப் புதுமுறைச் சடங்குக்கும் வேண்டுமே!



குத்துவிளக்கேற்றிக் கொட்டு மேளம் முழங்க முத்துப் பந்தலின் கீழ் மூது மக்கள் நின்று வாழ்த்திட நிகழ்ந்த திருமணம் சினிமா பிளேட் சங்கீதம் அலறக் கண்ணாடிச் சட்டமிட்ட அடுக்குமொழி அலங்கார வாழ்த்துக்கள் படிக்கப் பெற, மின்சார வண்ண விளக்குகள் தேவைக்கும் அதிகமாக வெளிச்சம் போட, இன்று புது விதமாகவும் நடைபெறுகிறது. இந்தப் புதுமுறைத் திருமணத்தில் சடங்குகள் இல்லை என்று சொல்ல முடியுமா? பழைய சடங்குகள் இல்லை என்று வேண்டுமானால் சொல்லலாம். சடங்குகளே இல்லை என்று நிச்சயமாகச் சொல்லமுடியாது. தரை மட்டத்துக்கு வெட்டி விட்டாலும் முளைத்து மேலே மீதமிருக்கிற அடிமரத்திலிருந்து துளிர்க்கிற சில தாவர இனங்களைப் போன்றவைதாம் சடங்குகள். பழையவற்றில் காரணம் எதுவும் நமக்குப் புரியவில்லை என்பதற்காகச் சிலவற்றை மூட நம்பிக்கைகளென்று ஒதுக்குவோம். இன்றைய நிலைக்கு மட்டும் காரணம் புரிவதாயிருக்கிற சில புதிய சடங்குகளை மேற்கொள்ளத் தொடங்கி விடுவோம். இந்தப் புதிய சடங்குகளின் காரணமாக நாம் அறிந்து கொண்டவற்றில் நமக்கே நம்பிக்கை குறையும்போது இவையும் மூட நம்பிக்கைகளாகி நம்மை ஏமாற்றி விடுகின்றன.

### ஒப்புக்காக

நமக்கு நம்பிக்கையின்றிப் பிறர் வற்புறுத்தலைத் திருப்திப்படுத்துவதற்காக நாம் செய்கிற காரியங்களெல்லாம் 'ஒப்புக்காகச் செய்பவை' என்ற பிரிவிலேயே அடங்கும். இப்படி நம்பிக்கையின்றிச் செய்கிற காரியங்களைக் குறிக்கத்தான் 'மூட நம்பிக்கை' என்ற தொடரை நாம் பல வேளைகளில் பயன்படுத்துகிறோமேயன்றி வேறு பொருளில் அன்று.

உங்களுக்கு எந்தவிதமான உடல் நலக் குறைவுமின்றிப் பார்ப்பதற்கு நீங்கள் சோர்வாகத் தென்பட்டுக் கொண்டிருக்கிற சமயம் ஒன்றில் உங்கள் நண்பர்கள் உங்களை ''நீங்கள் மிகவும் பலவீனமாகத் தெரிகிறீர்கள். ஏதாவது வைத்தியம் செய்து கொள்ளுங்கள்'' என்று வற்புறுத்தலாம். சரியான உணவு இன்மை, சரியான தூக்கம் இல்லாமை, இரண்டும் நமது சோர்வுக்குக் காரணம் என்று உங்களுக்குப் புரிந்திருந்தும் நீங்களே அதைமறந்து விட்டு ஒரு டாக்டரிடம் உடம்பைக்

காண்பித்துக் கொண்டு பேதை போல் அவர் என்ன சொல்லப் போகிறு ரென்று எதிர்பார்த்து நிற்பீர்களே; அதுவும் ஒரு மூட நம்பிக்கை தான். சாயங்காலம் மூன்று மணியிலிருந்து நாலரை மணிக்குள் முப்பது நண்பர்கள் வீட்டுக்குப் போய் முப்பது பேர் வீட்டிலும் காப்பி குடிக்கச் சொல் லிக் குடிக்க வைத்தபின் முப்பத்தோராவது நண்பர் வீட்டிலும் 'இனி வயிறு தாங்காது' என்று சொல்லி மறுக்கத் துணி வின்றி நிற்பீர்களே; அது தான் மூட நம்பிக்கை. அதுதான் கைவிட வேண் டிய சடங்கு.

நியாய உணர்ச்சியும், தன்னம்பிக்கையும், உள்ள ஒருவன் 'ஒப்புக்காக' எதையுமே செய்யக் கூடாது. பல காரியங் களை அந்தக் காரியங்களின் அவசிய அநாவசி யங்களைப் பற்றிச் சிந்தித்து முடிவு எடுக் காமல் 'ஒப்புக்காக'வே செய்து பழகுகிறவன் நாளடைவில் கோழையாகி விடுவான். 'ஒரு காரியத்தைச் செய்ய வேண்டுமென்றே அதைச் செய்து முடிக்கும் தன்மானம் அவ னிடமிருந்து படிப்படியாகப் போய் விடும். அப்படி நிலைக்கு ஆளான பின்பு 'செய்தே முடிக்க வேண்டும்' என்ற வகையைச் சேர்ந்த காரியத்தைக் கூட ஒப்புக்காகச் செய்வது போலத்தான் அவனும் செய்ய முடியும்.

இராமாயண மேடை நாடகத்தில் இருபது ஆண்டுகளாக அநுமார் வேடம் போட்டுப் போட்டு அந்த வேடத்துக்கு ஏற்றபடியாக வாயைக் கோணிக் கொண்டு நிற்கப் பழகிய ஒருவன் மேடையிலிருந்து இறங்கி நிஜ உலகில் முகத்தைக் காட்டுகிற போதுகூட அதே கோணல் சிறிதளவு தெரியத் தொடங்கி விடும். எதையும் 'ஒப்புக்காக'ச் செய்யப் பழகிக் கொண்டு விடுவதே ஒரு தீராத நோய். கூடிய வரை காரண காரியத்தோடு ஒழுங் காகச் செயல்பட வேண்டும். அப்படிச் செயல் படாமல் நாகரிகச் சடங்குக்கு ஏற்ப ஏதோ தானோ என்று செயல்படுவதற்குப் பழகிக் கொண்டு விட்டால் அதுதான் மூட நம்பிக்கை என்று சொல்லலாம்.



## செயல் துணிவு

ஒரு செயலைத் துணிவாகச் செய்வதற்கு வேண்டிய நம்பிக்கைதான் பக்தி என்று சொன்னால் அதை நீங்கள் மறுக்க மாட் டீர்கள். செயலில் நம்பிக்கை இல்லாமல் ஏனோதானோ வென்று செயல்படுகிறவனைக் கூட நாஸ்திகன் என்று சொல்லலாம்தானே? நாகரிக உலகத்தில் ஏனோ தானோ என்று இருப் பதுகூட ஒரு கௌரவமான சடங்கு என்று நினைக்கப்படலாம். ஆனால் அப்படி இருப் பவன் மன்னிக்கப்படுவதில்லை. பொறுப்பும், உணர்ச்சியும், நியாயமும், நிஜமும் தெரியாதவனாக இருப்பதுதான் மூட நம் பிக்கை. அவை தெரிந்தவ னாக இருந்து அவற்றை மதிக்கிறவன் காரணமில் லாத பழைய சடங்குகளை விட்டு விட்டாலும் அவ னால் கெடுதல் இல்லை; பழைய சடங்குகளையும் மதிக்காமல், புதியவற்றி லும் பொய்யான சடங்கு களை மட்டுமே மதிக்கப் பழகிக் கொண்டிருக்கிற செயல் துணிவில்லாதவன் எவனோ அவன்தான் இன் றைய சமூகத்தில் பரிதா பத்துக்குரியவனாகி நிற்கிற பேதை ஆவான். பத்துப் பேர் செய்யக் கூசி நிற்கி றார்கள் என்று அந்தப் பத்துப் பேருக்குப் பயந்து பதினோராவதாக நிற் கிறவனும் ஒரு நியாய மான காரியத்தைச் செய்ய நாணி நிற்கும் நிலையை இன்றைய பொது வாழ்வில் அதிகமாகப் பார்க் கிறோம். நல்லதைச் செய்யக் கூசி நிற்பதுதான் இங்கே மூட நம்பிக்கை. இந்தவிதமான நாகரிக நாணம் எவ்வளவு புதியதாக இருந்தாலும் முதலில் ஒழிக்க வேண்டிய மூட நம்பிக்கை இதுதான். முதலில் தவிர்க்க வேண்டிய போலிச் சடங்கும் இதுதான். நியாய உணர்ச்சியும், பிறருக்கு உபகாரம் செய்யக் கூசாமல் முந்தும் கருணையும் சமுதாயத்தின் பொது நிதிகள். அவை இல்லாமல் குறைந்து போய்விட்ட பொது வாழ்வு எதுவோ அது தான் மூட நம்பிக்கை மண்டியதாக இருக்கும். பழையவற்றை விட்டு விடுவது, புதியவற்றைக் கடைப்பிடிப்பது, கொள்கைகளை வேகம் நிறைந்ததாக்கிக் கொள்வது, — என்று இவை தாம் நல்ல பக்குவமான சீர்திருத்த வாழ்வு என்று நினைப்பதற்குப் பதில் நியாய உணர்ச்சி யும் கருணையும் கொட்டு வாழ்வதுதான் சீர் திருத்தமே அற்ற மூட நம்பிக்கை மண்டிய வாழ்வு என்று புதிய கோணத்தில் மாற்றியும் நினைக்கலாம். நியாயமும், கருணையும், இல் லாத நிலையையே மூடநம்பிக்கைகளும், போலிச் சடங்குகளும், இருக்கும் நிலையாக வைத்துப் பேசினால் இந்தப் பிரச்னையைப் பற்றி நீங்கள் முற்றிலும் புதிய கோணத்தில் மாற்றிச் சிந்தித்துப் பார்க்க முடியும்.

## சுயமான ஆர்வம்

தன் விருப்பம் இல்லாமல் 'பிறர் மெச்ச வேண்டுமே' என்ற ஆசையில் கடைப்பிடிக்கிற எல்லாமே போலிச் சடங்குகள்தாம். அப்படி மனத்தில் ஊன்றாமல் 'ஏனோ தானோ' என்று செய்கிற சடங்குகளைக் குறிப்பிடும் இன்னொரு பெயரே 'நாகரிகச் சடங்குகள்' என்பது. தன் விருப்பம் இல்லாமல், பலாபலன்களை அடிமனத்திலிருந்து வளர்த்து ஊன்றிச் சிந் திக்காமல், யாருக்காகவோ, எதற்காகவோ, கடைப்பிடிக்கிற நம்பிக்கைகள்தாம் இன்

றைய மூட நம்பிக்கைகள். அதிகாலையில் எழுந்து நீராடுவதோ, மரபு வழி வந்த பண்பாடுகளைக் கடைப் பிடிப்பதோ, தனித் தனிச் சமயக் கோட்பாடுகளை வழுவின்றி நம்புவதோ மூடநம்பிக்கை அல்ல. நாகரிகத்தின் பெயரால் நன்மை தீமைகளை எடை போடாமல் பின்பற்றுகிற ஆடம்பரங்களில் பல மூட நம்பிக்கையாக இருப்பதைப் புரிந்து கொண்டால் இப்போது நிமிர்ந்து நடக்கிற பலர் வெட்கப்பட்டுத் தலை குனிய நேரிடும்.



விமர்சகர் ஒருவர் தாம் பார்க்காத நாடகம் ஒன்றைப் பற்றி எழுதிய உண்மை விமரிசனம்!

"இந்தமாதிரி நாடகத்தை நான் பார்த்ததே இல்லே......!"

நம் முன்னுல் இன்றைய நகரங்களில் படித்துப் பதவி, பணம், எல்லாம் நிறைய அடைந்து பகட்டாக வாழ்கிற பலர் சுயமான ஆர்வமில்லாமல் பல நல்ல காரியங்களையும் நம்பிக்கையில்லாது செய்கிற சாதாரணச் சடங்குகளைப் போலச் செய்கிறார்கள். அவர்களைப் பார்க்கும் போது உங்களுக்கு என்ன தோன்றுகிறது? சுயமான ஆர்வத்தோடு செயல்படத் தெரியாது நம்பிக்கையற்றுச் செயல்படுகிறவன் அல்லவா தன்னுடைய ஒவ்வொரு காரியத்தையும் செய்யப் பிடிக்காத ஒரு சடங்கைச் செய்வது போல ஆக்கிக் கொள்கிறான்? அவனைப் போன்றவர்களை நாகரிக மனிதர்களாக நம்பி மன்னித்து விட்டு யார் யாரையோ மூட நம்பிக்கைக்காரர்களாகவும் ஆஷாடபூதிகளாகவும் கற்பனை செய்து நாம் இகழ்கிறோமே—அதைப் பற்றி இரண்டு விநாடி ஆற அமரச் சிந்தித்துப் பாருங்கள். புதிய கொள்கைகள் உங்களுக்கு அப்போது புரியும். 'எதைப் போற்றலாம்? எதை இகழலாம்?' என்பதையும் நீங்கள் தெரிந்து கொள்வீர்கள். எவை போலிச் சடங்குகள்? இனிமேல் வருகிற தலைமுறையில் எவை மூட நம்பிக்கைகள் என்பதைப் பற்றியும் நீங்கள் புதிய நோக்கோடு சிந்திக்கத் தொடங்குவீர்கள். அப்படி ஒரு புதிய சிந்தனையை இந்த மேடையில் இந்தப் பிரச்னையைப் பற்றித் தொடங்கி வைக்கிற போது சமுகத்தின் எதிர்காலத்தைப் பற்றி நிறைந்த நம்பிக்கைகள் ஏற்படுகின்றன. உங்களுக்கும்தான்; எனக்கும்தான்.

பகட்டுக்காகச் செய்கின்ற ஆடம்பரங்களையும் மூட நம்பிக்கையோடு தான் சேர்க்கவேண்டும். சிக்கனமாக இருக்க வேண்டுமென்று ஆசைப்பட்டு ஐந்து பைசாவுக்குத் தபால் கார்டு வாங்கி எழுதி அது விரைவில் போய்ச் சேர வேண்டும் என்பதற்காக அடையாறிலிருந்து மவுண்ட் ரோடு தபால் நிலையத்துக்கு அதைக் கொண்டு போய்ச் சேர்ப்பதற்கு ஒரு 'பாண்டியாக்' கார்சவாரியைச் செலவழித்துத் தபாலில் சேர்க்கிற மாதிரிப் போய்ச் சிக்கனங்கள் பல உண்டு. சிக்கனத்தைக் காப்பாற்றுவதற்காகப் பயன்படுகிற ஊதாரித்தனத்தைப் பார்த்தும் நமக்கு அதன்மேல் வெறுப்புத்தான் ஏற்படுகிறது.

நாகரிகம் சடங்குகளிலோ, ஆடம்பரங்களிலோ இல்லை. நியாயத்தையும், கருணையையும் மதித்துப் பண்போடு வாழ்கிற ஏழையும் நாகரிகமாக இருக்க முடியும். பண்பற்று வாழ்கிற செல்வந்தரே மற்றவர்க்கு அநாகரிகமாகத் தோன்றவும் இடமுண்டு.

உலகத்தில் நாகரிகம் பண்பாடுகளால் அளவிடப்பெற வேண்டுமென்று நாம் ஆசைப்படுகிறோம். அப்படி அளவிடப் பெறாமல் வேறு விதமாக அளவிடப்படுவதைக் காணும் இடங்களில் எல்லாம் மனம் நோகிறோம். ஆடம்பரங்களாலும், பதவிகளாலும், செல்வத்தாலும், மனிதனை அளக்கப் பழகிக் கொண்டு, மனிதத் தன்மைக்காக அளக்கத் தெரியாமல் விட்டு விடுகிற இடங்களைக் கண் முன் காண்கிறபோதெல்லாம் நியாய தேவதை உங்கள் மனத்தில் வந்து நின்று குமுறுகிறாள். அர்த்தமுள்ள பழைய சடங்குகளை விடுவதைப் போல் அர்த்தம் இல்லாத புதிய சடங்குகளை ஏற்பதும் தவறுதானே?

# கோலிக் குண்டு


(உருவகக் கதை)

அது ஒரு விசித்திரமான குடும்பம். அந்தக் குடும்பத் தலைவரின் பெயர் மேகநாதன். அவருடைய சொந்த ஊர் பாலூரர். அவர் ஒரு சுகவாசி; சொகுசுப் பேர்வழி. வேலை வெட்டி எதுவும் இடையாது. எப்போதும் தம்மை எழிலுறச் சிங்காரித்துக் கொண்டு சுந்தர புருஷராகவே காட்சியளிப்பார். அநேகமாக வீட்டை விட்டு எங்கும் வெளியே போவதில்லை. சயன அறையே கதி என்று சாய்ந்து கிடப்பார்.

இப்படிப் படுத்துக் கிடக்கும் வேளையில் எதையாவது படித்துக் கொண்டிருப்பாரா, அதுவுமில்லை. 'நான் படிக்க என்ன இருக்கிறது' என்பது போன்ற இறுமாப்புப் புன்னகைதான் அவர் முகத்தில் தவழும். ஆனால், எப்போதும் எதைப் பற்றியாவது எண்ணமிட்டுக் கொண்டே யிருப்பார். அது என்ன எண்ணமோ, எதைப் பற்றிய சிந்தனையோ யாருக்கும் தெரியாது. உண்மையில் அவர் சிந்திக்கிறாரா, அல்லது சிந்திப்பது போல் பாவனை செய்கிறாரா என்பதையும் தீர்மானிக்க முடியாது. அப்படி ஒரு வித்தார நடிப்பு!

''என்ன, தூக்கமா?'' என்றால் ''இல்லை; விழிப்புத்தான்'' என்பார். '''விழித்துக் கொண்டுதானே இருக்கிறீர்கள்?'' என்று அருகில் நெருங்கினாலோ, ஆனந்த உறக்கத்தில் ஆழ்ந்திருப்பவர் போல் கண்மூடிக் கிடப்பார்.

அவரைப் பார்க்க அடிக்கடி பல பெரிய மனிதர்கள் வருவார்கள். அப்போதும் மஞ்சத்தில் சாய்ந்தபடியேதான் இருப்பார் எழுந்து உட்கார மாட்டார்; வருகிறவர்களை 'வா' என்றும் வரவேற்ப




ஜெகசிற்பியன்

இல்லே; வந்தவர்களைப் 'போ' என்றும் சொல்வதில்லே. அவர்கள் கூற வந்த விஷயங்களை அமைதியோடு கேட்டுக் கொள்வார். ஆனால் வாய் திறந்து பதிலேதும் பேசுவதில்லே. பேசக் கூடச் சோம்பல் அவருக்கு!

இந்த மனிதருக்கு மனைவியாக வந்து வாய்த்தவள் ஒரு சரியான கட்டுப்பெட்டி; அசடு என்றும் கூறலாம். அவள் பெயர் செங்கமலவல்லி.

அதிர்ந்து ஒரு வார்த்தை பேச மாட்டாள். நிலம் நோவ நடக்க மாட்டாள். வாய்திறந்து சிரிக்க மாட்டாள். பேச்சுக்கூட ரொம்பக் குறைவுதான். சதா சர்வ நேரமும் நித்திரா விரும்பியாய் இருப்பவருக்கு வாக்குப்பட்டதாலோ என்னவோ, இப்படிப் பூப்போல் நடந்து கொள்ளத் தன்னைப் பக்குவப்படுத்திக் கொண்டிருந்தாள்.

அவளுக்கென்று தனியான விருப்பு வெறுப்போ, இலட்சியமோ எதுவும் கிடையாது. தன்னுடைய கணவர் என்ன நினைத்



தாலும், எது பேசினாலும், எது செய்தாலும் கண்ணை மூடிக் கொண்டு ஆமோதித்து விடுவாள். அவளுக்குத் தெரிந்ததெல்லாம் இரண்டே இரண்டு தான். சிங்காரப் பேர்வழியான தன் கணவரைப் போலவே, அழகு சொட்டச் சொட்டத் தன்னைச் சிங்காரித்துக் கொள்ளவும், அவரது மனம் கோணாமல் குறிப்பறிந்து பணிவிடைகள் செய்யவும் மட்டுமே அவள் தெரிந்து வைத்துக் கொண்டிருந்தாள். அவளது செவ்விய முகாரவிந்தத்தில் எழிலார்ந்த புன்னகை எந்நேரமும் தவழ்ந்த வண்ணமாகவே இருக்கும். அந்த அழகு நகையே அவள் அணிந்திருக்கும் மற்ற நகைகளுக்கெல்லாம் தலைமை பூண்டு விளங்கும்.

மேகநாதனுக்குத் தாமரைப் பூக்களின் மேல் அபார மோகம். அவருடைய அந்த விருப்பத்தை நிறைவேற்றி வைப்பதற்காக, அருகிலுள்ள பொய்கையொன்றில் தாமரைப் பூக்கள் கொய்து வரத் தினமும் போவாள் செங்கமலவல்லி. அப்போது அங்கே, அவளைப் பற்றியும் அவளது கணவரைப் பற்றியும் பல விதமான வம்புப் பேச்சுக்கள் கிளம்பும்.

செங்கமலவல்லியை வஜ்ரசணடைக்கு இழுக்கவே அவள் வரும் வேளை பார்த்து, கர்த்தபம் ஒன்றை ஓட்டிக் கொண்டு அந்தக் குளக்கரைக்கு வந்து சேர்வாள் ஒரு ரஜனி அலங்காரி. அவள் தன் கர்த்தபத்திடம் பேசுவது போலச் செங்கமலவல்லியைச் சாக்கிட்டு ஏசுவாள்: ''ஏண்டியம்மா, ஒய்யாரி! எதற்கு இப்படித் தினந்தோறும் இந்தக் குளத்திலிருக்கிற பூவையெல்லாம் சங்காரம் பண்ணிக் கொண்டு போகிறாய்? புருஷன் பெயரைச் சொல்லிப் பறித்துப் போய், நீ அவற்றைச் சூடிச் சிங்காரித்துக் கொண்டு அவனை மயக்கி மடியில் போட்டுக் கொள்ளவா? சீச்சீ! தனக்கு வரும் ஆண் பிள்ளையை வீட்டிலே வைத்துக் கொண்டு இன்னமும் புருஷனிடம் இம்மாதிரிப் பச்சைப் பசப்பல் செய்ய உனக்கு வெட்கமாக இல்லே? ....... புருஷனாம், புருஷன்! அவன் என்னடி, பூமேலே ஆசைப்படுகிற புருஷன்? பெண்களுக்குத்தான் பூவைக் கண்டால் மோகம் பிறக்கும்; ஆணாய்ப் பிறந்தவனுக்கு அந்த ஆசை இருக்கலாமோ? இம்மாதிரிப் பெண் புத்தி இருப்பதால் தான் அவன் வெளியே போய் உத்தியோகம் பார்த்து நாலு பணம் சம்பாதிக்கத் திராணியில்லாமல் வீட்டோடு படுத்துக் கிடக்கிறான். கேட்டால், 'எனக்கு எதற்கு உத்தியோகம்? என் மனைவி தான் பிறந்தகத்திலிருந்து ஏராளமான சீதனம் கொண்டு வந்திருக்கிறாளே?' என்று ஜம்பமாகப் பதில் சொல்லி விடுகிறான். ஆனால் அவனைப் பற்றி மற்றவர்கள் என்ன பேசிக் கொள்கிறார்கள் தெரியுமா? 'பெண்டாட்டி சொத்திலே காலம் தள்ளுகிற பேர்வழியாய் இருப்பதால்தான் அவன் பெண்டாட்டி தாசனாய் வீட்டிலேயே விழுந்து கிடந்து, அவள் ஆட்டி வைத்த பம்பரமாய் ஆடிக் கொண்டிருக்கிறான்' என்று சிலர் கேலி பேசுகிறார்கள். இன்னும் சிலர், 'அவன் பெற்றோர் உற்றார் இல்லாத தனிக்கட்டை. அவனுக்கு மனைவியாக வந்தவளும் அவனைப் போல் தாய் தந்தையற்ற அநாதைதான். அவளுக்கு இருக்கும் ஒரே அண்ணன்காரனும் பித்துக்கோளாறு

கொண்டு மனம் போன வாக்கில் சுற்றித் திரிபவன். இப்படித் தட்டிக் கேட்க ஆள் இல்லாமல் போனதால் தான் அவன் தண்டச் சோற்று ராமனாய்க் காலம் கழிக்கிறான்' என்று இழித்துப் பேசுகிறார்கள். மற்றும் சிலரோ, 'அவன் பிறவியிலேயே வாத நோய் கண்டவன். அதனால்தான் படுத்த இடத்தை விட்டு எழுந்திருக்காமல் எப்போதும் சயன கதியிலேயே சாய்ந்து கிடக்கிறான்' என்று எள்ளி நகையாடுகிறார்கள். இப்படியெல்லாம் நாலு பேர் நாலு விதமாகப் பேச ஒருவன் நடந்து கொள்ளலாமோ? நானாக மட்டும் அவன் மனைவியாக இருந்தால் நாக்கைப் பிடுங்கிக் கொண்டு செத்துப் போவேனே!''

நீலியலங்காரியின் இந்தக் குத்தல் மொழிகளைக் கேட்டும் கேளாதவள் போல் இருந்து விடுவாள் செங்கமலவல்லி. பொய்கையில் கொய்த புண்டரீகக் கொத்துக்களைத் தன் மார்போடு அணைத்துக் கொண்டு, குனிந்த தலை நிமிராமல் திரும்பி விடுவாள். இல்லம் திரும்பிய பின்னராவது அந்தப் பழிப்புப் பேச்சுக்களை எண்ணிச் சஞ்சலப்படுவாளா? அல்லது அவற்றைத் தன் கணவரின் காதிலாவது போடுவாளா? அதுதான் கிடையாது. ஒன்றுமே நடவாத மாதிரி அவளது வதனத்தில் அந்த ஒள் முல்லை நகையே பூத்துக் கிடக்கும். இப்படி ஓர் அசட்டுப் பெண்ணை எங்கேனும் பார்க்க முடியுமா?

இந்த விநோதத் தம்பதிக்கு ஒரு விசித்திர பிள்ளை இருந்தான். அழகான பெற்றோருக்குப் பிறந்தவனாதலால் அழகு அவனிடம் கொஞ்சிக் குலவியது. ஆனால், அந்த அழகிலே ஒரு விசித்திர விசேஷம் கலவையிட்டிருந்தது. சுந்தரக் கலை பொருந்திய அவன் முகத்தை நேரில் நின்று பார்த்தால் ஒரு விதமாகவும் வலப்பக்க வாட்டில் நின்று பார்த்தால் வேறொரு விதமாகவும், இடப் பக்க வாட்டில் நின்று பார்த்தால் இன்னொரு விதமாகவும் தலைக்குப் பின்னால் உயரே நின்று பார்த்தால் பிறிதொரு விதமாகவும் தோற்றமளிக்கும். இப்படி நான்கு கோணங்களில் நான்கு வித முக வடிவம் பெற்றிருந்ததால்தானோ என்னவோ அவனுக்குச் சதுர்முகன் என்று பெயர் சூட்டியிருந்தார்கள்.

அப்பனைப் போலத் தானே பிள்ளையும் இருக்கும்? சதுர்முகனும் தன் தந்தையைப் போல் எவ்விதப் பொறுப்பையும் ஏற்காமல் இஷ்டம் போல் ஊரைச் சுற்றி வந்தான். ஆனால், அவன் கொஞ்ச நேரங்கூடச் சும்மா இருக்க மாட்டான். துறுதுறுவென்று எந்நேரமும் எதையாவது செய்து கொண்டிருப்பான். அவனுக்குத் தெரியாத வேலையே எதுவும் இல்லையென்று தான் சொல்ல வேண்டும். சித்திரம் தீட்டுவான். சிலைகள் செதுக்குவான்; ஏர் உழுவான். பயிரிடுவான், தோட்டம் சமைப்பான், தரவு ஆக்குவான். மலர் தொடுப்பான், மணிமாலை கோப்பான், விதம் விதமான இசைக் கருவிகளை உருவாக்குவான். இன்னும் என்னென்னவெல்லாமோ செய்வான். ஆனால்.....ஆனால்....இவற்றில் ஒன்றைக்கூட அவன் உருப்படியாகச் செய்ய மாட்டான். எல்லாம் அரைகுறை வேலை தான். எதிலும் ஏதாவது ஒரு 'சொட்டு' வைத்து விடுவான். எதையும் நிறைவுபெறச் செய்து முடிக்க மாட்டான். எந்த வேலையைச் செய்வதானாலும் அவனுக்குப் பாதி வரையில்தான் பொறுமையும் உற்சாகமும் இருக்கும்; அப்புறம் திடீரென்று சலிப்பேற்பட்டு விடும். உடனே தான் செய்தவற்றை மூண்டும் மூளியுமாகப் போட்டு விடுவான்; அல்லது தன் கையாலேயே அவற்றை அழித்தும் கலைத்தும் உடைத்தும் நொறுக்கியும் நிரவி விட்டுப் போய் விடுவான். இப்படி ஓர் உருப்படாத புத்தியும் ஊக்கமற்ற போக்கும் கொண்ட பிள்ளை அவன்.

ஆனால், அவனுக்குப் பாட்டென்றால் உயிர் படிப்பதென்றால் வெல்லம். இந்த ஆர்வத்தின் முதிர்ச்சியால், தான் ஓர் ஆண் மகன் என்பதையும் மறந்து, ஒரு பெண்ணிடம் போய்க் கல்வி கற்க முற்பட்டான். அந்தப் பெண்மணி மெத்தப் படித்தவள். சகலகலா வல்லபி. வீணை வாசிப்பதில் கைதேர்ந்தவள். ஆனால், கொஞ்சம் கர்வி. களரேற்ற கல்வியறிவால் ஏற்பட்ட தலைக்கனம்.

இப்படிப் பட்டவளிடம் பாடம் கேட்கப் போனவன் எவ்வளவு ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்? அந்த அசட்டுப் பிள்ளை சதுர்முகனோ, கல்வி கற்றுக் கொடுத்த வாத்தியாரம்மாளையே காதலிக்க ஆரம்பித்துவிட்டான்!

விஷயம் முற்றிப் போய் அது பெற்றோரின் செவி வரையில் எட்டி விட்டது. அந்த உல்லாசத் தம்பதியோ அதற்காகக் கொஞ்சமும் கவலைப்படவில்லை. எந்நேரமும் தம் அருகிலேயே இருந்த பிள்ளையாண்டான், அந்தப் பெண்ணின் பொருட்டாவது சற்று வெளியே போய், தம்மைத் தனித்து இருக்க வாய்ப்புத் தந்தானே என்று அவனை வாழ்த்தவே செய்தனர்.

இப்படி இருக்கும்போது, ஒரு நாள்—

பொய்கையிலிருந்து பறித்து வந்த கமலப் பூக்களைக் கணவரின் பாதங்களில் சமர்ப்பித்து விட்டு, அவர் அருகிலேயே அமர்ந்து மயூரத் தோகையால் விசிறிக் கொண்டிருந்த செங்கமலவல்லி, ''என்ன உறக்கமா?'' என்று இதமான குரலில் வினவினாள்.

''இல்லை, விழிப்புத்தான்!'' என்றார் மேகநாதன்.

''அப்படி என்ன ஆழ்ந்த சிந்தனை?''

''ஒரு முக்கிய விஷயமாக....''

''நான் இருப்பது தடங்கலாய் இருக்குமோ?''

''இல்லை. இல்லை. உன்னிடம் கலந்தே அதற்கொரு முடிவு காண விரும்புகின்றேன்.''

''அப்படியானால் சொல்லுங்கள்.''

''எத்தனை காலத்துக்கு நான் இப்படி யாதொரு வேலையும் இல்லாமல் சும்மா இருந்து கொண்டிருப்பது?''

''இது என்ன, இன்றைக்குப் புதுப்பேச்சு?''

''என்னைப் பார்த்து என் பிள்ளையும் கெட்டு விடுவான் போலிருக்கிறது. நான் இப்படிக் கவலையின்றி இருப்பதால் அவனும் கவலையற்றுத் திரிய ஆரம்பித்து விட்டான். அதனால் அவனிடமுள்ள ஆக்க சக்தி வீணாகிக் கொண்டு போகிறது.''

''நீங்கள் இப்போது உங்களுக்காகக் கவலைப் படுகிறீர்களா? உங்கள் பிள்ளைக்காகக் கவலைப்படுகிறீர்களா?''



"இரண்டு பேருக்குமேதான்."

"என்ன செய்வதாக உத்தேசம்?"

"ஏதாவது வேலை செய்யலாமே என்று யோசிக்கிறேன்."

"என் அண்ணாவைப் போலவா?"

"ஊஹும்! அவரைப் போல் என்னால் உழைக்க முடியாது. நான் சும்மா இருப்பதில் சுகம் காண்பவன்; அவர் ஓயா உழைப்பில் இன்பம் தேடுபவர்."

"அப்படியானால் என்ன வேலைதான் செய்யப் போகிறீர்களாம்?"

"ஒரு பண்டகசாலை திறக்கலாம் என்று..." கலீரெனச் சிரித்தாள் செங்கமலவல்லி.

"ஏன் சிரிக்கிறாய்?"

"பின்னே, நீங்கள் சொல்வதைக் கேட்டால் சிரிக்காமல் இருக்க முடியுமா?"

"நிஜமாகத்தான் சொல்கிறேன், கமலி!"

"நல்ல யோசனைதான். ஆனால், கடை என்று வைத்தால் அதில் விற்பனை செய்யச் சரக்கு வேண்டுமே! அதற்கு நீங்கள் எங்கே போவீர்கள்?"

"நம் பிள்ளையை மறந்து விட்டுப் பேசுகிறாய் நீ!"

"அவன் என்ன பண்ணுவான்?"

"அவனைத்தான் என் கடைக்குத் தேவையான சரக்குகள் சஞ்சயம் பண்ணுகிறவனாக நியமிக்கப் போகிறேன்."

"அவன் எங்கிருந்து சஞ்சயம் செய்வான்!"

"என்ன இப்படிக் கேட்கிறாய், கமலி? அவனைப் பற்றி உனக்கு ஒன்றும் தெரியாதா? பொருளுக்காக அவன் எங்கேயும் போக வேண்டியதில்லை. ஒவ்வொரு பொருளையும் அவனே உற்பத்தி செய்வான். இதுவரை அவன் செய்த பொருட்கள் எத்தனையெத்தனையோ! ஆனால் அவை அனைத்தும் கொள்வாரின்றி வீணாகிப் போயின. இனிமேல் அம்மாதிரி விண்பட வேண்டியதில்லை. தான் உற்பத்தி பண்ணுவதையெல்லாம் என்னுடைய பண்டகசாலையில் கொண்டு வந்து குவிக்கலாம். இதனால் அவனுக்கும் வேலை வாய்ப்பு ஏற்படுகிறது. நானும் வேலை பார்த்தாற் போல் ஆகிறது."

கணவரின் இந்த அருமையான யோசனையைக் கேட்டுப் பூரித்துப் போனாள் செங்கமலவல்லி. ஆனால், மறுகணமே அவளுக்கொரு சந்தேகம் தோன்றி விட்டது: "ஆமாம்; உங்கள் கடைச் சரக்கை வாங்குவது யார்? யாரிடம் விற்பீர்கள்?" என்று மிகுந்த கவலையோடு கேட்டாள்.

"ஏன்? நாமே வாங்குவது! நமக்கே விற்றுக் கொள்வது! வாங்குவதும் நாமே! விற்பதும் நாமே! இலாபமும் நமக்கே! நஷ்டமும் நமக்கே!"

"நல்ல வியாபாரம் போங்கள்!" என்று கைகொட்டி நகைத்தாள் செங்கமலவல்லி.

"பண்டகசாலை ஆரம்பிப்பது உனக்குச் சம்மதம் தானே?" என்று அன்புடன் வினவினார் மேகநாதன்.

"பரிபூரண சம்மதமே! ஆனால்...இன்னுமொரு சந்தேகம்...."

"சந்தேகத்தின் மறுபிறவியே, சீக்கிரம், சொல்!"

"திடீரென்று இந்த யோசனை உங்களுக்கு எப்படித் தோன்றியது? ஏன் தோன்றியது?"

"எனக்கு யோசனை தோன்றவில்லை; யோசனையிலிருந்து நான் தோன்றுகிறேன்!"

''என்னிடம் சொல்வதற்கு முன்னால் இந்தத் திட்டத்தை வேறு யாரிடமாவது சொன்னீர்களா?''

''இன்று காலை என் அருமை நண்பர் தும்புருநாதன் வந்தார். அவரிடம் சொன்னேன். உடனே அவர் அதை ஒப்புக்கொண்டு என்னை ஒரேயடியாக உற்சாகப் படுத்திப் புகழ ஆரம்பித்து விட்டார்.''

''ஐயையோ! போயும் போயும் அந்தக் கலக ராசிக்காரரிடமா யோசனை கேட்டீர்கள்? அவர் 'சரி' என்று ஆமோதித்தால் அது ஏதோ ஒரு சங்கடத்துக்கு ஆரம்பம் என்றல்லவா ஆகி விடும்?.. இங்கே பாருங்கள், இந்தத் திட்டத்தை மறு பரிசீலனை செய்ய வேண்டியது அவசியம். காரியம் செய்தபின் கவலைப்பட்டுப் பயனில்லை.''

''சஞ்சலமே உருவானவள் பெண் என்பது சரியாகத்தான் இருக்கிறது!'' என்று கூறிப் பெரிதாக நகைத்தார் மேகநாதன்.

சற்று நேரம் மௌனமாயிருந்த செங்கமலவல்லி, ''தங்கள் சித்தப்படியே ஆகட்டும்'' என்றாள் தணிந்த குரலில்.

சாய்ந்து கிடந்த மேகநாதன், மஞ்சத்தை விட்டு முதன் முதலாக எழுந்தார். அவரது சுந்தர வதனத்தில் கடசொளிப் புன்னகை தவழ்ந்தது.

ககக

ஒரு கடயோக கட தினத்தில் மேகநாதன் தமது பண்டக சாலையைத் திறந்தார். ஆகா, அந்தக் கடைதான் என்ன அழகாக இருந்தது! அதிலுள்ள ஒவ்வொரு பொருளும் சதுர்முகனின் கைத் திறனைப் பறைசாற்றின. அவன் தினம் தினம் புதுப் புது பொருட்களை உற்பத்தி பண்ணிக் கடையில் கொண்டு வந்து குவித்துக் கொண்டேயிருந்தான். அவற்றில் தான் எத்தனை விதம், எத்தனை வண்ணம், எத்தனை வடிவம்!

சதுர்முகனின் ஆக்க சக்தி கரையுடைந்து கொண்டது. தும்புருநாதன் அடிக்கடி வந்து அந்தப் பலசரக்குக் கடையைப் புகழ்ந்துவிட்டுப் போனார்.

மேகநாதன் வழக்கம் போல் கடைக்குள்ளேயே ஓரிடத்தில் மஞ்சத்தைப் போட்டுக் கொண்டு ஆனந்த உறக்கத்தில் ஆழ்ந்தே கிடந்தார். ஆயினும் அவரது பண்டகசாலை ஒழுங்காக நடைபெற்றுக் கொண்டிருந்தது.

ஒருநாள்—

சதுர்முகன் மிக்க மகிழ்ச்சியோடு தன் தந்தையின் கடைக்கு ஓடி வந்தான். அவன் கையில் புது விதமான இரண்டு பொருட்கள் இருந்தன.

''அப்பா, அப்பா! இதோ பாருங்கள், இன்று நான் புதிதாகச் செய்த பொருட்கள் இவை. இம்மாதிரி ஒன்றைச் செய்ய எத்தனையோ காலமாக முயன்று, இன்றுதான் வெற்றி யடைந்தேன்'' என்று பெருமை வழியக் கூறிக் கொண்டே தன் கையிலிருந்த வற்றைத் தந்தையிடம் கொடுத்தான் தனயன்.

மேகநாதன் அவற்றை ஆவலுடன் வாங்கித் திருப்பித் திருப்பிப் பார்த்தார்.

உண்மையில் அவ்விரு பொருட்களும் மிக மிக அழகாகவும் அற்புத கலைப்படைப்பாகவுமே விளங்கின. அவை வேறொன்றுமல்ல; வெறும் கண்ணாடி சீசாக்கள்தாம்!

நீண்ட வடிவில் அமைந்த அந்தக் கண்ணாடி சீசாக்களில் ஒன்றிலே சுத்தமான தண்ணீரும் மற்றொன்றிலே வர்ணத் தண்ணீரும் நிறைக்கப் பெற்றிருந்தன. அடிப் பாகம் சிறுத்தும், நடுப்பாகம் பருத்தும், மேல்பாகம் குறுகியும் காணப்பட்ட அந்தச் சீசாக்களின் வாய்ப் புறத்தில் நீல நிறக் கோலிக்குண்டு ஒன்று அடைப்பாகப் பொருத்தப் பெற்றிருந்தது.

''என்ன மகனே இது'' என்று புன்னகையுடன் கேட்டார் மேகநாதன்.

''எனக்கே இது என்னவென்று தெரியவில்லை அப்பா! ஆனாலும் இப்படியொரு பொருளைச் செய்ய வேண்டுமெனத் தோன்றியது. செய்து முடித்துக் கொண்டு வந்தேன்!'' என்று நாணத்துடன் சொன்னான் சதுர்முகன்.

''எந்தப் பொருளால் இதைச் செய்தாய்?''

''வெறும் மண்தான் அப்பா! மண்ணிலிருந்து மணலைச் சலித்தெடுத்து அந்த மணலைத் தீயிலிட்டு உருக்கினேன். கண்ணாடியாகியது. அக் கண்ணாடியில் என் உருவம் தெரியவே அவ்வுருவத்தை அதிலேயே உள்ளடக்கி இந்தச் சீசாவாகச் சமைத்து முடித்தேன்.''

''இதன் உள்ளே இருப்பது என்ன?''

''நீங்கள் வாய் கொப்புளித்து உமிழும் தண்ணீர்!''

''அந்தச் சீசாவில் இருப்பது?''

''அது என் அன்னை தாம்பூலம் தரித்த வாயால் கொப்புளித்து உமிழ்ந்த தண்ணீர்!''

''எங்கள் உமிழ்நீரை இவற்றில் ஏன் நிறைத்திருக்கிறாய்?''

''நான் உருவாக்கும் எந்தப் பொருளிலும் இப்படி ஏதேனும் ஒன்றை உள்ளடக்கி வைப்பது எனக்கு வழக்கமாகி விட்டது.''

''சீசாக்களின் வாய்ப்புறத்தை ஏன் இந்தக் கோலிக் குண்டால் அடைத்திருக்கிறாய்?''

''உள்ளிருக்கும் தண்ணீர் வெளியே கொட்டி விடாதிருப்பதற்காக!''

''கோலிக்குண்டையும் நீயேதான் செய்தாயா...?''

சற்றே தயங்கிய சதுர்முகன், ''இல்லை, அப்பா!'' என்றான் தணிந்த குரலில்.

''என்ன! இந்த எளிய கோலிக் குண்டையா உன்னால் செய்ய முடியவில்லை?'' என்று வியப்புடன் வினவினார் மேகநாதன்.

''ஆம், தந்தையே! எவ்வளவு முயன்றும் அது ஒன்றை மட்டும் என்னால் செய்யவே முடியவில்லை....''

''அப்படியானால் இதைச் செய்தது யார்?''

''எங்கிருந்தோ ஒரு பரதேசி வந்தார்; அவரிடம் என் ஏலாமையைக் கூறி முறையிட்டேன். நீண்ட நேரச் சிந்தனைக்குப் பின், தாம் அந்தக் கோலிக்குண்டைச் செய்து தருவதாக வாக்களித்து, அவ்வாறே செய்தும், கொடுத்து விட்டார் – ஒரு நிபந்தனையோடு!''

''அது என்ன நிபந்தனை?''

''இந்தக் கோலிக் குண்டின் முழு உரிமையும் அவரைச் சார்ந்ததாம்! அவர் எப்போது விரும்புகிறாரோ, அப்போது வந்து இதை எடுத்துச் சென்று விடுவாராம்!''

''விசித்திரமான நிபந்தனை'' என்று சிரித்தார் மேகநாதன்.

''ஆனால், நான் அவரை ஏமாற்ற ஒரு குயுக்தியான காரியம் செய்து விட்டேன்.

அப்பா! இந்தச் சீசாக்களில் அடைத்திருக்கும் கோலிக் குண்டுகளை வெளியே எடுக்கவும் முடியாது; உள்ளே தள்ளவும் இயலாது. அப்படி உள்ளே தள்ளினால் சீசாவின் குறுகிய கழுத்துப் பகுதியிலேயே தடைப்பட்டு நின்று விடும்...!''

''குழந்தைத்தனமான குயுக்தி'' என்று கூறிக் கலகலவெனச் சிரித்துக் கொண்டே மறுபுறம் திரும்பிப் படுத்தார் மேகநாதன்.

சதுர்முகன் அந்த அழகிய சீசாக்களைக் கடையின் எடுப்பான பகுதியிலே வைத்து விட்டுப் போனான்.

**நா**ட்கள் பல ஓடின. மேகநாதனின் பண்டகசாலையில் பழைய பொருட்கள் அழிந்து புதிய பொருட்கள் குவிந்து கொண்டேயிருந்தன. ஆனால், அந்தக் கண்ணாடி சீசாக்கள் மட்டும் இருந்த இடத்திலேயே இருந்து வந்தன.

ஒரு நாள், நடுப்பகல் –

'வறுத்துக் கொட்டிய அந்த நண்பகல் வெயிலில் வாடிச் சோர்ந்த பாம்பாட்டியொருவன், மேகநாதனின் கடைக்கு எதிரே வந்து நின்றான்.

அரையில் கோவணமும், கழுத்தில் பிரிமணையாகச் சுற்றிய பாம்புமாக நின்ற அவன், அந்தப் பண்டகசாலையைச் சுற்றி வளைத்துப் பார்த்தான். அவன் வந்ததைக்கூட அறியாமல் நிம்மதியான உறக்கத்தில் ஆழ்ந்திருந்தார் மேகநாதன்.

''ஐயா! இங்கே குடிப்பதற்குக் கொஞ்சம் தண்ணீர் கிடைக்குமா?'' என்று நாவறண்ட குரலில் கேட்டான் பாம்பாட்டி.

அப்போதுதான் மெல்லக் கண்விழித்த மேகநாதன், அந்தப் பாம்பாட்டியைப் பட்டும் படாததுமாகப் பார்த்தவாறு, ''இங்கே கொள்ளினைக்கோ கொடுப்பினைக்கோ ஒன்றுமில்லை'' என்றார் அலட்சியமாக.

''நான் கொள்ளவும் வரவில்லை; கொடுக்கவும் கேட்கவில்லை ஐயா! குடிப்பதற்குக் கொஞ்சம் தண்ணீர் தர்மம் செய்தால் போதும்'' என்று குழைந்தான் பாம்பாட்டி.

''அதுவும் அதனில் அடக்கமே!'' என்று சிரித்தார் மேகநாதன்.

''பிச்சை வேறு, பிட்சை வேறு என்பதைப் பெரியவருக்கு நான் விளக்க வேண்டுமா?'' என்று கெஞ்சினான்.

ஒரு கணம் ஏதோ யோசனை செய்த மேகநாதன், ''இருந்தால் எடுத்துக் குடித்துவிட்டுச் செல்!'' என்று சொல்லிக் கொண்டே புரண்டு படுத்தார்.

உடனே அந்தப் பாம்பாட்டி, கடையில் வைக்கப் பெற்றிருந்த கண்ணாடிச் சீசாக்களில் ஒன்றை எடுத்து அதன் வாய்ப்புறத்தில் அடைத்திருந்த கோலிக்குண்டை ஆவலுடன் வெளியே பிடுங்கினான். குண்டு வெளிப்படவில்லை. பலமுறை முயன்றும் அதைப் பிடுங்கி எடுக்கவே முடியவில்லை. சலிப்படைந்த பாம்பாட்டி, தன் வலக் கைப் பெருவிரலைக் கோலிக்குண்டின் மேல் வைத்து உள்ளே அழுத்தினான்.

நல்ல பாம்பு சீறுவிடுவது போன்று 'புஸ்' ஸென்ற ஒலி! அந்த ஒலி கேட்டு, உறக்கத்திலிருந்த மேகநாதன் விழித்துக் கொண்டார்.

பாம்பாட்டி தன் கையிலிருந்த சீசாவைத் தூக்கிப் பிடித்துப் பார்த்தான். உட்புறம் அழுத்தப் பெற்ற கோலிக்குண்டு உள்ளே போகாமல், சீசாவின் குறுகிய கழுத்துப் பகுதியிலே தடைப்பட்டு நின்று, அங்குமிங்குமாக ஆடிக் கொண்டிருந்தது! சீசாவில் நிறைக்கப்பட்டிருந்த தண்ணீரோ நுரைத்துப் பொங்கி வெளியே வழிந்தது!

இதைக் கண்ட பாம்பாட்டியின் கண்கள் அனல் துண்டங்களெனச் சிவந்து பழுத்தன. பித்தவெறி ஏறியவன் போல் கடகடவெனச் சிரித்தான், சிரித்துக் கொண்டே, அந்தச் சீசாவிலிருந்த தண்ணீரை, 'மடக், மடக்' கெனக் குடித்தான்!

அண்ணாந்த நிலையில் தண்ணீர் அருந்தும் பாம்பாட்டியையே கண்ணிமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்த மேகநாதன், ''என்னப்பா! தண்ணீர் குடிக்கிறேனென்று சீசாவிலிருக்கும் கோலிக் குண்டை விழுங்கி விட்டாயா?'' என்று படபடப்புடன் கேட்டார்.

நீர் அருந்தி முடித்த பாம்பாட்டி, ''இல்லையே!...ஏன் இப்படிக் கேட்கிறீர்கள்?'' என்றான் விஷமச் சிரிப்புடன்.

''சீசாவின் உள்ளே யிருக்கும் நீலக் கோலிக் குண்டைப் போலவே, உன் தொண்டைக் குழியிலும் ஒரு நீலக் குண்டு உருண்டு கொண்

டிருக்கிறதே. அதைப் பார்த்துத்தான் கேட்டேன்...!''

''ஓ..... அதுவா?'' என்று அலட்சியமாகச் சிரித்த பாம்பாட்டி, அதற்கு மேல் ஒன்றும் சொல்லாமல், தன் கையிலிருந்த கண்ணாடிச் சீசாவை மேகநாதனின் கண்ணெதிரே குலுக்கிக் காட்டி வைத்து விட்டு அங்கிருந்து விர்ரென்று கிளம்பிச் சென்று மறைந்தான்.

ஃஃஃ

அன்று மாலை. ஒளி கரந்து இருள் பரவும் நேரம்.

மேகநாதனும் அவரது மைந்தன் சதுர்முகனும் அன்றைய பகல் பொழுது நடந்த சம்பவம் பற்றிப் பேசிக் கொண்டிருந்தனர்.

''தந்தையார் சொல்வதைப் பார்த்தால், எனக்குக் கோலிக் குண்டுகள் சஞ்சயம் செய்த அந்தப் பரதேசி தான் பாம்பாட்டி வேடம் தரித்து வந்திருப்பானோ என்று தோன்றுகிறது'' என்றான் சதுர்முகன்.

''ஆமாம், மகனே! நானும் அப்படித்தான் நினைக்கிறேன்.'' எங்கோ யோசனையாகச் சொன்னார் மேகநாதன்.

''அப்பாவி மனிதர், நன்றாக ஏமாந்து போயிருப்பார்!'' என்று கூறிக் குலுங்கிச் சிரித்தான் சதுர்முகன். அவன் சிரித்த அதிர்ச்சியில், காலியாக இருந்த கண்ணாடி சீசா அசைந்து, அதனுள்ளிருந்த கோலிக்குண்டு கலகலவென ஒலி எழுப்பியது.

இச்சமயம், முரட்டுத் தோற்றமுள்ள ஒரு சிறுவன் எருமை மாடு ஒன்றின் மீது ஏறிக் கொண்டு அந்தப் பண்டகசாலைப் பக்கம் வந்தான். அவன் கையில் முறுக்கேறிய கயிறு ஒன்று இருந்தது.

''யாரப்பா, நீ? உனக்கு என்ன வேண்டும்?'' என்று கேட்டான் சதுர்முகன்.

பண்டகசாலையைத் திருதிருவென விழித்துப் பார்த்துக் கொண்டு நின்ற முரட்டுச் சிறுவன், ''அதோ, அந்தக் காலி சீசாவில் வெறுமே ஆடிக் கொண்டிருக்கும் கோலிக் குண்டை எனக்கு விளையாடக் கொடுக்கிறீர்களா?'' என்று கெஞ்சிக் குழைந்து கொண்டே கை நீட்டினான்.

''போடா, போக்கிரி! உரியவனுக்கே கொடுக்காமல் ஏமாற்றி வைத்திருப்பதை, உனக்கா கொடுப்பேன்? இன்னொரு முறை இப்படிக் கேட்டுக் கொண்டு இங்கே நிற்காதே. ஓடிப் போய் விடு!'' என்று சினத்துடன் விரட்டியடித்தான் சதுர்முகன்.

அவன் போட்ட கூச்சலில் மிரண்டு போய் எருமையை ஓட்டிக் கொண்டு இருளில் புகுந்து மறைந்தான் சிறுவன். அவன் சென்ற சில விநாடிகளுக்குப் பின், சதுர்முகனுக்குத் தன் காதலியின் நினைவு வரவே, அங்கிருந்து புறப்பட்டுப் போய் விட்டான். மேகநாதனும் மஞ்சத்தில் சாய்ந்து, தூங்கிச் சுகம் காணத் தொடங்கினார்.

சற்று நேரம் கழித்துப் பண்டகசாலையில் ஏதோ படீரென உடைந்து நொறுங்கும் சத்தம் கேட்கவே, திடுக்கிட்டுக் கண் விழித்தான் மேகநாதன்.

அங்கே, சதுர்முகனால் விரட்டப்பட்ட அந்த எருமை மாட்டுச் சிறுவன் திருட்டுத்தனமாகத் திரும்பி வந்து, தொலைவில் நின்றபடியே, கடையில் காலியாய் வைக்கப் பெற்றிருந்த கண்ணாடிச் சீசாவின் மேல் தன் கயிற்றை வீசிச் சுருக்கிட்டு இழுத்து அதைக் கீழே தள்ளி உடைத்து, அதிலிருந்து உருண்டு வெளிப்பட்ட அழகிய கோலிக்குண்டை எடுத்துக் கொண்டு, எருமையின் மீது தாவியேறி ஓடுவது தெரிந்தது!

வெலவெலத்துப் போன மேகநாதன், செய்வதறியாது சிலை போல் சமைந்து விட்டார்.

காதலியைத் தேடிப் போயிருந்த சதுர்முகன் கடைக்குத் திரும்பி வந்தான். அங்கே தன் அழகுச் சிருஷ்டியான கண்ணாடிச் சீசா உடைந்து கிடப்பதைக் கண்டு அழுகை அடைத்துக் கொண்டு வந்து விட்டது அவனுக்கு. ''ஏனப்பா! உங்கள் பண்டகசாலையிலுள்ள ஒரு பொருள் இப்படிப் பாழாகிப் போக நீங்கள் அனுமதிக்கலாமா?'' என்று ஆத்திரத்துடன் கேட்டான்.

''நீ படைப்பதில் இன்பம் கண்டாய்; நான் பாதுகாப்பதில் இன்பம் கண்டேன்; இன்னொருவன் அழிப்பதில் இன்பம் காணட்டுமே! அதை நாம் ஏன் தடுக்க வேண்டும்?'' என்று அமைதியாகப் பதிலிறுத்தார் மேகநாதன்.

''இது பொறுப்பற்ற பேச்சாக எனக்குப் படுகிறது அப்பா!''

''பொறுப்பு என்ற சொல்லைப் புரிந்து கொள்ளாமல் பேசுகிறாய், மகனே! உண்டாக்குவது உன் பொறுப்பு; காப்பது என் கடமை; அழிக்கும் பொறுப்பை அடுத்தவன் ஏற்பதில் தவறென்ன?''

''அழிப்பதும் ஒரு பொறுப்பாகுமா?''

''ஆம், தானே எதுவும் தோன்ற முடியாதது போல, தானே எதுவும் அழிய முடியாது. தொடக்கம் என்று ஒன்று வந்து விட்டால் அதற்கு முடிவும் இருந்தாக வேண்டும். தூக்கிய திரையைத் தொங்க விட்டால்தான் தொடங்கிய நாடகம் முழுமை பெறும்.''

''இதனால் நமக்கு என்ன லாபம்?''

''ஒருவன் லாபத்தை எதிர்பார்த்தால் இன்னொருவன் நஷ்டத்தை ஏற்கத் தயாராயிருக்க வேண்டும். நஷ்டத்திலிருந்து தான் லாபம் கிடைக்கிறது. நமக்கு ஏன் இந்த லாபமும் நஷ்டமும்?''

''அவ்வாறானால் இப்பயனற்ற தொழிலை நான் இனிச் செய்யப் போவதில்லை.''

''இதுவரையில் நீ செய்ததுவே போதும்; இதற்கு மேல் செய்தால் இப்பண்டக சாலையில் வைக்க இடம் இருக்காது. உன்னால் உண்டாக்கப் பட்டவையெல்லாம் இப்போது அழியத் தொடங்கி விட்டன. ஆனால், அப்படி அழியும் முன்னொவ்வொன்றிலிருந்தும் இன்னொன்று தோன்றிக் கொண்டேயிருக்கும். அழிவுதான் உயிர்ப்பின் மூலம். ஆகவே உன்னுடைய உதவி இனிமேல் இந்தப் பண்டகசாலைக்குத் தேவையில்லை.''

சதுர்முகனின் மனம் சொல்லொணா வேதனையில் ஆழ்ந்தது.

இச்சமயம், பகல் போது வந்து போன அந்தப் பாம்பாட்டி, உள்ளங்கையில் ஒரு கோலிக் குண்டை வைத்து உருட்டிக் கொண்டே மேகநாதனின் கடைப் பக்கம் மிடுக்கு நடை போட்டுப் போய்க் கொண்டிருந்தான்!

# அடுத்த வீட்டுப் பையன்

எங்கள் பக்கத்து வீட்டுப் பையனுக்கு ஐ. ஏ. எஸ். பரீட்சை பாஸாகி விட்டது. இனிமேல் அவன் சப்-கலெக்டராய் விடுவான். மாதம் நானூறு ரூபாய் சம்பளம். மேலும் மேலும் அதிகமாகி இரண்டாயிரம் ரூபாய் வரை போகும்.

என்னால் தாளமுடியவில்லை. 'சீ! அநாதைப் பயல்களுக்கு அதிர்ஷ்டத்தைப் பார்! கலி காலத்தில் எல்லாம் தலை கீழாக நடக்கின்றன. அவன் அம்மா இலை தைத்து விற்றாள். அப்பளம் இட்டு விற்றாள். அப்பன் ஹோட்டலில் மாவு அரைத்தான். பையனுக்கு ஐ. ஏ. எஸ். உத்தியோகமாம்! என்ன அக்கிரமம்!' எனக்கு வயிறு பற்றி எரிந்தது.

அந்தச் சம்பவத்தை நினைத்தால் நேற்று நடந்தது போல் இருக்கிறது.

ஆராவமுதன் — அதுதான் அந்தப் பையனின் பெயர் — ஓடி வந்தான்.

''மாமா! இன்றைக்குள் சம்பளம் கட்டியாக வேண்டும். கட்டாவிட்டால் பள்ளிக்கூடத்தில் பேரை எடுத்து விடுவார்கள். ஏழு ரூபாய் கொடுங்கோ. ஒரு வாரத்தில் திருப்பிக் கொடுத்திடறோம்'' என்று கெஞ்சினான்.

எனக்கு ஆத்திரம் பற்றிக் கொண்டு வந்தது.

''சரிதான் போடா!'' என்றேன். ''நீ வாசித்துத் தாசில் பண்ணப் போறே! அப்பா அம்மாவுக்கு ஆதரவா ஏதோ ஓட்டலிலோ, கடையிலோ வேலை செய்து நாலு காசு சம்பாதிக்காமல் படிக்கிறானாம்! என்னால் காலணா தர முடியாது.''

அதற்குப் பிறகு நாலைந்து நாட்கள் ஆராவமுதன் பள்ளிக் கூடம் போகவில்லை. சம்பளம் கட்டாததால் பேரை எடுத்து விட்டார்களாம். அக்கடா என்றிருந்தது எனக்கு. ஆனால் மறு வாரமே, ''அம்மா, ஸ்கூலுக்குப் போய் விட்டு வரேன்'' என்ற குரல் நாராசமாகக் கேட்டது அடுத்த வீட்டிலிருந்து. விசாரித்ததில், அந்த நாலைந்து நாட்களில் இரவு பகலாக இலை தைத்தும், அப்பளம் இட்டும் அவன் அம்மா பத்து ரூபாய் சம்பாதித்துப் பையனுக்கு அபராதத்தோடு சம்பளம் கட்டி விட்டாளாம்.

ஒரு நாள் ஒரு பெரிய இலைக் கட்டைத் தூக்கிக் கொண்டு வந்தான் ஆராவமுதன்.

''மாமா! அவசரமாகப் பணம் வேண்டும். இந்த இலைக்கட்டை வாங்கிக் கொண்டு ஏதாவது கொடுங்கள்'' என்று மிகவும் தீனக் குரலில் கெஞ்சினான்.


அன்றைக்கு என் வீட்டில் விருந்தாளிகள் சிலர் வருவதாக இருந்தார்கள். இலைக் கட்டு அவசியம் வேண்டும்தான். எச்சுமுகூட நச்சரித்துக் கொண்டிருந்தாள். ஆனால் பக்கத்து வீட்டுக்காரர்களுக்கு எந்த விதமான உதவியும் செய்ய நான் தயாராயில்லை.

''விருந்துக்குத் தருந்த விக்கம் என்று இடையாதா?'' என்று கேட்டேன். ''போதும் போதாததுமாக வருகிற வரும்படியை வைத்துக் கோப்பியமாகக் குடித்தனம் பண்ணாமல் பையனைப் படிக்க அனுப்பறது; பணத்துக்கு ஊரானை நச்சரிப்பது. குடல் கூழுக்கு அழுறதாம். ஆனால் கொண்டை பூவுக்கு அழுறதாம். சாப்பாட்டுக்கு லாட்டரி அடிக்கிறவர்களுக்குப் படிப்பு என்ன? என்னன்னடைகாக போராது.''

அன்று மாலை கடைக்குப் போய்ப் பெரிய இலைக் கட்டு வாங்கி வந்தேன். ''எச்சமு! இலைக்கட்டு இந்தா!'' என்று கத்தினேன், பக்கத்துக்கு வீட்டுக்குக் கேட்கும்படி. அதில் எனக்கு ஒரு திருப்தி.

நான் பக்கத்து வீட்டாருடன் பேச்சே வைத்துக் கொள்வதில்லை. பேசினால் எங்கே காலைச் சுற்றிய பாம்பாக வந்து தொத்திக் கொண்டு விடுவார்களோ என்று எனக்குப் பயம். ஏதோ நாலு பேருக்கெதிரில் பகைமையாக இருக்கிறோம். அதற்காக ஊர்ச் சனியன்களுக்கு அழத்தான் சொத்து சுதந்திரம் வைத்துக் கொண்டிருக்கிறோமா, என்ன?

ஒரு நாள் பக்கத்து வீட்டுப் புழக்கடையிலிருந்து பேச்சு கேட்டது. எங்கள் புழக்கடை வழியாக அவர்கள் புழக்கடைக்குப் போய்விடலாம். பேசியது ஆராவமுதன்தான். ''பக்கத்து வீட்டு மாமாவுக்கு ரொம்பத் தாராள மனசு! புழக்கடை யெல்லாம் பூசணியும் புடலங்காயும் காய்த்துத் தொங்குகின்றன! ஒரு கால் பத்தைக் கிள்ளித் தெறிக்கணுமோ?''



அரை நிமிஷத்தில் நான் அவர்கள் புழக்கடையில் புகுந்தேன். ஆராவமுதனும் அவன் பெற்றோர்களும் ஏதோ வேலை

செய்து கொண்டிருந்தார்கள். "அயோக்கியப் பயலே!" என்று இரைந்து கத்திக் கொண்டே பாய்ந்து ஆராவமுதன் காதைப் பிடித்துக் கொண்டேன். "பிறத்தியான் வீட்டுப் பொருளுக்கு என்னடா நாயாட்டம் பறக்கிறாய்? உன் குடும்பத்துக்குக் கொட்டத்தான் நான் தோட்டம் போட்டிருக்கிறேனா?" கன்னத்தில் ஓங்கி அறைந்தேன். "சனியன்கள்! இதுகள் கண்பட்டுத்தான் ஒன்றுமே காய்க்க மாட்டேன் என்கிறது!"

"ரொம்ப ஆச்சரியம்! அந்தத் தரித்திரப் பயலை ஒரு தட்டுத் தட்டினதற்கு அப்பனும் ஆத்தாளும் ஏதாவது ஆகாத்தியம் பண்ணுவார்களோ என்று பார்த்தேன்! வாயைத் திறக்கலையே!" என்று என் சகமு அதிசயப்பட்டுக் கொண்டாள்.

காப்பியை ஆற்றிக் கொண்டே ஒரு நாள் காலை, "பக்கத்து வீட்டுப் பிள்ளைக்கு எஸ்.எஸ்.எல்.ஸி. பாஸாகி விட்டதாமே?" என்றாள் என் மனைவி.

"காலையிலே எழுந்ததும் என்னத்துக்கு இந்த வேண்டாத சமாசாரம்?" என்றேன். பக்கத்து வீட்டில் கேட்கட்டுமே என்றுதான் பலமாகவே சொன்னேன்.

* * *

ஆராவமுதன் பி. ஏ. பாஸ் பண்ணின க்ஷேம சமாசாரமும் எனக்கு எட்டியது. யார் யாரையோ பிடித்து ஸ்காலர்ஷிப்பெல்லாம் வாங்கிப் படித்தான் என்று கேள்வி. "பாத்திரமறிந்து பிச்சையிடு என்பதெல்லாம் கவனிக்கிறார்களா. இந்தக் காலத்தில்" என்று நான் அடிக்கடி சொல்லிக் கொண்டிருந்தேன்.

பி. ஏ. பாஸானபின் பட்டணத்திலேயே ஏதோ வேலையில் அமர்ந்து கொண்டானாம். அப்பாவை ஹோட்டல் வேலையிலிருந்து நிற்கச் சொல்லி விட்டான். அவருக்கு ஒரு வெற்றிலை பாக்குக் கடை வைத்துக் கொடுத்து விட்டான். அம்மா வேலை செய்து சம்பாதிக்கக் கூடாதென்றும் சொல்லி விட்டான்" அஷ்ட தரித்திரங்களுக்கு வந்த அதிர்ஷ்டத்தைப் பார்" என்று நான் அடிக்கடி சொல்வேன்.

இப்போது ஐ. ஏ. எஸ். வேறு பாஸாகி விட்டதாம்! இனிமேல் பிடிக்க முடியுமா? தற்சமயம் இருக்கும் வேலையிலிருந்து விலகி விட்டுக் கொஞ்ச நாட்கள் இங்கே இருப்பானாம். பிறகு ஐ. ஏ. எஸ். வேலைக்குப் போய் விடுவானாம்.

இத்தனை நாட்கள் வர்மத்தையும் சேர்த்து நம்மிடம் காட்டுவான். காற்று திசை மாறி விட்டதே! இனிமேல் அவர்களை வெளிப்படையாகத் திட்டினால் சாயுமா? எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டு பொறுத்துத்தான் போக வேண்டும்.

இன்று ஆராவமுதன் வருகிறான். வண்டி வந்து நின்றது. டாம்பீகமாக வருவான். "அற்பத்துக்கு ஐசுவரியம் வந்தால் அர்த்த ராத்திரியில் குடை பிடிக்குமே!" பார்க்காதது போல் அவன் வந்து இறங்குவதைப் பார்த்தேன். அட! இது என்ன சாதாரணமாக இருக்கிறானே? ஆமாம், ஆமாம். நாயைச் சிங்காதனத்தில் ஏற்றினாலும் நாக்கால் நக்குவதை நிறுத்தி விடுமா?

சிறிது நேரம் கழிந்தது. நான் கூடத்தில் உட்கார்ந்து கொண்டிருந்தேன். "மாமா!" என்ற குரல் கேட்டது. ஆராவமுதன் ரேழியில் நின்று கொண்டிருந்தான். "வாயேன்!" அன்புடன் வாய் நிறைய அல்ல. கடனே என்றுதான் கூப்பிட்டேன்.

"மாமா! நான் ஐ. ஏ. எஸ். பாஸ் பண்ணி விட்டேன்!" என்றான் அவன்.

பெருமை அல்லவா அடித்துக்கொள்கிறான்!

"உங்கள் ஆசிர்வாதத்தால்தான் மாமா!"


குத்திக் காட்டுகிறானா? பரிகாசமா?

"ஆசிர்வாதத்துக்கு என்னடா குறைச்சல்? நன்றாக இருந்தால் சரிதான்!" நிஷ்டூரமாகச் சொல்வேன்.

"மாமா! நீங்கள் கொஞ்சம் இளைத்து விட்டீர்களே!"

இவன் பாவானைக் கேட்டு நான் இளைத்து விட்டேன் என்கிறானாக்கும்.

"உடம்பைப் பார்த்துக் கொள்ளுங்கள்! நான் ஒரு வருஷம் வடக்கே பயிற்சிக்குப் போகிறேன். அது முடிந்த பிறகுதான் இந்தப் பக்கம் வருவேன். அம்மா அப்பா இரு வரும் அது வரையில் இங்கேதான் இருப்பார்கள்."



இவன் அப்பா – அம்மாவைப் பற்றி இங்கே யார் கேட்டார்கள்? அவர்கள் இருந்தால் என்ன, இல்லாவிட்டால் என்ன? என்னிடம் இதையெல்லாம் சொல்வானேன்? உதவி — கிதவி என்று கேட்க அடிப் போடுகிறானோ? இந்தப் பயலுக்கு நாம் எந்தவிதமான உதவியும் செய்யக்கூடாது. என் மனம் எனக்குப் பழகிய பாதையிலேயே சிந்தனை செய்தது.

"ஆண்டவன் அருளும் உங்களைப் போன்ற பெரியார்களின் ஆசிர்வாதமும் இருந்தால் நான் முன்னுக்கு வரக் கேட்பானேன்? பயிற்சி முடிந்து திரும்பி வந்ததும் எந்த ஊரில் எனக்கு வேலை யளிப்பார்களோ? அப்புறம் தான் ஜாகை பார்த்து அப்பா — அம்மாவை அழைத்துப் போக வேண்டும். அதுவரை...."

அடுக்கிக் கொண்டே போகிறான். இதையெல்லாம் யார் இவனைக் கேட்டார்கள்? என்னிடம் எதற்கு அளக்கிறான்?

"மாமா!" ஆராவமுதன் குழைவாக ஆரம்பித்தான். "இத்தனை வருஷங்கள் அப்பாவும் அம்மாவும் சரி, இங்கு இருந்த வரையில் நானும் சரி, உங்களிடம் ஏதாவது தப்பிதமாக நடந்து கொண்டிருந்தால் அதையெல்லாம் மறந்து விடுங்கள் மாமா! மனத்திலே வைத்துக் கொள்ளக் கூடாது. ஏதோ கஷ்டமான சமயங்களிலெல்லாம் உங்களை ஏதாவது கேட்டுக் கொண்டு வந்து சிரமப்படுத்தியிருப்போம். அதையெல்லாம் பாராட்டக் கூடாது என்று கேட்டுக் கொள்ளத்தான் முக்கியமாக நான் உங்களிடம் வந்தது."

அவன் முகத்தில் தெரிந்த தயக்க உணர்ச்சி அவன் பரிகாசமாகப் பேச வில்லை, உண்மையாகப் பேசுகிறான் என்பதைத் தெளிவாகக் காட்டியது.


எனக்குத் தொண்டையில் ஏதோ ஒன்று அடைத்தது. பழைய நினைவுகள் சூழ்ந்தன. இத்தனை நாட்களும் முன்னுக்கு வரத் தகுதியில்லாத ஒரு வெட்டிப் பயலாகத் தோன்றிய ஆராவமுதன் கள்ளங் கபடு தெரியாத குழந்தையாகத் தோன்றினான். என் நெஞ்சில் குற்ற உணர்ச்சி நிரம்பியது.

நான் உதாசீனமாகவும் இரக்கமில்லாமலும் நடந்து கொண்டதையெல்லாம் அவன் உள்ளத்தில் வைத்துக் கொள்ளவில்லை என்று அறிந்ததும் நெஞ்சில் ஒரு கனம் அழுத்தியது.

"மாமா! ஒரு வருஷம் அப்பாவும் அம்மாவும் இங்கேதான் இருப்பார்கள். அவர்களைக் கொஞ்சம் கவனித்துக் கொள்கிறீர்களா?" என்று மிகவும் விநயமாகக் கேட்டுக் கொண்டான் ஆராவமுதன்.

"பயப்படாதே! நான் பார்த்துக் கொள்கிறேன்" என்று சொல்ல விரும்பினேன்; ஆனால் வாயில் வார்த்தை வரவில்லை. நெஞ்சில் எழுந்த உணர்ச்சி தொண்டையிலிருந்து சொல் வடிவமாக வரவில்லை. இத்தனை நாட்கள் தீயதையே நினைத்து, தீயதையே பேசினேன். இன்று முதன் முறையாக நல்லதாக ஒரு வார்த்தை பேசலாம் என்றால் என்னால் முடிய வில்லை. மனம் நல்லதை நினைக்க முதன் முறை கற்றது; வாய் நல்லதைப் பேச இன்னும் கற்கவில்லை. உதவி செய்யும் உணர்ச்சியும் நன்மையாகப் பேசுவதும் பழக்கதோஷம் தான் போலும். மனத்தில் முதன் முறை தோன்றிய நல்லுணர்ச்சி மனத்திலேயே தங்கி விட்டது.





# சிறுவர் விருந்து

தயாரிப்பு: வாண்டுமாமா

## இவரைத் தெரியுமா ?



'தெரியாதா என்ன? வீரபாண்டிய கட்டபொம்மன் யானை மீது பவனி வருகிறார்!' என்று நீங்கள் 'டக்'கென்று பதில் சொல்லுவீர்கள் என்று எனக்குத் தெரியும். ஆனால் இது கட்டபொம்மனின் சிலை அல்ல. காவிரி நதிக்கு அணை எடுத்த ஒரு மன்னாதி மன்னனின் சிலைதான் இது. முடியுடை மூவேந்தருள் சிறப்புமிக்கவர். சிறு வயதில் அரியணை ஏற வேண்டிய இவரைப் பகைவர்கள் சிறையில் அடைத்துக் கொல்லப் பார்த்தார்கள். சிங்கக்குட்டி என இவர் சிறையிலிருந்து தப்பி வந்து பகைவர்களை யெல்லாம் கொன்று குவித்துத் தமது உரிமையை நிலைநாட்டினார். தென்னாடு முழுவதையும் தம் ஒரு குடையின் கீழ் ஆண்ட பெருந்தகை இவர். வடநாட்டையும் இலங்கையையும் கூட விட்டு வைக்கவில்லை. தென்னாட்டின் கங்கை என்று பெயர் பெற்ற காவிரி நதியின் நீரெல்லாம் கடலில் விழுந்து வீணாகிறதே என்று அதன் குறுக்கே, இக்காலத்துக் கட்டடக் கலை வல்லுநர்களெல்லாம் வியந்து பாராட்டும் வகையில் அணையொன்றைக் கட்டினார். இவர் ஆட்சியிலே தமிழ் மொழி உன்னத நிலையை அடைந்தது. இவரது நாட்டின் தலைநகர் உறையூர். தம் காலத்தில் இவர் தமது தலைநகரைக் காவிரியாற்றின் முகத்துவாரத்தில் புதிதாக அமைத்த 'புகார்' என்னும் நகருக்கு மாற்றினார். இன்னும் இவர் யார் என்று விளங்கவில்லையா? இவர்தான் சோழ மன்னர் கரிகாலர். இவர் கட்டிய அணைதான் திருச்சி மாவட்டத்திலிருக்கும் கல்லணை என்பது. கல்லணை கட்டி நாட்டை வளமுறச் செய்தமையால் 'கரிகாற் பெருவளத்தான்' என்ற சிறப்புப் பெயரையும் பெற்றார். இங்குள்ள சிலை பழங்காலத்தது அல்ல. கரிகாலனின் நினைவாகக் கல்லணையில் சமீபத்தில் நிறுவப்பட்டுள்ள சிமெண்டுச் சிற்பம் இது! நீங்கள் பார்க்க வேண்டிய அணை கல்லணை. அங்கு போனால் கரிகாலன் கரியின் மீது கம்பீரமாக அமர்ந்திருப்பதையும் காணலாம்.

போட்டோ உதவியது: **கோ. தியாகராஜன், திருச்சி-2**



## வாழைப்பழம்

வாழையில் சுமார் முப்பது இனங்களும் அவற்றில் வெவ்வேறு விதமான இருநூறுக்கு மேற்பட்ட வகைகளும் இருக்கின்றன. சில வாழைப் பழங்கள் ஓர் அடி நீளம் கூட இருக்கும். வாழைப் பழத்தை உலகம் முழுவதிலும் உள்ள மக்கள் விரும்பிச் சாப்பிடுகிறார்கள். வாழை பயிராகாத பிரதேசங்களுக்கு இது பெருமளவில் ஏற்றுமதி செய்யப்படுகிறது. உடலுக்குப் போஷாக்களிக்கும் சத்துக்கள் அடங்கியதும் எளிமையாக ஜீரணிக்கத் தகுந்ததுமான பழம் வாழை. வாழைப் பழத்தில் என்னென்ன சத்துக்கள் தெரியுமா இருக்கின்றன? தண்ணீர் 74 பாகம், சர்க்கரை 20 பாகம், புரோட்டீன் 2 பாகம், கொழுப்பு 1.5 பாகம், செல்லுலோஸ் ஒரு பாகம். இவைகளைத் தவிர சோடியம் கால்சியம், பாஸ்பரஸ், இரும்பு, கந்தகம், மக்னீஷியம், குளோரின் வைட்டமின்கள் 'ஏ', 'சி', 'பி1', 'பி2', பிபி.' ஆகியவைகளும் வாழைப்பழத்தில் காணப்படுகின்றன. ஒரு வாழைப்பழத்தில் உள்ள சத்து இரண்டு ரொட்டியில் உள்ள சத்துக்களுக்குச் சமமானது.

சில பிரதேசங்களில் வாழைக்காயைக் காய வைத்து அதிலிருந்து மாவு தயாரிக்கிறார்கள். சில வகை வாழைகளின் பட்டையிலிருந்து உறுதியான நார் கிடைக்கிறது. இந்த நாரினால் உடைகள் கூடத் தயாரிக்கிறார்கள். உறுதியான கயிறு தயாரிக்கிறார்கள். ஆப்பிரிக்காவின் சில பகுதிகளில் வாழை இலையைக் குடிசைகளுக்குக் கூரையாகவும் பயன்படுத்துகிறார்கள்.


உலகத்திலேயே வாழையை ஏராளமாக உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்யும் நாடு எது தெரியுமா? ஈக்வடார்தான். வருடத்தில் 8,90,000 டன்கள் வாழையை ஏற்றுமதி செய்கிறது. என்னதான் சொல்லுங்கள். நம்ம ஊர் சிறுமலைப் பழத்துக்கு ஈடு இணையே கிடையாது. அதனால்தான் நாம் அதை ஏற்றுமதி செய்வதே இல்லை. நாமே தின்று தீர்த்து விடுகிறோம்!





## தலை மாற்றம்

இங்குள்ள படங்களைப் பார்த்ததும் உங்களுக்குத் தடுமாற்றமாக இருக்கிறதல்லவா? மிருகக் காட்சி சாலையில் காணும் ஜீவராசிகளில் சிலவற்றைப் போடும்படி நமது சித்திரக்காரரிடம் சொன்னேன். அவருடைய மகன் பெரிய வால். அப்பா போட்டு வைத்திருந்த ஜீவராசிகளின் தலையை யெல்லாம் வெட்டினான். தாறுமாறாக அவனுக்குத் தோன்றியபடி தலைகளை மாற்றி இணைத்து வைத்து விட்டான். இதோ இருக்கிறது அந்தத் தலை மாற்றம் செய்த படங்கள். இவைகளில் எந்த எந்தத் தலை யார் யாருக்குச் சொந்தம் என்று கண்டு பிடியுங்கள், பார்க்கலாம். தலைகளை வெட்டி அதனதன் உடல்களோடு இணைத்து ஒட்டிப் பார்த்தால் ரொம்ப ஜோராக இருக்கும்.



## பள்ளிக்கூடத்துக்கு ...

பள்ளிக்கூடங்களெல்லாம் திறந்தாகி விட்டன. புதிய வகுப்புக்களில் சேர்வதற்கு நீங்களெல்லாம் துடியாக இருப்பீர்கள் இல்லையா? இப்படித்தான் உங்களைப் போல நாலைந்து குழந்தைகள் புதிய பள்ளியில் சேர்வதற்குக் கிளம்பினார்கள். இங்கு ஐந்து பள்ளிகள் இருக்கின்றன. இந்த ஐந்து பள்ளிகளிலும் அட்மிஷனுக்கு கியூ வேறு. ஆனால் (நடுவில் + அடையாளமுள்ள) ஒரு பள்ளியில் தான் இடம் இருக்கிறது. மற்றவைகளில் சேர முடியாது. ஆனால் முயற்சி செய்யாமல் இருக்கலாமா? இடமுள்ள பள்ளியை அடைவதற்கே மற்றப் பள்ளிகளின் வழியாகத்தான் போயாக வேண்டும். அந்தப் பள்ளியிலும் கொஞ்சம் பேருக்குத்தான் இடம் இருக்கிறதாம். யார் முதலில் போகிறார்களோ அவர்களுக்குத்தான் அதிர்ஷ்டம். இதன் மீது ஒரு டிரேஸிங் பேப்பரை வைத்துக் கொண்டு பென்ஸில் முனையை ஓட விட்டால் படத்தில் கோடுகள் விழுந்து குழப்பமேற்படுவதிலிருந்து தவிர்க்கலாம். கிளம்பலாமே பள்ளிக்கூடத்துக்கு!




# காகிதக் குதிரை

இந்தப் பக்கத்தில் உனக்கு வாராவாரம் கத்திரிக்கோலையும் காகிதத்தையும் உபயோகப்படுத்திப் பல வேடிக்கை விளையாட்டுக்கள் செய்யக் கற்றுத் தரப் போகிறேன். பொழுதுபோக்கு மட்டுமல்லாமல் நுணுக்கமான காரியங்களைச் செய்யக் கை படியும். சிறந்த சித்திரக்காரனுகவும் ஆகலாம் நீ.

கீழேயுள்ள (கட்டம் போட்ட) படத்தில் தடித்த கோடுகளில் குதிரை உடலின் பாகங்களைக் குறித்துக் காட்டியிருக்கிறது. பள்ளியில் 'கிராப்' காகிதத்தில் கணக்குகள் போட்டு உனக்குப் பழக்கமிருக்கும் இல்லையா? அதே முறையில் கீழுள்ள படங்களைப் பெரிதாக வரைய வேண்டும். கெட்டியான (காட்ரிஜ் அல்லது டிராயிங் ஷீட்) காகிதத்தை எடுத்துக் கொண்டு அதை இரண்டாக மடி. (A. B. என்ற கோட்டில்) மடித்த காகிதத்தின் ஒரு பக்கத்தில் அரை அங்குலச் சதுரக் கட்டங்களாக வரைந்து அதில் இந்தக் குதிரையின் பாகங்களைக் காப்பி செய்துகொள். (அரை அங்குலக் கட்டமானால் ஆறு அங்குல உயரத்துக்குக் குதிரை கிடைக்கும்) இனி அவைகளைக் கத்திரிக்கோலால் வெட்டி எடுத்தால் குதிரை உடலின் இரண்டு இரண்டு பாகங்கள் கிடைக்கும். இதில் உடலும், தலையும் மட்டும் (காகித மடிப்பில்) ஒன்று சேர்ந்து கிடைக்கும். கத்திரிக்கோல் பயன்படாத பாகங்களில் பிளேடு கொண்டும் வெட்டலாம். ஆனால் கவனமாக உபயோகிக்க வேண்டும். வாயில் 'E' என்ற பாகத்திலும் குதிரை உடலின் கழுத்து, வால் பக்கங்களிலும் சிறிய வெட்டுவாய் இருக்கும்படி கத்திரித்துக் கொள். கால், வால், காது, பிடரி ஆகிய இடங்களில் புள்ளியிட்ட பகுதிகளில் பேனாக் கத்தியின் கூர் இல்லாத முனையினால் அழுத்திக் கோடு கிழித்துப் பள்ளமாக்க வேண்டும்: வெட்டி விடக் கூடாது. குதிரை உடலை உருட்சியுள்ளதாகச் செய்ய ரூல் தடியில் உடல் பகுதியைப் பிரித்து இறுகச் சுற்றி அழுத்திப் பிறகு அவிழ்த்தால் வளைந்து குழல் போல் இருக்கும். இனி உடலின் அடியில் உள்ள C, D. பாகங்களை ஒன்றோடு ஒன்று இணைத்து ஒட்டிவிடு. கால்களில் கீறியுள்ள பகுதியில் இலேசாக உடலின் உட்புறமாக மடி. இப்படிச் செய்வதால் குதிரையின் கால்களுக்குப் பலமும், குதிரை நிமிர்ந்து நிற்கவும் உதவுகிறது.

தலைப் பகுதியிலும் ரூல் தடி உபயோகித்து உருட்சியாகச் செய்து கொள். பிடரிப் பகுதியின் மேல் உள்ள மூன்று துண்டுகளையும் பென்சிலில் இறுக்கிச் சுற்றி அழுத்தி விடுவி. இது குதிரையின் முன் நெற்றி மயிராகச் சுருண்டு அழகாகக் காட்சியளிக்கும். பிடரியைத் தலைப் பகுதியின் பின்னில் நுழைத்துப் பொருத்தி ஒட்டி விடு. இனி தலையை உடல் பகுதியின் முன்னுல் நுழைத்து 'F' என்ற முக்கோணப் பகுதியை வெளிப் பக்கமாக மடித்து உடலில் பக்கங்களில் இழுத்து ஒட்டி விடு. 'E' என்ற வெட்டு வாய்கள் தலைப் பகுதியைக் கௌவிக் கொண்டிருக்கும். வால் பகுதியையும் இதே போலப் பொருத்தி ஒட்டி விடு. இப்போது உன் குதிரை கம்பீரமாகக் காட்சியளிப்பதைக் காண்பாய். குதிரையின் கண்களைக் கத்திரித்துத் துவாரம் செய்ய மறந்திருக்க மாட்டாய் என்று நம்புகிறேன்.








சீரான ஆகாரமில்லாததால்
நீங்கள்
மெலிந்திருக்கிறீர்களா?

# ஆல்போஸாங் சாப்பிடுங்கள்

**மிகச் சிறந்தது**
**சாதாரண உணவுடன் சேர்ந்து**
**சிக்கனமான, விஞ்ஞான முறையில்**
**ஊட்டமளிப்பது**

தேநீர், காப்பி, பால், கஞ்சி. பழரசம் முதலியவைகளுடன் சேர்த்து அருந்தினால் மிக ருசியாக இருக்கும். சிறு குழந்தைகளுக்கும், வளரும் பிராயத்திலும், பிரசவகாலத்தில் தாய்மார்களுக்கும், சிந்திக்கும் தொழிலாளிகளுக்கும், முதியவர்களுக்கும், பலவீனம் இரத்தமின்மை மற்றும் நோயிலிருந்து தேறி வரும் போதும் ஆல்போ-ஸாங் சிறந்த டானிக் உணவாகிறது.




பௌடர் மற்றும் மாத்திரைகளாகவும் கிடைக்கிறது.

**ஜே. & ஜே. டீஷேன்,**
ஹைதராபாத்—டெக்கான்

# பாமாலிவ் லவண்டர்

## வசீகரிக்கும் நறுமணம்....

## பெருமிதத்தையும், அழகையும் அளிக்கிறது!






வசீகரம்...பாமாலிவ் லவண்டர் டால்கம் பெருமிதத்திற்கும், அழகிற்கும் உற்ற நண்பன். சிறிது பாமாலிவ் லவண்டரை உங்கள் உடம்பின்மேல் தூவிக்கொண்டால், அதன் இனிய நறுமணம் உங்களைச் சூழ்ந்து நிற்பதை உணர்வீர்கள். பாமாலிவ் உபயோகித்து எப்பொழுதும் புத்துணர்ச்சியுடனும், நறுமணத்துடனும், அழகுடனும் விளங்குங்கள்.

**பாமாலிவ் டீலக்ஸ்—மயக்கும்**
**17 ஸெண்டுகளின் அற்புதமான கலவை!**

PT-G-6-TAM-




## பிறந்த மண்

குறிஞ்சியூரிலிருந்து கொழும்புக்குப் பயணமாகிறான் அழகிய நம்பி. பிறந்த மண்ணை விட்டுப் பிழைப்பை நாடிப் பிரமநாயகத்துடன் இல்லை, இல்லை. பன்னிரண்டு லட்சத்துக்கு உரியவருடன், பையில் பன்னிரண்டே முக்காலணாவுடன் செல்லும் அந்த இளைஞனின் பசியையும், பண்பாட்டையும் நமக்குப் படம் பிடித்துக் காட்டுகிறார் ஆசிரியர். இன்னும் வயிற்றுப் பசியுடன், ஒவ்வொரு விநாடியும் தன்னை அழைத்துச் செல்லுபவர் ஆகாரத்துக்கு வழிசெய்வார் என்ற நம்பிக்கையோடு நடந்து கொண்டிருக்கும்போது, பீப்பாய் உருளுவது போல விசுக் விசுக்கென்று நடந்து செல்லும் அந்தப் பிரமநாயகம், அழகிய நம்பியைத் தன் சாமான்களுக்குக் காவல் வைத்து விட்டுத் தன் பசியைத் தணித்துக் கொள்ளக் காப்பி ஓட்டலுக்குள் நுழைவதைக் காணும் போது கூடத் தன் மனத்துக்கு ஆறுதலாக எதையோ எண்ணிக் கொண்டு நிற்கும் அந்த அழகிய நம்பியை அழைத்துக் கொண்டுபோய் அவன் பசியைப் போக்க வேண்டும் என்ற துடிப்பு நமக்கு ஏற்படுகிறது.

கண்வரின் சகுந்தலையைக் கற்பனை செய்திருந்த அவன் மனத்திலே இட்டிலிக் கடைக் காந்திமதி ஆச்சியின் பெண் பகவதியை இரண்டாவது சகுந்தலையாகப் பதிய வைத்துக் கொழும்புக்கு அனுப்பி வைக்கும் ஆசிரியரின் கற்பனையும், சொல் வளமும் போற்றற்குரியவை.

அழகிய நம்பி கொழும்பு செல்லும் வரை, ஒரு நாவல் படிக்கிறோம் என்ற உணர்வே இல்லாமல் ஒருவருடைய வாழ்வு உணர்ச்சிகளில் பங்கு கொண்டு அதைப் பற்றி அறிந்து கொள்ளும் துடிப்போடு செல்லும் கதை திடீரென்று திசை மாறி விடுகிறது. லில்லி, மேரி, பூர்ணா ஆகியோரின் பிரவேசமும், பிரமநாயகத்தின் மரணமும் — ஆக எல்லாமாகச் சேர்ந்து ஏதோ ஒரு துப்பறியும் மர்ம நாவலைப் படிப்பது போன்ற உணர்வை உண்டாக்கி விடுகின்றன. ஆனால் அழகியநம்பி மறுபடி பிறந்த மண்ணை நோக்கி வந்ததும், கதையில் மீண்டும் அதே பழைய சுவை வந்து விடுகிறது. பதினேழு மாதங்களாக அவனைக் காணாமல் ஏமாந்து ஏங்கிய கண்களின் பார்வையைப் புரிந்து கொண்டு பகவதிக்கு வாழ்வளித்த அழகிய நம்பியும் அவன் பிறந்த மண்ணும் வாசகர் மனத்தில் இடம் பெற்று விடுகின்றன. காரணம் நா. பார்த்தசாரதியின் அழகு தமிழல்லவா? விலை ரூபாய் ஐந்து.

## மலைச்சிகரம்

ஒரு மலைச் சிகரத்தின் மீது ஏறி நிற்பவனின் உள்ளம் எப்படிக் காட்சி ஜாலங்களில் லயித்துப் பொங்கிப் பூரிக்குமோ அத்தகையதோர் இன்பக் கிறுகிறுப்பை இந்தக் குறுநாவலின் வார்த்தை ஜாலங்களிலும், நளினியின் அழகிலும் நவீனனின் அடக்கத்திலும் நாம் அனுபவிக்க முடிகிறது. காதலால் வீங்கிப் போன உள்ளத்தோடு கூடிய கன்னிப் பெண் ஒருத்தி —அதிலும் கொள்ளை அழகோடு கூடிய ஒருத்தி கண்ணாடி முன் போய் நின்று கொண்டு தன் அழகைத் தானே பார்த்துக் கொண்டால் அவள் உள்ளம் எப்படியெல்லாம் குதிபோட்டுக் குதூகலிக்கும் என்பதை அப்படியே படம் பிடித்துக் காட்டுகிறார் ஆசிரியர். உடம்பிலோ, மனத்திலோ எங்கோ எதிலோ எதனால் தணித்துக் கொள்வதெனத் தெரியாத ஒரு வெம்மையைக் கதாநாயகி நளினிக்கு உண்டாக்கிய ஆசிரியர், 'குளியலறைக்குள் போய் நெடு நேரம் துளைந்து குளித்து விட்டு வந்தாள்' என்று சொல்லும் போது அந்தச் சந்தன மேனியாளிடமிருந்து கம்மென்று வீசும் சந்தன சோப்பின் நறுமணத்தை நம்மால் நுகர முடிகிறது.

ஆசிரியர் நா. பா. அவர்களின் புதுமுறை நாவல் இது. கதைப் போக்கு, நடை, எல்லாமே அவருடைய முந்தைய எழுத்திலிருந்து முற்றிலும் மாறுபட்டிருக்கிறது இந்த மலைச் சிகரத்தில். சிரிப்பும் கும்மாளமுமாகத் தோழிகளுடன் எழுத்தாளன் நவீனனைக் காரிலேயே காணச் செல்லும் நளினிக்கு உண்மை எழுத்தாளன் அவன் இல்லை, அவன் அண்ணனான அந்தக் குஷ்டரோகிதான் என்பது புரியாமல் போய் விடுகிறது. காரணம், அவள் உள்ளமெல்லாம் நவீனனே நிறைந்திருந்ததினால் இருக்கலாம். ஆனால் வாசகர்களாகிய நமக்கு இந்த மர்மம் ஆரம்பத்திலேயே புரிந்து விடுகிறது.

இச் சிறு குறையைத் தவிரக் கதை அற்புதமான முறையில் மேலே என்ன என்ற ஆர்வத்தைத் தூண்டும் வகையில் கொஞ்சும் தமிழில் ஆனந்த நடை போட்டுக்கொண்டு போகிறது. 'என்னுடைய பட்டிக்காட்டு அத்தையின் பெண் எனக்கு மாலையிடக் காத்திருக்

விருள். நான் போகிறேன்' என்று நளினன் எழுதிய அந்த வார்த்தைகளை நளினி படித்த போது ஏற்பட்ட ஏமாற்றம் நமக்கும் ஏற்படுகிறது - கதை முடிந்துவிட்டதே என்று!

இந்தப் புத்தகத்திலுள்ள மற்றொரு குறுநாவல் 'என்றோ ஒரு நாள்' என்பது. ஆசிரியர் என்றோ ஒரு நாள் எழுதியது அது என்பதை அதன் கதைப் போக்கும் நடையுமே சொல்லி விடுகின்றன. ஆசிரியரின் பழைய பாணியை நினைவு படுத்துவதாக இருக்கிறது அந்தக் கதை. மலைச் சிகரத்தின் மகத்தான வளர்ச்சியைக் காட்டுவதற்காகவே இந்தக் கதையையும் இத்துடன் இணைத்திருக்கிறார்களோ என்னவோ? விலை ரூபாய் ஒன்றரை.

இரண்டு புத்தகங்களையும் வெளியிட்டோர்: வள்ளுவர் பண்ணை, 137, பிராட்வே, சென்னை — 1.

## வீணையின் நாதம்

வாசிக்கிறபடி வாசித்தால் வீணையின் நாதம் அற்புதமாகத்தான் இருக்கும். மனித உணர்ச்சிகளைத் தந்தியாகக் கொண்ட இலக்கிய வீணையை வாசிக்கிறபடி வாசிக்கத் தெரிந்த ஆசிரியர் கிடைத்து விட்டாரோ...? வாசகர்களும் திரும்பத் திரும்ப வாசிக்கும் அற்புதமான கதைகள் தான் கிடைக்கும். அத்தகைய கதைகள் பல கொண்ட அருமையான தொகுப்பு இது.

புத்தகத்தைப் படித்து முடித்தவுடன் ஓர் அருமையான வீணைக் கச்சேரி கேட்ட திருப்தியும் மகிழ்ச்சியும் உண்டாகின்றன. வீணையில் உருட்டல் புரட்டல் சாகசம் அதிகம் உதவாது. அதே போல இந் நூலில் இரத்தத்தை உறைய வைக்கும் பயங்கரமோ, விம்மி அழ வைக்கும் பெரும் துயரமோ, விலா வலிக்கச் சிரிக்க வைக்கும் ஹாஸ்யமோ கிடையாது. அளவாக, திட்டமாக, சுத்தமாக சப்த ஸ்வரங்களைக் கொண்டு இசைப்பது போல் நவ ரசங்களை நயமாகக் கையாண்டு நல்ல கதைகளைச் சிருஷ்டித்திருக்கிறார் ஆசிரியர்.

பழகிய ராகங்களையே பெரும்பாலும் கொண்ட கச்சேரி போல் பழகிய உணர்ச்சிகளையும், பின்னணிகளையுமே கொண்டு அழகான கதைகளைப் புனைந்திருக்கிறார். 'சாமானியத்தில் அசாதாரணத்தைக் காட்டுவது' என்ற பெரிய காரியத்தை அநாயாசமாகச் செய்திருக்கிறார். உதாரணமாகக் காதல் என்ற உணர்ச்சியில் எழும் தூய்மை, பொறுமை, கோபம், சாந்தி முதலிய சாயல்களில் ஒவ்வொன்றையும் முறையே 'வீணையின் நாதம்', 'வேதனைச் சங்கிலி', 'வைராக்கியம்', 'இரு கடிதங்கள்' முதலிய கதைகளில் சுவைபடத் தீட்டியிருக்கிறார்.

பழகிய ராகங்களிடையே விழும் ஒரு சில அபூர்வ ராகங்களும் பாராட்டும் வகையில் உருப்பெற்றிருக்கின்றன. நுண்ணிய உணர்வுகளை விளக்கும் இந்த மனோதத்துவக் கதைகளில் தாய்மையின் இயற்கையை மூன்று கோணங்களில் சித்திரிக்கும் 'பேசும் பொற்சித்திரம்', 'யார் தியாகி?', 'மனமும் மருந்தும்' என்ற கதைகள் நம் நெஞ்சில் ஆழ நிலைத்து விடுகின்றன. சூட்சமமான உணர்ச்சிகளைப் போலவே சாதாரணமாகக் காணக் கிடைக்காத கதா பாத்திரங்களையும், கவினுறத் தீட்டும் ஆசிரியரின் ஆற்றல் 'பைத்தியம்', 'குடும்பம்' போன்ற கதைகளில் மிளிருகிறது.

தொகுப்பில் முதல் இடம் பெறும் கதையின் தலைப்பையே நூலுக்குப் பெயராக இட்டிருக்கிறார் ஆசிரியர். கடைசி இடம் பெறுவது 'அருமைப் பரிசு'. வாசகர்களைப் பொறுத்த மட்டும் இப்புத்தகத்துக்கு அதுவே பொருத்தமான தலைப்பாகும்.

ஆசிரியர்: "கௌசிகன்"; வெளியீடு: கலைமகள் காரியாலயம், மயிலாப்பூர், சென்னை—4; விலை ரூ. 3.00


## இன்பமே எங்கே நீ?

கதைக்கு நாயகர்களாக வருபவர்கள் அந்தஸ்துள்ளவர்களாகவோ அல்லது ஆரம்பத்தில் பரம ஏழையா யிருந்து கதையின் கடைசிப் பாகத்தில் பெரிய பணக்காரர்களாகி விடும் வர்க்கத்தைச் சேர்ந்த அதிர்ஷ்டக்காரர்களாகவோ இருப்பார்கள். ஆனால் இந்தக் கதை அம்மாதிரியில்லை. மிகச் சாதாரண மனிதர் ஒருவர்தான் கதாநாயகர். கடைசி வரையில் அவர் ஆசைக்கும், பாசத்துக்கும், வெறுப்புக்கும், விரக்திக்கும் ஆளாகிப் பாமர மனிதனின் நிலையிலேயே இருக்கிறார். மற்றப் பாத்திரங்களும் வாழ்க்கையில் நாம் சர்வ சாதாரணமாகக் காணும் பாத்திரங்களாகவே இருக்கின்றன. யாரும் அமானுஷ்யச் செயல் எதையும் சாதித்துவிடவில்லை. ஆனால் பொன்னான உள்ளம் படைத்த பொன்னையா முதலியார், கடமையில் தவறாத கண்குப்பிள்ளை வேதகிரி, மனத்தை வழி தவற விட்டு மதி கெட்ட செந்தில் நாயகம், உயர்ந்த உள்ளம் படைத்த ஹேமா, சினிமா நினைவாகவே இருந்த நர்ஸ் நிரஞ்சனா, வைத்தியக்காரப் பிள்ளையான செல்லப்பா ஆகிய பல்வேறு விதமான மனப்போக்குக் கொண்ட பாத்திரங்களின் இயக்கம் "இன்பமே எங்கே நீ?" என்ற இந்தச் சுவை ததும்பும் நாவலாகப் பரிணமித்திருக்கிறது. ஒரு பெரிய கேள்வியை எழுப்பிய ஆசிரியர் அதற்குப் பொருத்தமான பதிலையும் கடைசியில் தந்திருக்கிறார்.

ஆசிரியர்: கோமதி ஸ்வாமிநாதன்; பிரசுரம்: அருணா பப்ளிகேஷன்ஸ்; சென்னை—17; விலை: ரூ. 3-00.

## குறிஞ்சி (திங்கள் இருமுறை இதழ்)

முத்தமிழ் வளர்த்த மதுரை நகரிலிருந்து இது தோன்றியிருக்கிறது. இதன் சிறப்பாசிரியர் மதிப்புக்குரிய பி. டி. ராஜன் அவர்கள். ஆசிரியர்: ப. நெடுமாறன் எம். ஏ. "தமிழகத்தின் தொன்மையான பண்பாட்டினைப் பேணவும், தமிழினத்தின் உரிமைகளைக் காக்கவும், செந்தமிழின் சிறப்பைப் பாரறியச் செய்யவும் 'குறிஞ்சி' அயராது தொண்டாற்றும்" என்ற முதல் இதழின் முன்னுரை வாக்கியங்கள் நம்பிக்கை ஊட்டுவனவாயிருக்கின்றன. விவரங்களுக்கு: விவேகானந்தா அச்சகம், 48, மேல மாசி வீதி, மதுரை; விலை: தனிப்பிரதி ரூ. 0 25.




மலேயாவில் கிடைக்குமிடம்
M/s. Meena Trading Co.
50-A, Market Road, Singapore-1

இலங்கையில் கிடைக்குமிடம்
AVRA Limited
Colombo

# கால்கேட்டின்மூலம் நாள் முழுவதும் வாய் துர்நாற்றத்தை அகற்றி பற்கள் சொத்தையாவதையும் தடுங்கள்




ஏனெனில், ஒரே தேய்ப்பில் கால்கேட் டெண்டல் கிரீம் துர் நாற்றத்தையும் சொத்தையையும் உண்டாக்கும் கிருமிகளில் 85 சத விகிதத்தை நீக்குகிறது.


கால்கேட் உடனடியாக வாய்-துர் நாற்றத்தை 10ல் 7 சந்தர்ப்பங்களில் அகற்றுகிறது என்பதையும், உணவு சாப்பிட்டவுடன் கால்கேட்டினால் பற்களைத் துலக்கும் முறையால், பற்பசை வரலாற்றிலேயே இதுவரை கண்டிராத பெருமளவில், ஏராளமானவர்களுக்குச் சொத்தை ஒழிக்கப்படுகிறது என்பதையும் விஞ்ஞான பரீட்சைகள் நிரூபித்துள்ளன! இந்த சாதனை கால்கேட்டுக்குத்தான் உண்டு!

சாப்பிட்டவுடன் வாயை கொப்பளித்தால் மட்டும் போதாது—சாப்பிட்டவுடன் வழக்கமாக கால்கேட் டெண்டல் கிரீமினால் உங்கள் பற்களை நன்றாகத் துலக்குங்கள். இதன் விசேஷமும், ஊடுருவும் தன்மையுமுள்ள நுரை பற்களின் இடைவெளிகளிலே புகுந்து, சொத்தைக்கும், துர் நாற்றத்துக்கும் காரணமாக இருக்கும் அழுகிப்போன பதார்த்த அணுக்களை அகற்றுகிறது.

கால்கேட்டில் கிடைத்திருக்கும் அருமை நறுமணத்திற்காக, குழந்தைகள் அதனாலேயே பல் துலக்க விரும்புகிறார்கள்.

வழக்கமாக கால்கேட் உபயோகித்தால், அது:


- ✔ துர் நாற்றத்தை அகற்றுகிறது
- ✔ சொத்தையைத் தடுக்கிறது
- ✔ பற்களை அதி வெண்மையாக வைத்திருக்கிறது




சிக்கன பற்பொடியை விரும்பினால், இந்த பலன்கள் அனைத்தையும் கால்கேட் டூத் பவுடர் மூலம் அடையலாம். ஒரு டப்பி பல மாதங்களுக்கு வரும்.

**பரிசுத்தத்திற்கும், வாயில் நறுமணம் கமழவும், வெண்ணிற பற்களைப் பெறவும் உலகத்திலேயே பெரும்பாலான மக்கள் மற்றெல்லா பற்பசைகளையும் விட கால்கேட்டையே பெரிதும் விரும்புகிறார்கள்.**

# சக்தி பிறந்தது



ராஜ்குமார்

" இரச்......... "

புழுதியைக் கிளப்பி- விட்டுவிட்டு ஓசை மறைந்தது.

அரை அடி இடைவெளியில் உயிரைப் பிடித்துக் கொண்டு ஓடிய அனாதைச் சிறுவன், பிளாட்பாரத்தையும் தாண்டி வாய்க்காலில் இறங்கிய பின்தான் திரும்பிப் பார்த்தான்.

படீரென்று காரின் கதவு திறக்கப் பாய்ந்து வருகிறான் டிரைவர்! பளீர் பளீரென்று அறைகள் விழுகின்றன! அனாதைப் பயலை அடித்தால் யார் கேட்கப் போகிறார்கள் என்ற வெற்றியோடு திரும்புகிறான். எதிர்பாராமல் பிளாட்பாரத்திலிருந்து சொல்லம்புகள் சரமாரியாகப் பாய்கின்றன! நாகரிக யுகத்தின் அநாகரிக அஸ்திரங்கள் எங்கே தன் தகர மேனியைத் துளைத்து விடுமோ என்ற பயத்தோடு பறக்கிறது கார்!

இப்படி எதுவுமே நடக்கவில்லை!

காரணம், காரை ஓட்டி வந்தவர் டிரைவர் இல்லை. அதன் சொந்தக்காரர். படித்தவர்; பட்டம் பெற்றவர். அவர் ஒரு டாக்டர். டாக்டருள் ஒரு மேதை.

நல்ல வேளை 'ஆக்சிடெண்ட்' எதுவும் ஆகவில்லை. அவன் அடிபட்டிருந்தால்....?

அதைப் பற்றி அவர் நினைக்கவுமில்லை; கவலைப்படவுமில்லை! அடிபட்டால் என்ன? கால் ஒடிந்து விடுமா? இல்லை, கபாலம் நொறுங்கி விடுமா? ஒடிந்த இடத்தை ஒட்ட வைக்கும் திறமை, நொறுங்கிய இடத்தை நேராக்கும் சக்தி அவரிடம் இருக்கும்போது...

மௌனமாகச் சிரித்தார் டாக்டர் விகவம். பறந்து போகத் துடிக்கும் உயிரைப் பிடித்து நிறுத்தும் சக்தியோடு, வாழும் உயிர் தம்மை அறியாமல் வீழ்ந்து விடாமலும் தடுக்கும் தம் சக்தியை நினைத்துச் சிரித்துக் கொண்டார்.

உலகத்தின் வழியில் உள்ளத்தின் உணர்ச்சிகள் உருவாகாத நிலையில், நடக்கவிருந்ததைப் பற்றி நினையாத அந்த அனாதைச் சிறுவனும், 'எனக்கு மாத்திரம் சிரிக்கத் தெரியாதா?' என்று கேட்பது போல், சுழலும் கார்ச் சக்கரங்களைப் பார்த்துச் சிரித்துக் கொண்டிருந்தான்!

'சர்.........ர்...'

தெரு முனையில் கார் திரும்பியது. திரும்பிய இடத்தில் அப்படியே நின்றது.

முதல் தேதி வந்ததும் வழிமறிக்கும் கடன் காரனைப்போல், பாதையின் குறுக்காக யாரோ சிலர் குழி பறித்துக் கொண்டிருந்தார்கள்.

மனிதனும், அவன் சுமக்கும் அல்லது அவனைச் சுமக்கும் வாகனமும் போவதற்கு மாத்திரம்தானா சாலை? சின்னஞ்சிறு டெலிபோன் கம்பி, மின்சாரக் கம்பியிலிருந்து பெரிய, பெரிய குடி நீர், சாக்கடை நீர் குழாய் வரைக்கும் எல்லாவற்றுக்கும் அதுதானே வழி!

வருஷம் முழுதும் பாதையைத் தோண்டா விட்டாலும் பாதை ஓரத்திலாவது தோண்டிக் கொண்டுதான் இருந்தார்கள்!

''டாம் ஃபூல்ஸ்!'' என்று நற்சாட்சிப் பத்திரம் ஒன்றை வழங்கி விட்டு, ஸ்டியரிங்கை ஒடித்து வளைத்தார் விகவம்.

வலது பக்கத்தில் ஒரு சந்து. அதற்குள் புகுந்து மறுபடியும் இரு முறை வலது பக்கம் ஒடித்தால், அபாயத்தின் எல்லைக்கு அப்பாற்பட்ட மெயின் ரோடு. கார் சந்தினுள் புகுந்தது.

முப்பதாவது மீட்டரில் போய்க் கொண்டிருக்கும்போதே ''நான்டி பீப்பிள்!'' என்று முணுமுணுத்தது அவர் வாய். இன்னும் முந்நூறு மீட்டர் தாண்டியாக வேண்டுமே ?

அந்தப் பக்கம் இந்தப் பக்கம் ஓர் அடி விலகினாலும் எங்கேயாவது இடித்து விடும் வெகு லாகவமாகக் காரை ஓட்டினார் விகவம்

அவர் அறிவுக்குப் புரியாத, பிடிபடாத என்ன என்னவோ விஷயங்கள் வழி நெடுக காதில் விழுந்து கொண்டிருந்தன.

இருநூறுவது மீட்டரில் கார் மறுபடியும் நின்றது! அதன் ரீங்காரமான ஹாரன் சத்தத்தை யாருமே ரசிக்கவில்லை. அதைவிடச் சுவாரசியமான விஷயத்தில் மனத்தைக் கொடுத்து விட்டு, அனுபவ பாத்தியதையான உரிமையோடு வழியை ஆக்கிரமித்துக் கொண்டு நின்றது ஒரு கூட்டம்.

இப்போது பேச்சில் அடிபட்ட விஷயம் அவர் அறிவுக்குப் பிடிபட்டது!

"பாவம்! எட்டுக் குழந்தைங்க! விட்டுட்டுப் போயிடுவான் போலிருக்கு" என்று அழுதது ஒரு குரல்.

"கடைசியில் கடவுளும் கைவிட்டுட்டார்!" என்று சேர்ந்து கொண்டது மற்றொரு குரல்.

காரின் ஹாரனை அழுத்தப் போன விகவம் நிறுத்தினார். அவர் மனத்தில், திடீரென்று ஒரு வேகம் பிறந்தது. 'கடவுளும் கைவிட்டு விட்டாரா?' என்ற நினைவோடு தலையை வெளியே நீட்டினார்.

"என்னப்பா? என்ன விசேஷம் இங்கே?"

இவருக்குத் தெரிந்து என்ன ஆகப் போகிறது என்ற நினைப்போ என்னவோ, யாருமே பதில் சொல்ல முன்வரவில்லை.

வாழ்க்கையில், அனுபவப்பட்ட இரு கண்கள் மாத்திரம் கார் சீட்டில் சுருண்டு கிடக்கும் ஸ்டெதாஸ்கோப்பைக் கவ்விக் கொண்டன. நொடிப் பொழுதில் ஒரு கணக்கைப் போட்டு முடித்தான் அதன் சொந்தக்காரன்.

"பாவம் சாமி........!" என்று மெதுவாக ஆரம்பித்தான் பக்கத்து வீட்டுக்காரன்.

இதுவரை பச்சாத்தாபம்கூடப் பட்டறியாத பக்கத்து வீட்டுக்காரனுக்கு இன்று ஏன் இவ்வளவு அக்கறை என்றுதானே என்னுகிறீர்கள்? தன் கையைக் கடிக்காத வரை பிறருக்கு உபகாரம் செய்யும் பெருந்தன்மை அவனுக்கு இருக்கத்தான் செய்தது! அதுவும் சந்தர்ப்பம் கூடி வரும்போது சும்மா விட்டு விடுவானா?

மனிதனே ஒரு சந்தர்ப்பவாதிதானே!

"எட்டுக் குழந்தைங்க. நாதியில்லே. நடுத் தெருவிலே நிக்குது. அந்த மனுஷன் காசத்தில் விழுந்து வருசம் மூணு ஆச்சு. பார்க்காத வைத்தியம் இல்லே. டாக்டரெல்லாம் கைவுட்டுட்டாங்க. போகாத புண்ணிய தலம் இல்லே. கடைசியிலே கடவுளும் கைவுட்டுட்டாரு. இன்னிக்கோ...நாளைக்கோ....."

"படைத்தவன் பாதுகாக்கவில்லை!" விகவத்தின் மனம் பொருமியது.

'பாதுகாக்கும் பொறுப்புத்தான் இல்லை: அவன் பிழைத்திருப்பது கூடப் பொறுக்கவில்லையா? பசியால் பரிதவிக்கும் பெற்றவளும் பிள்ளைகளும் நம்பி நிற்கும் அந்த ஒரே உயிரைப் பறித்துக் கொள்ளப் பார்க்கிறதா அந்தத் தெய்வம்? நடுத் தெருவில் நிற்க விட்டு வேடிக்கை பார்க்க நினைக்கிறதா அந்தத் தெய்வம்......?'

'அப்படி ஒரு தெய்வம் இருந்தால், அத் தெய்வம் மனித சமுதாயத்துக்கே முதல் சத்துரு!'

கைப் பையிலுள்ள 'பெப்' வரிசை விர்ரென்றுவழி கொடுத்தது. குறிப்புச் சீட்டை எடுத்துக் கிறுக்கி அவன் கையில் கொடுத்து விட்டு, "சரியாக ஐந்து மணிக்கு இந்த விலாசத்துக்குக் கொண்டு வந்து விடு" என்றார்.

காசம் காசை விழுங்கும் வியாதி என்பதை அறிந்த அந்த அனுபவஸ்தன் அரைகுறை சந்தேகத்தோடு அவரை விட்டு விட விரும்பவில்லை. "சாமி! எல்லாம் வைத்தியத்திலேயே போச்சி! கையிலே காசில்லாதவன்.." என்று இழுத்தான்.

"பரவாயில்லை!"

'விர்'ரென்று காரைக் கிளப்பினார் விகவம்.

'தாஸ்டி பீப்பிள்' கூட்டத்தைப் பின்னும் தள்ளி விட்டு ஓடிய கார், மெயின் ரோட்டில் திரும்பியது.

* * *

குப்பனின் வாழ்க்கை வழி திரும்பியது!

கார்ப்பொரேஷன் நம்பர்கூட இல்லாத குப்பத்துக் குடிசை இல்லை அவனிடமிருந்த விலாசம். நம்பரே தேவையில்லாத, "விகவா டி. பி. சானடோரியம்!"

குனிந்து நுழையும்போது முதுகில் குத்தும் குடிசை வாசலுக்குப் பதிலாக, அனாயாசமாகத் தள்ளிவிட்டு உள்ளே சென்றாலும்பின்னும் காற்று வீசும் 'ஸ்பிரிங் டோர்' கொண்ட அறை.

பட்டணத்துப் பணக்காரர்கள், மேதைகள் வரிசையில் ஒருவனுகி விட்டான் குப்பன்!

நம்பர் 10, விகவா டி. பி. சானடோரியம் என்றும் இன்று அதற்கு ஒரு தனிப் பெருமை இருந்தது. மற்ற நோயாளிகளுக்கும் நம்பர் பத்து நோயாளிக்கும் குறிப்பிட்ட ஒரு வித்தியாசம்.

பொதுவாக, நோயாளிகளுக்கு விகவத்தின் தரிசனம் கிடைப்பது நாளைக்கு இரண்டே வேளைதான். குப்பனுக்கு மாத்திரம், குறைந்தது நாலு முறை. மேல் வரம்பு மாறி, மாறி மாறி வந்தது. விகவத்தின் கண் ஜாடையைக் கண்டுகொண்ட நர்ஸிலிருந்து தோட்டி வரை குறிப்பிட்ட ஒரு கவனம் செலுத்தினர். விகவத்தின் பந்தயப் பொருளானுன்

# வாட்டர்பரீஸ்

சிவப்பு லேபில்

# காம்பவுண்ட்

இருமல்,
ஜலதோஷங்களுக்கானது




## நான்கு நல்ல காரணங்கள் இதோ .

| | | | |
|---|---|---|---|
| **1** இருமலையும், ஜலதோஷத்தையும், இமைப் பொழுதில், கச்சிதமாகக் கரைக்கிறது வாட்டர்பரீஸ் காம்பவுண்ட். | **2** கபம் அறுத்து, நுரையீரலைச் சுத்தப்படுத்தும் கிரியோஸோட், க்வயகால் அடங்கியது வாட்டர்பரீஸ் காம்பவுண்ட். | **3** வாட்டர்பரீஸ் காம்பவுண்ட் வெறும் நோய் நிவாரணி மட்டுமல்ல; நம்பிக்கைக்குகந்த டானிக்குமாகும். நோயை எதிர்க்கும் சக்தியை உடலுக்கு உதவுகிறது. | **4** வாட்டர்பரீஸ் காம்பவுண்ட் பசியைத் தூண்டுகிறது. ஜீரண சக்தியை வளர்க்கிறது. ரத்தத்தைச் சுத்தப்படுத்துகிறது. தாதுப் பொருள் நஷ்டத்திற்கு ஈடுசெய்கிறது. |

# வாட்டர்பரீஸ் காம்பவுண்ட்

## சிவப்பு லேபில்


வார்னர்-லாம்பர்ட் பார்மஸூடிகல் கம்பெனி (வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் யு.எஸ்.ஏ.வில் இணைக்கப்பெற்றது)

குப்பன். அவர் இலட்சியமாகிவிட்டது அவன் உயிர்!

மிகவும் சீரியஸான ஒரு கேஸ். ஒரு சுவாசப் பை எப்போதோ ஓட்டையாகி விட்டது. காச நோயின் கிருமிகள் அடுத்ததையும் பதம் பார்த்துக் கொண்டிருந்தன.

ஐந்தே நிமிடத் தாமதத்தில் வாட்டர்லூ போரில் தோல்வி கண்ட நெப்போலியனாகி விடக் கூடாது என்பது போல், தன்னை 'வரும் முன்காப்போன்' ஆக்கிக் கொண்டார்.

இத்தனை காலமும் ஆகாரமின்றி அணு அணுவாக அழிந்து கொண்டிருந்த அவன் உடலில், ஆபரேஷனைத் தாங்கிக் கொள்ளும் சக்தி அணுவளவு கூட இல்லை என்பதை அறிந்த விசுவம் முதலில் அவன் உடலைத் தயார் ஆக்குவதில் ஈடுபட்டார். தினமும் பால் முகத்தில் விழித்தான். பத்து மணிக்கு, ராகிக் கஞ்சி சப்பென்று பட்டாலும், வயிற்றினுள் கால் படி பாலோடு கலக்கும்போது இனிக்கத்தான் செய்தது. பால், பழம், முட்டை இதன் ருசி எல்லாம் இன்று அவனுக்கு அனுபவபூர்வமான ஓர் உண்மை! சாப்பிடும் வகை வகையான மருந்துகளைப் பற்றி அவன் கேள்விப் பட்டதுமில்லை. என்ன, ஏது என்று தெரிந்து கொள்ள நினைக்கவுமில்லை. வந்ததை யெல்லாம் விழுங்கிக் கொண்டிருந்தான்.



நாளாவட்டத்தில் தான் ஒரு நோயாளி என்பதையே மறந்து விட்டான் குப்பன்!

அவனுக்குப் பதிலாக அந்த நோயைப் பற்றியே நினைத்துக் கொண்டிருந்தார் விசுவம். மூன்று மாதங்கள் பறந்தோடின. இப்போது குப்பனின் உடலில் உறுதி இருந்தது. விசுவத்தின் மனத்திலும் வெற்றி நிச்சயம் என்ற உறுதி ஏற்பட்டது. நோயாளியும், டாக்டரும் கூட நினையாத நேரத்தில் முன்னறிவிப்பின்றி வரும் 'ஹார்ட் ஃபெயிலியூர்' வந்து விடக் கூடாதே என்ற சலனம் கூட இல்லாத ஓர் உறுதி!

ஆப்பரேஷன் நாள் வந்தது!

'டாக்டருக்காகக் காத்திருக்க வேண்டாம்' என்று மற்ற நோயாளிகளுக்கு முன்னறிவிப்புக் கொடுக்கப்பட்டது. ''இன்று கன்சல்டேஷன், அட்மிஷன் எதுவுமே கிடையாது'' என்று ஒரே பதிலைச் சொல்லி, வந்தவர்களை யெல்லாம் அனுப்பி வைத்தாள் நர்ஸ். வீட்டை விட்டு வெளியில் கிளம்பவில்லை விசுவம். நினைத்த நேரத்தில் நினைத்த 'இன்ஸ்ட்ரக்ஷனை' டெலிபோன் வழியாக அனுப்பிக் கொண்டிருந்தார்.

மயக்க மருந்து கொடுக்கும் போது, ஆயிரம் பத்தாயிரத்தில் ஒருவர்தான் இறக்கிறார்கள் என்றாலும், அதில் குப்பன் ஒருவனாகி விடக் கூடாது என்று கண்டிப்பாகச் சொல்லி வைத்தார்.

சரியாக ஐந்து மணி.

ஆப்பரேஷன் அறைக் கதவு மூடப்பட்டது. குப்பனின் உடலத்தைத் தாங்கி நின்றது ஆப்பரேஷன் டேபிள். சுற்றிலும் ஏழு டாக்டர்கள். நர்ஸ் வேறு. குறுகிய அந்த அறைக்குள் தனிப்பட்ட ஓர் உலகத்தை உருவாக்கிக் கொண்டு உள்ளம் ஒன்றிக் கிடந்தனர்.

நிழலைக் காட்டாத ஒளி பரவியது. விசுவத்தின் ஒவ்வொரு பார்வையிலும் தனித்துவமான அர்த்தம் இருந்தது. உயிருள்ள, உயிரில்லாத அத்தனை பொருளும் அவர் பார்வைக்கு ஏற்றாற்போல் சுழன்றன. கருவிகள் கை மாறிக் கொண்டிருந்தன. விசுவத்தின் கையில் அவர் நினைத்தபடியெல்லாம் சுழன்றுகொண்டிருந்தன ஆப்பரேஷன் கருவிகள்.....

போராட வேண்டியவன் பதற்றமின்றிப் படுத்திருந்த போது, அவன் உயிருக்காகப் போராடினார் விசுவம். வைராக்கியம் பாய்ந்த மனத்தோடு போராடிக் கொண்டிருந்தார்.

நேரம் ஓடிக் கொண்டிருந்தது.

ஃ ஃ ஃ

ஆறு மணிக்கு ஆப்பரேஷன் அறைக் கதவு திறந்தது.

'நானா?... கடவுளா?' என்ற கேள்விக்கு அந்தக் கடவுளிடமே பதில் சொல்லி விட்டு வந்து கொண்டிருந்தார் விசுவம்!

அதை உலகுக்கும் சொல்வது போல், சுருக்கமாக ஒலித்தது அவர் குரல்.

"காப்பாற்றி விட்டேன்!"

அந்தக் குரலைக் கேட்டாள் சுப்பம்மாள். சாஷ்டாங்கமாக அவர் காலில் விழுந்தாள். "சாமி!" என்ற அவள் குரல், நன்றி உணர்ச்சிகளின் உருவமாக வெளிவந்தது.

"கடவுளாப் பார்த்துத்தான் உங்களே அனுப்பி வைச்சிருக்கார் சாமி!"

மர்மத்தில் இடி விழுந்தது! ஒரு நொடிக்கு முன், தான் முறியடித்து விட்டு வந்திருக்கும் கடவுளின் கைப்பிடிக்குள் துச்சமெனத் தூக்கி எறியப்பட்ட விசுவம் திணறிப் போனார்!

"கடவுளாப் பார்த்துத்தான் உங்களே..."

அவள் சொற்கள் அவரைச் சுழற்றியடித்தன. மனம் சுழன்றது. எண்ணங்கள் சுழன்றன.

அன்று வழியிலே தடை ஏற்பட்டது ஏன்? அவர் மனத்திலே அந்தச் சலனம்தான் ஏன்?

"பார்த்துச் சொன்னாலேகூடப் போதும், டாக்டர்!" என்று பணம் படைத்தவர்களும் பதைபதைக்கும்போது இந்தக் குடிசை வாழும் குப்பனுக்கு இத்தனை சலுகைகள் கொடுத்தது ஏன்? காசை வாரிக் கொள்ள வேண்டிய இடத்தில், தண்ணீரைப் போல வாரி விட்டது தான் ஏன்?.......ஏன்?.....

மனம் நிலைகுலைந்த நிலையில் துடித்து விட்டார் விசுவம். அவசரம் அவசரமாகச் சானடோரியத்தை விட்டுக் கிளம்பினார். வழியில்—

தாறுமாறாக வளர்ந்து விட்ட செடிகளைச் செம்மைப்படுத்திக் கொண்டிருந்தான் தோட்டக்காரன். அவன் கையிலே விளையாடிய கத்திரி முனை விசுவத்தின் மனத்தில் குத்தியது!

விசுவத்தின் மனத்தில் கூர் முனை குத்தியது!

திடுதிப்பென்று திரும்பினார் அவர். ஆபீஸ் அறைக்குள்ளே அடைக்கலம் புகுந்தார்.

அறையைப் பெருக்கிக் கொண்டிருந்தாள் ஒரு பணிப் பெண். லாகவமாகச் சுழன்று கொண்டிருந்த துடைப்பம், குப்பையை ஒன்று சேர்த்துக் குவித்தது.

நெஞ்சிலே சுர்ரென்று ஓர் அடி!

நேராக ஆப்பரேஷன் அறைக்குள் நுழைந்த விசுவம் கதவை மூடிக் கொண்டார்.

அவர் மேதைக்குப் பீடம் கட்டிய ஆப்பரேஷன் டேபிள் அங்கே காலியாகக் கிடந்தது. நிழலைக் காட்டாத விளக்கு வரிசை அணைந்து கிடந்தது. அவர் பார்வை திரும்பியது. நீர் கொதிக்கும் பாத்திரத்தில் நிலைத்தது.

கொதி நீரில் கழுவப்படும் கருவிகளைப் பார்த்தார் அவர்.

ஆப்பரேஷன் கருவிகள்.....! அவர் நினைத்தபடியெல்லாம் சுழலும்.....

அவர் சிந்தனை அறுந்தது.


'கடவுளாப் பார்த்து....' சுப்பம்மாளின் குரல் கணீரென்று ஒலித்தது.

பளீரென்று ஒரு மின்னல்! இடி இடித்தது! அதன் ஓசையும் மறைந்தது. கரை காண முடியாத அமைதி பிறந்தது.

மனித உள்ளத்தின் மமதை அழியும்போது பிறக்கும் ஓர் அமைதி!

அந்த அமைதியில் பிறந்தது ஒரு சக்தி; பிறந்து நிலைத்தது.

புரியும்போது அதற்குப் பெயர் எதற்கு? உள்ளத்தில் உணரும் போது அதற்கு விளக்கம்தான் எதற்கு?




# ஒரு கிளாஸ்
# கிஸான் ஸ்க்வாஷ்
# அருந்தி இளைப்பாறுங்கள்

சுவை மிக்கது; அலுப்பு நீக்குவது; ஆரோக்கியமானது. தானே கனிந்த கனிகளிலிருந்து தயாரானது. வைட்டமின் சத்து நிறைந்தது.

திடீரென்று வரும் விருந்தாளிகளுக்கென்றே தனியாக ஒரு பாட்டில் வைத்திருங்கள். கிஸான் ஸ்க்வாஷ் ஆரஞ்சு, லெமன், மற்றும் ஆறு ரகங்களில் கிடைக்கிறது.

கிஸான் பிராடக்ட்ஸ் லிமிடெட், பெங்களூர்.

JWT/KP-1809a



அத்தியாயம் 23

## சண்டையும் சமாதானமும்

அன்றைய தினத்துக்கு முன்னால் தாரா கோபமடைந்து வடிவேலு கண்டதேயில்லை. ''அவர் என்ன வக்காலத்து எழுதிக் கொடுத்திருக்கிறாரா உங்களுக்கு?'' என்று அவள் கேட்டது, அவனுக்கு வியப்பாக மட்டுமல்ல ஓரளவுக்கு அருவருப்பையே உண்டாக்கியது. 'நான் இவளை என்ன சொல்லி விட்டேன்? எதற்கு இப்படி எரிந்து விழுகிறாள்? படித்த பெண்ணுக்கு லட்சணம் புருஷன் தன் இஷ்டப்படியெல்லாம் ஆடவேண்டும் என்று எதிர்பார்ப்பதுதானா?' என்றுகூட எண்ணினான். உமாகாந்துக்கு அவள் வெளியே செல்லக்கூடாதென்று தடையுத்தரவு பிறப்பித்தது தகாத செயலாகத்தான் தோன்றியது அவனுக்கு. 'தாரா வெளிப் பார்வைக்கு மட்டிலுமல்ல, குணத்திலும் வெகுவாக மாறித்தான் விட்டிருக்கிறாள். நேற்றைக்கு அவள் நடந்துகொண்டதெல்லாம் வெறும் நடிப்பு! நாலு பேர் எதிரில் நல்லவளாக நடந்துகொண்டு விட்டுத் தனிமையில் சுயரூபத்தைக் காட்டியிருக்கிறாள்! அடக்கமும் எளிமையும் கொண்டவளாகக் காட்சியளித்தால் போதுமா? ஆணவமும் அகங்காரமும் நெஞ்சை விட்டல்லவா நீங்க வேண்டும்?'

வடிவேலுவிடம் அவள் இரைந்தது உமாகாந்துக்கும் பிடிக்கவில்லை என்

பது மறு விநாடியே தெளிவாயிற்று. ''பாயி! வடிவேல்! அவளை மன்னித்து விடுங்கள்!'' என்று அவன் முதுகுப் பக்கமாகத் தம் கரத்தை வளைத்துத் தோளைப் பற்றி அப்பால் அழைத்துச் சென்றார் அவர். ''அறியாமையினால் அவள் உங்களை அவமதித்துவிட்டாள்.''

தாரா கால்களை எட்ட வைத்து வேகமாய் நடந்த போது புடவை கிழிந்து விடும் போல் படபடத்தது. கிடுகிடுவென்று வந்த அவள் உமாகாந்தின் இடக் கரத்தை இறுகப் பற்றிக் கொண்டாள். ''என்னைத் திட்டுங்கள், அடியுங்கள். ஆனால் நயமாகப் பேசாதீர்கள். எனக்காக வருத்தப்படுவது போல் நடிக்காதீர்கள். என்னிடம் முரட்டுத்தனமாய் நடந்து கொண்டு என் இதயத்தை மேலும் கடினமாக்குங்கள். ஆத்திரப்படுகிற என்னிடம் பரிவுகாட்டி என் உள்ளத்தை உருக்காதீர்கள். அப்படிச் செய்து நீங்கள் உங்கள் காரியத்தைச் சாதித்துக் கொள்வீர்கள். என் இதயத்தை இளக்கி என் சம்மதத்தையும் பெற்று விடுவீர்கள்!''

அவர் கரத்தைத் தன் கண்களில் ஒற்றிக் கொண்டும் கன்னத்தில் உரசியும் அவள் மன்றாடியதைப் பார்க்கப் பரிதாபமாய்த்தான் இருந்தது வடிவேலுவுக்கு.

உமாகாந்த் வடிவேலுவின் பக்கமாய்த் திரும்பினார். ''பாயி! உண்மை என்ன தெரியுமா? இந்த நாடு நாதியற்றுப் போனாலும் இவளுக்குக் கவலையில்லை! என்றென்றும் நாம் அடிமைகளாகவே கிடந்து உழல வேண்டியிருக்குமே என்றாலும் அதற்காக இவள் அலட்டிக் கொள்ள மாட்டாள். 'கடவுள் சித்தம் அது!' என்று தன்னைச் சமாதானப்படுத்திக் கொள்ளத் தயாராக இருப்பாள். இப்படிப்பட்ட ஒரு பேதையைக் கலியாணம் செய்து கொண்டிருக்கும் நான், அவளுக்காகக் கண்ணீர் விட்டு அழுவதா அல்லது உறங்கிக் கொண்டிருக்கும் அவள் உள்ளத்தை உலுக்கி எழுப்ப முடியாத, விடுதலை வேட்கையுடன் வீறு கொண்டு எழச் செய்ய இயலாத என்னுடைய கையாலாகாத்தனத்துக்காக என்னையே நான் நொந்து கொள்வதா?''

''தேசத்தை நீங்களும் நானும்தான் காப்பாற்றப் போகிறோமாக்கும்? நம் இருவரால் என்னத்தைப் புரட்டிவிட முடியும்? இந்தியாவுக்கு விடுதலை வாங்கித் தர எத்தனையோ தலைவர்கள் இல்லையா? அவர்களிடம் அந்தக் காரியத்தை விட்டு விடுங்களேன்!''

''இப்படி நினைத்து ஒவ்வொருவருமே விலகிக்கொண்டு போனால் எதிர்ப்பு எப்படி உருவாகும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துக்கு? நாட்டு நலனில் சிரத்தை கொண்டுள்ள தலைவர்களும் வேண்டும்; அவர்கள் சொற்படி கேட்டு நடக்கத் தொண்டர்களும் வேண்டும்! ராமன் ஆண்டால் என்ன, ராவணன் ஆண்டால் என்ன என்று ஒதுங்குவது கோழைத்தனம்!''

வடிவேலுவின் பேச்சைக் கேட்டுப் பரவசமடைந்தவராய், ''க்யா பாத் ஹை!'' என்று அவனை அன்புடன் அணைத்துத் தட்டிக் கொடுத்தார் உமாகாந்த். ''பஹுத் அச்சா!''

''உங்களைப் பொசுக்கிச் சாம்பலாக்க நெற்றிக்கண் இல்லையே எனக்கு'' என்று வெளிப்படையாக, பயங்கரமாக, அடித் தொண்டையில் கூறினாள் தாரா. ''உங்களை யார் கேட்டது? எதற்காக நீங்கள் இதிலெல்லாம் தலையிடுகிறீர்கள்?''

வடிவேலுவுக்கும் ரோசமாக இருந்தது. ''குடும்ப வாழ்க்கையில் தலையிட்டால் தவறுதான். ஆனால் இது தேசத்தைப் பற்றிய விஷயம். நாட்டு விவகாரத்தில் எல்லாருக்கும் சம்பந்தமுண்டு!''

''தாய்நாட்டுக்காக நீங்கள் தலையைக் கொடுங்கள். நான் தடுக்கிறேனா? இவரை எதற்காக இழுத்தடிக்கிறீர்கள்?'' என்றாள் தாரா கண்ணீரைத் துடைத்துக் கொண்டு.

''நானா இவரை இழுத்தடிக்கிறேன்? இவர்தானே என்னைக் கவர்ந்திழுத்திருக்கிறார்! தியாகம் என்றால் படி என்ன விலை என்று கேட்கக் கூடியவன் நான், நேற்றுவரையில். ஆனால் இன்று உமாகாந்தைப் போன்றவர்கள் இந்த நாட்டுக்கு அவசியத்தேவை என்பதையும் உணர்ந்திருக்கிறேன். இவருக்குக் கீழ்த் தேசப் பணி புரிய ஆவலோடு காத்திருக்கிறேன்!''

வடிவேலுவின் இரண்டு



கைகளையும் தோள்களுக்கு மேலே பிடித்து அழுத்தினார் உமாகாந்த். நன்றி பொங்க அவன் முகத்தைப் பார்த்துக் கூறினார்: "பாயி! உங்களுக்குள்ள உற்சாகத்தில் என்னை ரொம்பவும் உயர்த்திச் சொல்லி விட்டீர்கள். அவ்வளவுக்கு நான் அருகதையற்றவன். ஏதோ நாட்டுக்காக என்னாலான தொண்டுகளைச் செய்து வருகிறேன் என்பதைத் தவிர, பெரிதாக நீங்கள் போற்றிக் கொண்டாடுகிறபடி நான் ஒரு காரியத்தையும் நிறைவேற்றி விடவில்லை."

"ஆகா! நேற்று 'மலபார் ஹில்'லில் நீங்கள் கூறியதையெல்லாம் நான் அதற்குள்ளாக மறந்து விட்டேன் என்று நினைக்கிறீர்கள்? பயங்கர வாதிகளைக் கண்டித்து சுயராஜ்யா கட்சி அறிக்கை வெளியிட்டிருந்த போதிலும், குரு வி. ஆர். தாஸின் தலைமையிலும்சிஷ்யர் சுபாஷ் போஸின் ஒத்துழைப்புடனும் அப்போதுதான் தோன்றியிருந்த அந்தக் கட்சி, வங்கக் கலகங்களில் நேரடியாக ஈடுபட்டிருப்பதாய்ப் போலீஸார் சந்தேகித்தார்கள் என்று நீங்கள்தானே கூறினீர்கள்? அந்நாட்களில் பதினெட்டே வயது நிறைந்திருந்த உங்களையும் ஆபத்தான ஆசாமியாகக் கருதி ஆங்கிலேயன் அவசரச் சட்டம் பிறப்பித்து மூன்று வருஷக் கடுங்காவல் தண்டனை அளிக்க, அதனை ஏற்று ஆனந்தமாய் அநுபவித்த அதிர்ஷ்டக்காரர் ஆயிற்றே நீங்கள்!"

"நானும் அதையேதான் அடித்துக் கொள்ளுகிறேன், கேட்டால்தானே? பாரத நாட்டுக்காக நீங்கள் எவ்வளவோ பாடுபட்டாகி விட்டது. இவர் குறிப்பிடுகிற அந்தச் சம்பவத்துக்குப் பிறகு, சிறையிலிருந்து வெளிவந்த இரண்டு வருஷங்களுக்குள்ளாக, லாகூர் ஜெயிலில் ஜத்தின்தாஸ் உண்ணாவிரதம் இருந்து உயிரை விட்ட செய்தி கிடைத்தது. கல்கத்தா வீதிகளில் சுபாஷ்பாபுவின் தலைமையில் தாஸுடைய பிரேதம் ஊர்வலமாக வந்தது. அதில் நீங்கள் கலந்து கொண்டு எல்லாருக்கும் முன்னதாகச் சென்றீர்கள். அடுத்த ஆண்டே ஒத்துழையாமை இயக்கம் ஆரம்பமாயிற்று. அப்போது 'சுதந்திர தின' ஊர்வலத்தில் பங்கெடுத்துக் கொண்டதற்காகச் சுபாஷ் பாபுவைக் கைது செய்த போது உங்களுக்கும் விலங்கு பூட்டினார்கள். சிறைச் சாலையில் உங்களை ஆடுமாடுகளைக் காட்டிலும் கேவலமாக வைத்திருந்தார்கள். தாறுமாறாக நடத்தினார்கள். போஸ் குறுக்கிட்டு நிலைமையைச் சீராக்க வேண்டியிருந்தது. மறு வருஷம் மீண்டும் 'சுதந்திர தின' ஆர்ப்பாட்டங்களைத் தொடங்கினீர்கள், தடியடி பட்டீர்கள். முதுகெலும்பு முறிந்து போய் ஆறு மாதங்கள் ஆஸ்பத்திரியில் கிடந்து அவதிப்பட்டீர்கள். இதனால் எல்லாம் நாட்டுக்கு என்ன நன்மை உண்டாயிற்று? உங்களுக்குத் தான் என்ன பயன் கிடைத்தது? சிறையில் அவர்கள் போட்ட சாப்பாடு குடல் புண்ணையும் தெருவில் போலீஸாரிடம் பெற்ற தடியடி உடல் புண்ணையும் கொடுத்ததே தவிர, நாட்டுக்கு விடுதலை வாங்கித் தந்துவிட வில்லையே? அல்லது இப்படி யெல்லாம் துன்பப்பட்டதால் உங்களைத் தான் ஏதாவது உயர் பதவி வந்து அடைந்து விட்டதா? அதுவும் இல்லை. அப்படி யிருக்க, பிராணனைக் கையில் பிடித்துக் கொண்டு பரிதவிப்பதில் பிரயோஜனமென்ன?"

'பட பட'வென்று தாரா பொரிந்து தள்ளுகையில் உமாகாந்த் தமது முகத்தில் உணர்ச்சிகள் விளையாடுவதை, ஏக்கமும் விரக்தி மனப்பான்மையும் கோபமும் போட்டியிட்டுக் கொண்டு பிரதிபலிப்பதை யாரும் கண்டுவிடக் கூடாது என்று சிரமப் படுகிறவர் போல், ஒரு புத்தகத்தைப் பிரித்துத் தலையைக் கவிழ்த்து அதன் பக்கங்களைப் புரட்டிக் கொண்டிருந்தார்.

தாரா பேசி முடித்ததும் ஆத்திரத்துடன் அப்போதுதான் வெளியாகியிருந்த அந்த நேருஜியின் சுய சரிதை நூலை மேஜைமேல் ஓங்கி அறைந்தார். மெல்லத் திரும்பி, நிதானமாக அடியெடுத்து வைத்து அவர் தாராவை நெருங்கிய போது அவர் கண்கள் வெறி கொண்டிருந்தன. அதைப் பார்த்துக் கலவரம் அடைந்ததால்தானோ என்னவோ அவள் பின்வாங்கிச் சிறிது சிறிதாக நகர, அங்கேயிருந்த கட்டில் தடுக்கி விட்டுப் 'பொத்'தென்று மெத்தையில் உட்கார்ந்தாள், கணவரை அண்ணாந்து பார்த்த போது ஒருவித பயம் நிலவியது அவள் கண்களில். கிட்டத்தில் அவர் வந்து சேர்ந்ததும் அவருடைய கூர்மையான நோக்கைச் சமாளிக்க முடியாமல் அவள் இமைகளைக் கொட்டிச்சிரத்தைத் தாழ்த்தினாள். இடது காலைத் தூக்கிக் கட்டிலின் விளிம்பில் வைத்துக்கொண்டு இடக் கரத்தைத் தொடையில் ஊன்றித் தாராவின் முகவாயை வலக் கரத்தின் விரல் ஒன்றினால் தாங்கி உயர்த்தினார் உமாகாந்த். தயக்கத்துடன் அவரை அவள் ஏறிட்டுப் பார்த்தபோது அவர் வதனத்தில் சினம் பொங்கவில்லை; சிரிப்புத்தான் கொப்பளித்தது!

"தாரா!" என்று கொஞ்சுகிற குரலில் அழைத்தார் அவர். 'சற்று முன்னால் உன்மீது எனக்கு எவ்வளவு கோபம் வந்தது தெரியுமா? அதை

அடக்கிக் கொள்வது சாத்தியமேயில்லை; நன்றாக நாலு பூசைகளை உனக்குக் கொடுத்த பிறகுதான் என் கோபம் தெளியும் என்று நினைத்தேன். ஆனால் உனக்குப் பக்கத்தில் வந்து நின்று உன் முக காந்தியில் கட்டுண்ட பிறகு, அன்புடன் தட்டிக் கொடுத்தால் கூடக் கன்றிச் சிவந்துவிடக் கூடிய இந்தக் கன்னங்களை அடித்து இம்சிக்க எனக்கு மனம் வரவில்லை'' என்றபோது உமாகாந்தின் விரல்கள் அந்தப் பட்டுக் கன்னங்கள் மீது பரவிப் படர்ந்தன; இலேசாக அதிர்ந்தவண்ணம் அவற்றை ஸ்பரிசித்து இன்பம் நுகர்ந்தன. செவிகளை அவர் நீண்டிய போது தாராவின் உடல் சிலிர்த்தது. மூன்றாவது மனிதன் ஒருவன் அங்கிருப்பதையும் மறந்து அவள் உமாகாந்திடம் உணர்விழந்தவள்போல் ஒட்டிக் கொண்டாள். ஒன்றியிருந்தவாறே அவர் கழுத்துக்குப் பின்னால் தன் பத்து விரல்களையும் கோத்துக் கொண்டு தன்னிடம் அவர் சிரத்தை வளைத்து இழுத்தாள். அவள் செவ்விதழ்கள் துடிதுடித்து அவர் காதோடு காதாக எதையோ மொழிந்தன.

அவ்வளவுதான். ''நிஜமாகவா?'' என்று உரக்கக் கேட்டார் உமாகாந்த். உற்சாக மிகுதியில் மனைவியை அப்படியே குண்டுகட்டாகத் தூக்கிச் சுறுசுறுவென்று சுற்றிக் கீழே இறக்கினார். தங்குதடையின்றி அங்கே வெள்ளமாகப் பாய்ந்த நகைப்பொலி வடிவேலுவை விதிர் விதிர்க்கச் செய்து விட்டது; 'சற்று முன்னால் பெரிய வாக்குவாதத்தில் ஈடுபட்டு எலியும் பூனையுமாகச் சண்டையிடவும் சளைக்காதவர்களாகத் தென்பட்டவர்களா இவர்கள்?' என்று அதிசயித்தான்.

## அத்தியாயம் 24

## கபட நாடகம்

சிரிப்பும் கும்மாளமும் எதற்கென்று விரைவிலேயே தெரிந்து போய் விட்டது வடிவேலுவுக்கு. ''பாவி! எனக்கு ஒரு மகன் பிறக்கப் போகிறான்! மகன் பிறக்கப் போகிறான்!'' என்று கூப்பாடு போட்டுக் கொண்டு அவனை உலுக்கி எடுத்தார் உமாகாந்த். சட்டென்று அவர் முகபாவம் மாறியது. வடிவேலுவைப் பற்றியிருந்த கரங்களின் பிடிப்பு உறுதிப்பட்டது; வேதனையுடன் அவர் இமைகள் அழுத்தமாக மூடிக் கொண்டன, பற்கள் இறுகின. இரண்டொரு விநாடிகளுக்குப் பிறகு அவருடைய ஒரு கரம் தணிந்து முதுகுப்புறமாய்ச் சென்று நடுத் தண்டின் மையத்தைத் தடவிக் கொடுத்தது. வலியைப் பொறுக்க முடியாமல் தள்ளாடி நடந்து படுக்கையில் விழுந்தார் அவர்.


கதிகலங்கிப் போனவளாக அவரிடம் பாய்ந்தோடி வந்தாள் தாரா. ஆதரவாகப் பற்றி அணைத்து அவரைத் தலையணையில் சிரம் சாய்க்கச் செய்தாள். பின்னர் கட்டிலின் அருகே மண்டியிட்டு அமர்ந்து அவர் முதுகை வருடிக் கொடுத்தாள். ''என்ன உங்களுக்கு? சொல்ல மாட்டீர்களா? உடம்பை என்ன செய்கிறது...?''

''ஒன்றுமில்லை, தாரா! சற்று நேரத்தில் எல்லாம் சரியாகி விடும் பார்!'' என்றார் உமாகாந்த் சிரமத்தைப் பொருட்படுத்ாதவராக.

''நீங்கள் எப்பவுமே இப்படித்தான். 'திடுதிப்'பென்று யோசிக்காமல் கொள்ளாமல் எதையாவது பண்ணி வைப்பீர்கள். எவ்வளவுதான் சந்தோஷமான சமாசாரமாக இருந்தால்தான் என்ன? அப்படியா நடந்து கொள்வது? நான் என்ன பச்சைக் குழந்தையா? தூக்கி வைத்துக் கொள்ளவில்லை என்று குறைப்பட்டேனா? தேக ஆரோக்கியத்தைக் கவனித்துக் கொள்ள வேண்டாமா முதலில்?'' நாத் தழுதழுக்க இப்படிக் கேட்டு விட்டு விம்மி அழ ஆரம்பித்து விட்டாள் தாரா.

அவள் கேசத்தை வருடிக் கொடுத்துப் பேசினார் உமாகாந்த். ''தாரா! எதற்குக் கண் கலங்குகிறாய் நீ? எனக்கு என்ன நேர்ந்து விட்டது? நன்றாய்த் தானே இருக்கிறேன்? இதோ பார்! தாயாராகப் போகிறாய் நீ! இம்மாதிரியான சமயங்களில் பெண்கள் எப்போதும் சிரித்த முகமாகவே இருக்க வேண்டாமா? அழுகை, கோபதாபங்கள் எதுவுமே இன்னும் ஆறேழு மாதங்களுக்குக் கூடாது; புரிந்ததா? இல்லையானால் பிறக்கப் போகும் பிள்ளையும் என்னைப் போல் முரட்டுச் சுபாவத்துடன் வளருவான்! போ! குளியறைக்குப் போய் முகத்தைக் கழுவிக் கொண்டு வேறு நல்ல புடவையாக உடுத்திக் கொள், பார்க்கலாம்!''

சந்தேகக் கண்களோடு அவரை ஆராய்ந்தாள் தாரா. ''எதற்கு இப்போது என்னைச் சிங்காரித்துக் கொள்ளச் சொல்கிறீர்கள்? எனக்கு உண்மை தெரிய வேண்டும்!''



உடலின் உபாதையை மறைத்துக் கொண்டு சிரித்தார் உமாகாந்த். "நாம் வெளியே எங்கேயும் போகா விட்டாலும் பரவாயில்லை; அதற்காக நீ அழுக்குப் புடவையைக் கட்டிக் கொண்டு அழுகை வடிந்து நிற்க வேண்டுமா என்ன?"

அவள் அப்பால் போனதும் வடிவேலுவைத் தமக்குப் பக்கத்தில் உட்காருமாறு ஜாடை காட்டினார் உமாகாந்த். "இன்னும் ஐந்தே நிமிஷங்கள் பொறுத்துக் கொள்ளுங்கள். நாங்களும் கிளம்பி விடுகிறோம் உங்களுடன்!"

"தாரா உங்களைப் போக விட மாட்டான் போல் இருக்கிறதே!" என்றான் வடிவேலு.

"அவனும் வரமாட்டான்; நம்மையும் நகர விடமாட்டான். என்னைத் தனியே விட்டால் நான் எந்த இடத்துக்குப் போய்ச் சேருவேன் என்பதை அவன் இட்டவட்டமாக அறிந்து வைத்திருக்கிறான்!"

"எங்கள் ஊர்ப் பக்கம் கழுதை கெட்டால் குட்டிச் சுவர் என்பார்கள்: அது போல் சிறப்புமிக்க தேசபக்தர்கள் கெட்டால் சிறைச்சாலை, அப்படித் தானே?"

"ரொம்ப சரி! ரொம்ப சரி!" என்று ஆமோதித்தார் உமாகாந்த். "ஆனால் துரதிர்ஷ்டவசமாக இவளுக்கு அது பிடிபட மாட்டேன் என்கிறது. பிடிவாதக்காரி! நயமாகச் சொல்லிக் கேட்காதவனை நயவஞ்சகமாகத்தான் வெற்றி கொள்ள வேண்டும்" என்றார் அவர்.



"ஏமாற்றியா அழைத்துப் போகப் போகிறீர்கள் தாராவை?"

"கான்பூரிலிருந்து பம்பாய் வரையில் அவளை எப்படி அழைத்துக் கொண்டு வந்தேன் என்று நினைக்கிறீர்கள்? வெளியே சொன்னால் வெட்கக்கேடு! 'ஹனிமூனு'க்குக் கிளம்பினோம் நாங்கள். இப்பொழுதும் ஊரைச் சுற்றிப் பார்த்து விட்டு வரலாம் என்பதாக ஒரு பொய்யைச் சொல்லி....."


".....துறைமுகத்துக்கு அழைத்துப் போய் விடலாம் என்கிறீர்களா? நீங்கள் இருக்கும் நிலையில் இன்றைக்குப் புறப்படாவிட்டால்தான் என்ன?"

"பாயி! வடிவேல்! நீங்கள்கூடவா என்னைப் புரிந்து கொள்ளவில்லை? இந்த நாட்டின் பெரிய சாபக்கேடு என்ன தெரியுமா? அதன் மக்கள்! பெரும்பாலானோர் முதுகெலும்பு இல்லாதவர்கள்! அல்லது இருக்கிற முதுகெலும்பைக் கழற்றிக் 'கோட் ஸ்டாண்'டில் மாட்டி விடுகிற சுயநலக் கயவர்கள். ஆங்கிலேயனிடம் வளைந்து கொடுத்து அவன் பாதங்களைக் கண்களில் ஒற்றிக் கொள்கிறவர்கள். ஆனால் எனக்குக் கபட நாடகமெல்லாம் போட வராது. எனக்கு முதுகெலும்பு இருக்கிறது! பாயி, வடிவேல்! எனக்கு முதுகெலும்பு இருக்கிறது! ஆங்கிலேயன் அதை ஒரு சமயம் ஓரிடத்தில் ஒடித்து விட்ட போதிலும் இன்னமும் அது என்னிடம் முழுமையாக இருக்கத்தான் செய்கிறது!"

"ஆமாம், முதுகெலும்பை முறித்துக் கொண்டு நீங்கள் ஆஸ்பத்திரியில் இருந்ததாகத் தாரா கூறினாளே, முற்றிலும் குணமாகவில்லையா அது?"

"ஆ! ஆறு மாதங்கள் அசையாமல் கிடந்து சிகிச்சை பெற்ற பிறகும் அதைச் செப்பனிட முடியாமல் போகுமா? ஆனால் டாக்டர் மூளைக்கு எவ்வளவு வேலை கொடுத்தாலும் பாதகமில்லை; உடலை அதிகமாக வருத்திக் கொள்ளக் கூடாது என்று எச்சரித்திருந்தார். இன்றைக்கு என்னவோ என்னையும் மீறிய





ஆர்வத்தில் .... நீங்கள்தான் பார்த்துக் கொண்டிருந்தீர்களே...!''

வெட்கமாய்ப் போய் விட்டது வடிவேலுவுக்கு. 'கொல்லன் பட்டறையில் கொசு' என்று தனக்குள் சொல்லிக் கொண்டான். ''உங்களுடைய 'தேன் நிலவு'க்கு இடைஞ்சலாக வந்து சேர்ந்திருக்கிறேன் நான்.''

''விளையாட்டுக் கிடக்கட்டும். என் தீர்மானத்தைக் கேளுங்கள். வெளியே போய் ஒரு டாக்ஸியைப் பிடித்து வந்து வாசலில் தயாராகக் காத்திருக்கச் செய்யுங்கள். டிரைவரிடம் நாம் எங்கே செல்கிறோம் என்பதை முன் கூட்டியே தெரிவித்து விடுங்கள். பிறகு எங்களை வந்து கூப்பிடுங்கள். நாம் மூவரும் வண்டியில் ஏறியதும் மோட்டார் ஓட்டி நேராக ஹார்பருக்குவிட வேண்டும். தாரா நாம் உல்லாசமாய்ப் பம்பாய் நகரைச் சுற்றிப் பவனி வருவதாக எண்ணிக் கொள்ள வேண்டும்.''

''அவசரப்படாமல் நீங்கள் இன்னும் சற்றுச் சிந்திக்கலாம் என்று எனக்குப்படுகிறது.''

''சிந்திப்பதா? பாவி! சிந்திக்க என்னை விடமாட்டேன் என்கிறதே இந்த வலி! ஆங்கிலேயன் கொடுத்த அடி முதுகெலும்பு எனக்கு இருக்கிறது என்பதை ஒவ்வொரு விநாடியும் ஞாபகப்படுத்திக் கொண்டிருக்கிறதே! முதுகெலும்புள்ள எந்த மனிதனும் அடிமை வாழ்வை எப்படிச் சகிப்பான்? நானிலம் போற்றும் தன் தலைவரை வரவேற்கச் செல்லாமல் அவனால் சும்மா இருக்க முடியுமா?

''போலீஸ் அணிவகுப்பைப் பார்வையிட்டு அவர்கள் அணிவிக்கும் காப்பைப் பரிசாகக் கரங்களில் ஏற்றுக் கொண்டு லாரியில் ஏறி நகர் வலம் வரப் போகிறாரே சுபாஷ் போஸ். ஈடுஇணையற்ற அந்தப் பொக்கிஷத்தைத் தக்க மரியாதைகளுடன் இட்டுப் போய் இரும்புக் கம்பிகளுக்குப் பின்னால் பத்திரமாக வைத்துப் பாதுகாக்கப் போகிறார்களே பரங்கியர்கள். அவரை இன்று தரிசிக்காமல் என்னால் எப்படியிருக்க முடியும்? வடிவேல்! டாக்ஸி பிடித்து வர நீங்கள் புறப்படுகிறீர்களா, அல்லது நானே கிளம்பட்டுமா?''



ஆடிட்டர் ஜெயராமன் அவர்களின் புதல்வி குமாரி நளினியின் பரத நாட்டிய அரங்கேற்றம் சமீபத்தில் நடைபெற்றது.

அவருடைய ஆவேசம் வடிவேலுவிடம் ஆச்சரியத்தை உண்டாக்கவில்லை; பக்தியையே பெருக்கியது. அவர் விருப்பப்படி நடக்கச் சித்தமாகி எழுந்து விட்டான்.

உள் கதவு திறந்தது. தாரா வெளிப்பட்டாள், தன்னை அலங்கரித்துக் கொண்டு. சொர சொரப்பான கதர்ப் புடவை அவள் மேனியின் வழுவழுப்பை விளங்க வைத்தது. எளிமையான ஆடைகள் அவள் தேகச் செழுமையை எடுத்துக் காட்டின. செயற்கை எழிலை அவள் அதிகமாக நாடாததினால் இயற்கையாகவே அவள் பெற்றிருந்த அழகு துலங்கியது.

விநாடிக்கு ஓர் உருவெடுக்கிறாளே இவள்? அரை மணி நேரத்துக்கு முன்னர், கண்ணீரும் கம்பலையுமாய் நின்ற தாரா எங்கே, இப்போது கவர்ச்சி மிக்க காரிகையாகக் காணப்படும் இவள் எங்கே?

கழுத்தை வலம் வந்து தழுவி அவள் புன்னகையுடன் போட்டியிடும் ஒரு முத்துமாலை; அவளுடைய உடலின் ஒவ்வொரு நெளிவுக்கும் ஏற்ப அசைந்தாடிய காதணி; கார்மேகக் கூந்தலின் அடர்த்தியை ஊகித்து உணரச் செய்யும் வகையில் சிரத்தை மூடியும் மூடாமலும் சுற்றி வளைக்கும் புடவைத் தலைப்பு...


நடக்கும் போது அவளிடம் உண்டாகும் நெளிவுகள், நாணத்துடன் நோக்கும்போது அவள் நயனங்களில் பளிச்சிடும் மின்னல்கள், நெடுமூச் செறியும்போது நிமிர்ந்தெழும் நெஞ்சகங்கள்...

தன்னை நோக்கி முன்னேறும் சௌந்தரிய தேவதையை அணு அணுவாய் ரசித்துக் கொண்டே, ''வடிவேல்! நான் எவ்வளவு பாக்கியசாலி பார்த்தீர்களா?'' என்று பெருமித உவகையோடு பீற்றிக்கொண்டார் உமாகாந்த்.

வடிவேலு பதில் அளிக்கவில்லை. விடையொன்றையும் அவர் எதிர்பார்க்கவுமில்லை. கட்டிலில் படுத்திருந்த தமக்குப் பக்கத்தில், தரையில் உட்கார்ந்த தாராவின் தோளுக்கு மேலாகக் கரத்தை நீட்டி அவள் அறியாதவாறு அவனுக்குச் சென்று வருமாறு சைகை காட்டினார். (தொடரும்)

## பிரபல திருமணம்

சூரியன் மார்க் கலப்பு உரக் கம்பெனி திரு என். ராஜகோபாலசாமி நாயுடு புதல்வன் செல்வன் ஆர். நடராஜனுக்கும், அத்திப்பாளையம் திரு என். ராமகிருஷ்ணம நாயுடு அவர்களின் புதல்வி செல்வி ஆர். ஜெயலக்ஷ்மிக்கும் 6-6-62ல் கோவை மேட்டுப்பாளையம் ரோடிலுள்ள ஸ்ரீராம் நாராயண் மில்லில் விமரிசையாகத் திருமணம் நடைபெற்றது.



# 26. சுந்தரியைக் காணோம்!

# நந்தவனம்

செண்பக வனத்தின் சித்திரப் பணி எதிர்பார்த்ததை விட மிகவும் சிறப்பாக நிறைவேறியது. மெய்யான அன்பும், உண்மையான கலைக் காதலும் சேர்ந்து, இரண்டு இளம் இதயங்களிலே தவழ்ந்து, கவரோவியங்களாகப் பரிணமித்தன! மொட்டாக நிற்கிற தாமரை சூரிய ஒளி பட்ட மாத்திரத்தில் எப்படிப் பூவாக மலர்கிறதோ அப்படியே காதல் என்ற கிரணம் பட்டுக்கலை ஓவியம் மலர்ந்தது, அந்தக் கோவிற் சுவர்களிலே! சுந்தரேசப் பட்டரும், சங்கர நமச்சிவாயக் கம்பரும் அவற்றைக் கண்டு வியந்து வியந்து கூத்தாடினார்கள் !



செண்பக நாயகி கோவிலின் கலைப் பணி செம்மையாக நிறைவெய்திய போதிலும், கடைசியாக முடிக்க வேண்டிய ஒரு சிறு பணி மட்டும் பூர்த்தியாகாமல் நின்றது! அதுதான் ரிஷிய சிருங்கரின் சித்திரம்! எல்லாச் சித்திரங்களையும் முடித்து விட்டுக் கடைசியாக அந்தக் குகை ஓவியத்தை முடித்துக் கொள்வதாக அல்லவா திட்டமிட் டிருந்தான் வில்வநாதன்! ஆனால் அந்த ஒரு பணி மட்டும் இன்னும் பூர்த்தியாகாமலே இருந்தது! என்ன காரணத்தினாலோ அந்த ஒரு சித்திரத்தை வரைகிற முயற்சியில், தளர்ச்சியும் அச்சமும் கொண்டு தடுமாறினான் வில்வநாதன்! இதைக் கவனித்த செண்பக சுந்தரி வியப்பு அடைந்தாள்!

''வில்வநாதா! இத்தனை மகோன்னதமான சித்திரங்களை இவ்வளவு வேகத்தோடு, இத்தனை சிறிய கால அவதிக்குள் முடித்து விட்ட உங்களுக்கு, இந்த ரிஷியசிருங்கச் சித்திரம் மட்டும் ஏன் இன்னும் கைகூடாமல் நிற்கிறது?''

இவ்வாறு கேட்டாள் சுந்தரி.

## சோமு

''அது ஒரு பெரிய கதை! ஒரு நாள் சாவகாசமாகச் சொல்கிறேன்!'' என்றான் வில்வநாதன்.

''தவணை கழிந்த பிறகும் இந்தச் சித்திரம் மட்டும் பூர்த்தியாகாமல் இருந்தால் எப்படி?'' என்று கேட்டாள் செண்பகசுந்தரி.

''அதுதான் எனக்கும் கவலையாக இருக்கிறது!'' என்றான் ஓவியநாதன்.

மறு நாள் சுந்தரேசப்பட்டர் நந்தவனத்துக்குள் நுழையும் போதே ஒரு முக்கியமான செய்தியை அறிவித்துக் கொண்டு வந்தார்!

''வில்வநாதா! தாமரைச் செல்வியின் திருமணம் உறுதியாகி விட்டது, தெரியுமோ?''

''செல்வியின் திருமணமா? தாமரைச் செல்வியின் திருமணமா?''

''ஆமாம், யாருமே எதிர் பாராத ஒரு முடிவு அது! அவளாகவே தீர்மானித்துச் சொன்னாளாம் அந்த முடிவை!''

இப்படிச் சொல்லும் போது பட்டரின் முகத்தில் வியப்போடு ஒரு திருப்தியும் தவழ்ந்தது.

''அப்படி என்ன முடிவு பட்டரையா?'' என்று குறுக்குக் கேள்வி போட்டார் கம்பர்.

''ஏலமலை இளைய ஜமீந்தாரையே மணக்கப் போவதாக உறுதியோடு சொல்லி விட்டாளாம் தாமரைச் செல்வி!'' என்றார் சுந்தரேசப்பட்டர்.

''இப்படி ஒரு முடிவு நிகழுமோ என்று எதிர்பார்த்து அஞ்சினேன், கவலைப்பட்டேன். அப்படியே ஆகிவிட்டது!'' என்றான் வில்வநாதன். அப்படிச் சொல்லும்போது, வில்வநாதனுடைய குரலிலே துயரத்தோடு, அநுதாபமும் ஒருவித ஏக்கமும் ஒலித்தன.

''வில்வநாதா! நீ சொல்வது சரியாகப் புரியவில்லையே எங்களுக்கு !'' என்று குழப்பத்தோடு கேட்டார் சுந்தரேசப் பட்டர்.

''பட்டரையா! வாழ்க்கையில் சில விபரீதங்களை நாம் எதிர்பார்க்கிறோம். எதிர்பார்த்து அஞ்சுகிறோம். அவை நிகழும் என்று நமக்கு ஓரளவு தெளிவாகவே தெரிகிறது. ஆனாலும் அவைகளை நாம் தடுக்க முடிவதில்லை. அவை நிகழக் கூடாது என்று நாம் விரும்பினாலும், அவை நிகழ்ந்தே விடுகின்றன! நாம் சாட்சியாக நின்று அவற்றைப் பார்த்துக் கொண்டே இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டு விடுகிறது!''

ஏதோ தனக்குள்ளேயே பேசிக் கொள்வது போல, இப்படிப் பேசி

னான் வில்வநாதன். பட்டருக்கு அவனுடைய அந்த வார்த்தைகளின் பொருள் புரிந்த போதிலும், அதற்குக் காரணமாக அமைந்த மன நிலை சரியாகப் புரியவில்லை. வில்வநாதனுடைய முகத்தையே பார்த்துக் கொண்டு நின்றார். அப்போது வில்வநாதன் மேலும் தொடர்ந்து சொன்னான்:

''பட்டரையா! வாழ்வில் பாபம் செய்யக் கூடாது என்று மனப் பூர்வமாக எண்ணி, ஓர் இலட்சிய வாழ்வை வாழ விரும்புகிறவனும் சில சமயங்களில் பாபம் செய்யும்படி நேர்ந்து விடுகிறது. சில சமயங்களில், தான் நேர்முகமாகச் சம்பந்தப்படாத போதிலும், தானே சில பாபங்களுக்குக் காரணமாகி விடுவதும் உண்டு. இதையெல்லாம் பார்க்கும் போது, ஊழ்வினை என்றும், விதி என்றும் சொல்வதில் எனக்கு அசைக்க முடியாத நம்பிக்கை உண்டாகிறது!'' என்றான் வில்வநாதன்.

இதுவரை மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்த கம்பர் துயரம் மேலிட்டவராக வில்வநாதனைப் பார்த்துப் பேச ஆரம்பித்தார்:

''தம்பி! பெரிய பெரிய தத்துவங்களையெல்லாம் பேச ஆரம்பித்து விட்டீர்களே! சிங்கம்புத்தூர் ஜமீந்தாரின் மகள் அவளுடைய அத்தானைக் கல்யாணம் செய்து கொள்வதற்கும், உங்களுடைய இந்தப் பாவ புண்ணிய ஆராய்ச்சிக்கும் என்ன சம்பந்தம்?''

இவ்வாறு கேட்டார் கம்பர். வில்வநாதன் சொல்லுவான்:

''கம்பரையா! சென்னைப்பட்டணத்திலிருந்து சிங்கம்புத்தூருக்கு ஏன் வந்தேன் என்று வருந்துகிறேன் இப்போது! நான் வந்தாலும், வந்திராவிட்டாலும் செல்வி பொன்னுத்துரையை மணப்பது என்பது உறுதிதான்! ஆனாலும் அந்தக் காட்சியை என்னுடையகண்ணால் பார்க்க வேண்டிய அவசியம் நேர்ந்திராதல்லவா? இப்போது இங்கே வந்திருப்பதால் தானே இப்படி ஒரு பாபம் நிகழ்வதை என் கண்ணால் பார்க்க வேண்டியதிருக்கிறது! அதனால்தான் நான் இத்தனை தூரம் வருந்துகிறேன். இந்தப் பாபம் நடப்பதற்கு நானும் காரணமாகி விட்டேனே என்று ஒரு பயங்கரமான எண்ணம் என் இதயத்தைத் துன்பப்படுத்துகிறது. அந்த எண்ணத்தை என்னால் தாங்கவே முடியவில்லை! எங்காவது இந்த வனாந்தரத்திலே தனியாக நடந்து சென்று, நதியையும், மரங்களையும், சிற்றருவிகளையும் பார்த்து என் துயரத்தையெல்லாம் அழுகையாக அழுது கொட்ட வேண்டும் என்று துடிக்கிறது உள்ளம்!''

இப்படிச் சொல்லும்போது வில்வநாதனின் கண்கள் கலங்கின. இதைக் கவனித்த கந்தரேசப்பட்டர் கம்பரைப் பார்த்துக் கூறினார்:

''கம்பரையா! வில்வநாதனுடைய மனத் துயரம் எனக்கு இப்பொழுது ஓரளவு புரிகிறது. நீங்கள் எழுந்திருங்கள். கலைஞர்கள் மனத் துன்பத்திலே சிக்கி விட்டால், அவர்களைத் தனியாக விட்டுவிட வேண்டும். பிறருடைய ஆறுதல்கள் அவர்களுக்குப் பயன்படுவதில்லை. தாங்களாகவே தங்களைத் தேற்றிக் கொண்டு, தாங்களாகவே ஆறுதல் அடைவதைத் தவிர வேறு வழி இல்லை.

துன்பத்திற்கு யாரே !
துணையாவார்! தாமுடைய
நெஞ்சம் துணையல்
வழி.

என்று வள்ளுவர் பெருமான் சொன்னதில் நுட்பமான மனத் தத்துவம்



பொதிந்திருக்கிறது. வில்வநாதனுடைய துன்பம் அத்தகைய துன்பம். தானே தனக்குத் துணையாக இருந்து அவனுடைய இதயமே ஆறுதல் அடைந்து கொள்ள வேண்டும். ஆகையால் அவனைத் தனிமையில் விட்டு விட்டுச் செல்வதே நமது கடமை. எழுந்திருங்கள்!''

பட்டர் இவ்வாறு சொல்லிக் கொண்டே அந்த இடத்திலிருந்து எழுந்தார். கம்பரும் அவரோடு புறப்பட்டார். அப்போது, கலங்கிய கண்களோடு நின்ற வில்வநாதனைப் பார்த்துக் கம்பர் சொன்னார்:

''தம்பி! சென்னைப் பட்டணத்திலிருந்து சிங்கம்புத்தூருக்கு ஏன் வந்தோம் என்று வருந்துகிறீர்கள்! நீங்கள் அப்படி வந்திரா விட்டால், 'இத்தனை



சென்னை நிதிமந்திரியின் அந்தரங்க உதவியாளர் திரு எம். மகாலிங்கம் அவர்களின் புதல்வர் திரு ராமனுக்கும் சௌ. ஜானகிக்கும் சிறப்பாகத் திருமணம் நடைபெற்றது.



பம்பாய் பர்மாஷெல்லைச் சேர்ந்த திரு ராஜன் அவர்களின் புதல்வி சௌ. பிரேமாவுக்கும் திரு ராஜுவுக்கும் பம்பாய் தமிழ்ச் சங்கத்தில் கல்யாணம் நடைபெற்றது.

அற்புதமான சித்திரங்கள் உருவாகியிருக்க முடியுமா என்று கேட்கிறேன். அது மட்டுமா? நீங்கள் செங்கம்புத்தூருக்கு வந்ததால்தானே, செண்பக சுந்தரி என்ற உயிர் ஓவியத்தை நீங்கள் சந்திக்க முடிந்தது! அவளைச் சந்தித்ததால்தானே, உங்களுடைய உள்ளத்தில் புதிய ஒளி பிறந்தது. அந்த ஒளி பிறந்ததால்தானே உங்களுடைய கலை வாழ்வின் உன்னத இலட்சியம் நிறைவேறியது! இதையெல்லாம் மறந்து விட்டு, நீங்கள் ஏதேதோ விசித்திரமான கவலைகளில் சிக்கித் தவிப்பது முறையில்லை. ஏதோ எனக்குத் தோன்றியதைச் சொன்னேன்—''

இப்படிச் சொல்லி விட்டு, எல்லையற்ற அனுதாபத்தோடு புறப்பட்டார் கம்பர். இருவரும் நடந்து செல்லும் போதே, சுந்தரேசப்பட்டர் கம்பரிடம் சொன்னார்.

''கம்பரையா! ஒரு வகையில் எனக்குத் திருப்தி என்னவென்றால், இந்தத் திருமணச் செய்தியை வில்வநாதனிடம் ஒரு வாரத்துக்கு முன்பே தெரிவிக்காமல், இந்தச் சித்திரப் பணி பூர்த்தியான பிறகு சொன்னோமே! அந்த வகையில் எனக்குப் பரம திருப்தி!''

''பட்டரையா! அப்படியானால் இந்தச் செய்தி இதற்கு முன்பு வில்வநாதனுக்குத் தெரிந்திருந்தால் என்ன ஆகியிருக்கும் என்கிறீர்கள்?''

''ஒன்றுமே ஆகியிருக்காது! அதாவது சித்திர வேலை ஒன்றுமே நடந்திருக்காது!'' என்றார் பட்டர்.

''அப்படியா?'' என்று ஆச்சரியத்தோடு கேட்டார் கம்பர்.


''ஆமாம். வில்வநாதனுடைய மனநிலை எனக்கு ஓரளவு புரிகிறது. தானே செல்வியை மணப்பதற்கு வேண்டிய எந்த விதமான நேசமும் வில்வநாதனுக்குச் செல்வியிடம் ஏற்பட வில்லை! அதே சமயம் செல்வியின் கலை உள்ளத்துக்கும் பண்புக்கும் பொருந்தாத ஒரு சம்பந்தம் அவளுக்கு ஏற்படுவதையும் வில்வநாதனால் தாங்க முடியவில்லை! இப்படி ஒரு பாசம்! இந்தப் பாசத்

சிவாஜி ஆசிரியர் திருலோக சீதாராம் அவர்களின் புதல்விசௌபாக்கியவதி வஸந்தாவுக்கும் திரு கிருஷ்ணமூர்த்திக்கும் வெகு விமரிசையாக விவாகம் நடந்தது.




சொக்கம்பட்டி கல்கி ஏஜண்ட் திரு சிவஞானத்துக்கும் சௌபாக்கியவதி கப்பு லக்ஷ்மிக்கும் விவாகம் வெகு சிறப்பாக நடந்தேறியது.





ராஜ்பவன் காம்ப்ட்ரோலர் திரு ஏ. ரங்கநாதன் அவர்களின் புதல்வி சௌ. கோமளவல்லிக்கும் திரு நாராயணனுக்கும் வெகு சிறப்பாகத் திருமணம் நடைபெற்றது.



இந்திய ரயில்வே நிதி ஆலோசகரும் பிரதம கணக்கு அதிகாரியுமான திரு கே. வி. கஸ்தூரி ரங்கன் அவர்களின் புதல்வி சௌ. கமலா திரு நரசிம்மனை மணந்து கொண்டார்.

துக்கு என்ன பெயர் சொல்லி அழைப்பது? இது காதல் இல்லை. வெறும் அன்பும் இல்லை. சாதாரண நேசமும் இல்லை இது! இந்தப் பாசத்துக்கு நிகண்டிலே என்ன வார்த்தை இருக்கிறது என்று எனக்குத் தெரியவில்லை கம்பரையா! அன்பு என்று ஒரு பொதுச் சொல் இருக்கிறது! அதற்குத்தான் எத்தனை எத்தனை விதமான பொருள் இருக்கிறது பார்த்தீர்களா? இதயத்தின் உணர்ச்சிகள் அந்தி வானத்திலே தோன்றுகிற ஆயிரம் ஆயிரம் வர்ணங்களைப் போல! அந்த வர்ணம் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு பெயர் சொல்வதற்கு மொழிகள் ஏது? சொல்லையும் பொருளையும் கடந்த ஒரு நுட்பம் அது! பாஷைகளின் வரம்புக்குள் அது அகப்படாது! அன்பின் பலப் பல வர்ணங்களும் அப்படித்தான்! உள்ளமும் உள்ளமும் சேர்ந்து உணர வேண்டிய ஒரு தத்துவம் அது!''

பட்டரின் பேச்சிலே கம்பரையா முழுதும் ஈடுபட்டவராக, அந்த வார்த்தைகளைக் கேட்டுக் கொண்டே ஆழ்ந்த யோசனை செய்தவாறு, நந்தவனத்திலே நடந்தார். திடீரென்று ஏதோ எண்ணியவர் போலச் சுந்தரேசப் பட்டரைப் பார்த்துக் கேட்டார்:


''அதெல்லாம் சரி, பட்டரையா! செண்பக சுந்தரியிடம் வில்வநாதனுக்கு ஏற்பட்டுள்ள அன்பைப் பற்றி என்ன சொல்லுகிறீர்கள் நீங்கள்? அதுவும் ஒரு புதிர்தானா?''

கம்பர் இப்படிக் கேட்டதும் சுந்தரேசப் பட்டர் புன்முறுவல் செய்தார். சொன்னார்:

''கம்பரையா! ஒரே மாதிரியான குணமும், ஒரே மாதிரியான பண்பும், ஒரே மாதிரியான எழிலும், ஒரே சூழ்நிலையும் அமைந்துள்ள ஓர் இளைஞனும் ஒரு நங்கையும், ஒருவரை யொருவர் வாழ்விலே சந்திக்கும் போது பாலும் பாலும் கலந்தது போல், தங்கமும் தங்கமும் உருகி இணைந்தது போல் இரண்டு இதயங்களும் ஒன்றாகி விடுகின்றன! செண்பக சுந்தரியும் வில்வநாதனும் சந்தித்தது இப்படிப்பட்ட இதய சங்க

சென்னை அட்வகேட் திரு. கே. வேணு கோபால அய்யங்கார் அவர்களின் குமாரர் திரு சீனிவாசனுக்கும் சௌ. ராஜலக்ஷ்மிக்கும் திருவல்லிக்கேணியில் விவாகம் நடந்தது.

திரு எஸ். என். சாஸ்திரி அவர்களின் புதல்வர் ராஜுவுக்கும், சௌபாக்கியவதி முத்துலக்ஷ்மிக்கும் சிக்கந்திராபாத்தில் விமரிசையாக விவாகம் நடைபெற்றது.





மம்! அதில் சந்தேகமில்லை. ஆனால் தாமரைச் செல்வியிடம் வில்வநாதனுக்கு ஏற்பட்டுள்ள அந்த விசித்திரமான, எல்லையற்ற, அந்தச் சொல்லற்ற ஒரு நேசம் இருக்கிறதே, அது இப்பொழுது என்ன விபரீதத்தைச் செய்யப் போகிறதோ என்றுதான் எனக்குப் பயமாக இருக்கிறது!'' என்றார் சுந்தரேசப்பட்டர்.

நடந்து சென்று கொண்டிருந்த கம்பர் அப்படியே நின்று விட்டார்.

''பட்டரையா! என்ன சொல்லுகிறீர்கள் நீங்கள்? விபரீதமான நிகழ்ச்சி ஏதோ நடக்கப் போகிறது என்று நீங்கள் எதிர்பார்க்கிறீர்களா?''

''ஆமாம். வில்வநாதனுடைய இதயப் பாங்கு அப்படி இருக்கிறது! தகுதியில்லாத இடத்துக்கு ஒரு பொருள் செல்வதை அவனால் தாங்க முடியவில்லை! எப்படி இருக்கிறது பாருங்கள் மனித மனத்தின் இயல்பு!''

இதைக் கேட்டதும் கம்பருக்குக் கண்கள் சிவந்தன!


''தகுதியாவது ஒன்றாவது! என்ன சொல்லுகிறீர்கள் நீங்கள்? பொன்னுத்துரையின் தகுதி அல்லது தகுதிக் குறைவை நிர்ணயிக்க வேண்டியது யார்? அவனை மணம் செய்யப் போகும் செல்வியா, அல்லது செண்பக சுந்தரியோடு கொஞ்சி மகிழ்கிற வில்வநாதனா?''

கம்பருக்குக் குரலிலே ஒரு கோபம் ஒலித்தது. பட்டர் சிரித்தார். சிரித்துக் கொண்டே சொன்னார்:

''கம்பரையா! நீங்கள் கேட்பது நியாயமான கேள்வி! பொன்னுத்துரையின் தன்மைகளை நிர்ணயம் செய்ய வேண்டியது செல்விதான்! சந்தேகமில்லை! ஆனால் அவளுடைய அந்தரங்கமான நிர்ணயம் என்ன, இதயத்தின் ஆழத்தில் செல்வி பொன்னுத்துரையைப் பற்றி என்ன மதிப்பீடு செய்து வைத்திருக்கிறாள் என்பது யாருக்குத் தெரியும்! உங்களுக்கும் எனக்கும் தெரியாது! வில்வநாதனுக்கு அது தெரியும்! அதனால்தான் அவன் இத்தனை துயரம் அடைகிறான்! அதனால்தான் சொல்லுகிறேன், இனி என்னென்ன விபரீதங்கள் நடக்கப் போகின்றனவோ, தெரியவில்லை!''

கம்பரும் சுந்தரேசப்பட்டரும் ஏக்கமும் கவலையும் நிரம்பியவர்களாக, ஒரே மௌனமாக நடந்து சென்றார்கள். ■

இருவரும் நந்தவனத்திலிருந்து சென்ற பிறகு, ஏகாந்தமான அந்தச் சத்திரத்தின் திண்ணையிலிருந்து, குமம்பிக் குமம்பிப் பெருகிய துயரத்தில் சிக்குண்டு, கண்ணீர் வடித்தான் வில்வநாதன்.



அவனுடைய இதயத்திலே இடம் தேடி நின்றாள் செல்வி! ஆனால் அவன் இதயத்திலோ? அந்த இதயத்தில் செண்பகசுந்தரிக்குத்தான் இடம் இருந்தது! என்றாலும் செல்விக்காக அவனுடைய இதயம் உருகியது! அவனுடைய உள்ளம் கண்ணீர் வடித்தது. அவனுக்கே புரியாத, அவனுடைய அறிவுக்கே புலனாகாத ஒரு சோகம் அவனைக் கவிந்தது. தாமரைச் செல்வி தனக்கு உரிய நாயகி இல்லை என்பது உண்மை. ஆனால் பொன்னுத்துரைக்கு உரியவளா அவள்? அவனால் அதை ஒப்புக் கொள்ள முடியவில்லை. கண்ணீர் வெள்ளமாகப் பெருகியது. உடம்பெல்லாம் அனலாகச் சுட்டது!

எத்தனை நேரம் அப்படி இருந்தானோ, அவனுக்கே ஓர்மை இல்லை! தானாகக் குமம்பிய உள்ளம், தானாகவே தவித்து ஓய்ந்து அடங்கிய தருணத்திலே, திடீரென்று அவனுக்கு நினைவு வந்தது. மாலை நேரம் ஆகிப் பல நாழிகைகள் ஓடிய பிறகும், செண்பகசுந்தரியைக் காணோமே!

இப்படி நினைவு வந்ததும், வில்வநாதன் சத்திரத்திலிருந்து எழுந்து வெளியே வந்தான். சுந்தரியை ஏன்



இன்னும் காணோம் என்று கவலை மேலிட்டவனாக, வனத்துக்குள்ளே நடந்து அங்கும் இங்கும் பார்த்தான் வில்வநாதன். மனித அரவமே யில்லாமல், ஒரே சூனியமாக இருந்தது அந்த வனம்!

சுந்தரி ஏன் வரவில்லை? இதற்குள் அவள் இங்கே வந்து எத்தனை நேரம் ஆகியிருக்க வேண்டும்! இன்று ஏன் அவள் வரவில்லை?

ஏற்கனவே குழப்பத்தினால் சோர்ந்திருந்த உள்ளத்திலே, இப்பொழுது ஒரு விபரீதமான அச்சம் புகுந்தது! பித்துப் பிடித்தவனைப் போல் ''சுந்தரி சுந்தரி'' என்று கூப்பிட்டான். அந்தக் காடும் மலைகளும் ''சுந்தரி சுந்தரி'' என்று எதிரொலி செய்தன! ஆனால் சுந்தரியைக் காணோம் !

ஏதோ ஒரு வெறி, ஒரு பயங்கரமான அச்சத்திலிருந்து தோன்றிய ஒரு விபரீதமான ஓட்டம். அதிலே நடந்தான், இல்லை, ஓடினான் வில்வநாதன்!

'சுந்தரியை ஏன் காணவில்லை? சுந்தரி எங்கே போனாள்? செண்பக சுந்தரிக்கு என்ன நேர்ந்தது?'—இப்படி நூறு நூறு

கேள்விகளைக் கேட்டுக் கொண்டே இதயம் 'படபட'வென்று அடித்தது. செண்பகவனத்திலிருந்து, வேகமும் ஓட்டமுமாக விறுவிறு என்று சென்ற வில்வநாதன், அந்தப் பைத்திய வெறியிலே மலைப் படிகளிலே இறங்கினான். அதே வெறியில், தெருக்களையெல்லாம் கடந்து சென்று, சுந்தரியின் வீட்டுக்குள்ளே நுழைந்தான் வில்வநாதன்!

தாழ்வாரம், கூடம், உள் அறை ஒவ்வொன்றாகத் தாண்டி நடந்தான் வில்வன். இதோ ஊஞ்சல் தொங்குகிறது. அதற்கு அருகிலே சுந்தரியின் தாயார், குமுதவல்லி, சாய்வுநாற்காலியில் சாய்ந்திருக்கிறாள்! மற்றப்படி மனிதச் சந்தடி இல்லை! வீட்டுக்குள் நுழைந்ததும் ஓடி வந்து தாவுமே ஜடை நாய்க் குட்டி, அது எங்கே? அதையும் காணோம்!

''அம்மா !'' என்று அழைத்துக் கொண்டே ஊஞ்சலிலே போய் உட்கார்ந்தான் வில்வநாதன்.

குமுதவல்லி திரும்பிப் பார்த்தாள். ஆனால் அவளுடைய முகத்திலே? அந்த முகத்தைப் பார்த்ததும் வில்வநாதனுக்கு உடம்பு படபடத்தது!

''அம்மா! சுந்தரி எங்கே? அவள் ஏன் இன்று நந்தவனத்துக்கு வரவில்லை?''

வார்த்தைகளை முழுதும் முடிக்கவில்லை வில்வநாதன். அவனை அப்படியே எரித்து விடுவது போலப் பார்த்துக் கொண்டே, குமுதவல்லி பற்களை 'நர நர' என்று கடித்தாள்.

''துரோகி! நயவஞ்சகத் துரோகி! ஒன்றுமே தெரியாதது போல் என்னிடம் வந்து கேட்கிறாயா? எங்கே என் மகள்? எங்கே கொண்டு போய் அவளை ஒளித்து வைத்திருக்கிறாய்? சொல்! போலீஸ்காரர்கள் இங்கே வருவதற்கு முன்பு சொல்லிவிடு! சொல்லி விடு! மரியாதையாகச் சொல்லி விடு!''

கடுமையான' சீற்றத்தோடு இவ்வாறு வார்த்தைகளைக் கொட்டினாள் குமுதவல்லி.

ஊஞ்சலில் உட்கார்ந்தவன், பதறிப் போய் அப்படியே எழுந்து நின்றான் வில்வநாதன்.

''எங்கே எழுந்திருக்கிறாய்! உட்கார் அந்த ஊஞ்சலில்! அந்த இடத்தை விட்டு நகர்ந்தாயானால், இப்போதே ஊர் கூடும்படி கூப்பாடு போட்டு விடுவேன். நான் கேட்கிற கேள்விக்குப் பதில் சொல்லாமல் அந்த ஊஞ்சலை விட்டு ஓர் அடிகூட நகரக்கூடாது நீ! ஆணை இட்டிருக்கிறேன்! சொல், சுந்தரி எங்கே?''

ஊஞ்சலில் மறுபடியும் உட்கார்ந்தான் வில்வநாதன். அவனுடைய கைகளும் கால்களும் பதறின. அந்தப் பதற்றத்திலே ஊஞ்சலின் பலகையும் சங்கிலிகளுங்கூட ஆடின! (தொடரும்)

# தமிழ் கூறும் நல்லுலகம்


பெங்களூர் மாதர் தமிழ்ச் சங்கத்தின் இரண்டாவது ஆண்டு விழா ஜூன் மாதம் பத்தாம் தேதி ஞாயிறன்று மாலை பலவன்குடியில் வெகு விமரிசையாக நடந்தேறியது. விழாவுக்குச் சென்னை அகில இந்திய ரேடியோ உதவிப் பிரதம தயாரிப்பாளர் திரு மீ. ப. சோமசுந்தரம் அவர்கள் தலைமை தாங்கி மாதர் தமிழ்ச் சங்கம் பணியாற்றும் வகையைப் பாராட்டிப் பேசினார். ஸ்ரீமதி பத்மா சீனிவாஸன் அவர்கள் வரவேற்புரை கூறிச் சங்கத்தின் நோக்கங்களை எடுத்துரைத்தார். ஸ்ரீமதி சௌரியா சந்திரசேகர சுவாமி சங்கத்தில் நடந்த கூட்டங்களின் அறிக்கையை வாசித்தார். மாதர் தமிழ்ச் சங்கம், பெங்களூரில் அரிய சேவை செய்து வரும் சேவாசிரமம் என்னும் சங்கத்துக்கும் அபலாசிரமம் என்னும் சங்கத்துக்கும் இரண்டு நன்கொடைகள் அளித்தது. தமிழ்ச் சங்கத்தின் அங்கத்தினருக்குப் போட்டிகளில் வெற்றி பெற்றதற்குப் பரிசுகள் அளிக்கப்பட்டன. இதன் பிறகு ரஸமான கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இவற்றில் ஒரு ஹாஸ்ய நாடகமும், ஆண்டாளின் திவ்ய சரித்திரத்திலிருந்து ஒரு காட்சியும், வண்ண நடனங்களும் இடம் பெற்றன. நன்றியுரையுடன் விழா இனிது முடிந்தது.

ஹௌராவிலுள்ள சென்னை ஐக்கிய பெண் பாடசாலையின் புதுமனை புகுவிழா ஜூன் பதின்மூன்றாந்தேதி காலை பள்ளி நிர்வாகத் தலைவர் திரு பி.என்.வி. ராமன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் ஹௌரா மாவட்ட கலெக்டர் திரு எம். என். சௌத்ரி, ஐ. ஏ. எஸ்., அவர்கள் கலந்து கொண்டு புது மனையையும் திறந்து வைத்தார். விழாவினை யொட்டி அழகிய மலர் ஒன்று வெளியிடப்பட்டது. காரியதரிசி திரு எம். ஜி. ஆர். ராவின் வந்தனோபசாரத்துடன் விழா முடிவடைந்தது.

நாஸிக் ரோட்டிலுள்ள கலைவாணி சங்கத்தின் ஆதரவில் ஜூன் மாதம் ஒன்பதாம் தேதியன்று குமாரி கிரிஜா, ஜெயா இவர்களின் நடன நிகழ்ச்சி திரு சேஷாத்திரி அவர்கள் தலைமையில் விமரிசையாக நடந்தேறியது. சங்கத் தலைவர் திரு வெ. ராம் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

பின் நடனமாடிய சிறுமிகளுக்கு வெள்ளித் தட்டு ஒன்று சங்கத்தின் சார்பாகக் கொடுக்கப்பட்டது.

# மிகச்சிறந்தது!




வீட்டிற்கும்
—ஹோட்டலுக்கும்

## ப்ரூக் பாண்ட்

# ஸ்பெஷல் ஹோட்டல் ப்ளெண்ட்

டஸ்ட் தேயிலையே

* எப்பொழுதுமே உங்களுக்கென்று புதியதாக தோட்டத்திலிருந்து வருகிறது.
* மிகத் திறமையுடன் கலவை செய்திருப்பதால் இனிமை மிக்க நறுமணம் கொடுக்கிறது.
* லட்சக் கணக்கான மக்கள் அருந்தி ஆனந்தம் அடைவது.

மூன்று அளவுகளில் கிடைக்கிறது
500 கிராம், 100 கிராம்,
50 கிராம்

JWT BB 307

# புதுவெள்ளம்

அத்தியாயம் ஆறு

## பழைய நண்பன்


அகிலன்

முருகையன் அமர்ந்திருந்த பாறையின் ஓரமாக ஓர் ஒற்றையடிப் பாதை மலைக்குள் சென்றது. யாரோ பத்துப் பதினைந்து சுரங்கத் தொழிலாளர்கள் ஒன்று கூடிப் பேசிக்கொண்டு அந்த வழியே வந்தார்கள். அந்தக் கூட்டத்தில் ஒருவனுடைய குரல் மட்டிலும் கணீரென்று ஒலித்தது. மற்றவர்கள் அவனைச் சூழ்ந்து கொண்டு, தாழ்ந்த குரல்களில் அவனிடம் பேசினார்கள்.

முருகையனின் கவனம் அந்த மனிதனிடம் சென்றது. மற்றவர்களை விட அவனுடைய நடையில் ஒரு மிடுக்கும் பார்வையில் செருக்கும் காணப்பட்டன. சற்று உயரமாகவும், வலிவும், வனப்பும் கொண்ட உடற்கட்டோடும் அவன் காட்சியளித்தான். வயது முப்பது இருக்கும்; முகத்தின் கீழ்ப் பகுதியை அடர்ந்த இளம் தாடி சூழ்ந்திருந்தது.

கூட்டத்தோடு சென்றவன் ஒரு கணம் பாறையருகில் நின்று தனது புருவங்களைச் சுருக்கியபடி முருகையனைக் கூர்ந்து கவனித்தான். பிறகு முன் போலவே பேசிக் கொண்டு கூட்டத்துடன் நடக்கலானான்.

முருகையனுடைய கண்களும் அதே கணத்தில் அவனுடைய கண்களைச் சந்தித்தன. எங்கோ, எப்போதோ அவனைப் பார்த்த நினைவு முருகையனுக்கு வந்தது.



ஆனால் எங்கு எப்போது என்று தெளிவு பிறக்கவில்லை. அவன் தன்னைப் பார்த்த விதத்திலிருந்து அவனுக்கும் இதே தடுமாற்றம் இருக்கக் கூடும் என்று ஊகித்தான் முருகையன்.

'நிமிர்ந்த உடல், மிடுக்கு நடை, கணீரென்ற பேச்சு, கூரிய விழிகள்... யார் இவன்?.... ஒரு வேளை, முகத்தில் மண்டிக் கிடக்கும் இளந் தாடி தான் இப்போது நினைவுக்குக் குறுக்கே நிற்கிறதோ...?'

கூட்டத்துடன் சென்றவன் சிறிது நேரத்துக் கெல்லாம் மற்றவர்களை எங்கோ அனுப்பிவிட்டு, தனியாக முருகையனிடம் திரும்பி வந்தான். எழுந்து நின்று வந்தவனை உற்றுப் பார்த்தான் முருகையன். எப்படி வரவேற்பதென்று அவனுக்குச் சிறிதும் புரியவில்லை.

"நான் யாரென்று தெரிகிறதா?"

"அதைத்தான் நினைவுபடுத்திப் பார்க்கிறேன்."

தாடியைத் தன்னுடைய இடது கரத்தால் மறைத்துக் கொண்டு, "மாடி வீட்டுத் தம்பி! இப்போதாவது என்னைத் தெரிகிறதா?" என்று கேட்டான் அவன்.

"யாரது. பெருமாள்சாமியா?" முருகையனின் முகத்தில் மகிழ்ச்சி நிலவியது.

"உஸ்!" என்று தன் உதட்டின் மீது விரல் வைத்து அவனை எச்சரிக்கை செய்து விட்டு, தன்னை யாரும் கவனித்துவிடப் போகிறார்கள் என்பது போல், சுற்றுமுற்றும் ஒரு முறை பார்த்துக் கொண்டான். "இப்போது என் பெயர் பெருமாள்சாமியில்லை; அவன் தலை மறைவாய்ப் போய்விட்டான்; அவன் தலையைக் கண்டுபிடித்தால் இப்போது சும்மா விடமாட்டார்கள்! என் பெயர் கன்னையன். நானும் ஒரு சுரங்கத் தொழிலாளிதான்...."

"வேறு யாருக்குமே தெரியாதா?"

"தெரியாது; தெரியவும் கூடாது. உன்னை மட்டும் நான் நம்புகிறேன். நீ நினைத்தால் இப்போதுகூட என்னைக் காட்டிக் கொடுத்து விடலாம்!"

"பெருமாள்சாமி! வெகுநாளைக்குப் பிறகு நாம் சந்திக்கிறோம். சந்திக்கும்போதே என்னிடம் இப்படிச் சந்தேகப்படுவதென்றால், என்னைச் சந்திக்காமலே இருந்திருக்கலாம்."

"நீ பழைய முருகையனே தான்; கொஞ்சம் கூட மாறாமல் அப்படியே இருக்கிறாய்" என்று அவனை அன்போடு கட்டிப் பிடித்துக் கொண்டான் பெருமாள்சாமி. "ஆனால், இனிமேல் மறந்து விட்டுக்கூட என்னைப் பெருமாள்சாமி என்று கூப்பிடவேண்டாம். கூடியவரையில் நான் கூட்டத்தில் இருக்கும்போது நீ என்னிடம் நெருங்கிப் பழகாமல் இருப்பது நம் இருவருக்குமே நல்லது. கன்னையன் என்ற பெயரை மனப்பாடம் செய்து கொள். இப்போது நான் சித்தூர் கன்னையா என்ற ஆந்திர நாட்டுக்காரன்! நன்றாகத் தெலுங்கு பேசுவேன்."

வியப்போடு நண்பனைக் கவனித்தான் முருகையன். அவனைப் பற்றிய முழு விவரங்களையும் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டுமென்ற ஆவல் எழுந்தது. அதைப் போலவே பெருமாள்சாமிக்கும் முருகையனுடைய இடைக்கால வாழ்வைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்ற ஆசை ஏற்பட்டது.

"என்னுடைய தோழர்களை அனுப்பி விட்டு உன்னிடம் தனித்துப் பேசுவதற்காகத் தான் வந்திருக்கிறேன்.



உனக்கு ஒன்றும் அவசரமில்லையே?"

'இல்லை' யென்று தலையசைத்தான் முருகையன்.

"அப்படியானால் வா, வேறு எங்கேயாவது மரத்தடிப் பக்கம் மறைவாகப் போவோம். என்னை யாரும் கவனிப்பதை நான் விரும்புவதில்லை."

பெருமாள்சாமியின் பேச்சும் நடவடிக்கையும் முருகை

யனின் மனத்தில் ஒருவிதப் பரபரப்பை ஏற்படுத்தின. பெரியபாளையத்திலிருந்தபோது அவன் எவ்வளவு துடிப்போடு காணப்பட்டானோ, அந்தத் துடிப்பு இன்னும் அவனை விட்டு அகலவில்லை.

''நாட்டுக்குச் சுதந்திரம் வந்தபிறகும் நீ எதற்காகத் தலைமறைவாக இருக்க வேண்டும்?'' என்று கேட்டான் முருகையன்.

''சுதந்திரம் கிடைத்துவிட்டதாக நான் இன்னும் நம்பவில்லை!'' என்றான் பெருமாள்சாமி.

பெருமாள்சாமியின் பதில் முருகையனைத் தூக்கிவாரிப் போடச் செய்தது. சுய நினைவோடுதான் பேசுகிறானா என்று ஒரு விநாடி சந்தேகப் பட்டான்.

''மனிதர்கள் மிருகங்களைவிடக் கேவலமாக இன்னும் நடத்தப்படுகிறார்கள். இந்த ஹைதராபாத் சமஸ்தானம் என்ன வருமானத்



தில் குறைந்த சமஸ்தானமா? இங்கே பெரும்பாலான ஏழை மக்கள் படுகிற பாட்டைப் பார்த்த பிறகும் நீ சுதந்திரம் வந்துவிட்டதென்று நம்புகிறாயா? உழவுத் தொழிலில் மாடுகளுக்காவது தீனி கிடைக்கிறது; ஆனால் மனிதர்களுக்கு அதுவும் கிடைப்பதில்லை. அந்தக் கொடுமையிலிருந்து விவசாயத்தை விட்டு விட்டு நிலக்கரிச் சுரங்கத்துக்கு ஓடி வருகிறார்கள். இங்கே மட்டும் என்ன வாழ்கிறதாம்...?''

தெலுங்கானா என்று சொல்லப்படும் அந்தக் காட்டுப் பகுதிகளில் நடைபெற்ற பயங்கரக் கலவரங்களைப் பற்றிப் பத்திரிகைகளில் படித்திருந்தான் முருகையன். அதைப் பற்றிப் பெருமாள்சாமியும் சில விவரங்களைக் கூறினான். நெடு நாள் பட்டினி, அடிமைத்தனம், சீரழிந்த வாழ்க்கை இவற்றின் சீற்றமே அப்படிக் கலவரமாக மூண்டதென்று அவன் வாதாடினான். அந்தக் கலவரங்களில் பெருமாள்சாமி நேரடியாகப் பங்கு கொண்டிருந்தானென்பது முருகையனுக்கு விளங்கியது.

''ஆயுதங்களை ஏந்திக் கொண்டு பலாத்காரத்தால் மனிதர்களைப் பணியவைத்து மாற்றங்கள் ஏற்படுத்துவதை நான் விரும்பவில்லை'' என்று கூறினான் முருகையன்.

''நீ இன்னும் அந்தக் காந்தியின் பாதையை விடவில்லை போலிருக்கிறது. அந்தக் காந்தியே ஓர் ஆயுதத்துக்குத்தான் பலியானார் தெரியுமா? அயோக்கியர்களிடம் ஆயுதங்களை ஒப்படைத்துவிட்டு, யோக்கியர்கள் அறிவுரை

நிகழ்த்திக் கொண்டிருந்தால் காலம் மாறி விடுமென்று நான் நம்பவில்லை.''

''பெருமாள்சாமி! எப்போது அணுகுண்டு யுகம் ஆரம்பமாகி விட்டதோ, அப்போதே ஆயுதங்களின் வலுவின்மை வெளிப்பட்டு விட்டது. இனியும் மனிதன் ஆயுதங்களை நம்பினால் அவன் தன்னையும் தன் இனத்தையும் அழித்துக் கொள்ள வேண்டியதுதான். காந்தியடிகளின் தத்துவத்துக்கு இனிமேல்தான் உலகத்தில் வேலை இருக்கிறது.''

''சரி, நாம் நம்முடைய முதற் சந்திப்பிலேயே வேற்றுமைகளைப் பற்றிப்பேசிக் கொள்ள வேண்டாம்'' என்றான் பெருமாள்சாமி. அத்துடன் அவன் நிறுத்தவில்லை. ''இந்த நிலக்கரிச் சுரங்கம் இருக்கிறதே, இதன் சரித்திரம் உனக்குத் தெரியுமா?'' என்று கேட்டான்.

''தெரியாது.''

''சுமார் ஐம்பது அறுபது வருஷ காலமாக இதன் பலன்களையெல்லாம் வெள்ளைக்காரர்களே அனுபவித்து வருகிறார்கள். ஒரு டன் நிலக்கரிக்கு எட்டணாவோ ஒரு ரூபாயோ தருவதாக ஹைதராபாத் மன்னருடன் ஒப்பந்தம் செய்து கொண்டு, இந்த நாட்டு மக்களைக் கசக்கிப் பிழிந்து வேலையும் வாங்கிக் கொண்டு, அரசாங்கத்தின் செல்லப் பிள்ளைகளாக இருந்து எல்லா வசதிகளையும் அனுபவித்துக் கொண்டு, நிலக்கரியை இந்த நாட்டிலேயே பொன்னாக மாற்றித் தங்கள் நாட்டுக்கு அனுப்புகிறார்கள். நம் நாட்டுப் புதையலை நம்மவர்களை விட்டே தோண்டச் செய்து, எல்லாவற்றையும் அங்கு கொண்டு போய்க் குவிக்கிறார்கள்.''

''விடுதலை கிடைத்த பிறகுமா இப்படி நடக்கிறது?''

''ஆமாம், சமஸ்தான மன்னருடன் சமரசம் செய்து கொண்டு, சமஸ்தானத்து மக்களை அணு அணுவாய் உறிஞ்சி வருகிறார்கள். இங்கே உள்ள பெரிய உத்தியோகஸ்தர்கள் எல்லாம் வெள்ளைக்காரர்கள். தொழில் நுணுக்கத் தலைவர்களும் அவர்கள். விடுதலை கிடைத்து விட்டதாய்ச் சொல்கிறோமே, இங்குள்ள பல்லாயிரம் சுரங்கத் தொழிலாளர்களின் குடிசைகளை நீ பார்த்திருக்கிறாயா?''

முருகையன் பெருமாள்சாமியின் பேச்சை அப்படியே முழுதும் நம்பிவிட வில்லை. காற்றோட்டமுள்ள பல பெரிய சிறிய வீடுகளை அவன் அந்த நகரத்தில் கண்டிருக்கிறான்.

''நீ என்னை நம்பவில்லை முருகையா. இந்த ஊருக்கு வெளியில் காட்டுக்குள் உள்ள நூற்றுக்கணக்கான குடிசைகளில் புழுக்களைப் போல் துடிக்கும் மனிதர்களை யெல்லாம் நீ இனிமேல்தான் சந்திக்கப் போகிறாய்......''

''உனக்கு இங்கே என்ன வேலை?''

''கரி வெட்டும் சாதாரணத் தொழிலாளி. தொழிலாளர்களின் தலைவனாக அவர்களே என்னைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள்.''

முருகையன் மகிழ்ச்சியடைந்தான். ஆனால் அதே சமயம் அவனால் இடுக்கிடாமலும் இருக்க முடியவில்லை.

அத்தியாயம் ஏழு

# குடும்பத் தலைவியின் குரல்

அலுவலகத்திலிருந்து வீட்டுக்குத் திரும்பிய சுந்தரம் கையோடு கொண்டு வந்த ஒரு தமிழ் வாரப் பத்திரிகையைப் பிரித்து மீனாட்சியிடம் நீட்டினான். மீனாட்சிக்குப் பத்திரிகையில் வெளிவந்திருந்த படத்தையும் அதன் கீழிருந்த செய்தியையும் படித்தவுடன் பற்றிக் கொண்டு வந்தது. ''அக்கிரமம்! அக்கிரமம்! இப்படிக் கூட உலகத்தில் நடக்குமா என்ன?'' என்று பதறினாள்.

''இந்த உலகத்தில் இதைவிட எவ்வளவோ நடக்கத்தான் செய்கிறது. இது ஒன்றும் அக்கிரமம் இல்லை. வாழத் தெரியாத பிள்ளையாக இருந்து வருகிற சித்ராவை உதறித் தள்ளி விட்டான் முருகையன். அந்தப் பெண்ணின் கழுத்தில் எவ்வளவு நகை போட்டிருக்கிறான் பார்த்தாயா? அவ்வளவு நகையும் நம்முடைய முருகையனுக்குச் சேர்ந்திருக்க வேண்டிய சொத்து..... நல்ல சந்தர்ப்பத்தை இழந்து விட்டான் அவன்.''

கணவனுக்கும் மனைவிக்கும் இது பற்றிக் கடுமையான வாக்குவாதம் நடக்கத் தொடங்கியது. சித்ராவுக்கும் செல்வரத்தினத்துக்கும் நடைபெற்ற திருமணத்தை வைத்துக் கொண்டு அவர்கள் ஒருவரையொருவர் சொல்லால் தாக்கிக் கொண்டனர். இப்படி ஏதாவது விஷயங்கள் கிடைத்து ஒருவரிடம் ஒருவர் வாய்ச் சண்டை போட்டுக் கொள்ளாவிட்டால் அவர்களுக்குப் பொழுது போவதில்லை. சண்டை முற்றி மீனாட்சிக்கு உண்மையிலேயே ஆத்திரம் வந்து விடும் என்று தெரிந்தால், சுந்தரம் மிகவும் சாதுவாகப் பேசிச் சரணாகதி அடைந்து விடுவான்;

அவனுடைய வெற்றியின் ரகசியம் அங்கேதான் இருந்தது.

''ஒரு ஆண் பிள்ளையைக் கொண்டு போய் இவ்வளவு நாட்கள் வீட்டுக்கு மாப்பிள்ளையாய் வைத்திருந்து விட்டு, கடைசியில் இப்படியா கைகழுவி விடுவார்கள்....?''

''இருக்கிறபடி இருந்தால் ஏன் விடுகிறார்கள்? உன்னிடம் நான் நடந்து கொள்ளுகிறபடி அவனும் அடங்கி ஒடுங்கி நடந்து கொள்ளப் பழகியிருக்க வேண்டும்? ஒன்றும் காசு பணம் இல்லாத உன்னிடமே நான் பயப்படுகிறேனென்றால், ஒரு லட்சாதிபதியின் வீட்டுப் பெண்ணிடம் அவன் முறைத்துக் கொள்ளலாமோ!... அவள் போட்டிருக்கிற வைர நகைகளைத் துடைத்துப் பெட்டியில் வைத்துக் கொண்டிருந்தால் போதுமே. இப்போது சுரங்கத்துக்குள் போய் நிலக்கரியோடு கிடந்து போராட வேண்டாம், பார்!''

சுந்தரம் சித்திராவின் கட்சியை வேண்டுமென்றே பேசினான். பாதியளவுக்கு அவனுக்கு அதில் நம்பிக்கை இருந்தது. பணத்தின் நெருக்கடியை அடிக்கடி அவன் உணர்ந்தவனாதலால், அந்த ஒரு நெருக்கடியிலிருந்து மனிதன் தப்பிக் கொண்டால் போதும் என்பது அவன் வாதம்.

ஆனால் மீனாட்சியோ சித்திராவை நேருக்கு நேர் கண்டவள் போலவும் அவளிடம் பழகியவள் போலவும் குறை கூறத் தொடங்கினாள். பணம் அதிகமாய்ப் போனால் மனிதர்களின் மனமே மாறிப் போகிறதென்றும், அவளை முருகையன் மணந்து கொள்ளாமல் தப்பிக் கொண்டது அவனுடைய அதிர்ஷ்டம் என்றும் கூறினாள்.

''திடீரென்று ஒரு நாள் காரில் வந்து தம்பியைத் தன் வீட்டுக்கு அழைத்துக் கொண்டு போனாளாமே, அப்படியெல்லாம் விரும்பி அழைத்துக் கொண்டு போனவள் இப்போது எப்படி மனம் துணிந்து மற்றொருவனுக்குக் கழுத்தை நீட்டினாள்? எப்படிப் படம் எடுத்துப் பத்திரிகையில் போட்டுக் கொள்ளச் சம்மதித்தாள்? கல்யாணத்தின் சீர் சிறப்பை இங்கே வர்ணித்திருப்பதை நீங்கள் படித்தீர்களா?''

''காரில் வந்து அழைத்துக் கொண்டு போனதெல்லாம் உனக்கு எப்படித் தெரியும் மீனாட்சி?''

''ஏன் தெரியாது? எல்லா விவரங்களையும் சாந்தா முன்பே என்னிடம் சொல்லி விட்டாள். இவளைப் பற்றிச் சாந்தா ஒன்றும் குறை சொல்லவில்லையென்றாலும், சித்திராவுக்கும் இந்தத்



தகப்பனார்: ஏண்டா! நான் ரயிலை விட்டுக் கீழே இப்பத்தான் இறங்கினேன். உடனேவா என்னை வந்து பணம் கேட்கணும்? நாலு மணி நேரம் கழித்துக் கேட்கக் கூடாது?

மகன்: ரயில்தான் நான்கு மணி நேரம் லேட்டாச்சேப்பா!

தம்பிக்கும் கலியாணம் நடந்தால் அது எப்படி முடியுமோ என்ற பயம் மட்டும் அவளுக்கு இருந்தது. பெண்களைப்பற்றி உங்களுக்கு என்ன தெரியும்? ஒருத்தி பார்க்கிற பார்வையில், பேசுகிற பேச்சில், நடக்கிற நடையில் நாங்கள் அவளை எடை போட்டு விடுவோம்!''

''வேண்டாம், தாயே! இவ்வளவு ஆராய்ச்சித் திறமையெல்லாம் எனக்கு வேண்டவே வேண்டாம். அப்புறம் உன்னைப் பற்றி ஆராய்ந்து கொண்டிருக்கவே எனக்கு நேரம் போதாது.''

அவ்வளவுதான்! அழுகையும் ஆத்திரமும் வந்து விட்டன மீனாட்சிக்கு.

''என்ன சொன்னீர்கள்? என்னையே ஆராய்ந்து பார்ப்பீர்களா?'' என்று கத்தினாள். ''ஆராய்ந்தால் என்ன கண்டு பிடிப்பீர்கள்? உங்களுக்கும் உங்கள் குழந்தைகளுக்கும் நாளெல்லாம் உழைத்து ஓடாய்ப் போன ஒரு ஜீவனற்ற உயிரைக் கண்டுபிடிப்பீர்கள்? துன்பத்துக்கு மேல் துன்பம் வந்தபோதெல்லாம் அதை உங்களிடம் காட்டிக் கொள்ளாமல், தனிமையில் அழுது அழுது ஓய்ந்த ஒருத்தியைக்காண்பீர்கள். பசி, பட்டினி, நோய் இவ்வளவுக்கும் ஈடு கொடுத்துக் கொண்டு, உங்கள் மனம் கோணாமல் நடக்கத் துடித்த ஓர் அப்பாவியைப் பார்ப்பீர்கள். வாய்ப்



''எதற்காக நம்ப எஜமானரை மாரில் கை வைத்து டாக்டர் தட்டிப் பார்க்கிறார்? ரொம்பப் பெரிய வியாதியா ஏதாவது இருக்குமோ?''

''இல்லே, இல்லே! மனுஷன் கல்லுளை உள்ளவர்தானா என்று தட்டிப் பார்க்கிறார்!''

பேச்சில் தோற்றுப்போவதாய்ச் சொல்லி என்னை ஏமாற்றி விட்டு, காரியத்தில் எப்போதும் வெற்றி கொள்ளுகிற நீங்கள் என்னிடம் என்ன குறையைக் கண்டு பிடிப்பீர்கள்? சொல்லுங்கள், பார்க்கலாம்!''

''பார்த்தாயா! பார்த்தாயா! நீயே என்னை வீண் வம்புக்கு இழுத்து விட்டு, ஒரு வார்த்தை பதில் சொன்னதற்கு இப்படிப் போட்டு வாட்டுகிறாயே, இது நியாயமா?''

''பேசக் கூடிய வார்த்தையையா நீங்கள் பேசினீர்கள்?''

''கடவுளே! உனக்கு இந்த வாயை மட்டும் கடவுள் கொடுக்காமலிருந்தால் உனக்கு ஒரு கோயில் கட்டி வைத்துக் கும்பிடுவேன்.''

''இந்த வாய் ஒன்று இருப்பதால் தான் இன்னும் இந்த வீட்டில் உங்கள் பிள்ளைகளுக்குத் தாயாக இருக்க முடிகிறது. இல்லாவிட்டால் எப்போதோ என் உயிரை எடுத்திருப்பீர்கள்!''

கணவனும் மனைவியும் சண்டை போட்டுக் கொண்டிருந்ததால், வீட்டுக்குள் நுழைந்த முருகையன் ஒருகணம் அப்படியே தயங்கி நின்றான். பத்திரிகையில் பெரிய படமாக வந்திருந்ததால் அது பளிச்சென்று அவன் கண்களில் பட்டது. கூர்ந்து கவனித்தான்.

முருகையனைக் கண்டு விட்ட மீனாட்சி வெட்கத்தோடு வாயை மூடிக் கொண்டு அங்கிருந்து நழுவப் பார்த்தாள்.

''வா, முருகையா! எல்லாம் உன்னால்தான் இந்தச் சண்டையே ஆரம்பமாகியது. சித்திராவுக்குக் கல்யாணமாகி விட்டது. தெரியுமா?''

பத்திரிகையை எடுத்து நீட்டினான் சுந்தரம். முருகையன் அதை வாங்கிப் பார்த்தான்; படித்தான்; நீண்ட பெருமூச்சு விட்டான்.

''தூக்கி எறியச் சொல்லுங்கள், அதை!'' என்று திரும்பவும் வந்து குரல் கொடுத்தாள் மீனாட்சி. ''பெண்ணுனை பெண்ணைக் கையில் வைத்துக் கொண்டு எதற்காக நாம் நடந்து போன விஷயத்துக்கு வருத்தப்பட வேண்டும்?''

''பெண்ணா?'' என்று வியப்புடன் கேட்டான் சுந்தரம்.

''தெரியாதது போல் கேட்கிறீர்களே? நன்றாக நினைத்துப் பாருங்கள். நம்மிடமே அருமையான பெண் இருக்கிறது. தம்பிக்கு வேலையும் நிச்சயமாகி மாதா மாதம் சம்பளம் வருகிற காலம் வந்து விட்டால் நாமே முன்னாலிருந்து கலியாணத்தை முடித்து வைத்து விடலாம்'' என்றாள் மீனாட்சி.

''யாரைச் சொல்கிறாய் மீனாட்சி?''

முருகையனுக்கு அழுவதா சிரிப்பதா என்று தோன்றவில்லை. சித்திராவின் திருமணப் படத்தைப் பார்த்த அதிர்ச்சியிலிருந்து அவன் மீள்வதற்குள் அவர்கள் இருவரும் தங்களுக்குள் பேசி முடிவுகட்டத் தொடங்கி விட்டார்கள். முருகையனைப் பற்றி மீனாட்சியும் பொருட்படுத்தவில்லை; சுந்தரமும் நினைத்துப் பார்க்கவில்லை.

''வேறு யார்? உங்கள் தங்கை சாந்தா இருக்கும்போது நாம் எங்கேயாவது போய்ப் பெண் பார்க்க வேண்டுமா என்ன?''

மீனாட்சியின் பேச்சு சுந்தரத்தைச் சிரிக்க வைத்தது.

''ஆமாம், சாந்தாவின் எண்ணத்தைக் கேட்க வேண்டாமா? சாந்தாவின் தாயார் என்ன சொல்கிறார்கள் என்று தெரிந்துகொள்ளவேண்டாமா?''

''கல்யாணம் என்றால், நாளைக்கே அவசரமாக நடக்க வேண்டும் என்பதில்லையே! பெண்ணும் பிள்ளையும் முன்பின் பழகாதவர்கள் அல்ல; பட்டணத்தில் ஒரே வீட்டில் குடியிருந்தவர்கள்; இப்போதுகூட இங்கே நெருங்கிப் பழகத்தான் போகிறார்கள். எல்லாம் மங்களகரமாக நடக்கத்தான் போகிறது'' என்றாள் மீனாட்சி.

''கேட்டாயா, முருகையா?'' என்று அவன் பக்கமாகத் திரும்பினான் சுந்தரம்.

முருகையனின் முகத்தில் எவ்விதமான உணர்ச்சியுமே தென்படவில்லை. அவன் மௌனமாகத் தலையைக் கவிழ்த்துக் கொண்டிருந்தான். (தொடரும்)



**அவளைக் காணோம்!**

தூணோடு தூணாய்த் தூணைக் கட்டியபடி அவள் சூரியின் வருகைக்காக வாசலே கதியென்று பழியாகக் கிடப்பாள் தினமும் திண்ணையில். அந்தத் திண்ணை இன்று காலியாக இருந்தது!

அவளைக் காணாதது சூரிக்குப் பெரும் ஏமாற்றமாயிருந்தது. சொல்லி வைத்த மாதிரி அவள் தன் அலங்காரத்தை முடித்துக் கொண்டு ஐந்தே கால் மணிக்கெல்லாம் திண்ணையிலுள்ள தூணைக் கட்டிக் கொண்டு தெரு முனையைப் பார்த்தபடி சூரிக்காகக் காத்திருப்பாள். பாவாடை தாவணி அணியும் பருவம்தான் அவளிடமிருந்து விடைபெற்றுக் கொண்டிருந்ததே தவிர அந்த உடைகளுக்கு இன்னும் அவள் விடுதலையளிக்கவில்லை. தெரு முழுதும் அவளது கடைக்கண் பார்வைக்காகக் காத்துக் கிடக்கும். அவளுடைய முழுப்பார்வை மட்டுமல்ல, அவளுடைய மோகனப் புன்னகையும் சூரி ஒருவனுக்குத்தான் சொந்தம்!

சூரி ஆபீஸ் முடிந்ததும் சைக்கிளில் பறந்து கொண்டு வருவான். எட்டரை மணி நேரமாக அவளைப் பார்க்காது பூத்துப் போய் விட்ட கண்களுக்கு அவளைக் கண்டதும் அருமையான விருந்து கிடைக்கும். தெரு முனையில் சைக்கிளில் திரும்பிச் சூரி 'பெல்' அடிக்க சத்தம் கேட்டதுமே அவளுடைய முகம் மலர்ந்து விடும். பஸ்ஸைக் கண்டுவிட்ட சென்னை நகர வாசியைப் போல் மகிழ்ச்சி கொண்டு அவனையே இமைக்காது பார்த்துப் புன்முறுவல் பூத்தபடி நிற்பாள் அவள். எவ்வளவு மெதுவாக வர முடியுமோ அவ்வளவு மெதுவாக வந்து சூரி அவளது புன்னகையை ஏற்றுத் தானும் பதிலளிப்பான்!

இன்று அவளை ஏனோ காணோம்! அவளில்லாததால் திண்ணையும் தூணும் தெருவும் அழகு குன்றி விட்டது போலிருந்தது சூரிக்கு. கண்களை நன்கு இறந்து அவள் வேறெங்காவது தென்படுகிறாளா என்று பார்த்தான் அவன். அவள் இருக்கிற சுவடே தெரியவில்லை. சினிமாவுக்கோ, கோவிலுக்கோ அவள் போயிருக்கலாமோ என்று எண்ணினான் சூரி. எங்காவது போவதானால் சூரியிடம் நயன பாஷையில் கூறி விட்டே அவள் செல்வாள். சூரியும் ஒன்றும் தெரியாத அப்பாவிப் பிள்ளையைப் போல் அவள் போகிற இடத்துக்கெல்லாம் போய் வருவான். பிடிக்காத சினிமாவானாலும் 'கோட்டு, கோட்'டென்று உட்கார்ந்து விட்டு வருவான். அம்பாள் சந்நிதியில் பெண்கள் வரிசையில் நிற்கும் அவளை அருகில் கண்குளிரத் தரிசனம் செய்வதற்காகப் பட்டை பட்டையாய் விபூதி பூசிக் கொண்டு அம்பாளை

வேரோடு பிடுங்காத குறையாய்ப் பக்தி வெள்ளத்தில் மூழ்கி நிற்பாள்.

இன்று அவளைக் காணோம்!

தன் அறைக் கதவைத் திறந்து சைக்கிளை உள்ளே தள்ளினான் ஸூரி. வெறுப்பு வெறுப்பாக வந்தது அவனுக்கு. எதையோ பறி கொடுத்து விட்டது போன்ற தவிப்பு உண்டாயிற்று அவனுக்கு. சட்டை, பாண்டைக் கழற்றி எறிய வேண்டும் என்கிற நினைப்பு கூட உண்டாகவில்லை. அவளைப் பார்த்தால் தான் தன்னால் எதுவும் செய்ய முடியும் என்று தோன்றியது ஸூரிக்கு. ஜன்னல் கதவைத் திறக்கப் போனான்.

அந்த ஜன்னலுக்கு எதிரே உள்ள தன் வீட்டு ஜன்னலில் தான் அவள், ஸூரி வந்ததும் வந்து உட்கார்ந்து கொள்வாள். பெயருக்குக் கையில் ஏதோ ஒரு புஸ்தகம் இருந்தாலும் அவளது பார்வையெல்லாம் ஸூரியின் மீதே பதிந்திருக்கும். எப்போதும் மலர்ந்திருக்கும் எழில் வதனம் அவளுடையது. சிரிக்கும் பொழுது அவளது கன்னத்தில் குழி விழும். விழிகள் பேசும்.

ஸூரி கதவைத் திறந்தான்.

அங்கே–

ஆஜானுபாகுவாய், கம்பீரமாய்ப் பரந்த மார்பும் படபடக்கும் மீசையுமாய் ஜன்னல் முழுவதையும் அடைத்துக் கொண்டு நின்று கொண்டிருந்தார் சப்-இன்ஸ்பெக்டர் சதானந்தம்.

அவனுடைய ஆசைக் காதலியின் அப்பா அல்லவா அவர்? அவர் ஏன் அந்த ஜன்னலில் தன்னைத் தனித்துக்கொண்டு நிற்கிறார்? அவர் வீட்டு ஜன்னலில் அவர் நிற்கிறார். நிற்கட்டும்! பேஷாக நிற்கட்டும்! அவர் ஏன் தன்னை அப்படி வைத்த கண் எடுக்காது பார்க்கிறார் என்பது புரியவில்லை ஸூரிக்கு! அவர் பார்வை அவனைச் சுட்டெரித்தது!

ஸூரி பிடி சாம்பலாகாத குறைதான். அவரது பார்வையைக் கண்டு அவன் உடம்பு 'வெட, வெட' வென நடுங்கியது. ஜன்னலிலிருந்து விலகிக் கொண்டான். அவன் மார்பு 'படபட'வென்று அடித்துக் கொண்டது. தன் பலஹீனத்தைத் தானே உணரக் கூடாது என்று ஏதோ ஒரு பாட்டைத் தனக்குத்தானே முணுமுணுத்துக் கொண்டான் அவன். நாக்கு தான் மேலண்ணத்தில் ஒட்டிக் கொண்டதே தவிரக் குரல் எழும்பவில்லை.


பத்து நிமிடங்கள் கழித்து மீண்டும் ஜன்னல் வழியாகப் பார்த்த பொழுது குற்றுயிராகி விட்டான் அவன்.

சப் - இன்ஸ்பெக்டர் சதானந்தம் இப்பொழுது ஜன்னலை அடைத்துக் கொண்டு நிற்கவில்லை. ஜன்னலருகே ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டு அதன் கைப்பிடி மீது உட்கார்ந்து திருடன் ஒருவனைப் பார்ப்பது போல் அவனைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

ஸூரிக்கு அன்றிரவில் ஜுரம் கண்டது. அவளைக் காணததற்கும், அவளிருக்க வேண்டிய இடத்தில் அவனுடைய அப்பா இருப்பதையும் மூடி போட்டுப் பார்த்தான் அவன். அவர்களுடைய காதல் விவகாரம் முற்றிப் போய் வீட்டிலுள்ளவர்களுக்கெல்லாம் தெரிந்து விட்டதா? தெரிந்திருந்தால் வீட்டினுள்ளேயே பெண்ணை அடக்கி வைத்து விட்டு அவனுடைய நடவடிக்கைகளைக் கவனிக்கிறாரா? போலீஸ் இலாகாவைச் சேர்ந்தவராயிற்றே! வழக்கைப் பதிவு செய்யப் புலன் விசாரணை நடத்துகிறாரா?

அன்றும் சரி, மறுநாளும் சரி ஸூரிக்குச் சோறு தண்ணீகூடப் பிடிக்கவில்லை. அவன் எவ்வளவு முறை முயன்றும் அவளைக் காண முடியவில்லை. அவளுடைய அழகிய உருவம் அவன் மனக் கண் முன் வந்து அவனை அலைக்கழித்தது. ஆபீஸிலும் வேலை ஓடவில்லை. அறையிலும் அவனால் தங்க முடியவில்லை. அவள் வீட்டில் இருப்பதின் அடையாளமாகப் பாடுகிற அவள் குரலை அவனால் கேட்க முடிந்தது. அவள் வீட்டினுள் நடமாடுகிறாள் என்பதைக் கொலுசின் நாதம் ஒலிபரப்பிக் கொண்டிருந்தது. ஆனாலும் ஸூரியால் அவளைப் பார்க்கவே முடியவில்லை.

ஸூரி ஜன்னல் வழியாக, வாசல் வழியாக, எல்லாம் அவள் கண்ணில் படுகிறாளா என்று பார்க்கும் பொழுதெல்லாம் அவனுக்கு அதிர்ச்சிக்கு மேல் அதிர்ச்சி தருகிறவர்களாகப் பெண்ணைப் பெற்றவரோ அல்லது பெற்றவளோ, உடன்பிறந்தவனோ வாசலில் நின்று அவனைப் பார்ப்பார்கள்.




ஜெ. வேங்கடராமன்

அவன் அவர்களைப் பார்க்கிறான் என்பது தெரிந்ததும் தங்கள் பார்வையை வேறு பக்கம் திருப்பிக் கொண்டு விடுவார்கள்.

வீடு முழுதும் தன்னைக் கண்காணிக்கிறது என்பது புரிந்து விட்டது சூரிக்கு. அமைதியான இந்தப் புலன் விசாரணையும் கண்காணிப்பும் அவனுக்கு என்ன தண்டனையை வழங்கப் போகின்றனவோ?

* * *

சூரி அன்று ஆபீசுக்குப் புறப்பட்டுப் பாதி வழி வந்து கொண்டிருந்தபோது இன்ஸ்பெக்டர் சதானந்தம் ஹெட்கான்ஸ்டபிள் ஒருவரிடம் தன்னைச் சுட்டிக்காட்டி ஏதோ பேசிக் கொண்டிருப்பதைக் கண்டான். தன் காதல் விவகாரம் போலீஸ் விவகாரமாக உருவெடுக்கிறதோ என்ற பயம் அவனைப் பற்றிக் கொண்டது. நேரடியாக அவனைக் கண்டிக்கவோ, பயமுறுத்தவோ முயலாமல் வீணாகத் தம் பெண்ணின் பெயர் வெளியில் விளம்பரமாகி அவளுடைய எதிர்கால வாழ்வு இருட்டடித்து விடுமே என்ற அச்சத்தில் தான் தன்னை ஏதாவது வழக்கில் இழுத்து விட ஹெட்கான்ஸ்டபிளிடம் கூறுகிறாரோ என்று எண்ணினதும் சூரிக்குக் காக்காய் வலிப்பு வரவில்லை. ஆனாலும் கையும் காலும் இழுத்துக் கொண்டு போயின.

அன்றே தன் அறையைக் காலி செய்து விட வேண்டுமென்று நினைத்தான் சூரி. அப்படி நினைத்ததுமே அழுகை அழுகையாய் வந்தது. அவளை எப்படிப் பிரிந்து செல்வது? அவள்—அவள்தான், அந்தப் பானு—அவனைக் காணவிட்டால் துடிதுடித்துப் போய்விட மாட்டாளா?

சூரியால் எந்த முடிவுக்கும் வர இயலவில்லை. போலீஸ், கோர்ட், சிறை என்றுகூட எண்ணி விட்டான் அவன். பானு மாதிரியான பெண் ஏழேழு ஜென்மம் எடுத்தாலும் கிடைக்க மாட்டாளே! இனி என்றும் இனி அவள். இனிகூட அவளைப் போல் அவ்வளவு அழகாக இருக்குமோ என்னவோ! அப்படி ஓர் அழகு! அவளைப் பிரிவதா? அவளைப் பிரிந்து வாழ்வதை விட உயிரை விட்டு விடலாமே!

ஆபீஸில் கையும் கருத்தும் ஓடாமல் பிடித்த பேனா கையில் அப்படியே இருக்க விரித்துப் போடப்பட்ட லெட்ஜர் அப்படியே மேஜை மீது கிடக்கச் சிலையாகிச் சூரி உட்கார்ந்திருந்தான்.

திடீரென்று அவனுடைய கவனத்தைக் கவர்ந்தது ஒரு தொப்பி.

* * *

அன்று சப்-இன்ஸ்பெக்டர் சதானந்தம், தன்னைக் காட்டி ஒரு ஹெட்கான்ஸ்டபிளிடம் பேசிக் கொண்டிருந்தாரே, அந்த ஹெட்கான்ஸ்டபிள் அல்லவா வந்திருப்பது? ஹெட்கிளார்க் அருகில் உட்கார்ந்து அவர் காதில் 'குசுகுசு' என்று பேசிக் கொண்டிருக்கிறாரே! தன் வேலையைத் தீர்த்துக் கட்டித் தான் நடுத்தெருவில் நாயாய்த் திரிய 'பிளான்' போட்டு சப் இன்ஸ்பெக்டர் சதானந்தம் ஹெட் கான்ஸ்டபிளை ஹெட் கிளார்க்கிடம் அனுப்பியிருக்கிறாரா?

அரை மணி நேரத்துக்கு மேலேயே இருக்கும். ஹெட் கான்ஸ்டபிளும் ஹெட் கிளார்க்கும் ஒருவர் காதை ஒருவர் கடித்துக் கொள்வதும் அடிக்கொரு தடவை சூரியைப் பார்ப்பதுமாக இருந்தார்கள். சூரிக்குப் பிராணன் போய்ப் போய் வந்து கொண்டிருந்தது. ஒரு பெண்ணை அழகும் போதின் அடிப்படையில் பெண்ணைக் காதலித்தால் அதற்கு வேலையை வேட்டு வைக்கும் தண்டனையா? 'ஐயோ பானு, அழகி பானு, கன்னி வயிற்றில் பிறந்து விட்ட கற்கண்டு பானு, நீ ஏன் ஒரு சப்-இன்ஸ்பெக்டரின் பெண்ணாகப் பிறந்தாய்? ஒரு சமையல்காரரின், அல்லது ஏழை எலிமெண்டரிப் பள்ளி வாத்தியாரின் எட்டாவது பெண்ணாக நீ பிறந்திருக்கக் கூடாதா? மேள தாளத்துடன் நம் கல்யாணம் 'ஜாம், ஜாம்' என்று நடக்குமே!'

நல்ல நாளிலேயே ஹெட் கிளார்க்குக்கும் சூரிக்கும் ஆகாது. கீரியும் பாம்பும்தான் இருவரும். ஆபீஸாக இருக்கப் போய் நாகரிகமாக மனத்துக்குள்ளேயே கறுவிக் கொண்டிருப்பார்கள். மேலதிகாரிகளுக்குச் சூரியைப் பற்றி ஏதாவது 'ரிமார்க்' எழுதித் தம் வெறுப்பைக் காட்டிக் கொள்ளும் அந்த ஹெட் கிளார்க் போலீஸ் வந்து விசாரணை செய்தால் சும்மா இருப்பாரா? தனக்குக் குழி வெட்டிவிட மாட்டாரா குழி!

ஏட்டு போனதும் ஹெட் கிளார்க் என்றுமில்லாத அதிசயமாய்ச் சூரியைப் பார்த்தும் பார்க்காமலும் சிரித்தார். அது விஷமச் சிரிப்பா, விஷயச் சிரிப்பா என்று சூரி தன் மூளையை எவ்வளவு குழப்பிக் கொண்டும் அவனுக்குப் பிடிபடவில்லை.

போலீஸ் வந்து ஹெட் கிளார்க்கிடம் சூரியைப் பற்றி விசாரித்த விஷயம் ஒரு விநாடியில் ஆபீஸ் முழுவதும் காட்டுத் தீ போல் பரவி விட்டது. மத்தியான டிபனுக்குச் சூரியின் மணிபர்ஸையே நாடி நடந்து கொண்டிருக்கும் சாம்பார் சந்தான கிருஷ்ணனிலிருந்து பியூன் அப்துல் காதர் வரை எல்லோருமே அவனைக் கண்டதும் துஷ்டனைக் கண்டதும் தூர விலகு என்ற மாதிரி பத்தடி தள்ளியே நடந்தார்கள். சூரி தானே அவர்களிடம் வலியப் பேசச் சென்றால் அப்பொழுதுதான் ஏதோ போகிற அவசரம் மாதிரி கையில் கிடைத்த 'பைலை' எடுத்துக் கொண்டு நழுவினார்கள். எல்லோருமே சூரியை ஒதுக்கி விட்டனர். ஒரு தரம் 'ஓ'வென்று அழ வேண்டும் போலிருந்தது அவனுக்கு.

காதலுக்கு ஒரு கும்பிடு போட்டு விட்டு வங்காளக் குடாக்கடலில் அதற்கு ஒரு முழுக்குப் போட்டு விட்டுத் தான் உண்டு தன் காரியம் உண்டு என்றிருந்தால் தான் நிம்மதி உண்டாகும் போலிருந்தது அவனுக்கு.

அன்றிரவு நேரங்கழித்தே தன் அறைக்குத் திரும்பினான் சூரி. வழக்கமாக அவன் 'பெல்' அடிப்பது போல் இப்போது அடிக்கவில்லை. எதிலும் சுரத்தில்லாமல் அவன் வந்து அறை வாசலில் இறங்கிய பொழுது —

அவள் — பானு — தாரோடு தானுயக் கிளி கொஞ்சும் அழகோடு பொற்சிலையாய் நின்று கொண்டிருந்ததைப் பார்த்தான் சூரி.

• போன உயிர் திரும்பி வந்தது சூரிக்கு. புதையல் கிடைத்து விட்ட சந்தோஷம்

உண்டாயிற்று. அவனுக்கு இந்த அழகோவியத்தை மறந்து காதலுக்கு ஒரு கும்பிடு போட்ட கையோடு, வங்காளக் குடா கடலில் ஒரு முழுக்கும் போடவா? என்ன பைத்தியக்காரத் தனம்!

சூரி அவளைப் பார்த்துச் சிரித்தான்!

'விருட்'டென்று அவள் உள்ளே போய் விட்டாள்!

உலகமே 'சர்'ரென்று அவன் கால்களுக்குக் கீழே சறுக்கி விட்டது போல் நிலைகலங்கி நின்றான் சூரி. அவன் 'உள்ளே போ, உள்ளே போ' என்று எத்தனை முறை கைகளையும் கண்களையும் காட்டி ஜாடை செய்து பேசினாலும் உள்ளே போகாமல் மணிக்கணக்காக அவனைப் பார்த்துச் சிரித்தபடியே நிற்பவள் இன்று அவனைக் காணவும் பிடிக்காமல் வீட்டினுள் ஓடிப் போய் விட்டாளே!

துக்கம் துக்கமாக வந்தது சூரிக்கு. உலகம் அவனுக்கு ஒரு கணத்தில் வெறுத்து விட்டது. பெற்றோர்களது அதட்டலுக்கும் மிரட்டலுக்கும் பயந்த பானு பொன்னுவை காதலைக் கைவிட்டு விட்டாளா? அவளே அவனைக் காணவும் பிடிக்காது முகத்தைத் திருப்பிக் கொண்டு போய் விட்ட பிறகு ஒரு கணம் தங்கலாமா?

சாமான்களை மூட்டை கட்டினான் சூரி. ஒரு பெட்டி, ஒரு படுக்கை, இரண்டு பைகள் தேறின. நண்பன் பாபுவின் அறையில் போய் நான்கு நாட்கள் ஒண்டிக் கொள்வது. அதற்குள் பெண்ணே இல்லாத எந்தக் காட்டிலாவது ஓர் அறை பார்த்துக் கொண்டு போய் விடுவது என்பது அவனுடைய திட்டம்!

டாக்ஸி கொண்டு வர அவன் புறப்பட்ட பொழுது வெளியேயிருந்து 'ஸார்!' என்று குரல் கேட்டது.

ஹெட் கான்ஸ்டபிள் தான் ஒரு கையில் வாரண்டும், இன்னொரு கையில் விலங்குமாய் வந்திருக்கிறார் என்று எண்ணிக் கொண்டு வெளியில் வந்தான் சூரி.

ஹெட் கான்ஸ்டபிள் இல்லை வந்தவர்! சப் - இன்ஸ்பெக்டர் சதானந்தமே நின்று கொண்டிருந்தார்! அவர் கைகளைப் பார்த்தான் சூரி. நல்ல வேளை, வாரண்டோ, விலங்கோ இல்லை. சாதாரண உடையில் வேஷ்டியும் சட்டையுமாக வந்திருந்தார்.

''குட் ஈவினிங் சார்!'' என்றார் அவர்.

ஈனஸ்வரத்தில் நாக்குழற எதையோ சொல்லி வைத்தான் சூரி.

''உங்களிடம் தனித்துக் கொஞ்சம் பேச வேண்டும்! உள்ளே உட்கார்ந்து பேசலாமா?'' என்று கேட்டார் அவர்.

''உம்'' என்றான் சூரி இயந்திரமாய்.

உள்ளே வந்தார் சதானந்தம். பெட்டியும் வைக்கப்பட்டிருக்கும் பைகளும் அவர் பார்வையில் பட்டன.

''அறையைக் காலிசெய்கிறீர்களா என்ன?'' என்று கேட்டார் அவர்.

''ஆமாம்!''

''ஏன் சார்?''

'உம் பெண்ணுக்கு என்னைப் பிடிக்கவில்லை. எனக்கு இங்கே இருக்கப் பிடிக்கவில்லை' என்ற பதில் சூரியின் நாக்கு நுனி வரையில் வந்து விட்டது. அதை அவரிடம் கூறலாமா? நாக்கைப் பற்களால் கடித்துக் கொண்டு மௌனம் சாதித்தான்.

''நீங்கள் ரொம்பவும் பயந்துவிட்டீர்கள்!'' என்றார் அவர்.

''நானா? சேச்சே! எனக்குப் பயமா? நான் ஏன் பயப்பட வேண்டும்? திருடினேனா, கொலை செய்தேனா? கொள்ளையடித்தேனா?'' என்று தைரியத்தை வரவழைத்துக் கொண்டு கேட்டான் சூரி. மனிதர் வாரண்டும் விலங்குமாக வரவில்லை அல்லவா?

''இதெல்லாம் செய்தால்தான் பயப்பட வேண்டுமென்பதில்லை சார்! காதல் என்றால் எவ்வளவுக் கெவ்வளவு சந்தோஷப்படுகிறோமோ அவ்வளவுக் கவ்வளவு போலீஸ் என்றால் பயப்படுகிறோம் இல்லையா சார்?'' என்று கேட்டார் அவர்.

வெளித் தோற்றத்தைப் போல் மனிதர் மன விஷயத்தில் பயங்கரமானவரில்லை என்பது பேச்சில் தெரிந்ததும் மூச்சு வந்தது சூரிக்கு!

''நான் காதலின் அருமையையும் பெருமையையும் தெரிந்தவன் சார்! நான் காதல் கல்யாணம் செய்து கொள்ளவில்லை. காதலித்த பெண்ணைக் கல்யாணம் செய்து கொள்ள முடியாது போய் மனம் முறிந்து போனவன் சார். என்னைப் போன்ற துர்ப்பாக்கியசாலிகள் இந்த உலகிலிருக்கக் கூடாது என்பதற்காக ஒன்றுபட்ட நெஞ்சங்களை ஊரறிய ஒன்று சேர்ப்பதில் ஆசை உள்ளவன் சார்! என் நெஞ்சம் காதல் நெஞ்சம் சார், கல் நெஞ்சமில்லை!'' என்றார் அவர். அப்படிச் சொல்லும் பொழுது அவருடைய குரல் தழுதழுத்தது. கண்களில் பனித்த நீரைத் துண்டால் துடைத்துக் கொண்டார்.

''என் பெண் பானு உங்களை விரும்புவதும், நீங்கள் அவளை விரும்புவதும் தெரிந்ததும் உங்களுக்குக் குறுக்கே நிற்க நான் விரும்பவில்லை சார். முறைப்படி மணம் செய்து கொடுப்பது தானே சமூகத்தில் கௌரவமாக வாழ்கிற என்னைப் போன்றவர்களுக்கு நல்லது. திருமணம் ஆவதற்கு முன்பு விபரீதமாக ஏதாவது நடந்து விட்டால் நாலு பேர்கள் நாலு விதமாகப் பேச நாம் இடம் கொடுப்பது தவறல்லவா? அதனால் என் பெண்ணுக்குச் சில கட்டுப்பாடுகள் விதித்து அவளை உங்கள் பார்வையிலிருந்து மறைத்து விட்டேன். கிணற்று நீரை வெள்ளமா கொண்டு போய் விடப் போகிறது? அவளிடமும் இதையே சொல்லி வைத்திருக்கிறேன். பானுவுக்கு உங்களைப் பிடித்ததை விட எங்கள் வீட்டில் அனைவருக்கும் உங்களை ரொம்பவும் பிடித்து விட்டது. மாப்பிள்ளையைப் பார்த்துப் பார்த்து மகிழ்கிறார்கள். ஹெட் கான்ஸ்டபிள் உங்கள் ஆபீசுக்கு வந்து ஒருவருக்கு நாலு பேரிடம் விசாரித்து உங்களைப் பற்றி நல்ல அபிப்பிராயமே சொல்லியிருக்கிறார். இனி நான் உங்கள் தந்தைக்கு என் பெண்ணை உங்களுக்குக் கொடுப்பதைப் பற்றி எழுதப் போவதில் உங்களுக்கு ஆட்சேபனை ஒன்றும் கிடையாதே?'' என்று கேட்டபடி எழுந்தார் சதானந்தம்.

''ஆட்சேபனையா? எனக்கா ஹி...ஹி?..'' என்று முப்பத்திரண்டு பற்களும் தெரிய அசட்டுச் சிரிப்பு சிரித்தான் சூரி.


மதுரை அருகில் வைகை நதியின்
மேலுள்ள கான்க்ரீட் பாலம்
ஏ சி சி & சங்கர் பிராண்டு சிமிண்டுகள் சுபிட்சமான இந்தியாவை
உருவாக்க உதவுகின்றன
மணிமுத்தாறு அணை, கல்லிடைக்குறிச்சி
தண்ணீர் டவர்
ACC
Symbols of top quality cement
தி சிமிண்ட் மார்க்கெடிங்
கம்பெனி ஆப் இந்தியா லிட்.,
தி அஸோஸியேடெட் சிமிண்ட்
கம்பெனீஸ் லிட்.,
தி இந்தியா சிமிண்ட்ஸ் லிமிடெட்
ACC-698 A TAM EVEREST

# காதலுக்கு நாணயம் தேவை!

**உமாகாந்தன்**

அவனும் அவளும் பாதாளத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தார்கள்.

"மாலதி!"


தியாகுவின் குரலில் உணர்ச்சிக் கொப்புளங்கள் குமிழியிட்டன.

"சொல்லுங்கள்!"

முகமூடியின் அடியிலிருந்து அவள் குரல் உறையிடப்பட்ட வீணையின் தந்தியைச் சுண்டினாற்போல் எழும்பியது.

"நான் தெரியாத்தனமாக உன் அப்பாவிடம் மாட்டிக் கொண்டுவிட்டேன்!"

"ஷ்! மூச்! போய் விடப் போகிறது!... அப்பா.... அதோ!"



"எதோ?"

"திரும்பி வருகிறார்! டார்ச்சை ஆட்டியபடியே."

"போச்சு...... போச்சு!"

"என்னது?"

"என் மூச்சு!"

அவள் தந்தை வந்து கொண்டிருந்தார்.

"மிஸ்டர் தியாகராஜன்!"

சாஸ்திரியின் குரல் கோடை இடி போல் முழங்கியது.

"எஸ் ஸார்!"

"இன்று ஏதாவது உருப்படியாக வேலை செய்துமுக்கியமாக எதையாவது கண்டு பிடித்தாக வேண்டும்!"

தொண்டையிலிருந்து அடிவயிற்றுக்கு ஏதோ ஊர்ந்து செல்வது போல் இருந்தது தியாகுவுக்கு.

டார்ச்சும் கையுமாக அவரைப் பின் தொடர்ந்தான். மாலதியின் முகத்தைப் பார்க்க முடியாமல் திண்டாடினான். முகத்தைத்தான் முகமூடியால் மறைத்துக் கொண்டிருந்தான். போகட்டும்! தன் உள்ளத்தையாவது அவள் திறந்து காட்டக் கூடாதா? சுரங்கப் பாதையின் திருப்பத்துக்கு அவர்கள் நடந்து வந்த போது மாலதியின் இரண்டு பின்னல்களையும் ஒன்றாகப் பிடித்து இழுத்தான். அவன் கை விரல்களை அவள் வெடுக்கென்று கிள்ளுகையில் படுபாவி மனுஷர் சாஸ்திரி அவர்களை நோக்கித் திரும்பினார். நல்ல வேளை! அவர் கையிலிருந்த டார்ச்சின் ஒளி அந்தச் சமயம் அவர்கள் மீது பாயவில்லை! வேறு எங்கோ ஒரு மூலையில் டார்ச்சின் கிரணங்கள் விழ, அதைத் தொடர்ந்து அவரது குரல் பாறையடியில் வைக்கப்பட்ட வெடிகுண்டாக முழங்கியது.

"தியாகராஜன்! அந்த இடத்தைக் கொஞ்சம் கவனித்துக்கொள்ளுங்கள்! நமது முயற்சிக்கு ஆதரவாக ஏதாவது அங்கு கிடைக்கும்."

திடீரென்று மாலதி 'ஸ்...ஆ' என்றதும் அவள் அடி முதுகில் மென்மையான இடத்தில் வருடிக் கொண்டே, "எஸ்...ஸார்!" என்றான் பதற்றம் மேலோங்கிய குரலில்.

மறுகணம் விசிலை எடுத்து அழுத்தி ஊதினான். உடனே அவனை நோக்கி ஒரு கூலிப் பட்டாளம் ஓடி வந்தது.

"ம்! சீக்கிரம் இந்த இடத்தில் நன்றாகத் தோண்ட வேண்டும்" என்று தியாகு சாஸ்திரியின் காதுகளுக்கு எட்டும்படியாகக் கூவினான்.

டார்ச் ஒளி டைனமோ விளக்குகள் எல்லாம் சேர்ந்து, அந்த இருள் சூழ்ந்த நில அமைவை ஒரு கல்யாண மண்டபமாக்கின.

குடைவு வேலையில் மும்முரமாக இறங்கினார்கள் கூலிகள்.

திரும்பிப் பார்த்தான் தியாகு. மாலதியைக் காணவில்லை! அவள் தந்தையையும் தான்! அவள் இதயத்தில் புதைந்த காதலையும் தோண்டித்தான் எடுக்க வேண்டுமோ?

அகழ்வின் மேடு பள்ளங்களில் தட்டுத் தடுமாறிக் கொண்டு நடந்து செல்லும், எங்கும் ஒரே மழை பெய்வது போலிருந்தது. மாலதியின் மனமும் இப்படித்தான் குகை போல் இருக்குமோ?

சற்றுத் தொலைவில் ஓர் உருவம் தரையில் படுத்திருந்ததைக் கண்டதும் 'பக்'கென்றது தியாகுவுக்கு. அதன் மீது டார்ச்சை உபயோகித்துப் பார்க்கையில் தியாகுவுக்கு அந்தச் சுரங்கமே தன் மீது சரிந்து விழுந்து மூடுவது போன்ற பிரமை ஏற்பட்டது. அவன் காதல் சுரங்கம் மாலதிதான் அங்கு மயக்கமாகப் படுத்திருந்தாள். சாஸ்திரி? அவரைக் காணவில்லை! மனுஷர் மகளைவிட முக்கியமாக மண்ணைக் குடையும் வேலையில்லவா மண்டையைப் போட்டு (அதை ஒரேயடியாகப் போட்டால்தான் தேவலையே!) அல்லும் பகலும் குடைந்து கொண்டிருக்கிறார்!



தியாகு அவள் அருகில் மண்டியிட்டு, "மாலதி....மாலதி...." என்று அவளைப் பிடித்து இடித்த அப்பளத்து மாவைப் புரட்டுவது போல் புரட்டினான். அவளும் அதைப் போலத்தான் ஆடாமல், அசையாமல் இருந்தாள். தியாகுவுக்குத் திடீர் என்று ஒரு 'ஐடியா' தவம் ஏற்பட்டது. பைக்குள் கையை விட்டு எதையோ எடுத்தான். அவள் முகமூடியை விலக்கித் தனது கைவிரலிலிருந்த சிமிட்டாவை அவள் நாசித் துவாரத்தினருகே கொண்டு போனான். சற்றைக்கெல்லாம் மாலதி தெளிந்து கொடுத்தாள். புதை பொருள் ஆராய்ச்சியில் வெற்றி கண்டவனைப் போல் தியாகுவின் முகத்தில் சந்தோஷம் இழையோடிற்று.

"என் அன்பே! ஏன் இப்படிப் பாராமுகமாக இருக்கிறாய்?" என்று கொஞ்சாமல் கெஞ்சினான் அவன்.

மாலதி கண்களை மலர்த்தி இதழ்களில் புன்னகை விரிய, "என் அசோக சக்கரவர்த்திக்கு எப்போது பார்த்தாலும் குழி தோண்டும் பிழைப்புத்தானா? அப்பாதான் வீட்டுக்குப் போய்விட்டாரே! இது தெரிய வேண்டாம்?" என்றாள் குழைவும், மகிழ்வும் சேர்ந்து கூவி அழைவது போன்ற குரலில்.

"என்னை மன்னித்து விடு, மாலதி!"

தியாகு சாந்தமாகக் குழைந்தான்.

"அப்பா கண்டிப்பாகச் சொல்லி விட்டுப் போய் விட்டார்!"

"என்னவென்று?"

"இன்னும் ஒரு வாரத்துக்குள் நீங்கள் பாடுபட்டு ஏதாவது உபயோகமான ஆதாயத்தைத் தேடித் தராவிட்டால், உங்களை வீட்டுக்கு அனுப்பி விடப் போகிறோம்!"

"ஐயையோ! நம்ம காதல்....?"

"கல்ல வேண்டியதுதான் மண்ணை!"

"பார்த்தாயா....பார்த்தாயா ... மாலதி! மாலதி.... என்னைப் பார்த்தால் உனக்குப் பாவமாக இல்லையா? ஐயோ! நீ இல்லாமல் நான் எப்படி, எங்கு, வாழ்வேன்?"

தியாகு பரிதவித்தான். பதறினான். மாலதியின் புடவைத் தலைப்பால் தன் கண்களில் கரை கட்டிய நீரை ஒற்றி எடுத்தான்.

"எனக்கு ஒரு வழி சொல், மாலதி."


கெஞ்சினான் தியாகு.

"சொல்லட்டுமா?"

"சொல்லு, மாலதி சொல்லு! இல்லே.... என்னைக் கொல்லு! ஐயோ.... சொல்லேன்!"

மாலதி அவன் காதருகில் தன் ரோஜா மொட்டு இதழ்களைக் குவித்துக் கொண்டே, "நம்முடைய காதலைத் தியாகம் செய்து விடுங்கள்" என்றாள்.

அவனது உள்ளம் கையைப் பிடித்துத் தன் நெற்றியில் ஓங்கி அடித்துக் கொண்டே, "ஹும்! அந்த தொண்டி ஜோசியருக்கு ஒருகாலும் உடன்பட மாட்டேன். காதலியே 'டைவர்ஸ்'



டன்னுலும் அளவுக்கு நாம் முன்னேறவில்லை. இது தேக காதல் அல்ல! தூய காதல்!'' என்று கூறினன்.

மாலதி எழுந்திருந்து கொண்டே, ''அப்பா இன்னும் பத்து நாட்களில் இந்தப் பாட்ன நகரத்தை விட்டுப் புறப்பட்டு விடுவார்! அதற்குள் மௌரிய சாம்ராஜ்யத்தின் மங்காத சின்னங்களான அந்தப் பழங்காலத்து நாண யங்களை எப்படியாவது நீங்கள் கண்டுபிடித் துத் தாருக வேண்டும்! அப்பாவுக்கு அபார நம்பிக்கை, அந்த அநாதி காலத்து நாணயங்கள் இங்குதான் கிடைக்கும் என்று. ஆகவே கொஞ்சம்கூட அதிக சிரமத்தைப் பார்க்காமல், கூலி ஆட்களுடன் வேலை செய்து புதைந்திருக்கும் அந்த அசோகர் காலத்து நாணயங்களைத் தேடிக் கண்டுபிடியுங்கள்.''

மாலதியின் உபதேசம் அவன் இதயத்தில் 'அமித(மான) தாரை' (உருக்கி) வார்த்தாற் போல் இருந்தது.

''என்னுல் இயன்றவரை முயன்று பார்க் கிறேன் மாலதி! பிந்துசாரனும், சந்திரகுப்த னும், அசோகனும் நம்மைக் கைவிட மாட்டார்கள் என்றே நம்புகிறேன்.'' இபாகு வின் வாயிலிருந்து வேண்டா வெறுப்பாக வார்த்தைகள் வெடித்தன. மாலதி அவனிட மிருந்து விடைபெற்றுக்கொண்டு சென்றுள்.

இபாகு கூலி ஆட்களை விரட்டி வேலை வாங்குவதில் முனைந்து, குடைந்த மண்ணைக் களைந்து களைந்து புதை பொருள் ஆராய்ச்சி யின் புண்ணிய கைங்கரியத்தில் முழு மனத் தோடு ஈடுபடத் தொடங்கினுன்.

சாஸ்திரி ஒரு பிரபல புதை பொருள் ஆராய்ச்சியாளர். குப்த, மௌரிய, முகலாய வம்சத்துப் புராதன கல்வெட்டுக்களையும் அணி ஆபரணங்களையும், நாணயங்களையும் தோண்டிக் கண்டுபிடித்து, ஆராய்ந்து தமது ஆராய்ச்சியின் பலன்களை அவ்வப்போது அரசாங்கத்துக்கும் மற்றும் பிரபல பத்திரிகை களுக்கும் ஆராய்ச்சியின் குறிப்புக்களை அறிக் கைகள் மூலம் அவர் வெளியிடுவதற்குத் தக்க துணையாக நின்று இரவு பகல் என்று பாரா மல் உதவி புரிந்து வந்தாள் அவரது ஒரே பெண் மாலதி.


இபாகு ஒரு சரித்திர ஆராய்ச்சி மாணவன். பம்பாயில் ஒரு ரிசர்ச்-இன்ஸ்டிடியூட்டில் சேர்ந்து கொண்டு தனது வாழ்நாள் முழுவதையும் சரித்திர ஆராய்ச்சிக்கே அர்ப்பணிப்பது என்று உறுதி கொண்டிருந்தான். புதை பொருள் ஆராய்ச்சியாளர் சாஸ்திரியின் அறிக்கைகளை யும், சாதனைகளையும் அவ்வப்போது பத்தி ரிகைகள் வாயிலாகப் படித்தறிந்ததும் அவ னுக்குச் சாஸ்திரி பக்தி பிறந்தது. உடனே தனது படிப்பைத் தாற்காலிகமாக நிறுத்தி விட்டுச் சாஸ்திரியிடம் சரண் புகுந்தான். அவர் தம் பணியில் அவனது சிரத்தையைக் கண்டு வியந்து, மகிழ்ந்து அவனை ஆட்கொண் டார். அவருடன் முழு மூச்சுடன் அவன் ஆராய்ச்சியில் இறங்குகையில், மாலதியின் மாதவத்தால் அவன் நெஞ்சில் காதல் வித் திட்டது. மாலதியைக் கண்ட மாத்திரத்தில் அவன் அழகைப் பற்றிய ஆராய்ச்சியில் முழு மூச்சாக ஈடுபட்டான். முடிவு? அவன் காதல் வளர்ந்தது. அவனை முதலில் ஆகர்ஷித்த ஆராய்ச்சி புதைந்தது! சாஸ்திரியின் நம் பிக்கையும் புதைந்தது. அந்தப் புதையலே பகையாக மாறுவதற்குள் வகையாக ஏதாவது கண்டுபிடித்தாக வேண்டும் என்ற எண்ணமே இபாகுவின் சிந்தையில் மேலோங்கி நின்றது. அதன் விளைவு? காதலை ஒரு கணம் மறந்து, புதை பொருள் ஆராய்ச்சியில் முழு மூச்சுடன் இறங்கிறுன்.

பதினைந்து நாட்கள் கழிந்தன.

அன்று மாலை.

மாலதி சோபாவில் சோகத்தின் உருவாய்ச் சயனித்துக் கொண்டிருந்தாள். இபாகுவின் மீது அவள் தந்தைக்கு இருந்த கொஞ்ச நஞ்ச மதிப்பும் அவனது அசிரத்தையில் பாழாய் நைந்து போனதே அவளது மன வேதனைக்குக் காரணமாகும்.

''அவன் ஒன்றுக்கும் பிரயோசனம் இல்லை, அம்மா! நான் என்னவெல்லாமோ அவனைப் பற்றி உயர்வாக எண்ணிக் கொண்டிருந்தேன். என் புதைபொருள் ஆராய்ச்சியையே அவன் குழி தோண்டிப் புதைத்து விடுவான் போல் இருக்கிறதே! அவனுக்கும் நமக்கும் இனி சரிப்பட்டு வராது. நாளையிலிருந்து அவனை விலக்கிவிட உத்தேசித்திருக்கிறேன்'' என்று


ஜூன் 29 முதல்
சித்ரா
புவனேஸ்வரி
நாகர்ஜுனன்
மாடர்ன்
தியேட்டர்ஸ்
கவிதா
முரசொலி மாறன் M.A.
கண்ணதாசன்-மருதகாசி
K.V. மகாதேவன்
MOULIS

காலையில் சாப்பிடும்போது சாஸ்திரி கண்டிப்பாகக் கூறி விட்டார். அப்பாவின் பிடிவாதத்துக்கு எத்தகைய சக்தி உண்டு என்பதை அவள் நன்கு அறிவாள்.

மாலதியின் மனத்தில் அவன் எதிர்காலத்தைப் பற்றிய பல்வேறு ஆசைக் கனவுகள் சிறைப்பட்டுச் சிதைந்து போயின.

இரவு எட்டு மணி யிருக்கும்.

ஸ்பிரிங் கட்டிலில் போடப்பட்டிருந்த உயர்ந்த ரக வெல்வெட் மெத்தை மீது ஒருக்களித்துப்படுத்திருந்தாள் மாலதி. நாவற்பழம் போன்று ஒளிச்சாறு வழிந்த விழிகளில் உள்ளத்தின் கொந்தளிப்பும் ஆவியாக எழும்பிக் கண்ணீராகக் கட்டி நின்றது.

வாசலில் ஸ்கூட்டர் படபடத்தது.

தியாகுதான்! கடைசி முறையாக அவளைக் காண வந்திருக்கிறானோ?

"மாலதி!"

அவன் குரலில் ஏக்கம் இடறிற்று. நாற்காலியை அவள் அருகில் இழுத்துப் போட்டு அமருகையில் அவனுக்கு ஏனோ தொண்டைக் குழாயில் மூச்சு தடைப்பட்டது. மனச் சுமையை உடனடியாக இறக்கிவிட எண்ணினான் அவன்.

"உங்களைப் போய் நான் மலையாக நம்பினேனே. நீங்கள் வெறும் சுயநலக்காரர்! காதலிக்க மட்டும் தெரிந்தால் போதுமா? அந்தக் காதல் கைகூடுவதற்கு வேண்டிய முயற்சிகளை யெல்லாம் எடுக்க உங்களுக்குத் துப்பில்லையா?"

அவன் ஏதோ பேச வாயெடுத்தான்.

சாஸ்திரியின் கார் வாசலில் வந்து நின்றது.

"அ....ப்....பா...!" என்று அவள் வீறிட்டாள், ஒற்றைச் சிறகைப் பிடித்துத் தூக்கப்பட்ட கிளி போல்.

"வரட்டுமே!"

அவன் அசிரத்தையுடன் பதில் அளித்து விட்டு, அவள் நெற்றி மேட்டில் எகிறு கருகும் கல்போல் புரண்ட குழற் சுற்றுகளையே கவனித்துக் கொண்டிருந்தான்.

சாஸ்திரி அறைக்குள் நுழைந்ததும் அவன் எழுந்து நின்றான்.

"மிஸ்டர் தியாகராஜன்! நான் உமக்குக் கடைசித் தடவையாக எச்சரிக்கிறேன். நீர் எனக்கோ, என் மகளுக்கோ ஏற்றவரோ, வாசக்குள்ளவரோ இல்லை. உம்மால் எனக்குப் பெருத்த கஷ்டமும் அவமானமும் ஏற்பட்டு விட்டன. உமக்குச் சேர வேண்டியதை வாங்கிக்கொண்டு உடனே வெளியேறும்."—சீறலியாக முழங்கினார் சாஸ்திரி.

தியாகு பதில் பேசாமல், தனது பிளாஸ்டிக் பையின் 'ஜிப்'பை நகர்த்தி, ஓர் அழகிய சிறு மரப் பெட்டியை எடுத்தான். அதைத் திறந்து, சாஸ்திரியிடம் நீட்டினான்.

"ஆ...... ....அரா!" என்று ஒரு பலின உசரத்துக்குக் குதித்தார் அவர்.

பெட்டியை வாங்கிக் கொண்டு மேஜையருகில் சென்று மெத்தை நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டு அமர்ந்தார்.

"மிஸ்டர் தியாகராஜன்! எங்கே இப்படிக் கையைக் கொடுங்கள்!" நாற்காலியை மடேரென்று பின்புறம் தள்ளிக் கொண்டு எழுந்து ஓடி வந்த சாஸ்திரி தியாகுவின் கையைப் பிடித்துப் பலவந்தமாகக் குலுக்கி அறையை ஒரு தரம் சுற்றி வந்து 'ராக்-அன்-ரோல்' ஆடினார். பிறகு, "'ஐ ரிக்ரெட் வெரி மச்' மிஸ்டர் தியாகராஜன்! உங்கள் கப்பாசிட்டியைப் புரிந்து கொள்ளாமல் ஏதேதோ கண்டபடி பேசி விட்டேன். 'நெவர் மைண்ட்'!" என்று மன்னிப்புக் கேட்டுக்கொண்டே மேஜையருகில் மீண்டும் விரைந்தார். மரப் பெட்டியைக் கையில் எடுத்துக் கொண்டு, தன் முகமே அணுகும் போது எல்லை மீறிய சந்தோஷத்தில் அவர் நா புரண்டது. "'மம்ம..... ஆலதி... இங்கே ஆர்த்தாயா அம்மா....." என்று உரக்கக் கூவினார்.

மாலதி மரப் பெட்டியை ஆச்சரியத்துடன் நோக்கினாள். 'லிப்ஸ்டிக்' உதடுகளோடு கூடிய வாய் கோழிமுட்டை வடிவத்தில் பிளந்தது.

அந்தப் பெட்டியில் — ஐந்து புராதன வெள்ளிப் பணக்காசுகள்! மண்ணும் தூசியும் படிந்து தேய்ந்து மங்கிக் கிடந்தன.

"இவை யெல்லாம் மௌரியர் காலத்து நாணயங்கள் அம்மா!"

தியாகுவின் முகத்தில் பெருமை தாங்கவில்லை.

நேற்று மாலை கரங்கத்தில் நானே ஓர் இடத்தில் கடைசிப் பிரயத்தனமாகத் தோண்டிக் கொண்டிருந்தேன், சார்! அப்போது இவை அகஸ்மாத்தாகக் கிடைத்தன. சில நாணயங்களில் தொடர்ந்தாற்போல் மூன்று சைபர்களும், அவற்றின் குறுக்கே ஒரு கோடும் காணப்படுகின்றன. இவை அசோகர் காலத்து நாணயங்களாக இருக்க வேண்டும். மற்ற

நாணயங்களில் ஒரு சிறு மரத்தின் சின்னம் காணப்படுகிறது. அது அசோக மரம் மாதிரி தோன்றுகிறது. எனவே அவை அசோகர் காலத்து நாணயங்கள் என்பதில் சந்தேகமேயில்லை'' என்றான் அவன்.

''ரொம்ப சரி! ரொம்ப சரி!''

பெருச்சாளி அறுப்பது போல் கூவிக் கொண்டே சாஸ்திரி புராதனக் கண்டு பிடிப்புடன் களி நடம் புரிந்தார்.

இரவு முழுவதும் ஒரே குதூகலம்; கும்மாளம். மூவரும் அவரவர் கட்டிலில் படுத்தவாறு வெகு நேரம் பேசிக் கொண்டிருந்தனர்.

பேச்சு வாக்கில் சாஸ்திரி, ''மாலதி! இந்த வைபவத்தைச் சிறந்த முறையில் கொண்டாட உனக்கும் தியாகராஜனுக்கும் திருப்பதியில் அடுத்த வெள்ளிக் கிழமை முகூர்த்தம்'' என்று கூறினார்;

தியாகு சந்தேகத்துடன் ''திருமண முகூர்த்தம்தானே!'' என்று வினவுகையில், மாலதியின் கன்னம் அந்தி வானமாயிற்று.

திருமணமாகி ஒரு மாதம் இருக்கும்.

சாஸ்திரி தமது ஆராய்ச்சி விஷயமாகத் தில்லிக்குப் போயிருந்தார்.

சென்னையில் அவர் வீட்டில் மாலதி தியாகுவின் உரிமைப் பிடியில் சிக்கித் திணறிக் கொண்டிருந்தாள்.

''காதலுக்கு நாணயம் தேவையா மாலதி?'' அவள் காதோரத்தில் குனிந்த உதடுகளை ஊன்றியவாறு கேட்டான் தியாகு.

''நிச்சயமாக'' என்றாள் மாலதி.

''என் மீது கோபப்படாமல் நான் சொல்வதை மௌனமாகக் கேட்பாயா மாலதி? அப்போதுதான் நான் நம் காதல் மலருவதற்காக எப்படிப் பாடுபட்டிருக்கிறேன் என்பது உனக்குப் புரியும்.''

''சொல்லுங்கள்!'' என்று ஆவலுடன் தூண்டினாள் அவள்.

''அன்று நான் கொண்டு வந்து உன் அப்பாவிடம் கொடுத்த புராதன நாணயங்கள் எல்லாம் அசோகர் காலத்தவை அல்ல! அவைக்குப் பின் ஒரு சோகக் கதை உண்டு, மாலதி! பத்து நாட்களாக எனக்கு இதே வேலைதான்! மட்ட வெள்ளியில் புராதன நாணயங்களைச் சரித்திர ஆதாரத்தோடு கூடிய சின்னங்களுடன் நகை செய்பவர் ஒருவர் மூலம் கள்ளத்தனமாகத் தயார் செய்தேன். பிறகு அந்தப் போலி நாணயங்களைத் தேய்த்து, உருக்குலைய வைத்து, மண்ணிலும் தூசியிலும் போட்டுப் புரட்டி, உன் அப்பாவை நம்ப வைத்து நம் காதலையும் பிழைக்க வைப்பதற்குள் போதும் போதுமென்றாகி விட்டது! தயவுசெய்து இந்த ரகசியத்தை.....''

''போதும் உங்கள் பிரதாபம்! என் தந்தையை ஏமாற்றினாற் போல் என்னையும் ஏமாற்றப் பார்க்கிறீர்களா? உங்கள் காதலிலாவது நாணயம் இருக்குமா, இல்லை அதுவும் 'கவுண்டர்-பீட்' காதலோ?'' என்று பொய்க் கோபத்துடன் சிணுங்கினாள் அவள்.

''பார்த்தாயா, பார்த்தாயா, கேலி செய்கிறாயே....! மாலதி, மாலதி! என் காதல் சாஸ்திரியக் காதல்!...'' என்று அடித்துக் கொண்டே தியாகு குனிந்தான். அவன் தலை அவள் மதிமுகத்தை மறைத்தது!

# மாடு

என். மகாலிங்கம்






''ஏண்டா கிட்டா ... எப்பப் பார்த்தாலும் சொன்னதைக் கேக்காமே பம்பரமும் கையுமா நின்னுண்டிருக்கியே! ஒரே நாளைக்கு நாலு தடவை வாய்க்காலுக்குத் தொளையப் போறே! ஒரு தடவை வர்றபோது கையோட நாலு வாழைப் புல்லைப் பறிச்சிண்டு வந்து அந்தக் கன்றுக்குட்டி கிட்ட போடக் கூடாதாடா? கடிக்கப் பழகிக்குமோல்லியோ?'' கன்றின் குரலைக் கேட்டுவிட்டுச் சமையலறையிலிருந்து வெளியே வந்த நாகம்மாள் முற்றத்தில் கிருஷ்ணமூர்த்தி நிற்பதைப் பார்த்துவிட்டு முறையிட்டாள்.

கிருஷ்ணமூர்த்தி சொல் பொறுக்காதவன். ''ஏன் நான் கொஞ்ச நேரம் விளையாடறது தான் உன் கண்ணை உறுத்தறதோ? விசாலம் அப்பவே புடிச்சு 'படிக்கிறேன், படிக்கிறேன்'னு ஒரு காரியமும் செய்யாமே ஒக்காந்திருக்காளே?'' பேசிவிட்டு உள்ளுக்கு மடங்கிய கீழுதட்டைப் பற்களால் அழுத்திக் கொண்டு பம்பரத்தில் நூலைச் சுற்றினான் அவன்.

முற்றத்தில் நடு நாயகமாக நின்றிருந்த துளசி மாடத்தில் சாய்ந்தபடி தொடர்கதையில் ஆழ்ந்து போயிருந்தாள் கிருஷ்ணமூர்த்தியின் அக்கா விசாலம்.

''கட்டேலே போறவனே! உன்னாலே முடியலேன்னு முடியலேன்னுட்டுப் போயேண்டா. என்னை ஏன் வீணு வம்புக்கு இழுக்கறே?'' தலையைத் திருப்பித் தம்பிக்கு ஒரு 'டோஸ்' கொடுத்துவிட்டுப் பதில் பெற்றுக் கொள்ளுவதில் அக்கறையில்லாமல் புஸ்தகத்தில் கவனத்தைத் திருப்பினாள் அவள். அதற்காகக் கிருஷ்ணமூர்த்தியும் அவளுக்குப் பதில் கொடுக்காமல் இருந்துவிடவில்லை! உடனுக்குடன் கடமையை நிறைவேற்றி விட்டுத்தான் மறுவேலை பார்த்தான்.

''காலம்பறேலேயிருந்து நின்னுட்டு ஒக்காந்திருக்கிறதைத் தவிர என்ன செஞ்சியாம்? நான்தானேடி எண்ணெய் வாங்கிண்டு வந்தேன். கிணத்துலே இறங்கிச் சொம்பை எடுத்தேன்.

விறகு அள்ளிக் கொண்டு வந்து போட்டேன்....''

''நீ சம்பாதிக்கப் போய்ட்டு நான் ஒன்னும் சாப்பிட்டுடலே. ஒரு வேலையும் செய்யாம அப்படித்தான் நின்னுட்டு நக்காந்திருப்பேன். உன்னாலே ஆனதைப் பார்த்துக்கோ!''

பதில் சொல்லத் திறந்த கிருஷ்ணமூர்த்தியின் வாயை நாகம்மாள் பேசி அடைத்தாள். ''அந்தப் பச்சைக் கன்னுக்குட்டிக்கு இத்தனை புல்லு கொண்டு வந்து போட ரெண்டு பேருமா போட்டி போறுங்கோ. அதைக் காணோம். ராத்திரிமட்டும் மறக்காமெ 'அம்மா'ன்னு வந்துடுங்கோ. பால் காய்ச்சி வைச்சிருக்கேன். கொட்டிக்கலாம்'' என்று கூறி விட்டு உள்ளே போய் விட்டாள் நாகம்மாள்.

''ஏலே என்னடா சத்தம் அங்கே?'' வாசலிலிருந்து குரல் வந்தபோது முற்றத்தில், உறங்கிக் கொண்டிருந்த பம்பரத்தைச் சட்டென்று 'ஆணுக்கோல்' எடுத்து நூலோடு சுருட்டி டிராயர் பைக்குள் திணித்துக் கொண்டு கொல்லைப் பக்கமாக ஓடினான் கிருஷ்ணமூர்த்தி.

''இதுக்குத்தான் ரெண்டும் இவ்வளவு நாழியா சண்டைப் பிடிச்சிண்டு நின்னதுக.'' நடேசய்யரின் குரலைக் கேட்டு உள்ளேயிருந்து வந்த நாகம்மாள் அவர் நின்ற தோற்றத்தைப் பார்த்து விட்டுக் கூறினாள்.

தலையில் முண்டாசும், தூக்கிச் சொருகிய பஞ்சகச்சமும் ஏந்திய இடது கையில் ஈரம் சொட்டிக் கொண்டிருந்த கற்றைக் கோரை வாழைப் புல்லுமாக விசித்திரக் கோலத்தில் தோற்றமளித்தார் நடேசய்யர். வாய்க்கால் ஜலத்தில் சேறு போகக் கழுவியிருந்த புல்லைப் பார்த்துத் தம் அருகே வர முயன்ற கன்றுக் குட்டியிடம் போட்டு விட்டு நின்று பார்த்தார். கன்றுக் குட்டி பசுமையை முகர்ந்து பார்த்தது. எடுக்கவில்லை. பலவந்தமாக வாயைத் திறந்து இரண்டு அருகை எடுத்து உள்ளே திணித்தார். கிருஷ்ணமூர்த்தி பம்பரத்தைக் குதிருக்குள் ஒளிய வைத்து விட்டுச் சத்தம் போடாமல் அப்பாவுக்குப் பின்னால் வந்து நின்றான்.

''ஏண்டா, புல்லு கொண்டு வர மாட்டேன்னு சொன்னியா?'' பின்னைசைவால் பிள்ளையாண்டான் வந்து நின்றதை உணர்ந்து திரும்பாமலேயே கேட்டார் நடேசய்யர். அவர் கை புல்லை ஒவ்வொன்றாக எடுத்துக் கன்றுக் குட்டிக்கு ஊட்டிக் கொண்டிருந்தது. இயற்கையான விஷமத்தனமும், இப்போது அப்பா கேட்டதற்குப் பதிலாக முகத்தில் வழிந்த அசடு கலந்த சிரிப்புமாகப் பதில் சொல்லாமல் நின்றான் கிருஷ்ணமூர்த்தி.

பாதித் தண்ணீரோடு பால் கறக்கச் செம்பை எடுத்துக் கொண்டு வந்து கொடுத்தாள் நாகம்மாள்.

''நாளைக்கு இது வளர்ந்து பெரிசானப் புறம் ரேக்ளாவிலே கட்டிப் பறக்கறபோது, 'நான் ஓட்டறேம்பா'ன்னு வருவியோல்லியோ? அப்ப கவனிச்சுக்கறேன் பயலே உன்னே.'' நடேசய்யர் கிருஷ்ணமூர்த்தி புல் கொண்டு வராததற்கு என்ன தண்டனை என்பதைத் தெரிவித்து விட்டு, செம்பைக் கன்றுக்குட்டியின் கண்ணெதிரே காட்டியபடி திரும்பிப் பார்த்து, 'பா...பா...' என்று அழைத்துக் கொண்டே மாட்டுக் கொட்டிலுக்கு நடந்தார். நின்றும், நடந்தும், எழுந்தும், தத்தித் தத்தி நடந்தது கன்றுக்குட்டி.

சுரப்பு விட்ட மாட்டிலிருந்து கன்றுக் குட்டியைப் பிரித்துப் பக்கத்து முளையில் கட்டிவிட்டு, மாட்டுக்குப் பக்கத்தில் குந்தி அமர்ந்து காம்பை மெல்லத் தொட்டார் நடேசய்யர். மாடு காலைத் தூக்கியது.

''ஏய், சும்மா இருக்க மாட்டே?'' நடேசய்யருக்குப் பால் கறக்கும் போது கால் அணையக் கயிறே தேவை இல்லை; சொல்லாலேயே கட்டி விடுவார். அவ்வளவு காம்பீரியமும் வேகமும் இருக்கும் அவர் குரலில். ஐந்து சேருக்குக் குறையாமல் கறக்கும் மாட்டிடம் தன் குழந்தைகளுக்குத் தேவையான இரண்டு சேரை மட்டுமே கறந்து கொண்டு மீதியை மாட்டின் குழந்தைக்கு விட்டு விட்டு எழுந்தார். கட்டவிழ்த்து விடுவதற்கு முன்னால் இழுத்துக் கொண்டு போகப் பார்த்தது கன்று. உலக ஸ்பரிசம் பட்ட ஐந்தாறு நாட்களுக்குள்ளாகவே அரத்துப் பிடித்துச் சாப்பிட்டால் தான் உண்டு என்ற அனுபவ அறிவு அதற்கு வந்து விட்டதாக நடேசய்யர் நினைத்துக் கொண்டார். ஒதுங்கி வந்து வாயின் இரண்டு பக்கங்களிலும் நுரை தப்பத் தப்பப் பாலைக் குடித்துக் கொண்டிருந்த கன்றைக் கொஞ்ச நேரம் பார்த்துக் கொண்டே நின்றார். இன்னும் அதற்குக் காம்பு மாற்றி முட்டிக் குடிக்கத் தெரியவில்லை. ஒரே காம்பைச் சப்பிக் கொண்டிருந்தது. முகத்தில் மெல்லத் தட்டி அடுத்த காம்புக்கு அதன் கவனத்தைத் திருப்பி விட்டார். மாடு கழுத்தை வளைத்து நாய் வால் மாதிரி எழுந்து வளைந்த கன்றின் வாலை நக்கிக் கொடுத்தது. குஞ்சலம் கட்டியது போல் வால் நுனியில் இருந்த வெண்மை கன்றினால் சொல்ல முடியாத அதன் சந்தோஷத்தை அரு ஆடத் தெரியாத எழுத்துக்களில் காற்றில் எழுதிக் கொண்டிருப்பதாக நடேசய்யருக்குத் தோன்றியது. வால் மட்டும் தானா வெள்ளை? சிவப்பு உடம்பில் திவு மாதிரி நெற்றிச் சுட்டி, வடி வால், வெள் குளம்பு, பூசணித் துண்டம் மாதிரி அடிவயிறு கூடத்தான் வெள்ளை! உடம்பைச் சிலிர்த்தபோது ஒன்றை ஒன்று தழுவிய ராம லக்ஷ்மணச் சுழிகளையும் கொண்டு சர்வ அங்க லக்ஷணங்களோடும் விளங்கியது கன்றுக்குட்டி.

நடேசய்யருக்கு இத்தனை நாட்களாக இல்லாமல் இன்று என்னவோ மனம் பரம திருப்தியாக இருந்தது. 'நல்ல ஜாதிக் காளைக்குப் பொறந்தது. மூணே வருஷத்தில், வண்டியிலே பூட்டலாம்' என்று நினைத்தபடியே இரண்டாம் கட்டுக் கதவின் வழியாகச் சமையல் அறைக்குச் சென்றார் அவர்.

கோடை விடுமுறை வந்ததும் கிருஷ்ணமூர்த்தி தன் கோஷ்டியோடு அப்பாவுக்கு எதிரிலேயே தைரியமாகப் பம்பரம் விளையாட ஆரம்பித்து விட்டான். அவரும், 'தொலைந்து போகட்டும். புது முதலுக்குத் தான் மெட்ராஸ் போயிடப் போறானே!' என்று விட்டு விட்டார்.

நாகம்மாளுக்கு ஐந்து வேலி மிராசுதார் மனைவி என்ற பெருமையைத் தவிர வேறொன்றும் கிடையாது. வீட்டில் அவள்தான் வேலைக்காரி. காலையில் நாலு மணிக்கெல்

லாம் எழுந்து வாசலில் சாணி தெளித்துக் கோலம் போடுவது முதல் இரவு பத்து மணிக்குச் சமையலறையைக் கழுவி விட்டுவிட்டுப் படுக்கப் போகும் வரை, 'அக்கடா' என்று 'மரியக்' கொஞ்சம் அவகாசம் கூட அவளுக்குக் கிடைக்காது.

வீட்டில் யாருடைய கவனமும் பிரத்தியேகமாகக் கிடைக்காதது கன்றுக்குட்டியின் வளர்ச்சிக்கு எந்த விதத்திலும் இடைஞ்சலாக இல்லை. போஷாக்கான உணவில் மட்டுமின்றி அன்பிலும் வளர்ந்த அது 'அக்கிரஹாரத்து'க் கன்றுக் குட்டியாக இல்லாமல் 'கொழுக்-கொழுக்'கென்று இருந்தது.

கன்றின் தீனமான அலறலைக் கேட்டு விழுந்தடித்துக் கொண்டு கொல்லைப்புறம் ஓடினான் கிருஷ்ணமூர்த்தி. என்ன கோரம் இது? ஏற்றத்துக்கு நட்டிருந்த ஒதியங்காலுக்குப் பக்கத்தில் நடேசய்யர் கன்றுக்குட்டியைப் படுக்கப் போட்டுத் தலையை அழுத்திப் பிடித்துக் கொண்டிருந்தார். சோளக் கதிர்கள் பலவற்றைச் சேர்த்துத் தூக்குவது போல் நான்கு கால்களையும் ஒன்று சேர்த்துப் பிடித்திருந்தான் செல்லமுத்து. வறட்டி மூட்டத்தில் கனிந்து கொண்டிருந்த நெருப்பில் பழுத்துக் கொண்டிருந்த சூட்டுக் கோல்களை எடுத்துச் சரி பார்த்தான் ஜுக்கோக.

''நல்லா திமிறாம அழுத்திக்கங்க.''

நடேசய்யரின் கைகள் வழியாக அழுத்தம் பாய நரம்புகள் புடைத்துக் கொண்டன. அந்தக் கைகள் கானாவாழைப்புல்லை ஒவ்வொன்றாக எடுத்துக் கன்றுக்கு ஊட்டியது கிருஷ்ணமூர்த்தியின் ஞாபகத்துக்கு இப்போது வந்தது.

கிருஷ்ணமூர்த்தி நின்று பார்க்காமல் உள்ளே ஓடி விட்டான். பயத்தால் நடுங்கிய அவன் உள்ளம் பச்சாத்தாபத்தால் நிறைந்தது. இந்தச் சித்திரவதைகளெல்லாம் எதற்காக?

அரை மணி நேரம் கழித்துக் காரியங்களையெல்லாம் முடித்துக் கொண்டு வந்த நடேசய்யரிடம் இந்தக் கேள்வியைக் கேட்டான் அவன். அவர் காலை இளம் வெய்யிலில் சோர்ந்து நின்று கொண்டிருந்த கன்றின் தீப் புண்களுக்கு, கொட்டாங்கச்சியிலிருந்து தேங்காய் எண்ணெயைப் பஞ்சால் எடுத்துப் போட்டுக் கொண்டே பதில் சொன்னார். ''கொம்பைத் தீய்க்கலேன்னா விகாரமா வளர்ந்துடும். மாட்டுக்கு மவுசு போயிடும். தீச்சுட்டா, கொம்பிலே இருக்கிற பலம் கழுத்துக்கு வந்துடும். நன்னா உழைக்கும்'' என்றார்.

கிருஷ்ணமூர்த்தி கேட்டுக் கொண்டே கவனித்தான். இதென்ன இன்னொரு புதுமை, கோரம்? வாழைப்பட்டை மாதிரி இருந்த நீண்ட காதுகளுக்குப் பதிலாக, பாவாடையை ஒட்ட வைத்ததைப் போல் துளித் துளிக்கு இரண்டு! அவை தம் மீது கசிந்து உறைந்து போயிருக்கும் ரத்தத்தைச் சுவைக்கும் ஈக்களை ஓட்ட ஆடிக் கொண்டிருந்தன.

''ஏம்பா காதைக்கூட அறுத்துட்டேள்!'' என்று கிருஷ்ணமூர்த்தி பரிதாபமாகக் கேட்டான்.

''கொம்பில்லாமெ காது மட்டும் இருந்தால் பார்க்கப் பாந்தமா இருக்காதோல்லியோ?''

கிருஷ்ணமூர்த்திக்கு மனசு சமாதானப் படவே இல்லை. சே... இந்த அப்பாவுக்குக் கொஞ்சம்கூட இரக்கம் என்பதே கிடையாது! அன்றைக்கு அவன் சரியாகச் சாப்பிடவே இல்லை.

இப்போதெல்லாம் நடேசய்யருக்கு ஒரு சௌகரியம். எந்தக் காரியத்தையும் தானே செய்வதற்கு முன்னும் பேசி, பின்னே இரண்டு பேரிடமும் சொல்லி இரண்டுபங்கு நேரத்தைச் செலவழிக்க அவசியமில்லாமல், கிருஷ்ணமூர்த்தி போன வாரம் மெட்ராஸுக்குப் போய் விட்டான். அவன் இல்லாததால் வீடே 'வெறிச்'சென்று கிடக்கும் நிலையைப் பற்றிப் பேசிய பேச்சும் ஓய்ந்து விட்டது.

ஆனி மாதக் கடைசியில் வந்த புது வெள்ளம் நடேசய்யருக்குத் தலைக்கு மேல் வேலைகளைக் கொண்டு வந்தது. அவருக்கு முன்பிருந்த அளவுக்குக்கூடக் கன்றுக்குட்டியைப் பிரத்தியேகமாகக் கவனிக்க இப்போது நேரமிருப்பதில்லை. மார்ஜால பக்தி மர்க்கட பக்தியாகி விட்டது. ஐயா போகுமிடமெல்லாம் நாய் மாதிரி அவரைப் பின் தொடர்ந்தது கன்று. நித்தமும் அதிகாலையில் அவரோடேயே பிராதஸ்நானம். அவர் வயல் வெளி, வாழைக் கொல்லை எங்கே போனாலும் அதுவும் போகும். சாயந்திர வேலைகளில் தன் கையாலேயே பருத்திக் கொட்டை பிண்ணாக்கு ஊற வைத்து அது தின்னும் வரையில் இருந்து விட்டுப் போவார் நடேசய்யர். வெளியே அழைத்துக் கொண்டு போக முடியாத நாட்களிலும் இந்தக் கௌரவம் மட்டும் நிச்சயமாக நடக்கும். இந்தப் பழக்கமே கன்றிடம் ஊர் மாடுகளோடு காலாறப் போய் மேய்ந்து விட்டு வரும் பழக்கத்தை ஏற்படுத்தாமல் போய் விட்டது.

ஜோடி சேர்ந்தால் சரியாகப் போய் விடும் என்ற எண்ணத்தில் முப்பது சவரனுக்கு இன்னொரு காளைக் கன்றை வாங்கினார் நடேசய்யர். விசாலத்துக்குக் கல்யாணம் நிச்சயமான நாள் அது. இரண்டு முக்கியமான காரியங்கள் ஒரே நாளில் நடந்து விட்டதில் அவருக்கு ஏக திருப்தி. கன்றுகள் இரண்டுமே 'பல் படாத தலை' ஆனதால் ஜோடி சேர்ந்த உடனேயே உழவுக்குப் பயன்படாமலிருந்தது போல், கையில் பணம் புரளாததால், குதிர்ந்த விசாலத்தின் கல்யாணத்தையும் உடனேயே நடத்த முடியவில்லை. நடேசய்யரிடம் பயிர்ச் செலவு நாட்களில் வெள்ளம் போல் பணம் தங்காமல் வந்து போய்க் கொண்டிருக்கும். பயிர்ச் செலவு இல்லாத கோடை காலங்களில்தான் மடு மாதிரித் தேங்கி நிற்கும். நாலுக்கொரு ஊராகக் கிடக்கும் உறவினர்களெல்லாம் தங்கள் குழந்தைகளோடு வர வேண்டுமென்றால் அதற்குப் பள்ளிக்கூடம் சாத்தும் நாட்கள் தான் சௌகரியம்.

அவர் இஷ்டம் போலவே எல்லாம் நடந்தது. ஒரே பெண்ணானதால் நிறையச் செலவு செய்து நான்கு நாட்கள் கல்யாணமாக அடுத்த கோடையிலே நடத்தினார். வீடு கொள்ளாத கூட்டம். கிருஷ்ணமூர்த்தியைக் கையில் பிடிக்க முடியவில்லை. அவனுக்கு நிற்க நேரமில்லை; செய்ய வேலையில்லை. தன் பட்டணத்துப் பிரதாபங்களைக் கிராமத்துச் சிநேகிதர்களிடம் அளந்து அளந்து அவனுக்கே அலுத்து விட்டது.

''என்டா கிட்டா, உங்கப்பா ரேக்ளா வாங்கி வச்சிருக்காரே, அதுலே உங்க வீட்டு

எழுதுவதில்
கவர்ச்சியும்
இன்பமும்
பெறுவதற்கு




# Iris INKS

ஐரிஸ் இங்குகள்

5 மங்காத
நிறங்களில்


ரிஸர்ச் கெமிகல் லாபரட்ரீஸ்
லாட்டிஸ் பிரிட்ஜ் ரோடு, சென்னை-20
550, எட்டாவது மெயின் ரோடு,
மல்லேஸ்வரம், பெங்களூர்-12

EP/RCL/7/TAM

# பருக்கள் மறைந்து விடுகின்றன

முகம் மிருதுவாகவும் வழுவழுப்பாகவும் ஆகிவிடுகிறது

நிக்ஸோடெர்ம் (Nixoderm) உபயோகித்தால் முகப்பருக்கள் எல்லாம் மறைந்து விடுகின்றன. இன்றிரவு நிக்ஸோடெர்ம் (Nixoderm) உபயோகியுங்கள். உங்கள் சருமம் மிருதுவாகவும், வழுவழுப்பாகவும் மாசு மறுவின்றியும் ஆவதைக் காண்பீர்கள். நிக்ஸோடெர்ம் (Nixoderm) சருமத்தின் மீது ஏற்படும் முகப்பருக்கள் கட்டிகள் செந்நிறத் தழும்புகள், மேலாகப் பரவும் படை, படர்தாமரை, வெடிப்புகள் முதலிய உபாதைகளுக்குக் காரணமான கிருமிகளையும் பூச்சிகளையும் அழிக்க விஞ்ஞான முறையில் தயாரிக்கப்பட்டது. உங்கள் சருமத்தின் மெல்லிய துவாரங்களில் இருக்கும் பூச்சிகளையும், கிருமிகளையும் அழித்தலன்றி உங்கள் சரும உபாதைகள் விலகா. இன்றே உங்கள் கெமிஸ்டிடம் நிக்ஸோடெர்ம் (Nixoderm) வாங்குங்கள். முகப்பருக்களை மறையச் செய்து சருமத்தை மிருதுவாகவும் வழுவழுப்பாகவும் அது இருக்கச் செய்யும் என்ற பூரண நம்பிக்கையுடன் நிக்ஸோடெர்ம் (Nixoderm) வாங்குங்கள்.



பி ஐ
பெங்கால் இம்யூனிடி
தயாரிப்பு

# துன்புறுத்தும் இருமலையும் சளியையும்



சட்டென்று போக்கிவிடும்

# பி. ஐ. காவ்ப் ஸிரப்

"மாடு ரெண்டையும் பூட்டி ஓட்டலாமே?" என்று திடீரென்று ஒரு யோசனை சொன்னான் சீனு. கன்றுக் குட்டிகளை மாடு என்று குறிப்பிட்டுப் பேசி விட்டால் அவைகளுக்கு வண்டி இழுக்கும் தகுதி வந்து விடும் என்ற எண்ணம் அவனுக்கு. கிருஷ்ண மூர்த்தி கல்யாண நடவடிக்கைகளைக் கவனித்துக் கொண்டிருந்தவர்களுக்கு இடையிலிருந்து தாம்பாளத்திலிருந்து கவுளி வெற்றிலையையும், குத்து கும்பகோணம் சீவலையும் அள்ளிக் கொண்டு போய்க் கொடுத்துக் காரிய சாதனைக்காகச் செல்லமுத்துவைக் காக்காய் பிடித்துக் கொண்டான். செல்லமுத்துவும் நடேசய்யருக்குத் தெரியாமல் மாட்டுக் கொட்டகைப் பரணில் கிடந்த பாகங்களை எடுத்துக் கோத்து ரேக்ளாவுக்கு உருக்கொடுத்து, கன்றுகளைக் கொட்டிலிலிருந்து அவிழ்த்து வந்தான். இரண்டும் முதலில் நுகத்தடியில் தலைகளைக் கொடுக்கவே மறுத்து விட்டன. பலவந்தப்படுத்திப் பூட்டிச் செல்லமுத்து ஒரு பக்கமும் சீனு முதலிய தோழர்கள் ஒரு பக்கமுமாகப் பிடித்துக் கொண்டார்கள். கிருஷ்ணமூர்த்தி தான் சாரத்தியம். கன்றின் கழுத்துத் தும்புகளையே தலைக் கயிறுகளாகப் பாவித்துப் பற்றிக் கொண்டு, 'ஹை, ஹை' என்றான். முன்னேற்பாட்டுடன் வேலியைத் திறந்து வைத்திருந்த கொல்லைப் பாதை வழியாக வண்டி குடியானவத் தெருவுக்கு வந்து ஒரு பர்லாங் தூரம் ஒழுங்காக ஓடி அரசலாற்றுக் கட்டுக் கரை மீது ஏறியது.

கொஞ்சம் கவடு பிடித்துப் போக ஆரம்பித்ததும், ''டேய் விட்டா, நாங்களும் ஏறிக் கிறேம்டா'' என்று கந்தா மாட்டைப் பிடித்துக்கொண்டு கூடவே 'லொங்கு லொங்கு' என்று ஓடி வந்து கொண்டிருந்த நண்பர்கள் சார்பில் கெஞ்சினான். 'ரைட்' கொடுத்தான் கிருஷ்ணமூர்த்தி. அவ்வளவுதான்! அடுத்த நிமிஷம் பெரிய தொட்டில் அளவுக்கு இருந்த சிறிய வண்டியில் இடியத் திமிய ஆறு பேர்கள் ஏறி விட்டனர். கன்றுகள் திணறத் திணற ஓடின. ஒரு பக்கம் படுகை வேலி. இன்னொரு பக்கம் வாய்க்கால் பள்ளம். ''குனிந்தே பார்த்து ஓட்டு. ஒரு சமயம் போல இருக்காது. பழகாத கன்னுங்க'' என்று எச்சரிக்கை செய்தான் செல்லமுத்து. கிருஷ்ணமூர்த்திக்குக் கன குஷி! கன அலட்சியம்! கன்றுகள் குடல் தெறிக்க ஓடியும் அவனுக்கு வேகம் போதவில்லை. இன்னும் வேகமாகப் போனால் எவ்வளவு ஜோராக இருக்கும்? கையிலிருந்த கொன்னைக் கழியைத் திருப்பிக் கொண்டு விலக்கு வாங்கிய கன்றைச் சாத்து சாத்தென்று சாத்தினான்.



"அப்பப்பா! கடன் கொடுத்த தொகையைத் திருப்பி வாங்க நீங்க ஒவ்வொருவரிடமும் இத்தனை தரம் போயிருக்கீங்களே. அவர்களுக்கு உங்களைப் பார்க்கவே பிடிக்காதே!"

"அப்படி ஒன்றுமில்லை! இன்னொரு தடவை வாருங்கள் பார்க்கிறேன் என்றுதான் சொல்கிறார்கள்!"

அது 'தேமே'ன்று பொறுத்துக் கொண்டு ஓடியது. அதும் பக்கம் மாற்றி இரண்டாவது அடி அடிக்கக் கிருஷ்ண மூர்த்தி கையை ஓங்கிய போது விட்டுக் கன்றுக்கும் வண்டிக்குமிருந்த பந்தம் அற்றுப் போய் விட்டது. அதன் பலனாகக் கிருஷ்ண மூர்த்தியும் மற்றவர்களும் மண்ணில் கிடந்தனர். ஒரு சக்கரம் ஆகாசத்தைப் பார்க்க, செங்குத்து நிலைக்கு வந்து விட்ட நுகத்தடியின் மேல் பாகத்துப் பூட்டாங் கயிற்றில் கழுத்தை மாட்டிக் கொண்டு தொங்க, வண்டி குடைசாய்ந்து வாய்க் காலில் கிடந்தது. குடைசாய்வதற்குக் காரணம் ஒரு அடி விழுந்ததும் ரோஷம் பொறுக்க மாட்டாமல் 'சட்'டென்று தலையைக் கழற்றிக் கொண்டு விட்டுக் கன்று ஓடி விட்டதன் விளைவு தான். அது இப்போது பக்கத்து வயலில் மேய்ந்து கொண்டிருந்த மந்தைக்குள் புகுந்து விட்டது.

செல்லமுத்து ஓடி வந்து எல்லோரையும் தூக்கி நிறுத்தித் தூசி தட்டி விட்டான். கிருஷ்ணமூர்த்திக்கு அழுகையும் சிரிப்புமாக வந்தது. வெட்கம் வேறு! ''போனாப் போவுது போ. பொல்லாப் பய மவன் அது. நான் தான் சொன்னேனே!'' என்று சமாதானம் கூறிச் செல்லமுத்து சிறுவர்களை வீட்டுக்கு அனுப்பி வைத்தான். ஒற்றைக் கன்றையும் வண்டியையும் கொணர்ந்து சேர்க்க ஏற்பாடு செய்துவிட்டுச் செல்லமுத்துவும் வேகமாக வந்து அவர்களோடு சேர்ந்து கொண்டான். எல்லாரும் வீட்டை அணுகிய போது முதலில் அவர்கள் கண்களில் பட்டது கல்யாணப் பந்தலுக்குப் பக்கத்தில் நின்ற நடேசய்யரும் அவரை உரசிக் கொண்டு நின்ற விட்டுக் கன்றும்தான்.

''கொளந்தை வண்டி கட்டணும்னுச் சிங்க.'' நடேசய்யர் என்ன சொல்லுவாரோ என்று பயந்தபடியே செல்லமுத்து கூறினான். அவருக்கு நடந்ததெல்லாம் தெரிந்திருந்தது.

''நல்லா இருக்குடா. மொத மொதல்லே வண்டி கட்டறதுக்கு நாள் கிழமை பார்க்கறதில்லே!'' வீட்டில் சுபகாரியம் நடந்திருந்தால், நியாயமாக நடேசய்யருக்கு இப்போது வர வேண்டிய கோபம் வரவில்லை.

''இன்னிக்கு முகூர்த்த நாள் தானே அப்பா!'' என்றான் கிருஷ்ணமூர்த்தி.

''போடா, அரட்டை. கன்னுக்குட்டியைப் போட்டு என்ன அடி அடிச்சிருக்கானுக?'' நடேசய்யர் ஒரு கையால் கன்றின் முதுகுத் தழும்பை வருடிக் கொண்டே இன்னொரு கையால், அண்ணாந்து பார்த்த அதன் கழுத்தைச் சொறிந்து கொடுத்தார்.

''இல்லீங்க......'' என்று செல்லமுத்து, என்னவோ சொல்ல வாயெடுத்தான்.

''இல்லியாவது தொல்லையாவது? பார்த்தாலே தெரியலே?''

''எனரகூடிட்டே வந்ததும் பக்கத்திலே ஒரு டொரி மேஞ்சுக்கிட்டு நின்னதைப் பார்த்துடுச்சு. குளந்தை ஒரு தட்டு தட்டினதைச் சாக்கா வச்சுக்கிட்டுத் தலையைக் காட்டிக் கிட்டு ஓடிடுச்சுங்க'' என்றான் செல்லமுத்து.

''ஓஹோ!'' என்றார் நடேசய்யர்.

கிருஷ்ணமூர்த்திக்கு ஒன்றும் புரியவில்லை.

கல்யாண கலாட்டாவெல்லாம் அடங்கி விசாலமும் புக்ககத்துக்குப் போய் இரண்டு நாட்கள் கழித்து மாட்டுக் கொட்டகையில் கிருஷ்ணமூர்த்தி செல்லமுத்துவோடு பேசிக் கொண்டிருந்தான். மூலையில் கட்டப்பட்டிருந்த விட்டுக்கன்று தலையைத் தொங்கப் போட்டுச் சோர்ந்து நின்று கொண்டிருந்தது. கவனைப் பசும் புல்லும் பழைய வைக்கோலும் தின்னப்படாமல் கிடந்தன.

''திங்கவே மாட்டேங்கறதே!'' என்றான் கிருஷ்ணமூர்த்தி.

''அப்படித் தாங்க. இன்னி மூணுக்க அது இரையே எடுக்காது'' என்று பதில் சொன்னான் செல்லமுத்து.

''கொஞ்சம் தண்ணியாவது வையேன். குடிக்கிறதா பார்ப்போம்...''

''அய்யய்யோ...நாளே வரைக்கும் தண்ணியைக் கண்ணிலே காட்டக்கூடாது.''

''ஏன்....?''

செல்லமுத்து இடக்கர் அடக்கிக் கன்றின் ஆண்மை நெரித்து அழிக்கப்பட்டு விட்டதைச் சொன்னான். ''இது செய்யாட்டி வண்டி இழுக்கத் தோதுப்படாது குளந்தே'' என்றான் அவன் கூடவே.

கிருஷ்ணமூர்த்திக்கு ஆத்திரமே வந்து விட்டது. ''உன்னே யாரு அதிகப்பிரசங்கித்தனமா இதெல்லாம் செய்யச் சொன்னது?''

''நானு சொளந்தை செய்தேன்? நம்ப ஐயா சொல்லித்தானே செய்தது?'' என்றான் செல்லமுத்து.

''அப்பாவேவா...?''

''பின்னே பொய்யா சொல்றேன்?'' என்றான் செல்லமுத்து.

கிருஷ்ண மூர்த்திக்கு ரொம்பக் கஷ்டமாக இருந்தது. அப்பாதான் செய்யச் சொல்லியிருப்பார் என்பதை அவன் நம்பித்தான் ஆகவேண்டியிருந்தது. நடேசய்யர் மீது ஆத்திரப்பட்டு மானாதுபோல் தோன்றியது அவனுக்கு. ஒரோரு சமயம் இந்தக் கொடுமைகளையெல்லாம் பார்க்காமல் மெட்ராஸுக்குப் போய் விட்டால் தேவலாம் போலிருந்தது. இதைக் காரணமாகச் சொல்லி ஊருக்குப்போக அப்பாவிடம் அனுமதி கேட்பது அர்த்தமற்றதாகப் பட்டதால் மீதி ஒரு மாத லீவையும் பல்லைக் கடித்துக் கொண்டு மாட்டுக் கொட்டகைப் பக்கம் தலையைக் காட்டாமல் கழித்து விட்டுக் கிளம்பினான்.

புறப்படும் போது கூட அவனுக்குப் பிடிக்காததே அவனெதிரில் வந்து நின்று விடை கொடுத்தது. பெட்டி படுக்கையோடு ரயில்வே ஸ்டேஷனுக்குப் போக வண்டியில் ஏறி உட்கார்ந்து கொண்ட போது தொடைகளிலும் கழுத்திலும், நெற்றியிலும் பட்டை பட்டையாகச் சூட்டைப் போட்டுக் கொண்டு வந்து நின்றது, கன்று. இமைப்பொழுதுக்குள்ளே கருணும் மரச்சிராய் மாதிரி காய்ந்து கருண்டிருந்த தோலுக்கடியில் செக்கச் செவேல் என்று ஒரு ரண களமே உருவாகியிருந்தது.

கிருஷ்ணமூர்த்தி உட்கார்ந்திருந்த ஜமுக்காளத்துக்கு அடியிலிருந்து கற்றை வைக்கோலை இழுத்துக் கன்றுகளுக்கு எதிரில் நீட்டிப் 'பா...' என்றான். அதை வாங்க முகத்தை நீட்டிய போது விட்ட பெருமூச்சில் ரத்தமும் சளியும் கலந்து வந்தன. அருவருப்பும் இரக்கமும் கலந்த உணர்வோடு தலையைத் திருப்பிக் கொண்டான் கிருஷ்ணமூர்த்தி. வண்டி புறப்பட்டுப் போய்க் கொண்டிருக்கும் போது செல்லமுத்து சொன்ன காரணங்களெல்லாம் அவனுக்குப் பொருத்தமாகப் படவில்லை. சூடு போட்டால் தான் அனாவசியமாகச் சதை போடாமல் பாரத்தை ஒழுங்கு இழுக்க முடியுமாம். மூக்குக் குத்தி மூக்கணாங் கயிறு போட்டால்தான் முரட்டுத்தனம் அடங்கிக் கன்று ஓடுமாம். ''இந்தக் கொடூரமான காரியத்தை எல்லாம் செய்யறதுக்கு நம்ப ஊரிலே யாரு இருக்கா?''

''ஏன் நம்ப ஐயாவே நல்லாச் செய்வாங்களே. ரொம்ப 'நீக்'காகச் செய்ய வேண்டிய வேலைங்க சொளந்தை. சூடு போடறதுக்குள்ளே கன்னுபேலபடாமே பாத்துக்கணும். மூக்குக்குத்தறப்போ ஊசி சில சமயம் மோசத்திலே ஏறிடும். நம்ம சிங்கா வீட்டுக் கன்னுக்குட்டிக்கு ஒரு தடவை அந்தமாதிரி ஆயிடுச்சு. நம்ப ஐயாவுக்குச் சின்ன திவிருந்தே இதுலே நல்ல பளக்கம்'' என்று செல்லமுத்து ஆர்வத்தோடு பேசிக் கொண்டே போனான். இந்தக் கிரியைகளுக்கெல்லாம் உட்படும் போது கன்றுக்குட்டி அனுபவிக்கும் வேதனையை ஒரு முறை கற்பனை செய்து பார்த்தான் கிருஷ்ண மூர்த்தி. அவனால் தாங்கவே முடியவில்லை. கண்களில் ஜலம் வந்து விட்டது. ''சவு இரக்கம், பச்சாத்தாபம் ஒண்ணுமே கிடையாது இந்த அப்பாவுக்கு'' என்று தன் மனத்திலிருந்த



"ஏன் சார் பாதி நாடகத்தில் வெளியில் போகிறீர்? ஒருவேளை அந்த நான்கு பாத்திரங்களும் சேர்ந்தாற் போல் கொலையுண்டது உங்களுக்குப் பிடிக்கவில்லையா?" என்று கேட்டார் நாடகாசிரியர்.

"இல்லையே, இன்னமும், இரண்டு பாத்திரங்கள் உயிரோடு இருப்பதுதான் எனக்குப் பிடிக்கவில்லை!" என்றார் பாதியில் எழுந்து போனவர்.

ஆத்திரம் தீர ஒருமுறை சொல்லிக் கொண்டான் அவன்.

வயதுப் பெண்ணின் வளர்ச்சி வேகம் போல் காலத்துக்கு அவசரம். அடுத்த வருஷம் மாசி மாதத்தில் உயிருக்குள் உயிரை ஒடுக்கிக் கொண்டு விசாலம் வந்திருந்தாள். ஒரு வாரம் கழித்து மாப்பிள்ளை ஞானபிரகாசமும் வந்தான். வீடே கலகலப்பாக இருந்தது. விசாலம், தான் கிருஷ்ணமூர்த்தியோடு சண்டைபோட்ட பழைய நாட்களைப் பற்றியே பேசிக் கொண்டிருந்தாள்.

"இப்போ சண்டை போட ஆசையாயிருந்தாச் சொல்லு; கடுதாசி போடறேன்" என்றார் நடேசய்யர்.

"உங்களுக்கு அவனைப் பார்க்கணும்னு தோணிடுத்து. சாக்கு வச்சிண்டு வரவழைக்கலாம்னு பார்க்கிறேளாக்கும்" என்றாள் நாகம்மாள். வாஸ்தவமாகவே நடேசய்யருக்கு அந்த ஆசைதான். இந்தச் சூழ்நிலையில் அவன் மட்டும் இல்லாதது அவருக்குப் பாந்தமாகவே இல்லை.

கிருஷ்ணமூர்த்தி மாமாங்கத்துக்கு முன்னும் பின்னும் மூன்று மூன்று நாட்கள் தங்கும் படியாக லீவு எடுத்துக் கொண்டு வந்திருந்தான். வீட்டு ஜோடி பூட்டிய கன்று தான் அவனை ஸ்டேஷனிலிருந்து வீட்டுக்கு அழைத்து வந்தது. வரும் போதே வண்டிக்காரனுக்குப் பக்கத்தில் தலையை நீட்டி, "ஜோராப் போறதே!" என்றான்.

"இந்த வட்டாரத்திலேயே நம்ப ஜோடியைப் 'பீட்' செய்யக்க மாடு கிடையாது குழந்தே. என்னையும் ஐயாவையும் தவிர ஒரு பய இதை அவுத்து வண்டியிலே பூட்டிட முடியும்கிறேளா? பேசிக்கப்படாது." செல்லமுத்து பேசுவதைக் கிருஷ்ணமூர்த்தி சுவாரசியமாகக் கேட்டுக் கொண்டு வந்தான்.

"இல்லே குழந்தே, நான் தெரியாமத் தான் கேக்கறேன். எந்த மாடாவது இந்த வயலிலே மொத்த நாள் இருநூறு குழி நிலத்தை இரண்டு சால் உழுதுட்டு உச்சி பொட்டுக் களத்திலே இருந்து வீட்டுக்குப் பத்து மூட்டை நெல் ஏத்தி நாலு நடை அடிச்சிட்டு, இன்னிக்கும் இப்படி விடியக் காலையிலே மூணும் மூணும் ஆறு மைல் நிக்காமல் ஓடிக்கிட்டு இருக்கும்னு நீ எங்கேயாவது கேட்டிருக்கியா?"

கிருஷ்ணமூர்த்திக்கு இந்த விஷயங்களையெல்லாம் தெரிந்து கொள்ள எந்தப் புஸ்தகத்தைப் படிக்க வேண்டும் என்பது தெரியவில்லை. செல்லமுத்துவின் குரலிலிருந்த பாவத்திலிருந்து மாடுகள் செய்ததெல்லாம் அசாதாரணமான காரியம் என்பதை மட்டும் அவனால் ஊகிக்க முடிந்தது.

"இந்த ரெண்டு கன்றுலேயும் நம்ப வீட்டுக் கன்னுதான் வலது. அதனால்தான் இடது பக்கத்திலே போட்டிருக்குது. நடையைப் பார்த்தியா? முன்னடிக்குப் பின்னடி எம்மா எட்டி விழுது...? சாதி மாடில்லே...?"

கேட்டுக் கொண்டே வந்த கிருஷ்ணமூர்த்திக்கு நாமும் கொஞ்சம் ஓட்டிப் பார்ப்போம் என்று தோன்றிய சமயம், போன வருஷம் வண்டி குடை சாய்ந்த சம்பவம் ஞாபகத்துக்கு வரவே பேசாமல் போய் விட்டது.

வீட்டில் கிருஷ்ணமூர்த்திக்கு அமோகமான வரவேற்புக் கிடைத்தது. தான் மாமாவாகப் போகிறோம் என்ற செய்தி அவனுக்குப் புது அனுபவமாக இருந்தது. விஷயத்தைத் தெரிந்துகொண்டதும் முதலில் ஆச்சரியப்பட்டான். பின்பு சந்தோஷப்பட்டான். பின்பு அவனுக்கு வெட்கமாகக் கூட இருந்தது.

நடேசய்யர் பெருமையோடு கொஞ்சநேரம் நின்று பார்த்து விட்டு வாசலுக்கு வந்து கன்று வண்டியிலிருந்த மாடுகளை அவிழ்த்துப் பார வண்டியில் பூட்டித் தாமே ஓட்டிக் கொண்டு களத்துக்குப் போய் விட்டார்.

மத்தியானம் மூன்று மணிக்குக் கிருஷ்ணமூர்த்தி பிளாஸ்கில் காப்பி கொண்டு போய் அப்பாவுக்குக் கொடுத்து விட்டு, சாயந்திரம் அவருடனேயே நெல் மூட்டைகள் ஏற்றிய வண்டியில் திரும்பி வந்தான். வரும்போதே நடேசய்யர் படிப்பில் அவனுடைய முன்னேற்றத்தைப் பற்றிக் கேட்டார். கிடைத்த பதில் திருப்திகரமாக இருந்தது. கிருஷ்ணமூர்த்தியும் பதிலுக்கு அப்பாவைக் கேள்வி கேட்டான்:

"அப்பா, இந்த மாட்டுக்கு எல்லாச் சித்திரவதைகளும் முடிஞ்சு போச்சா? இல்லே, இன்னும் ஏதாவது பாக்கி இருக்கா?"

"அதான் பதினெட்டு மூட்டை வச்சு இழுத்துண்டு போறதைப் பாக்கிறியே! இந்தமாதிரி உழைச்சு உழைச்சுச் சாக வேண்டியதுதான்." அனுதாபக் கலப்பே இல்லாமல் நடேசய்யரின் குரல் வறண்டிருந்ததாகக் கிருஷ்ணமூர்த்திக்குத் தோன்றியது.

"இந்த மாதிரி கொடுமைப்படுத்தறது மாட்டுக்குக் கஷ்டமாயிருக்காதாப்பா?"

"கஷ்டம் என்னடா இதுலே! மனுஷனாப் பொறந்தாத்தான் கஷ்டமெல்லாம்.. கஷ்டத்தை நினைச்சிண்டு துக்கப்படணும். சுகத்தை நினைச்சிண்டு பேராசைப் பட்டுண்டு நிம்மதி இல்லாமெ இருக்கணும். மாடாப் பொறக்கறது எவ்வளவோ தேவலையே! கஷ்டமோ, சுகமோ அனுபவிக்கிற நேரத்தோட சரி. ஞாபகம் வச்சிண்டு தேஞ்சு போகணுங்கிற அவசியம் இல்லே!" தாம் பேசியது கிருஷ்ணமூர்த்திக்குப் புரிந்திருக்காது என்பது நடேசய்யருக்குத் தெரியும்! அவன் பதில் சொல்ல வேண்டும் என்பதற்காகவும் அவர் பதில் சொல்லவில்லை. மனம் சிந்தனையில் லயித்திருந்த நேரத்தில் பிள்ளையாண்டான் கேட்டதால் உணர்ச்சி வேகத்தில் ஏதோ பேசி விட்டார்.

வீட்டுக்கு வந்ததும் வாசலிலேயே நின்று கொண்டிருந்த விசாலம், "குழந்தைகளோட சேர்ந்து இருக்கணும்னு மெனக்கெட்டு வரவழைச்சுட்டு, நானும் வந்த அன்னையிலேருந்து பார்க்கறேன்; காலிலே சுடுநீரைக் கொட்டிண்ட மாதிரி ஒரு நாளாவது வீட்டிலே தங்காமே ஓடிண்டே இருக்கியே அப்பா" என்று கடிந்தாள்.

"உனக்கென்னம்மா? வருஷத்திலே நாலு நாளைக்கு வந்து இருந்து கொட்டமடிச்சுட்டுப் போயிடுவே! வருஷம் பூராவும் நானும் உன் அம்மாவும் சாப்பிட்டாகணுமே! வயல் நல்ல சாஞ்சு கிடக்கற போது அறுக்கலைன்னா அப்புறம் பலன் கட்டுது இல்லே! மாமாங்கத்துக்கு நிச்சயமா மழை வரும். ஒரு மழைக்கு

நெல்லெல்லாம் கொட்டிப் போயிடும்." நடேசய்யர் பேசிக் கொண்டே மாடுகளை அவிழ்த்துப் பந்தற்காலில் கட்டித் தீனி வைத்தார். இரண்டும் தின்று கொண்டிருக்கும் போதே கைநிறைய வைக்கோலை எடுத்து வலி போக மாட்டின் உடம்பெல்லாம் தேய்த்து விட்டார். கிருஷ்ணமூர்த்தி பார்த்துக்கொண்டே திண்ணையில் உட்கார்ந்திருந்தான். தின்று முடித்ததும் வயிறுநிறையத் தண்ணீர்காட்டிக் கொட்டிலில் கொண்டு போய் மாடுகளைக் கட்டி விட்டு உள்ளே வந்தார் நடேசய்யர். வண்டி இழுத்து விட்டு வந்த மாடு மாதிரி அவருக்கு மூச்சு வாங்கியது.

நடேசய்யருடைய மனம் சரியாகி விட்டது. மாமாங்கத்தன்று விடியற்காலை நான்கு மணிக்குக் கும்பகோணம் போக வண்டி கட்டிக் கொண்டிருந்த போது மழை வந்து விட்டது. "சனியன் நசநசன்னு புறப்படற போது வந்துடுத்தே!" என்றான் மாப்பிள்ளை ஞானகிராமன். "இந்த மழை வராப் பிரசாதம் மாப்பிள்ளை. வேண்டாம்னு சொல்லாதிங்கோ" என்றார் நடேசய்யர். "இது தானே பூமித் தாய்க்குக் கர்ப்பம் கொடுக்கற அமிர்த வர்ஷிணி. இதைப் போய் வேண்டாம் என்று சொல்வாளோ?" என்றார் நடேசய்யர்.

செல்லமுத்து சாமான்களை யெல்லாம் வண்டியில் கொண்டு வந்து வைத்து விட்டு, நடேசய்யர் கொடுத்த ஒரு ரூபாய் நோட்டை வாங்கிக் கொண்டான். வண்டியில் இடமில்லாததால் அவன் திருநாகேசுவரம் சென்று பஸ் ஏறிக் கும்பகோணம் சென்று காத்திருந்து வண்டியில் வருபவர்களைச் சந்திப்பதாக ஏற்பாடு. எல்லாரும் ஏறிக் கொண்டார்கள். கிருஷ்ணமூர்த்தி ஓட்டுபவர் உட்காரும் ஆசனத்துக்குப் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டான்.

ஞானகிராமன் மாப்பிள்ளையாக லக்ஷணமாக ஒரு காலைத் தொங்கப் போட்டு இன்னொரு காலை மடக்கி வைத்து, குறுக்குக் கம்பியின் மீது கை வைத்தபடி பின்னால் உட்கார்ந்து கொண்டான். நாகம்மாள் கிருஷ்ணமூர்த்திக்குப் பக்கத்தில் அமர்ந்தபடி கட்டுச் சாத மூட்டைகளைச் சரி பார்த்தாள். விசாலம் ஞானகிராமனுக்கு எதிர்ப் பக்கத்தில் சாய்ந்தபடி உட்கார்ந்து கொண்டாள்.

நடேசய்யர் முன் பீடத்தில் அமர்ந்து கொண்டார்.

வண்டி புறப்பட்டது. மாடுகள் சீராக ஓடின. நடேசய்யர் ஓட்டுவதால் வழக்கம் போல் தார்க்குச்சிக்கோ, சாட்டைக்கோ வேலை இருக்கவில்லை.

ஒரு மணி நேரத்தில் ஐந்து மைல்களையும் கடந்தாகி விட்டது. மீதி அரை மைல் டவுனுக்குள் போக ஒன்றரை மணி பிடித்தது. லக்ஷம் லக்ஷமாக அவ்வளவு கூட்டம். தெரிந்தவர் வீட்டு வாசலில் போய் நின்ற வண்டியை முன்னதாக அங்கு வந்திருந்த செல்லமுத்து அவிழ்த்து விட்டான். எல்லாரும் இறங்கி மகாமகக் குளத்துக்குக் குளிக்கச் சென்றார்கள். குளம் முழுவதும் ஒரே தலைமயம்! சுற்றியிருந்த பதினாறு கோயில் களிலும் கூட்டம் பிதுங்கியது.



"டாக்டர் ஒருவர் ஒரு நோயாளிக்கு மஞ்சள் காமாலைக் காகப் பல மாதங்கள் வைத்தியம் செய்தார் கடைசியில் தான் அந்த நோயாளி ஒரு சைனாக்காரன் என்பது அவருக்குத் தெரிந்தது!"

ஈர உடைகளை மாற்றிக் கொண்டபோது மாமாங்கம் பார்க்க வந்த மழையும் நின்று விட்டது. 'சுள்'ளென்று அடித்த வெய்யிலில் வீதிகளெல்லாம் காய்ந்து அனல் பறக்க ஆரம்பித்தது. ஒரு மணிக்கு மணிக்கூண்டுச் சங்கு அலறியதும் எல்லாரும் கட்டுச் சாத மூட்டைகளைப் பிரித்து வைத்துக் கொண்டு உட்கார்ந்தார்கள். நடேசய்யர் நாய் மாதிரித் தலையை உடலோடு மடித்துவைத்துக்கொண்டு அறிதுயில் கொண்டிருந்த மாடுகளைப் பார்த்தபடியே சாப்பிட்டார். முடித்ததும் ஞானகிராமன், "கடலங்குடித் தெருவில் எங்க பெரியப்பா பொண்ணு இருக்கா. விசாலத்தைப் பார்க்கணுமாம். போயிட்டுக் காலம்பற பஸ்ஸிலே அழைச்சிண்டு வந்துடறேன். மாமியும் இட்டுவும் கூட வரட்டும்" என்றான்.

"ஜாக்கிரதையாய்ப் போயிட்டு வாங்கோ. காலம்பற முதல் பஸ்ஸுக்கு வண்டி அனுப்பறேன்" என்றார் நடேசய்யர்.

"எனக்கு எக்ஸிபிஷனுக்குப் போகணும்" என்றாள் விசாலம்.

"நான் சினிமாவுக்குப் போகப் போறேன்" என்றான் கிருஷ்ணமூர்த்தி.

"ஆளுக்கு ஒரு பக்கம் போகக் கூடாது. எல்லாரும் எக்ஸிபிஷனுக்கே போங்கோ. ரொம்ப அலையாதிங்கோ! விசாலம், உனக்கு என்ன வேணுமோ வாங்கிக்கோம்மா..." நடேசய்யர் எழுபது ரூபாய் அடங்கிய பர்ஸைப் பெண் கையில் கொடுத்தார்.

கிருஷ்ணமூர்த்தி "எனக்குப்பா?" என்றான்.

"இதெல்லாம் உனக்குத்தாண்டா...." என்று அவனைச் சமாதானப் படுத்தினாள் விசாலம்.

"ஒங்க செலவுக்கு ஒண்ணும் வேண்டாமா?" என்று கேட்டாள் நாகம்மாள் கணவரிடம்.

"எனக்கு வேணுங்கறது இருக்கு... உங்கள் காரியத்தைப் பார்த்துக்குங்கோ. நான் நேரே வீட்டுக்குத் தானே போறேன்?" என்று நடேசய்யர் முன்னேற்பாடாகக் கக்கத்தில் சொருகிக் கொண்டிருந்த இரண்டு ரூபாய் சொக்கத்தைத் தொட்டுப் பார்த்துக் கொண்டார்.

எல்லோரும் போன பிறகு நடேசய்யர் ஒரு ரூபாய் பணத்தைச் செல்லமுத்துவிடம் வெற்றிலை பாக்குக்குக் கொடுத்து விட்டு, அவனையே இன்னொரு எட்டணாவுக்கு அகத்திக் கீரை வாங்கி வந்து மாடுகளுக்குப் போடச் சொன்னார். மாடுகள் படுத்த நிலையிலேயே சுரத்தில்லாமல் கீரையைக் கடித்துத் துப்பின.

"ஒரு வாரமாக ஓய்ச்சல் ஒழிவில்லாத வேலை. அதுதான் ரொம்பச் சோர்ந்தாப் போல இருக்கு" என்றார் நடேசய்யர். செல்லமுத்து ஆமோதித்தான்.

"நாலு நாளிலே இந்த அலுப்பெல்லாம் முடிஞ்சுடும். வியாபாரிக்கும் நெல்லூர் போட்டா ளிடுத்துன்று. போராடிக்கிற வரைக்கும் ஒரு வாரம் நிம்மதியா இருக்கலாம்" என்று அவரே ஆறுதல் கூறிக் கொண்டு செல்லமுத்துவை வண்டி கட்டச் சொன்னார். தின்னப்படாமல் கிடந்த வைக்கோலையும் கீரையையும் வாரி ஜமுக்காளத்துக்கடியில் திணித்துக் கொண்டு நடேசய்யர் ஏறி உட்கார்ந்ததும் வண்டி கிளம்பியது.

மாடுகள் தலைகளைத் தொங்கப் போட்டுக் கொண்டு கால்கள் கெஞ்சக் கெஞ்ச இழுத்தன. ரயில்வே கேட்டை வண்டி தாண்டிய போது செல்லமுத்து தலைக் கயிறுகளை இழுத்துப் பிடித்து வண்டியை நிறுத்தினான். நடேசய்யர் கண் விழித்து, "என்னது?" என்றார்.

"கட்டு விட்டுடுச்சுங்க. வெய்யிலுக்குத் தங்கலே" என்றான் செல்லமுத்து.

"அடப் பாவமே! வீட்டுக்கு வேறே சீக்கிரமாகப் போய் ஆகணுமே!"

இரண்டு பேரும் இறங்கி வந்தார்கள். நடேசய்யர் சாலை ஓரத்தில் கிடந்த பெரிய கப்பிக் கல் ஒன்றை எடுத்து வந்து சக்கரத்திலிருந்து பிதுங்கி வந்திருந்த கட்டையை உள்ளே தட்டினார். இந்த ஏற்பாடு அடுத்த ஒரு பர்லாங் போகும்வரைதான் தாக்குப்பிடிக்கும்.

"முண்டும் முடிச்சுமாக இந்தக் கப்பி ரோட்டிலே இன்னும் நாலு மைல் போய் ஆகணும். முடியாது. வண்டியை மெல்ல ஓட்டிச் சீமா நல்லூர் வைத்தியலிங்கம் பட்டறையில் விட்டுவிடுவோம். மாட்டைக் கையிலே பிடிச்சுக்கிட்டுப் போயிடலாம்" என்று நடேசய்யர் யோசனை சொன்னார்.

பட்டறை பூட்டிக் கிடந்தது. "இன்னிக்கு எல்லாரும் கும்மாணம் போயிருப்பாங்க. நீ இருந்து சொல்லி விட்டுட்டு வா. நான் போகிறேன்."

பத்துக் கால்கள் தூரத்தை ஜீரணித்தன. வெள்ளை வெளேரென்று வெய்யில் பின் மண்டையைத் தாக்கியது. நடேசய்யர் துண்டை எடுத்து மொட்டைத் தலையில் போட்டுக் கொண்டார். குளிப்பாட்டியது போல் மாடுகளின் உடம்பிலிருந்து வியர்வை கொட்டியது. காய்ச்சிய ஆணிகள் மாதிரிக் கப்பிக் கற்கள் கால்களைத் துளைத்தன. ஒதுங்கி நடந்தார். வறுத்த பொடி மணல் பாதங்களை வேக வைத்தது. பக்தி இல்லாதவன் 'தீ மிதி' மிதிப்பது போன்ற உணர்வு. 'சே, என்ன வெய்யில்! அக்கினி நட்சத்திரம் மாதிரி. டயர் செருப்பு வாங்கினாலாவது தேவலை!' நடேசய்யர் இடுப்பைத் தொட்டுப் பார்த்துக் கொண்டார். செலவழிந்தது போக ஒரு ரூபாய் மீதி இருந்தது. 'இது போதும்.'

நடேசய்யர் என்றைக்குமே செருப்பு உபயோகித்ததில்லை. அவர் நடக்கும் வயல் வரப்புக்கள் புல் மண்டி, ஈரம் கசிந்து எப்பொழுதும் தண்ணென்றிருக்கும். செருப்புப் போட்டுக் கொண்டால் சுலபமாக வயல் வரப்புக்களைத் தாண்டவோ வேகமாக நடக்கவோ முடியாது. இந்த மாதிரி இக்கட்டான நிலை அவருக்கு அடிக்கடி ஏற்பட்டதில்லை. வீட்டில் கிடக்கும் அரதல்களில் ஏதாவது ஒன்றைத் தூக்கி, மாட்டிக் கொண்டு வந்திருக்கலாம் என்று இப்போது நடேசய்யருக்குத் தோன்றியது. காலையில் மழை பெய்த போது மத்தியானம் மூன்று மணிக்கு வெய்யில் கொளுத்தும் என்று யார் கண்டார்கள்? இப்போது செருப்பு வாங்க வேண்டுமானால் ஒரு மைல் நடந்து சீமா நல்லூர் கடைத் தெரு போயாக வேண்டும். நடேசய்யர் சூடாக ஜோஷமாகப் பெருநடை நடந்தார். மாடுகள் வயிறு குலுங்கக் குலுங்க ஓடின.

'சடக்...'

சோர்வும் வேகமும் பலத்தைக் குறைத்து, நடையைத் தளர்த்தி வீட்டில் வளர்ந்த மாட்டின் வலது முன் காலை, சாலையில் நீட்டிக் கொண்டிருந்த கப்பிக் கல் ஒன்றில் இடறச் செய்து மண்டி போட வைத்தன. நடேசய்யர் ஓடிப் போய் மாட்டைத் தட்டி எழுப்பி, காலைத் தூக்கிப் பார்த்தார். குளம்புப் பிளவில் தேனடை மாதிரி ரத்தக் காயம். அதிலிருந்து மண் அப்பிக் கிடந்தது. பக்கத்து வேலிக் காலிலிருந்து சொம்பல் பாத்திருந்த காட்டாமணக்கு இலைக் கொத்து ஒன்றை ஒடித்து வந்து மாட்டின் காலைத் துடைத்தார். மாடு கால் தாங்கி நொண்டி நடந்தது.

இடைப்பட்ட கடைத் தெருவின் மர நிழலில் கடை பரப்பிக் கொண்டு உட்கார்ந்திருந்தான் சக்கிலியன். "என்ன சாமி! செருப்பு வேணுமா?" அண்டி வருபவரைப் பார்த்துக் கொண்டே, ஒரு ஜோடியை இரண்டு விரல்களால் கோத்து எடுத்து அவர் முன்னால் போட்டான்.

"வேண்டாம்பா, மாட்டுக்கு லாடம் அடி.." என்றார் நடேசய்யர்.

மாடு வயிறு இறுகப் படுத்துக் கால்களுக்குப் பூண் போட்டுக் கொண்டு எழுந்தது. நடேசய்யர் ஒரு ரூபாயை எடுத்து லாடம் அடிக்கவனிடம் கொடுத்து விட்டு மாட்டின் முதுகில் ஷொட்டுக் கொடுத்து ஓட்டினார். இன்னொன்றும் கூட வர மாடு தினவில்லாத காலை அடி எடுத்து வைத்து நடந்தது. உடம்பில் வழிந்த வியர்வையைத் துடைத்துக் கொண்டே வெய்யில் தெரியாமல் இருப்பதற்காகத் துண்டைத் தலையில் முக்காடு போட்டுக் கொண்டு மாடு சௌகரியமாக நடப்பதைப் பார்த்துக் கொண்டே நடேசய்யரும் பின்னால் நடந்தார்.

Printed & Published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at the Kalki Press, Kilpauk, Madras-10.
Managing Editor, T. Sadasivam.

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon